


கல்கி



30 காசு KALKI 6-8-196







நூறாண்டுக்கும் மேலாக பாடி கட்டுபவர்கள்

1840-ம் வருஷத்திலிருந்தே பஸ் பாடிகளை (அப்பொழுது கோச்சுகள் என்று வழங்கப் பட்டன) சிம்ஸன் கம்பெனியார் கட்டி வருகிறார்கள். அவர்களின் முதிர்ந்த அனுபவம், கைதேர்ந்த வேலைத் திறன், நவீன இயந்திர நுணுக்கங்கள் அனைத்தும் சிம்ஸன் கட்டும் பாடிகளில் அடங்கியுள்ளன.

வாடிக்கையாளர்களின் விசேஷத் தேவை களுக்கேற்றபடி தயாரிக்கப்படும் சிம்ஸன் பாடிகள் பராமரிப்புச் செலவுகளில் குறைவு, அதிக பாரம் தாங்கும் சக்தி, கூடுதலான லாபம் — இவைகள் போன்ற பிரத்தியேக அம்சங்களுடன் கூடியவை.

"சிம்ஸன் கட்டுவது
சிறந்த பாடிகள்"



-313


Simpson & Co. Ltd



தலைமைக் காரியாலயம்: சென்னை-2; தொழிற்சாலை: சென்னை -11


கிளைகள்: உதகமண்டலம் - பெங்களூர் - திருச்சிராப்பள்ளி - செகந்திராபாத் (டெக்கான்)

ஸ்டாண்டர்டு ஹெரால்டில்
மோட்டார் சவாரி செய்வதே ஒரு புதிய அனுபவம்

எத்தகைய ரஸ்தா சேதோஷண
நிலைமையிலும் தொந்தரவின்றி
சவாரி செய்யும்படி தயாரிக்கப்பட்ட
முற்றிலும் பயனுள்ள ஒரு கார் இது.





ஸ்டாண்டர்டு ஹெரால்டில் ஓட்டும் விசைகள் அனைத்தும் கைக்கு எட்டியவாறு அமைந்திருப்பதால், மோட்டார் ஓட்டுவதிலேயே தனி இன்பம் காண்பீர்கள். காரை இயக்குவது மிக எளிது.

காரின் முன்புறமும் பின்புறமும் உறுதியான மிக மெல்லிய தூண்கள் நல்ல உயரமும் அகலமும் உள்ள வளைவான கண்ணாடி ஜன்னல்கள் இவை விசாலமாயிருப்பதால் நாற்புறமும் வெளியே பார்க்க வசதி.

மிகமிகச் சிறிய இடத்திற்குள் - 25 அடி வட்டத்திற்குள் வண்டியை திருப்பலாம். ஸ்டாண்டர்டு ஹெரால்டை அதன் நீளத்திற்கு சமமான இடைவெளியிலே நிறுத்தி வைத்து வெளியே எடுத்துப் போக முடிவது பெருமைக்குரிய விஷயம்.

ஒவ்வொரு சக்கரமும் தனித்தனி இயங்கும் வசதியுள்ளது.

உபரி சக்கரத்திற்கான இட வசதி கூடக் குறையாமல், சாமான்கள் வைக்க 13 கன அடி இட வசதி

மேலும் காலனுக்கு அதிக மைல்கள்
போவதால் பெட்ரோல் செலவும் குறைவு.
இத்தனை குணம்சங்களும் சேர்ந்திருப்பதால்
ஹெரால்டில் சவாரி செய்வதே ஒரு உற்சாகம்.

தயாரிப்பவர்கள் :

ஸ்டாண்டர்டு மோட்டார் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிட்.
சென்னை - 2

டிஸ்ட்ரிபியூட்டர்கள் :

யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிமிடெட்

சென்னை - - பெங்களூர் - - உதகை


பின்டெக்ஸ்

கைத்தறித் துணிகள்

அழகானவை; நீடித்து
உழைப்பவை;
சாயம் போகாதவை

பின்னியால் விற்பனை செய்யப்படுபவை


லுங்கிகள்



தலையணை உறைகள்




புடவைகள்



படுக்கை
விரிப்புகள்



வேஷ்டிகள்



அலங்காரத்
துணிகள்



டவல்கள்



ஷர்ட்டிங்குகள்



பின்டெக்ஸ் கைத்தறித் துணிகளை தயங்காமல் வாங்குங்கள். நெசவாளர்களுக்கு, அறுகாத கடினமான நூலை கொடுக்கவும், சிறந்த ஆலோசனை கூறவும், நல்ல டிசைன்களை தேர்ந்தெடுத்துக் கொடுப்பதிலும் பின்னி உதவுகிறது. பின்டெக்ஸ் துணிகள் நீண்ட நாள் உழைக்க வல்லதென்றும், சாயம் போகாததென்றும் பின்னி உறுதியளிக்கிறது.

இந்த அடையாளம் காணப் படும் அனுமதி பெற்ற பின்னி மில் கடைகளில் பின்டெக்ஸ் கைத்தறித் துணிகள் கிடைக்கின்றன

WE STOCK


QUALITY FABRICS

BINNY & CO. (MADRAS) LTD.


பின்னி & கம்பெனி (மதறாஸ்) லிமிடெட்
மதறாஸ்

JWT/BY/BX-1390

INDUSTRIAL PROGRESS & EASUN



MACHINE TOOLS
from the German Democratic Republic



DIE SINKING & COPYING MILLING MACHINE

Hundreds of machine tools (precision built to international standards) are in successful operation ,all over India. They speak of Easun's contribution to India's industrial progress and the success of the Second Five Year Plan.

- **Open Front Eccentric Press**
- **Universal Tool Grinding Machine**
- **Upright Drilling Machine with Box column type**
- **Spur Gear Shaping Machine and others**

Consult the Easun Engineer for your industrial and machine shop problems.

EASUN ENGINEERING CO. LTD.,

5-7, SECOND LINE BEACH, MADRAS-I.


Also at: CALCUTTA, DELHI, LONDON, BANGALORE, MADURAI.

EP

கல்கி பொருளடக்கம்


பிலவ, ஆடி 22 ❋ ஆகஸ்டு 6, 1961

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



புகையிலையின் உற்பத்தி, உபயோகம், ஏற்றுமதி இவைகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும், சீனாவும் இந்தியாவுமே தலைமை வகிக்கின்றன. இன்று உலகிலேயே புகையிலை விளைச்சலில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் அடுத்தபடியாக மூன்றாவது ஸ்தானம் பெற்றிருப்பது இந்தியா தான். பதப்படுத்தப்பட்ட வர்ஜீனியா புகையிலையின் ஏற்றுமதி 1959—ல் பிற நாட்டு நாணயச் செலாவணியாக 16 கோடி ரூபாய்க்குச் சற்று அதிகமாக இந்தியாவுக்குத் தேடித் தந்தது.

புகையிலையின் வரலாறு... 7



பனாமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

GOLDEN TOBACCO COMPANY PRIVATE LTD

பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT.707 TM

Greens' Advtg



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 1

வணங்குகிறேன்

நமக்குத் தொழில்கவிதை நாட்டிற்(கு) உழைத்தல்
இமைப்பொழுதும் சோரா(து) இருத்தல்—உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நம்குடியை வாழ்விப்பான்
சிந்தையே இம்மூன்றும் செய். (மகாகவி பாரதியார்)

இந்த இதழுடன் உங்கள் அன்புக்கும் அபிமானத்துக்கும் உரிய கல்கி பத்திரிகைக்கு இருபது ஆண்டுகள் நிறைகின்றன. இந்த நிறைவையும், வளர்ச்சியையும் எண்ணி மகிழும்போது மகாகவி பாரதியாரின் மேற்கண்ட பாடலையும் சேர்த்து நினைக்கிறேன். சற்றே மாற்றியும் நினைக்கிறேன்.

'நமக்குத் தொழில் கல்கி நாட்டிற்(கு) உழைத்தல்
இமைப்பொழுதும் சோரா திருத்தல்......'

இந்த மூன்று நினைவுகளும் என் சிந்தையில் எப்போதுமே நிறைந்திருப்பவை தான். இன்று கல்கியின் நேயர்களாகிய உங்களுடனும் இந்த நிறைவைப் பகிர்ந்து கொள்வதில் பெருமிதப்படுகிறேன்.

'உமைக்கு இனிய மைந்தன் கணநாதன் (விநாயகப் பெருமான்) நம் குடியை வாழ்விப்பான்' என்று மகாகவி பாடியிருக்கிறார். 'கல்கி' விநாயகருடைய பத்திரிகை. நானும், என்னுடைய ஸ்தாபனமும் நலமாயிருக்க வேண்டுமென்று விக்கினங்களைத் தீர்த்தருளும் விநாயகப் பெருமானை வணங்கும்போதே தமிழ்ப் பெருமக்களின் நல் வாழ்வுக்காகவும் சேர்த்து வணங்குகிறேன்.

மனச்சாட்சிக்கு விரோதமின்றிக் கண்ணிய நிலையினின்று நழுவாமல், உயர்ந்த இலட்சியங்களைக் கைவிடாமல் கல்கி பத்திரிகையின் இலட்சிய யாத்திரையை நடத்திக் கொண்டு செல்வதற்கு நான் பெற்றிருக்கிற பலமெல்லாம் பெரியவர்களின் ஆசியும், சான்றோர்களின் நல்ல எண்ணமும்தான். இந்த இருபது ஆண்டுகளில் இடுக்கண்களுக்கு இலக்கான போதெல்லாம் தெய்வபலமும், பெரியோர்களின் நல் வாழ்த்துக்களும்தான் துணை நின்று என்னையும் கல்கி ஸ்தாபனத்தையும் காத்திருக்கின்றன. அந்தப் பெரியவர்களை எல்லாம் எண்ணி எண்ணி மனமார வணங்குகிறேன்.

பத்திரிகையின் பிள்ளைப் பருவத்திலிருந்து என்னுடன் துணைநின்று வளர்த்த பேராசிரியர் கல்கி - கிருஷ்ணமூர்த்தி, தமிழ் முனிவர் டி. கே. சி. இருவரையும் நினைவு கூர்ந்து அஞ்சலி செய்கிறேன். அவர்கள் இப்போது இல்லையானாலும் தோன்றாத் துணைகளாய் இன்றும் என்னுடன் இருப்பதாகவே உணர்கிறேன்.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடிப் பெரியவர்களின் அருளையும், ராஜாஜி அவர்களின் அன்பையும், ஆசியையும் தோன்றும் துணைகளாக அடைந்திருப்பதற்கும், தோன்றாத் துணையாகிய இறைவனின் கருணைதான் காரணமென்று நம்புகிறேன். 'காட்டுவித்தால் யாரொருவர் காணாதாரே' - என்று அப்பர் பாடியதுபோல் இத்தகைய பெரியவர்களைத் துணைகளாகக் காண்பித்து அடைவித்த திருவருளை எண்ணிக் கைகூப்பித் தொழுகிறேன்.

இருபது ஆண்டுகள் நிறையப் பெற்று இருபத்தொன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நல்ல நாளில் தமிழ் நாட்டிலும், கடல் கடந்த நாடுகளிலும் உள்ள நேயர் களுக்கெல்லாம் என் மனம் நிறைந்த அன்பையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சதாசிவம்

ஏன் இந்தப் போராட்டம்?

ராஜாஜி

இந்த ஆகஸ்டு முதல் தேதியுடன் சுதந்திரக் கட்சிக்கு இரண்டு வயது நிரம்பி விட்டது. 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை' என்ற மந்திரத்தை அளித்த லோகமான்ய திலகரின் நினைவு நாளும் ஆகஸ்டு முதல் தேதிதான்.

நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்குமே சுயராஜ்யம் பிறப்புரிமையாகும். அந்த உரிமையைப் பறிக்கும் அரசாங்கத்திடமிருந்து அதைக் காப்பதே இன்று நாம் செய்ய வேண்டிய காரியம். தானே தேசம் என்று எண்ணுகிறது இன்று ஆட்சியிலுள்ள காங்கிரஸ் கட்சி. அதன் பிடியிலிருந்து உண்மை சுயராஜ்யத்தை மீட்க வேண்டும்.

காங்கிரஸ் சர்க்கார், சோஷலிஸ பாணி என்ற பெயரால் நாட்டின் உற்பத்தி, வியாபாரங்களைப் பூரணமாகத் தன் வசமாகப் போட்டுக் கொள்ள ஆரம்பித்து விட்டது. இதனால் மக்களின் அறநெறியே சிதைந்து போய்விட்டது. தொன்று தொட்டுத் தர்மத்தை முன் விட்டுச் செல்லப் பழக்கப்பட்ட இந்தத் தேசத்து மக்களையும், சமீபகாலம்வரையில் நேர்மைக்குப் பெயர் பெற்றிருந்த நம் உத்தியோகஸ்தர்கள் கூட்டத்தையும் கெடுத்துவிடும் சந்தர்ப்பங்களை இந்த சோஷலிஸ பாணியானது உண்டாக்கி விட்டது. இயேசுநாதரைச் சைத்தான் ஆசை காட்டிய முறையையும் பேச்சையும் காங்ரெஸ் கட்சி கையாண்டு வருகிறது. அதுவே அனைவரும் பணக்காரர்களாகி விடலாம், சோஷலிஸம் ஏற்பட்டுவிட்டால் என்ற ஆசை வார்த்தை. இதே சோஷலிஸ பாணியின் விளைவுதான் பெர்மிட் - லைசென்சு - கோட்டா முறை.

கண்ட்ரோல்களினால் சுவர்க்க போகத்தை உண்டு பண்ணப் போவதாக உறுதி கூறிய காங்கிரஸ் சர்க்கார், அந்தக் கண்ட்ரோல்களினால், யோக்யதை நிரம்பிய சர்க்கார் ஊழியர்களின் தர்மத்தை யெல்லாம் அழித்து விட்டது. அதிகாரிகளிடமிருந்து விசேஷச் சலுகைகளும், ஏகபோக உரிமைகளும் பெற்றுச் செல்வந்தராக வேண்டும் என்ற பணப் பசியைத் தொழில் துறையிலுள்ளவர்களுக்குக் கிளறி விட்டிருக்கிறது. இதனால் வர்த்தக சமூகமும், அதிகார வர்க்கமும் ஒருவிதமான கூடா நட்பு கொள்ளுவதற்கு அவகாசங்கள் ஏற்பட்டு விட்டன. ஒரு சிலர் மட்டும் தான் இந்தச் சலுகைகள் பெற முடியும். ஏமாந்து போன மற்றவர்களுக்குப் பொருமையும் பேராசையும் உண்டாகின்றன.

அநியாய முறையில் லாபம் பெற அரசாங்கமே சிலருக்கு வசதி செய்து தரும்போது, அதைக் கண்ட அதிகாரிகளுக்குத் தாங்களும் அநியாய முறைகளில் லாபம் அடைவதற்காகக் குறுக்கு வழிகளை நாடுவதிலேயே ருசி ஏற்பட்டு விடும். இதை நாம் இன்று வெட்ட வெளிச்சமாகப் பார்க்கிறோம். நமது நிர்வாகக் குழுவினரைப் பொருளாசை பிடித்த ஒரு பட்டாளமாக்கியிருக்கிறது காங்கிரஸ் ஆட்சி. அதிகார வர்க்கத்தினர் நியாயமற்ற முறையில் லாபம் அடைய விரும்புகிறவர்களாக இருப்பதை மேலும் மேலும் கெடுப்பதற்கு ஒரு புது கோஷ்டியை இன்றைய அரசாங்கம் உண்டாக்கி யிருக்கிறது. ஆகவே லஞ்சம் தருபவர்களையும் லஞ்சம் பெறுபவர்களையும் இந்தச் சர்க்கார் போஷித்து வருகிறது. இந்தச் சர்க்காரானது ஏழைகளின் நிலையை உயர்த்துவதற்காகவே பாடுபடுவதாகச் சொல்லி வருகிறது!

சோஷலிஸ பாணி என்று சொல்லப்படும் திட்டத்தின் விளைவாக அதிகாரிகளுக்கும், வர்த்தகர்களுக்கும் ஏற்பட்டுள்ள புது உறவில் இருக்கும் ஆபத்தைச் சைத்தான் செய்த சூழ்ச்சிக்குச் சமமாகப் பாவிக்கிறேன். இல்லாமற் போனால் இந்தப் போராட்டத்தில் இறங்கியே இருக்க மாட்டேன். சர்க்கார், ஓர் ஊழல் இயக்கத்தை முடுக்கிவிட்டு, அது நாட்டின் மீதும், நாட்டு மக்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கை மீதும் விஷத்தைப் படர விடுவதைக் கண்டபின் தான் மற்ற விஷயங்களை யெல்லாம் தூரத் தள்ளி வைத்துவிட்டு, போர் தொடங்க வேண்டியது என் கடமை என்று உணர்ந்தேன். பணத்தின் மூலமாகவும், பதவியின் மூலமாகவும் அசுர பலம் பெற்றுள்ள எதிரியை எதிர்த்துச் சண்டையிட முடியுமா என்பதையும் நான் கணக்கிடவில்லை. பெரும் பாபத்தைக் கண்டபோது அதை எதிர்க்காவிட்டால் உயிர் வாழ்வதின் நோக்கம் தான் என்ன ?

லஞ்ச ஊழலைப் பற்றி நான் சொல்வதில் கொஞ்சமும் மிகை கிடையாது. ஆசியாவிலேயே மிகவும் உன்னதமான முறையில் நம் சர்க்கார் ஊழியர்கள் பணி புரிந்ததைப் பிரத்யட்சமாகக்

கண்டவன் நான். பின்னர், மிகக் குறுகிய காலத்தில் அந்தச் சிறந்த உத்தியோகக் குழுவினர் கெட்டுப் போனதையும் கண்டேன். பூகம்பத்தின்போது பெரும் பாறைகள் நிலை பெயர்ந்து சரிவது போல், நாட்டு நிர்வாகத்தில் நெறி முறைகள் சரிந்து விழுவதைக் கண்டேன். அவரவர்களுக்கு ஏற்பட்ட தொழில்களை அவரவர்கள் சீர்ப்படச் செய்யவேண்டும் என்கிற ஸ்வதர்மத்தில் நம்பிக்கை வைத்துப் பல காலமாகப் போற்றி வந்த உணர்ச்சிகளுக்குப் பதில் ஈரமற்ற இதயத்தையும் பண ஆசையையும் காண்கிறேன். இதையெல்லாம் நான் தெளிவாகக் காணக் காரணம் என்னுடைய வயதும், நான் பெற்ற அநுபவங்களுமே. இந்த மாறுதல்களையும், பேதங்களையும் நான் தெளிவாகக் கண்டதனால் மனக் கிலேசம் அடைந்தேன்.

இதனால் எவ்வளவோ போற்றி வளர்த்த தொடர்புகளையும், பலப்பல ஆண்டுகளாகப் பேணிக் காத்த நட்பையும் முறித்துக் கொண்டு நான் கிளம்ப வேண்டியதாயிற்று. இப்படி நான் சொல்வதெல்லாம் பலருக்கு விளங்காது; விந்தையாகத் தோன்றும். ஆனபடியால் என் செயலைக் கண்டு வருந்துபவர்களும் உண்டு: திட்டுபவர்களும் உண்டு.

தோழமை, பாசம் என்ற விலை மதிப்பில்லாத பொக்கிஷத்தையெல்லாம் இன்று நான் தியாகம் செய்துவிட்டேன். அவற்றுக்குப் பதிலாக, மிக உயர்ந்த வட்டாரத்திலுள்ளவர்களின் அதிருப்தியையும், வெறுப்பையும் சம்பாதித்திருக்கிறேன். நாற்பது வருஷங்களுக்கு முன் நான் செய்த தியாகத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். அதைவிட இப்போது நான் செய்துள்ள இந்த அன்புத் தியாகம் ஒரு விதத்திலும் குறைந்ததல்ல. அப்போது நான் சகல சுக போகங்களையும் அளிக்கக் கூடிய வாழ்க்கையையும் பெயரெடுத்த வக்கீல் தொழிலையும் துறந்தேன். அதனால் என் வயோதிகத் தந்தையை விசனத்தில் ஆழ்த்தினேன். பள்ளியிலும், கல்லூரியிலும் படித்துவந்த என் குழந்தைகளின் கல்விக்கு முற்றுப் புள்ளி வைத்தேன். வனாந்தரத்தில் பிரவேசித்தேன். இதெல்லாம் நடந்தது 1920ம் ஆண்டில்.

இப்போதோ சர்வாதீன ஆட்சி முறை, ஊழல் நிர்வாகம், இவற்றை எதிர்த்து, சுதந்திரக் கொடியை உயர்த்திப் போராட்டம் நடத்துகிறேன். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் போது அடிக்கடி அந்த 1920-ம் ஆண்டுச் சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன. தீரச் செயல் புரிய வேண்டுமென்ற துடிப்பும், அந்நியர் ஆட்சியிலுள்ள வெறுப்பும் மக்களை எந்தத் தியாகமும் செய்யத் தூண்டிய காலம் அது. தவறான வழியில் செல்லும் என் சகாக்களையே எதிர்க்கும் இப்போது, இளமையின் சாகஸத் துடிப்போ, வேற்று மனிதர்கள் என்ற வெறுப்போ இல்லை. இந்தப் போர்க்களத்தில் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும் போதும் உள்ளம் நோகிறது. அதற்காகச் சுதந்திரத்தை, ஜனநாயகத்தை, தர்மத்தைப் பாதுகாக்காமல் இருக்க முடியுமா? முடியாது. இந்தப் பாரத நாட்டிடம் நாம் என்றும் அன்பு செலுத்தியே ஆகவேண்டும். இன்றைய ஆட்சியாளர்களின் சுயநலத்தைத் தேசபக்தி என்று தவறாக மதிப்பிட்டு, இந்தியா தாழ்ச்சியடைய விடக்கூடாது. சர்க்கார்தான் இந்திய நாடு என்று ஏற்பட்டுள்ள குழப்பத்தை ஒழித்தே தீரவேண்டும். தான் அடைந்துவிட்ட பதவியின் பலத்தைக் கொண்டே அந்தப் பதவியை நீடித்துக் கொண்டு போகத் திட்டமிட்டிருக்கும் ஒரு கட்சியை எதிர்த்துப் போரிடத்தான் வேண்டும். சமீப காலம் வரையில் இருந்ததுபோல், உத்தியோக வர்க்கத்தினர் யோக்கியதையுடன் செயலாற்றுவதற்கு வழி வகுக்க வேண்டும். உயர்ந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவே வாழ்க்கை ஏற்பட்டது என்றால், இந்தச் சுதந்திரப்போரில் இறங்குவது மிகப் புனிதமான ஒரு பணியாகும்.

தேசத்தின் அறநிலை, மக்களின் தர்ம சிந்தனை இவற்றை ஆழப் புதைத்து விடுவதற்கு முயற்சிகள் நடைபெறும்போது, அந்த அரக்க சக்தியை எதிர்ப்பதைத்

தவிர, அதனிடம் அடிபணிவது பற்றியோ, வேறெதைப் பற்றியோ எண்ணுவதற்கே இல்லை. பாரத நாட்டின் ஆன்ம ஸ்வருபத்தை இந்த அசுரக் கட்சி அழித்து விடாதபடி முழுமூச்சுடன் போராடி தர்மத்தைக் காக்க வேண்டும். மற்றவர்களின் துணைக்காகக் காலம் தாழ்த்தாமல், சொந்த லாப நஷ்டங்களைப் பாராமல் இந்தச் சர்வ ஆதீனப் பசி பிடித்த கட்சியை எதிர்ப்பது ஒவ்வொரு மனிதனின் கடமையுமாகும். தேசத்தின் பண்பை இழந்தோமானால், அதன் பின் நாம் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொருள்தான் வேறு ஏது?

தீர்க்க முடியாத கடன் தொல்லை

திருப்பித் தருவது குறித்து எவ்வித யோசனையுமில்லாமல், நேரு சர்க்கார் வெளிநாடுகளிலிருந்து ஏராளமாகக் கடன் வாங்கிக் குவித்ததன் மடமை இப்போது அம்பலத்துக்கு வந்து விட்டது.

இந்தக் கடன்களை அடைக்கவும், வட்டி செலுத்தவும், தற்போது இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு ஈடு செய்யவும் நம் ஏற்றுமதியை எத்தனையோ மடங்கு பெருக்க வேண்டியிருக்கிறது. இந்தக் கணக்கு எவ்வளவு சிக்கலானது என்பதை இப்போதுதான் அரசாங்கத்தினர் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த ஞானோதயத்தைத் திட்டக் கமிஷன் சமீபத்தில் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் காண்கிறோம்.

இந்த நாட்டில் செய்யப்படும் ஆலைப் பண்டங்களில் பெரும் பகுதியை ஏற்றுமதி செய்தால்தான் இந்தக் கடன்களைத் தீர்க்க முடியும் என்று அது சிபாரிசு செய்கிறது. அதாவது உள்நாட்டில் இவற்றை உபயோகிப்பது பெரிதும் மட்டுப்படுத்தப்படும். அதாவது, கண்ட்ரோல்களும் கட்டுத் திட்டங்களும் தலைவிரித்தாடும். விலைவாசிகள் ஏகத்தாறுக உயரும். நடமாட்டத்துக்கு வரும் பண்டம் குறைவாக இருந்தாலும் உற்பத்தி ஏராளமாக இருப்பதால், கண்ட்ரோல்களை மீறிக் கள்ள மார்க்கெட்டும் அபரிமிதமாக மண்டி வளரும்.

வெளிநாடுகளிலும், மற்ற தேசப் பொருள்களுடன் நம் நாட்டுப் பண்டங்கள் போட்டியிட வேண்டியிருக்குமாதலால் நம் ஏற்றுமதி விலையை மிகவும் இறக்கிக் கொள்ள வேண்டியிருக்கும். இதற்கு ஒரு வழி ஆலைச் செலவைக் குறைத்துக் கொள்வது என்பது திட்டக் கமிஷனின் சிபாரிசு. தொழிற்சாலைகள் இந்தச் சிக்கனச் சிரமைப்பில் இறங்கினால், தொழிலாளர்களின் தலையில்தான் முதலில் கைவைக்கப்படும். ஆள் குறைப்பதும் கூலி குறைப்பதுமாக முடியும். வேலையில்லாத் திண்டாட்டத்தின் தாண்டவம் வலுக்கும்.

வெளிநாட்டில் நம்முடைய பண்டங்களை வாங்க யார் காத்திருக்கிறார்கள்? மிகவும் நல்ல சரக்காக இருந்து மிகவும் குறைந்த விலைக்குக் கொடுத்தால்தான் அவர்கள் வாங்குவார்கள். வெளிநாடுகளில் நாம் குறைந்த விலைக்கு விற்பதனால் ஏற்படும் நஷ்டத்துக்கு ஈடு கட்டுவதற்காக உள்நாட்டு விலையை உயர்த்தவும் நேரிடும். உதாரணம்: சர்க்கரை. இன்று நாம் சர்க்கரையை வெளி நாடுகளில் என்ன விலைக்கு விற்கிறோமோ, அதைப் போலப் பல மடங்கு விலை உள்நாட்டில் கொடுக்கிறோம். திட்டக் கமிஷன் யோசனைப்படி நடந்தால் இந்த அவலக் கதை எல்லாப் பண்டங்கள் விஷயத்திலும் நடைமுறையாகி விடும்.

இத்தனை கஷ்ட நஷ்டங்களைப் பட்டாலும் கடன்தொல்லை தீரும் என்று எண்ணுவதற்கு இல்லை. புதுத் திட்டம் வகுத்தும் இந்தச் சுமையைச் சமாளிக்க முடியாது. அந்த அளவுக்கு மலைமலையாகக் கடன் வாங்கிக் குவித்திருக்கிறது நம் சர்க்கார்.

உள்நாட்டை நாசம் செய்து, வெளிநாடுகளில் பயனற்ற கீர்த்தி தேடுவதற்காக இந்தக் காங்கிரஸ் எடுத்துக்கொண்ட திட்டங்களின் மடமையை இப்போது அனைவரும் உணரும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்காக நாம் திட்டக் கமிஷனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

வாழ்க ராஜன்பாபு

ராஷ்டிரபதியின் ஆரோக்கிய நிலை சீர்ப்பட்டு வருவதை அறிந்து மகிழாதார் இல்லை. நேர்மை, பணிவு, தூய்மை இவற்றில் நம் ராஷ்டிரபதிக்கு இணையானவர்கள் வெகு சிலரே. அவர் பதவியிலிருந்தாலும், பதவியில் இல்லாமல் தனி மனிதராக இருந்தாலும், அவருடைய ஆரோக்கிய நிலை பற்றி மனம் கலங்கிய மக்கள் தற்போது சாந்தி அடைந்தது நமது பாக்கியம்.


சாரணனின்
கௌரவம்...
ஸாதே பிஸ்கட்டுகள்
ஸாதே பிஸ்கட் & சாக்கலேட் கம்பெனி லிமிடெட், பூனா-2.


சுவையான....



சுவாரசியமே இல்லாமல் காலைப் பத்திரிகையைப் பிரித்து வைத்துக் கொண்டு நின்றேன். சே! சூடான செய்தியாக ஒன்றைக் கூடக் காணுமே என்று மனத்துக்குள் அலுத்துக் கொண்டிருக்கையில் "காப்பி!" என்ற குரல் கேட்டது. ஒரு துள்ளல் துள்ளித் திரும்பினேன், ஆர்வத்துடன் காப்பியை வாங்க. ஆர்வம் அளவுக்கு மீறி, காப்பி பத்திரிகை மீது கொட்டி விடக் காரணமாயிற்று. ஆகா! அப்புறம் பத்திரிகையில் சில விநாடிகளுக்கு ஆவி பறக்கும் சூடான செய்திகளல்லவா இருந்தன! வெய்யிலில் பத்திரிகையைக் காய வைத்து விட்டுப் படிப்பதற்காகப் பிரித்தால்... அடடா! சர்க்கார் துறையில் விசேஷமாகத் தயாரித்துத் தரும் நேபா காகிதத்தை விடத் தரத்தில் லவலேசம் உயர்வு; அவ்வளவுதான்!



காப்பி கொட்டிய படலம் கிடக்க, காப்பியே அருந்தக்கூடாது என்று மக்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறது தென்கொரிய அரசாங்கம். காப்பிக் கொட்டை இறக்குமதியைக் குறைத்து அன்னியச் செலாவணியை மிச்சப் படுத்த இந்த ஏற்பாடாம். தென் கொரிய மக்களுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர்கூட விட லாம்; பாவம்; காப்பி கிடைக்காத வாழ்வும் ஒரு வாழ்வா?



'கல்கி' அவர்களிடம் ஒருவர் சொல்லிப் பார்த்தார்: "காப்பிப் பழக்கத்தை விட்டுவிடுங்கள். உடம்புக்குக் கெடுதல். ஆயுளே குறைந்து போகும்" என்று.

"காப்பி அருந்தாமல் நூறு வயது வாழ்வதைக் காட்டிலும் நல்ல காப்பியை உறிஞ்சும் உரிமையுடன் ஐம்பது வயது வாழ்ந்தால் போதும் எனக்கு!" என்று கூறிவிட்டார் 'கல்கி' அவர்கள்.

கல்கி அவர்கள் சம்பந்தப்பட்ட இன்னொரு சம்பவம்! எழுத்தாளர் சங்கக் கூட்டம் ஒன்றில் அவர் பேசுவதற்காக எழுந்து மேடைக்குப் போனதும், சொல்லி வைத்தாற்போல அதுவரை அவர் அமர்ந்திருந்த அதே இடத்தில், மேலே யிருந்து மின்சார விசிறி கழன்று விழுந்தது!



உடனே பேராசிரியர் பேசினார்: "எழுத்தாளர்களாகிய நம்மில் யாராவது இதைக் கதைபோல எழுதினால் கேலி செய்வார்கள். 'இவன் எழுந்து போவதற்காக விசிறி காத்துக் கொண்டிருந்ததோ? கொஞ்சமாவது நம்பும்படியாகக் கதை எழுதக் கூடாதோ?' என்பார்கள். ஆனால் கதைகளில் வருவது போன்று அசல் வாழ்க்கையிலும் விசித்திரமான சம்பவங்கள் பல நிகழத்தான் செய்கின்றன........"

அத்தகைய தொரு விதியின் சதியைப் பற்றிய தகவல் வெளியாகியிருந்தது சில தினங்களுக்கு முன்பு:

இன்ஸ்பெக்டர் ஒருவர் தமது துப்பாக்கியைத் துடைத்துக் கொண்டிருந்தபோது தவறி அது கீழே விழுந்துவிட்டது. விழுந்த வேகத்தில் துப்பாக்கி வெடிக்க, மூடியிருந்த ஒரு கதவைத் துளைத்துக் கொண்டு தோட்டா பாய்ந்து சென்று 138 அடி தூரத்துக்கு அப்பால் விளையாடிக் கொண்டிருந்த இருபதுபெண்களில் ஒருத்திமீது பாய்ந்தது. சிறுமி உடனே மாண்டு போனாள். அவள் இன்ஸ்பெக்டரின் மகள்! அமெரிக்காவில் நடைபெற்றது இச் சம்பவம்.

அதே அமெரிக்காவுக்கும் போய்த் திரும்பிய அரூப்கானுக்கு நன்றாகக் குல்லாய் போட்டார்கள் அந்தத் தேசத்தவர்கள்! தொழிலாளிகளுக்கு விடுமுறை கொடுத்து ஒரு வாரத்துக்கு மூடப்பட்டிருந்த தொப்பித் தொழிற்சாலையை அரூப்புக்காகப் பிரத்தியேகமாய்த் திறக்கச் செய்து அவர் விரும்பிய பாணியில் தொப்பி செய்து கொடுத்தார்கள். பார்த்தீர்களா, அமெரிக்கர்களின் குல்லாய் போடும் திறனை!

* * * மலையேறிச் சுவாமி தரிசனம் செய்ய இப்போது எடுத்துக் கொள்ளும் ஓரளவு சிரமம்கூட இனி இல்லாது போய்விடும், மலைமீது பக்தர்களை ஏற்றிச் செல்லும் மின்சார வண்டிகள் இயங்கத் தொடங்கினால்! ஸ்விட்ஸர்லாந்து போன்ற மேல்நாடுகளில் உள்ள இத்தகைய வசதியைத் திருப்பதியில் ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறார்கள். பழனியில்கூட மின்சக்தியால் உயரச் செல்லும் இச்சாதனத்தை நிறுவப் போவதாகச் சமீபத்தில் அங்கு போயிருந்தபோது கேள்விப்பட்டேன். அங்கே தெரிய வந்த இன்னொரு சுவையான செய்தி:

சந்நிதிக்குச் செல்லும் வழியில் பக்தர்கள் இளைப்பாறும் மண்டபங்களில் அவற்றை அமைத்தவர்கள் தங்களையும் தங்கள் தொழிற்கூடங்களையும் விளம்பரப்படுத்தும் வகையில் ஏதேதோ எழுதி வைத்திருப்பதை வினோபாஜி பார்த்து வெறுப்படைந்தாராம். 'இது ஆலயமல்ல விளம்பரம் செய்யுமிடம்' என்று கோபத்துடன் சுவாமி தரிசனம் செய்யாமலே திரும்பி விட்டாராம்.

அதற்கு சுவாமி என்ன செய்வார்? அவரைத் தரிசிக்காமல் வருவானேன்? இதனை, சென்னைக்கு வந்த ஆசாமியான் சில சினிமா தியேட்டர்களின் பெயர்களைப் பார்த்து விட்டு, "படம் நல்லதோ கெட்டதோ சினிமா தியேட்டர்களுக்கு சுவாமி பெயர்களாக வைத்திருக்கிறார்கள்!" என்று சொல்லி சந்தோஷப் பட்டதுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் நினைக்கிறது மனம்.

....செய்திகள்

இளம் பிராயத்து நினைவுகளில் மனத்தை அலைய விடுவதில் உள்ள இன்பத்துக்கு ஈடு இணை இல்லைதான். அந்தத் தனி இன்பத்தை நேயர்களுடன் பகிர்ந்து கொள்ளும் மூகமாக இருபது வருஷங்கள் நிறையப் பெற்ற 'கல்கி'யின் ஆரம்ப இதழிலிருந்து சில பகுதிகளைப் பொறுக்கி எடுத்து இங்கு வெளியிடுகிறோம். — ஆசிரியர்

முதல் இதழ்

என்ன சேதி?

ரொம்பப் பேஷான சேதி! தமிழர்களின் புதிய பத்திரிகை திவ்யமான சகுனங்களுடன் ஜனனமாகி யிருக்கிறது. சில நாட்களாகச் சூரியோதயம் என்றுமில்லாத பிரகாசத்துடன் ஜொலிக்கிறதல்லவா? காலை வேளையில் பட்சி ஜாலங்களின் கானம் வழக்கத்தைவிட அதிக இனிமையாக ஒலிக்கிறதல்லவா? எல்லாவற்றுக்கும் 'கல்கி' பத்திரிகையின் வரவுதான் காரணம். கொஞ்ச நாளைக்கு முன்பு சென்னையில் பூகம்பம் உண்டாயிற்றே, அதன் காரணம் கூட இந்த அற்புத சம்பவத்தை எதிர்பார்த்துப் பூமி தேவி கொண்ட குதூகலமாகத்தான் இருக்க வேண்டும்!...

நமது காரியாலயம்:

சென்னை நகரில் 'எழும்பூர் ஸ்டேஷன் எங்கே யிருக்கிறது?' என்று கேட்பவர்களுக்கு இனிமேல் பளிச்சென்று பதில் சொல்லலாம். எழும்பூர் ஸ்டேஷன் கல்கி காரியாலயத்துக்கு எதிர்த்தாற்போல்தான் இருக்கிறது.....

பயம் நீங்கிற்று

வைஸ்ராய் நிர்வாக சபை விஸ்தாரமாகப் போகிறது, விஸ்தரிக்கப்படப் போகிறது, இதோ விஸ்தரித்து விட்டது என்றெல்லாம் சொல்லி இந்திய அரசியலில் கொஞ்சம் இரட்டை நாடியாக இருக்கும் மனிதர்களின் பெயர்களை யெல்லாம் நிர்வாக சபையுடன் சம்பந்தப்படுத்த முயன்றார்கள்.....

புது யுகம்

"பகவான் என்னத்துக்காக இன்னும் மனிதர்களைப் படைத்துக் கொண்டிருக்கிறார்?"

நமது தேசிய மகாகவியான டாக்டர் ரவீந்திரநாத டாகுர் மேற்படி கேள்வியைக் கேட்டு விட்டு அதற்குப் பதிலும் தாமே கொடுத்திருக்கிறார்:—

"மனிதனைச் சீர்திருத்தி விடலாம் என்ற நம்பிக்கை பகவானுக்கு இன்னமும் இருந்து வருவதினாலேதான்!"....மனிதனைப் பற்றி பகவான் கொண்டிருக்கும் நம்பிக்கை இந்தியாவின் மூலமாகவே நிறைவேறப் போகிறது. அதுவும் மகாத்மா காந்தியினால்தான் நிறைவேறப் போகிறது.

"வெற்றிகூறுமின் வெண்சங் கூதுமின்
பாரிலுள்ள பல நாட்டினருக்கும்
பாரதநாடு புதுநெறி பழக்கல்
உற்றதிங் கிந்நாள்...."

என்று கவியரசர் பாரதியார் கூறியது அருள் வாக்கன்றோ?

உபயகுசலோபரி

உபயகுசலோபரி என்று போடுவதற்காக உ என்னும் முதல் எழுத்தை, எழுதினேனோ இல்லையோ பின்னாலிருந்து 'நல்லவேளை பிள்ளையார் சுழி போட்டாயா, என்னை எங்கே மறந்து விடுகிறாயோ என்று பார்த்தேன்' என்னும் குரல் கேட்டது. சாட்சாத் விநாயகக் கடவுள் நின்று கொண்டிருந்தார்....



"இந்தத் தமிழர் பத்திரிகையின் நோக்கங்கள் என்ன?" என்றார் விநாயகர்.

"சொல்லுகிறேன், சுவாமி! இந்தப் பத்திரிகைக்கு மூன்று நோக்கங்கள் உண்டு. முதலாவது நோக்கம் தேச நன்மை.

இரண்டாவது?

இரண்டாவது தேச நன்மை.

மூன்றாவது?

மூன்றாவதும் தேச நன்மைதான்.

விநாயகக் கடவுள் எழுந்திருந்து சென்றார். 'சுவாமி! சுவாமி!' என்று கூப்பிட்டேன். விநாயகர் திரும்பிப் பார்த்தார். 'சந்தாப் பணம் கொடுக்காமல் போகிறீர்களே?' என்றேன். ஸ்ரீ கணபதி திரும்பி வந்தார். தும்பிக் கையினுள்ளிருந்து மூன்று கொழுக்கட்டைகளை ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணி வைத்தார். கொழுக்கட்டைகளை விண்டு பார்த்தால் ஒவ்வொன்றுக்குள்ளும் ஒவ்வொரு ரூபாய் இருந்தது. 'ரொம்ப வந்தனம்' என்றேன். கொஞ்ச தூரம் போனவர் மறுபடியும் திரும்பி வந்து, 'நம்முடைய தம்பி எந்த விஷயத்துக்கும் போட்டிக்கு வருபவனாயிற்றே! எனக்குப் பத்திரிகை படிக்கக் கிடைக்காமல் அவன் கொண்டு போய் விடுவான். அவனுக்கும் ஒரு சந்தா கட்டி விடுகிறேன்' என்று சொல்லி மறுபடியும் மூன்று கொழுக்கட்டைகளை வைத்தார். நமது காரியாலயத்துக்கு விஜயம் செய்யும் அன்பர்கள் சந்தாதார் புத்தகத்தின்

புத்தம் புது மலர்கள் பூக்குமே வண்டினங்கள்
சித்தம் மகிழ்ந்துண்ணச் சேருமே — நித்தமும்
பல்கி வளரும் பசுந் தமிழ்ச் சோலையாம்
கல்கி படர்ந்து வருங்கால்

— தேசிகவிநாயகம் பிள்ளை

தலைப்பில் பின்வரும் பதிவுகளைப் பார்ப்பார்கள். 1. ஸ்ரீ ஆர். விநாயகம் பிள்ளை, எம். ஏ., பி. எல்., 93, வடக்குத் தெரு, சிதம்பரம். 2. ஸ்ரீ க. நா. சுப்பிரமணியம், ஆணிக்காரன் தெரு, சிதம்பரம்.

பிரஹ்லாதா

ஸ்ரீ கோபிநாத்தும் தங்கமணியும் இந்தப் படத்தில் நடிக்கிறார்கள். கோபிநாத்துக்கு இரணியன்வேஷம் தடபுடலாய்ப் பலித்திருக்க வேண்டும். மொத்தத்தில் படம் ஒன்றாங் கிளாஸா யிருக்குமென்று விசுவசிக்குந்து!

கடல் கடந்த காந்தி

காந்தியடிகள் "நீ ஏன் நிர்ப்பந்தம் செய்கிறாய்?" என்றார்.

நான், "நீங்கள் வாங்கியிருப்பதோ இரண்டாவது வகுப்பு டிக்கெட். ஆனால் தங்களுடைய பெயருக்காக முதல் வகுப்பின் எல்லா வசதிகளும் கிடைத்து விடுகின்றன. ஆகவே தாங்கள் முதல் வகுப்பின் கட்டணத்தைச் செலுத்தி விடுவதே உசிதமல்லவா?" என்று கேட்டேன்.

காந்தியடிகள், "உம்முடைய வாதம் சரிதான். ஆனால் அதிலிருந்து முதல் வகுப்பின் உரிமைகளை யெல்லாம் நான் விட்டுவிட வேண்டுமென்றுதான் ஏற்படுகிறது" என்றார்.

—கனச்யாம்தாஸ் பிர்லா

என் தந்தை

பாரதியார் மனைவி மக்கள் மீது பற்றற்று சந்நியாசி போல் வாழ்ந்தார் என்று சிலர் சொல்வதாகக் கேள்விப்படுகிறேன். அது முற்றிலும் பிழை. காசாசையும் சுயநலமும் கொண்டு தம் மனைவி மக்களுக்குப் பொருள் சேர்ப்பதையே வாழ்நாளில் லட்சியமாகக் கொண்டுள்ள மனிதர்களின் கொள்கைப்படி அவரைச் சம்சாரத்தில் பற்றில்லாதவராகக் கொள்ளலாம். ஆனால் உண்மையில் என் தந்தை எங்கள் மீது அளவிலா அன்பு கொண்டிருந்தார்.

—ஸ்ரீமதி என். சகுந்தலா

கமலாவின் கல்யாணம்

'ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் செய்து வை' என்று பெரியோர் சொல்லியிருக்கிறார்களாம். பொய் சொல்லுவது ஏதோ அவ்வளவு சுலபமான காரியம் என்று எண்ணித்தான் அவர்கள் அவ்வளவு பேச்சு தாராளம் காட்டியிருக்கிறார்கள். ஆனால் ஜூனியர் வக்கீலாகிய எனக்குத் தெரியும், பொய்யிலுள்ள சிரமம். நம்முடைய கட்சி சாட்சியை, ஒரு பொய் சரியாகச் சொல்லி மீந்து வரும்படி செய்வதற்குள் வாய்ப் பிராணன் தலைக்கு வந்து விடுகிறது. ஆயிரம் பொய் சொல்லுவதாம்! கலியாணம் செய்து வைப்பதாம்! அந்த நிபந்தனையின் பேரில் தான் கல்யாணம் நடக்குமென்றால் உலகத்தில் ஆண் பிள்ளைகள் எல்லாரும் விநாயகர்களாக இருக்க வேண்டியதுதான்!

—கல்கி

பாப்பா மலர்

பாலு இடி இடி யென்று சிரித்தான். தான் கண்ட பயங்கரமான சொப்பனத்தை அம்மாவிடம் விவரமாகச் சொன்னான்.



"அதிகமாகப் பட்சணம் தின்றால் இப்படித்தான் பயங்கரமான சொப்பனம் வரும். இனிமேல் அதிகமாய்ப் பட்சணம் சாப்பிடாதே" என்றாள் அம்மா.

"கட்டாயம் சாப்பிடுவேன், அம்மா! பயங்கரமான சொப்பனம் தான் எனக்குப் பிடிக்கிறதே" என்றான் பாலு.

—குகன்

கம்பர் தரும் காட்சி

வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள். கம்பர் பாடல்களைப் படிக்கும் போது கவியை அநுபவித்துப் படிக்க வேணும். சாவகாசமாய், உணர்ச்சியோடு ஒட்டிப் பாட வேண்டும். வசனம் மாதிரி, திவச மந்திரம் மாதிரி வாசித்துவிடக் கூடாது; பாடத்தான் வேண்டும்; திரும்பத் திரும்பப் பாட வேண்டும். சில தடவைகள் பாடிவிட்டால், ஆயுள் நாள் முழுதுமே பாடிக் கொண்டிருந்து விடலாம் என்று தோன்றும்.

—டி. கே. சி.

ஹரதத்தரின் சிவபக்தி

மஹாமஹோபாத்யாய உ. வே. சுவாமிநாதய்யர் அவர்கள் தமது ஆசியுடன் கல்கியின் முதல் இதழுக்கு இந்தச் சிவபக்தரின் அற்புத வாழ்க்கைச் சித்திரத்தையும் அனுப்பியிருக்கிறார்கள். ஐயர் அவர்களுடைய ஆசியைத் தமிழ்த் தாயும், தமிழ் நாடும் "கல்கி"க்கு அருளிய ஆசியாகவே கருதுகிறேன்.

—ஆசிரியர்

ஒட்டிக்கு இரட்டி!



"டேய்! நீதானே இரைச்சல் போட்டு என். எஸ். கிருஷ்ணன் பாட்டுப் பாடிண்டிருந்தே?"

"இல்லீங்க, ஸார்! நிசம்மா."

"பொய் சொல்லித் தப்பிச்சுக்கலாம்னு பார்த்தியா? அதெல்லாம் இங்கே நடக்காது. அந்தப் பாட்டை இன்னும் இரண்டு தடவை பாடு!"

—சாமா

விடுதலை


அநேக மரங்கள் இருக்கின்றன. மரத்தில் இருக்கும்படியான காய்கள் கசப்பாக, புளிப்பாக, துவர்ப்பாக இருக்கும் போதெல்லாம் மரத்திலிருந்து அவை விடுபடுவதில்லை. ஆனால் அவைகளே பக்குவம் அடைந்து விட்டால் - மதுரம் ஆகிவிட்டால் - மரமே அவைகளை அதிக நாள் வைத்துக் கொள்ள மாட்டேன் என்கிறது. மரமே தானாக அதை விட்டு விடுகிறது. கசப்பு, புளிப்பு, துவர்ப்பு ஆகிய சுவைகள் மாறி எப்படி எல்லாப் பழங்களுக்கும் ஒரு மதுரம் வந்து விடுகிறதோ அப்படியே எல்லா ஜனங்களும் கோபம் உடையவர்களாக, காமம் உடையவர்களாக, த்வேஷம் உடையவர்களாக ஆதியில் எப்படி இருந்த போதிலும் மனம் பக்குவம் அடைந்தவுடன் யார் எப்படி நடந்தாலும் அவர்களிடம் கோபமோ, துக்கமோ வராமல் சதா கருணையோடு ஆனந்தமாக இருக்கும்படியான தன்மையை அடைந்து விடுகிறார்கள். கசப்பாக, புளிப்பாக, துவர்ப்பாக இருக்கும்போது மரத்திலேதான் இருக்கிறது காய். காமம், கோபம், துக்கம் எல்லாம் இருக்கிறபோது நாம் சம்சார விருக்ஷத்தில்தான் ஒட்டிக்கொண்டு இருக்கிறோம்; பந்தப்பட்டுக் கிடக்கிறோம். நல்ல பக்குவம் ஆகிற சமயத்தில் மதுரத் தன்மை வந்து விட்டவுடன் மரத்தை விட்டுப் பழம் கீழே விழுந்து விடுவதுபோல் காமம், குரோதம், லோபம், மோகம் எல்லாம் போய் ஆனந்தமாக இருக்கும்படியான தன்மை வந்துவிட்டவுடன் ஆத்மா தானாகவே சம்சார விருக்ஷத்திலிருந்து விழுந்து விடும். அதற்குத்தான் மோக்ஷம் என்று பெயர். கசப்பு, புளிப்பு, துவர்ப்பு போன்ற காமம், மோகம், கோபம் எல்லாம் நம் மனத்தில் காய்களில் இருப்பதுபோல ஆரம்பத்தில் இருக்கத்தான் வேண்டும். இருப்பதால் கெடுதி இல்லை. காய்கள் மரத்திலே இருப்பதுபோல் நாமும் சம்சார விருக்ஷத்தில் இருக்கத்தான் வேண்டும். பக்குவம் அடைந்தவுடன் விடுதலை அடையவேண்டும். இந்த மாதிரியான விடுதலைதான் உண்மையான விடுதலை.

த்ரியம்பக மந்திரத்திலே வெள்ளரிப் பழம்போல மோட்சம் பெற வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. வெள்ளரிப் பழம் தன்னுடைய காம்பிலிருந்து எப்படி விடுதலை அடைகிறதோ அதுபோல நாம் விடுதலை அடைய வேண்டும்.

வெள்ளரிப் பழ மோக்ஷம் என்றால் என்ன என்ற கேள்வி நமக்குள் எழுகிறது. பழுத்து விட்டால் காம்பிலேயிருந்து எல்லாப் பழங்களும் கீழேதான் விழுகின்றன என்று சொல்வதற்கு இல்லை. மாம்பழம் முதலியன பழுத்து விட்டால் காம்பை விட்டுக் கீழே விழுகின்றன. ஆனால் வெள்ளரிப் பழம் பழுத்து விட்டது என்றாலும் இருக்கிற இடத்தில்தான் இருக்கும். அது எங்கும் போவதில்லை. காம்புதான் அதை விட்டு விடுகிறது.

அப்படி, நாம் எந்த இடத்தில் இருக்கிறோமோ அந்த இடத்திலேயே இருக்க வேண்டும். சம்சார பந்தமாகிய காம்பு





ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் தமது இளையாத்தங்குடி முகாமிலிருந்து, கல்கியின் இருபத்தோராவது பிறந்த நாளுக்கு மேற்படி ஆசிச் செய்தியை அருளியிருக்கிறார்கள். இந்த ஆசி கல்கி நேயர்கள் அனைவருக்கும் உரியது.

ராமநாதபுரம் ஜில்லா இளையாத்தங்குடியிலுள்ள ஸ்ரீ மகாதேவேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தின் முன் ஸ்ரீ பரமாச்சாரியர்களும், இளைய சுவாமிகளும் காட்சி தருகிறார்கள். 27-7-61 முதல் இப்புனித க்ஷேத்திரத்தில் ஸ்ரீ பரமாச்சாரியர்கள் இவ்வருஷ சாதுர்மாஸ்ய விரதத்தை அநுஷ்டிக்கிறார்கள்.



தானாகவே நம்மை விட்டுவிட வேண்டும். நாம் அதை விட்டுப் போவது என்பது கிடையாது. அதனால் ஏற்படுகிற கவலை, துக்கம் நம்மை எதுவும் செய்யக்கூடாது. இருக்கிற இடத்திலேயே ஆனந்தமாக இருந்து கொண்டிருக்க வேண்டும். இதுதான் உண்மையான விடுதலை. இதை யார் கொடுப்பார்? முக்கண்ணன்தான் கொடுப்பான். அவன் கொடுக்கிற முக்திதான் உண்மையான அமிருதம்.

உயிர் உடலை விட்டுப் பிரிகிற காலத்தில் இருதயத்தில் சிவபெருமானின் உருவத்தைத் தீட்டிக் கொண்டு அப்படியே ஆனந்தமாகப் பிரிய வேண்டும். அதனால்தான் சித்திரம் எழுதுவோருக்கு மோக்ஷம் சுலபத்தில் சித்தியாகிறது என்று சொல்வதுண்டு. சித்தத்தின் ஸ்வபாவம் சஞ்சலந்தான், அது லயப்பட்டு ஓர் இடத்தில் நிற்க வேண்டும் என்றால் ஈசுவரனுடைய கடாக்ஷந்தான் வேண்டும்.”[1]



ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார்

காஞ்சி காமகோடி பீடம்

கம்பிக்கு இருந்த தன்மையை வைத்து
இசைத்தேனாகவும் தனக்கு உருவகப்படுத்தியது.
அப்பொழுது இசையாகக் கேட்பதுபோல எனக்குப்
படிக்கும் இசையாகக் கேட்கிறது. சில
வரிகளைப் படிக்கும்போது பத்திரிகை நடத்துவது
சுலபமல்ல. இதுவும் ஒரு சோதனை
காலத்தில் தொடர்ந்து வெளிவருவது
போல ஆகிறது.

நான் முதல் பத்திரிகைகளில் வெளிவந்தவை
நடத்துவது போலவேதான். பத்திரிகையின்
பகுதியில் ஒலிபரப்பு எழுதும் போது
பெரும்பு. அதைக் கொண்டு ஜனங்களைச்
கம்பிக்கு உதவ கிடைக்கும் எழுத்தாளர்
பாராட்டிப் பெறும் இப்படியே பல்வகையான
நடைமுறைக்கு ஒரு அடிப்படை.

தேசம் சுதந்திரம் பெற்றதற்கு முன்பு
வருகின்ற தலைமுறைப்பட்ட இந்தப் பத்திரிகை
இருப்பதையும் புதுப்பெருமையையும். அவ
ர்களுக்கு இப்படிப் பத்திரிகை கம்பி ஒருவேளை
சுதந்திர இலக்கியத்திற்குப் பத்திரிகை ஒன்றாக
போல தொடர்பாக இருப்பது கிடைக்கும் சிறப்
பாகும். இந்த சுதந்திரப் பத்திரிகை இப்படியாக
தொடர்ந்து தொண்டு செய்ய இந்தப் பத்திரிகையை
நான் மனம் வாழ்த்துகிறேன்.

கி. ராஜநாராயணன்

ஸ்ரீமதி சித்தேஸ்வரி தேவி

டாக்டர் நாராயண மேனன்

கர்நாடக சங்கீதம் போலல்லாமல் இந்துஸ்தானி சங்கீதத்தைப் பல பத்ததிகளாகப் பகுத்து ஒவ்வொருவர் ஒவ்வொன்றில் நிபுணத்துவம் பெறுகிறார்கள். சாஸ்திரீய இந்துஸ்தானி சங்கீதத்தின் மிகப் பழைய பத்ததி துருபத் என்பது. சட்ட வரம்புகளுக்கு மிகவும் உட்பட்ட இந்தப் பத்ததிக்கு 'சாஸ்திரீய' என்ற அடைமொழி முற்றும் பொருந்தும். ஆனால் இன்று துருபத் வித்வான்கள் மிகச் சிலரே இருக்கின்றனர். உஸ்தாத் ரஹீமுத்தின் கானும், டாகர் சகோதரர்களும் இம்முறையில் புகழ் பெற்றவர்கள். தற்போது கயால் என்ற பத்ததியே கச்சேரி மேடைகளில் மக்களின் அபிமானத்தை மிகவும் பெற்று வருகிறது. வித்வான்கள், ரசிகர்கள் இரு சாராருடைய கருத்தையும் கயால் சங்கீதம் கவர்ந்து வருகிறது. முக்கியமாக ஷெனாயிலும் புல்லாங்குழலிலும் இவ்வாறே இருக்கிறது.

இந்துஸ்தானி இசையில் இன்னொரு பத்ததியும் பொது மக்கள் அபிமானத்தைப் பெற்றிருக்கிறது. இதுதான் தும்ரி. தும்ரியை சாஸ்திரீய மெல்லிசை என்று சொல்கிறார்கள். ஜாவளி, பதம் இவற்றை மெல்லிசை என்று கூறினாலும் சாஸ்திரத்துக்கு இவை முற்றும் கட்டுப்பட்டிருப்பதைப் போலவேதான் தும்ரியும் விதி முறைகளுக்கு உட்பட்ட பத்ததியாகும். தும்ரி, தாத்ரா, தப்பா, ஹோரி இவற்றைப் பாடுவதற்கும் இதர இந்துஸ்தானி இசை முறைகளுக்குத் தேவையான கலைத் திறனும், பயிற்சியும் அவசியமாகும். பார்க்கப் போனால், தும்ரியை வழுவறப் பாடுவதற்கு மற்றவற்றை விடக்கூட அதிகமான கலைத் திறன் தேவையாகும். அதில் மிளிரும் நுட்பமான சாயைகளின் சூட்சுமங்களைப் புரிந்து கொள்ளவும், அதற்குரிய நளின எழிலை உள்ளபடி அறிந்து கையாளவும் சிட்சை, சாதகம் இவை மட்டும் போதா; சுயமான கலைத்திறன் பெரிதும் வேண்டும்.

தும்ரி கானத்தில் நிபுணத்துவம் வாய்ந்த பல வித்வான்கள் — முக்கியமாக வித்வாம்சினிகள் — வட இந்தியாவில் இருக்கிறார்கள். இவர்களில் ஸ்ரீமதி ரோஷனாரா பீகம் தென்னிந்திய ரசிகர்களுக்கு மிகவும் பரிச்சயமானவர். லக்னௌவைச் சேர்ந்த பீகம் அக்தர், பனாரஸைச் சேர்ந்த ரஸூலன்பாய், சித்தேஸ்வரி தேவி இவர்களும் தும்ரி பாடுவதில் தலைசிறந்து விளங்குபவர்கள்.

தும்ரி சங்கீதத்தின் வெகு நேர்த்தியான ஒரு மரபுக்கு இன்றைய பிரதிநிதியாக ஸ்ரீமதி சித்தேஸ்வரி தேவி விளங்குகிறார் என்பதில் சந்தேகமே கிடையாது. அவர் பனாரஸ் பாணியில் தேர்ச்சி பெற்றவராவார். (தும்ரி இசையில் கவர்ச்சி வாய்ந்த பஞ்சாபி பாணி ஒன்றும் உண்டு.)

சித்தேஸ்வரி தேவி 1909ம் ஆண்டில் காசியில் பிறந்தவர். சிறுவயதில் பண்டித ஸியாஜி மகராஜ் மிச்ராவிடம் அவர் பயிற்சி தொடங்கினார். இந்துஸ்தானி சங்கீதத்தின் முழு எல்லையையும் மிச்ரா அவருக்கு அன்புடனும், அக்கறையுடனும் போதித்தார். 'அவர் எனக்கு எதைக் கற்பித்தாலும் அதைத் தமது இதய பூர்வமாக — பூர்ணமாக — கற்பித்தார்' என்று ஸ்ரீமதி சித்தேஸ்வரி கூறுகிறார். மிச்ரா அவர்கள் மறைந்தபின் லாகூரைச் சேர்ந்த உஸ்தாத் ஏனுயத்கான், தேவாஸைச் சேர்ந்த கான்சாகிப், ராஜப் அலி ஆகியோரிடம் ஸ்ரீமதி சித்தேஸ்வரி சிட்சை பெற்றார்.

இன்று சித்தேஸ்வரியின் கலையானது பழமாகக் கனிந்திருக்கிறது. ஞான பாவம் அதில் ததும்புகிறது. கற்பனை செல்லும் வழியெல்லாம் அநாயாசமாகச் சிறகடித்துப் பறக்கும் இளம் குரலல்ல அவருடையது. அழுத்தம் வாய்ந்த கனமான சாரீரம். பட்டை தீட்டாத வைரத்தைப் போல் அவரது குரல் கரடு தட்டியிருப்பதாகக் கூடச் சில சமயங்களில் தோன்றும். ஆனால் எப்பொழுதும் அது சுருதியோடு பரம சுத்தமாக இழைந்து இழைந்து செல்லும். தற்செயலாக ஏதோ 'பிடி'கள் விழுந்தது என்பது அவர் சங்கீதத்தில் இடையிலே கிடையாது. இசைக் கலை, இசைப் பயிற்சி இவை குறித்த சகல விஷயங்களிலும் அவருக்குள்ள தீவிர ஈடுபாடு காரணமாக அவரது கானம் தும்ரி சங்கீதத்தின் வடிகட்டிய சாரமாகவே திகழ்கிறது. அடர்ந்து



செறிந்த இந்தச் சாரத்தில் பாமர ரஞ்சகமான உத்திகளுக்கோ, மேலெழுந்தவாரியாக ரசிக்கக் கூடிய ஜால வித்தைகளுக்கோ சற்றும் இடம் கிடையாது. அவரது கானத்தின் ஒவ்வொரு துளியும் அர்த்தபுஷ்டியுள்ளது; ஆழ்ந்த உணர்ச்சியுடன் கூடியது; அவரது இதயத்திலிருந்து பொங்கி வருவது.

ஸ்ரீமதி சித்தேஸ்வரி தேவி தற்போது சென்னைக்கு வந்திருக்கிறார். சென்னையின் இசை வாழ்வு அவரால் புதுவண்ணம் பெற்றுச் சிறப்புறும். சரளமாக, மனம் விட்டுப் பழகும் அவரது சுபாவம் அவருடன் தொடர்பு கொள்பவர்களுக்கெல்லாம் ஆனந்தமளிக்கும். சங்கீத சாஸ்திரம் பற்றிய நமது சிந்தனைகளிலும், நானாவித இசை முறைகளைப் புரிந்து கொள்வதிலும் இதுபோன்ற தொடர்புகள் பயனளிக்கும் என்று நம்பலாம். ஸ்ரீமதி சித்தேஸ்வரி தேவியும் தமது சொந்த ஊராகிய புனித காசி க்ஷேத்திரத்துக்குத் திரும்பும்போது நம்மிடமிருந்து கர்நாடக சங்கீதம் என்ற மகத்தான மரபைப் பற்றிய நிலையான நினைவுகளைப் பெற்றுச் செல்வார் என்பதும் நிச்சயம்.

தருமை செய்த தருமம்

"ஆண்டவனிடம் அன்பில்லாத மக்கள் தொண்டு செய்கிறேன் என்று சொன்னால் அதை நம்ப முடியாது; ஈசனுக்கும் ஈசன் வடிவங்களான உயிர்களுக்கும் அன்பிலா மக்கள் தொண்டு செய்ய முற்படுவது போலியே ஆகும்" என்று தருமபுர ஆதீன மகா சந்நிதானமாகிய திருப்பெருந்திரு சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த சுவாமிகள், அன்னாருக்குத் தில்லி தமிழ்ச் சங்கம் அளித்த வரவேற்பில் குறிப்பிட்டார்கள்.

சென்ற சுக்கிரவாரம் (ஜுலை 14ந் தேதி) தமிழ்ச் சங்கத்துக்குச் சுக்கிர தசை அடித்தது. "உங்களுக்கு ஒரு கட்டிடம் தேவை. அடுத்த தடவை நான் வருவதற்குள் அது உருவாக வேண்டும்" என ஆசி கூறித் தாம் ஆயிரத்தொரு ரூபாயும், தலைமை வகித்த போக்குவரத்து மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்களிடமிருந்து ஆயிரத்தொரு ரூபாய் வாங்கியும் சங்கத்துக்கு நன்கொடையாக அளித்தார்கள்.

"பொன்னிறமான மேனி; பன்னிரு கையன் தமிழ்; எந்நேரமும் இன்சொல்" இதுதான் யாம் கண்ட சந்நிதானம்.

"பேச்சிலே நிதானம், மூச்சிலே சைவம்" இதுதான் யாம் கேட்ட சந்நிதானம்.

"தமிழன் தனியல்ல; தரணியெல்லாம் ஒரு குலம்" இதுதான் யாம் அனுபவித்த சந்நிதானம்.

ஆரம்பத்தில் தேவாரத் திருவாசக பதிகங்கள் பாடிய சீர்காழிச் சிறுவன் சம்பந்த மூர்த்தியின் கீர்த்தியைக் குறிப்பிட வேண்டும். அருமையான சாரீரம்; நச்சரிப்பற்ற உச்சரிப்பு; ராக "ஆலாபனையில்" புகுந்து விளையாடாமல் சாகித்தியத்திலே திளைத்து விளையாடினால் உள்ளத்திலே பக்தி ஊற்றுச் சுரக்கும்.

மத்திய சர்க்கார் விவசாய இலாக்காவில் கவிதை கூடப் பயிராகின்றது. ஆச்சரியமாயிருக்கிறதல்லவா? வரவேற்புக் கவி எழுதிய எம். எஸ். பி. ஷண்முகத்தைக் குறிப்பிடுகிறேன். தமிழ் நயம்சொட்டச் சொட்ட அவர் எழுதிய கவிதை தெவிட்டாத தேனாக அமைந்தது. தில்லி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரு ஆறுமுகனாரின் தமிழ் வரவேற்புரை சிறப்பாக அமைந்தது.

சிறந்த "விழா" சோடை "விழா" மல் நடந்தேறியது. — சுப்புடு



வெற்றி
வெற்றி மேல் வெற்றி

MADRAS S. S. L. C. (X Std.) 1962

LIFCO English Det. Notes ... Rs. 3.00
LIFCO Sanskrit Notes (in Tamil) ... (in Print)

பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு, 1962

லிப்கோவின்
'மூவர்'
தமிழ் உரை நூல்

(வினா விடையுடன்)

தேர்வுக்கு இன்றியமையாத யாவும்
அடங்கிய சிறந்த உரை நூல்

விலை ரூ. 3.00

புதிய 9, 10 வகுப்புகள்

லிப்கோ	சமூக நூல் துணைவன்	(9-ஆம் வகுப்பு)	... ரூ.	1.80
லிப்கோ	சமூக நூல் துணைவன்	(10-ஆம் வகுப்பு)	... ரூ.	2.30
லிப்கோ	விஞ்ஞானத் துணைவன்	(9-ஆம் வகுப்பு)	... ரூ.	1.80
லிப்கோ	விஞ்ஞானத் துணைவன்	(10-ஆம் வகுப்பு)	... ரூ.	2.30

பிரதிகள் கிடைக்கும் இடங்கள்

4 லிட்டில் ப்ளவர் கம்பெனி (லிப்கோ), (போன்: 88538) ரங்கநாதன் தெரு, சென்னை-17; M. தாமோதரம் & கம்பெனி, அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், சென்னை-1; ஹிக்கின்பாதம்ஸ் (பிரைவேட்) லிமிடெட், (போன்: 86556) மௌண்ட் ரோடு, சென்னை-2; ரெயில்வே புத்தக ஸ்டால்கள்; C. R. நடராஜன் & ஸன், (போன்: 3610) பெரிய கடைத் தெரு, கோயம்புத்தூர்-1; கவிஞர் பதிப்பகம், (போன்: 2324) 241, ராஜ வீதி, கோயம்புத்தூர்-1; P. K. A. குழந்தைவேல் நாடார், மெயின் ரோடு, திண்டுக்கல்; சிவலிங்க விலாஸ் புத்தகசாலை, (போன்: 399) ஈரோடு; ஸ்ரீ வெங்கடேஸ்வரா புக் டிபோ, டவுன் ஹை ஸ்கூல் ரோடு கும்பகோணம்; M. நடராசுந்தரம் பிரதர்ஸ், புதுமண்டபம், மதுரை; பிரபாத் ஸ்டோர்ஸ், காலேஜ் ரோடு, நாகர்கோவில்; A. K. சுந்தரப்ப செட்டியார், கோட்டை, சேலம்-1; M. ஆறுமுகம் பிள்ளை, திருநெல்வேலி ஜங்ஷன்; S. கிருஷ்ணஸ்வாமி & கம்பெனி, தெப்பக்குளம், திருச்சி-2; ஞானப்பிரகாசம் பேப்பர் ஸ்டோர், 207, கிரேட் காட்டன் ரோடு, தூத்துக்குடி; K. V. பிரஸ் புக் டிபோ, (போன்: 111) லாங் பஜார், வேலூர்; மற்றும் அநேக புத்தகக் கடைகள்.

** லிப்கோ நடமாடும் புத்தக "வான்"களிலும் கிடைக்கும்.*

NALIN

தாசீல் பீமராயர்

பீமசேன ராயர் பத்து வருஷங்கள் ரிவின்யூ இன்ஸ்பெக்டராக இருந்து பிறகு டிபடி தாசில் வேலை மூன்று வருஷங்கள் பார்த்தார். மேலதிகாரிகளுக்கு இவரிடம் ரொம்பப் பிரியம். கடைசியாகத் தாசில் வேலையும் கொடுத்தார்கள்.

டிபடி தாசில் வேலை பார்க்கும்போது மனைவிக்குத் துணையாக மாமியார் வந்து சேர்ந்தாள். தன் குமாரத்தியின் பிரசவத்தைப் பார்த்து விட்டு ஊருக்குத் திரும்பிப் போவதாக வந்த திரௌபதியம்மா, குழந்தையையும் தாயையும் இன்னும் சில நாட்கள் பார்த்துக் கொண்டால் நல்லது என்று தீர்மானித்து ஆறு மாதங்கள் மாப்பிள்ளை வீட்டிலேயே இருந்தாள். பிறகு திரும்பிப் போவதை ஒத்திப் போட்டே வந்தாள். அவள் விதந்துவானபடியாலும் தன் ஐந்து குமாரத்திகளுக்குள் கடைசி மகள் அஞ்சனையம்மாவே தனக்கு அதிகப் பிரியமானவள் என்கிற காரணத்தினாலும் டிபடி தாசில்தார் வீட்டிலேயே காயமாக இருந்து விட்டாள்.

* * *

சின்ன வேலையிலிருந்தபோது வீட்டில் எல்லா வேலையும் அஞ்சனையம்மாளே பார்த்து வந்தாள். டிபடி தாசில் வேலையானதும் அந்தஸ்துக்குத் தகுந்தபடி சமையலுக்கு ஒரு வேலைக்காரியை அமைத்துக் கொண்டார்கள்.

வேலைக்காரி சிறு வயதானவள். கொஞ்சம் லக்ஷணமாகவே இருந்தாள். மேலும் பெரிய மனிதர் வீட்டில் வேலைக்கு அமர்ந்தபடியால் தலையைச் சரியாக வாரிப் பின்னிக் கொண்டு முகத்தில் பொட்டு இட்டுக்கொண்டு சுத்தமான புடவை உடுத்திக்கொண்டு வேலை செய்ய வருவாள்.

இது மாமியாருக்குப் பிடிக்கவில்லை. தன் மாப்பிள்ளையை ஏமாற்றும் யோசனையிலிருக்கிறாள் இவள் என்று அடிக்கடி குமாரத்தியிடம் புகார் செய்வாள்.

* * *

கடைசியாக அவள் பேரில் ஏதோ குற்றங்கள் சொல்லி அவளை நிறுத்தி விட்டார்கள். பிறகு வந்த வேலைக்காரி அவ்வளவு லக்ஷணமாக இல்லை. முகம் அம்மை குத்து. இவளிடம் அபாயமில்லை என்று தைரியமாக மாமியாரும் அஞ்சனையம்மாளும் அவளைக் கொஞ்ச நாட்கள் வைத்திருந்தார்கள். லக்ஷ்மிபாய் சமையல் வேலையில் ரொம்பச் சாமர்த்தியமாக இல்லை. ஆனாலும் ராயர் பொறுத்துக் கொண்டிருந்தார். மாமியாரிடம் ராயருக்கு இப்போது அதிக பயம். தவிர அவளிடம் பணமாகச் சொத்து கொஞ்சம் இருப்பதாகக் கேள்வி. கிழவி அதை அஞ்சனையம்மாளுக்கே கொடுத்து விடுவாள் என்று பீமசேன ராயர் எதிர் பார்த்தார். கிழவிக்கு அறுபது வயது.

* * *

வேலைக்காரி லக்ஷ்மிபாய் முகம் அம்மை வடுக்களினால் கொஞ்சம் விகாரப்பட்டிருந்தாலும் அவ்வப்போது ஓர் அசட்டுச் சிரிப்பு சிரிப்பாள். ராயருக்குச் சாப்பாடு போடும் சமயம் இம்மாதிரி புன்சிரிப்பு கொள்வதைக் கவனித்து வந்த மாமியார் இவள் பேரிலும் சந்தேகம் கொண்டாள்.

ஒருநாள் அவள் வேலையில் ஏதோ தவறு செய்தாள். சிறிய தவறுதான். அதற்காக அஞ்சனையம்மாள் ரொம்பக் கண்டித்துப் பேசினாள்.

"இந்தச் சிறிய தவறுக்கு இத்தனை பேச்சா?" என்றார் டிபடி தாசில்தார்.

"உங்களுக்கு இது சிறிய தப்பு. இவள் என்ன செய்தாலும் உங்களுக்குச் சரியாகவே தோன்றும்!" என்றாள் அஞ்சனையம்மாள்.

கிழவி மாமியாரும் இந்த வாதத்தில் கலந்து கொண்டாள். "வேலைக்காரி விஷயத்தில் நீங்கள் ஏன் பரிந்து பேசுகிறீர்கள்? இவள் விஷயம் எங்களுக்குத் தெரியும். உங்களுக்குத் தெரியாது" என்றாள்.

* * *

"அம்மா! உங்கள் வீட்டில் எனக்கு வேலை வேண்டாம். கணக்கு தீர்த்து விட்டு என்னை அனுப்பி விடுங்கள். என்னைப் பற்றி அவமானமாகப் பேசாதீர்கள்" என்றாள் லக்ஷ்மிபாயம்மாள்.

"இன்னிக்கே போய்விடு. உன்னைப் பற்றி ஊரார் சொல்லுவதெல்லாம் மாப்பிள்ளைக்குத் தெரியாது" என்றாள் திரௌபதியம்மை.

லக்ஷ்மிபாயம்மாள் போய்விட்டாள்.

இம்மாதிரி சமையற்காரிகள் ஏழு எட்டுப் பேர்கள் அமைப்பதும் நிற்பதுமாக நடந்தன. எவ்வளவு அவலக்ஷணமானவர்களாயினும் கிழவிக்கும் அஞ்சனையம்மாளுக்கும் சந்தேகமும் வெறுப்பும்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

கொஞ்சம் லக்ஷணமாக இருந்தாலோ சொல்ல வேண்டியதே யில்லை.

* * *

கொஞ்சநாட்கள் எந்த வேலைக்காரியு மில்லாமல் குடும்பம் நடந்தது. இப்படி விட்டாலேதான் இவர்களுக்கு நல்ல புத்தி வரும் என்று எண்ணிப் பீமசேன ராயரும் சும்மா இருந்தார்.

* * *

ஆனால் எத்தனை நாட்கள் இப்படி நடக்கும்! எல்லாரும் கூடிக்கலந்து, "இந்த வேலைக்காரிகள் இனி வேண்டாம். ஓர் ஆண்பிள்ளை சமையற்காரனை வைத்துக் கொள்வோம்" என்று தீர்மானித்தார்கள்.

பீமராயருக்கு இப்போது நாசில் வேலையாயிற்று. வீட்டில் சர்க்கார் சம்பளத்தில் ஒரு சேவகன் எப்போதும் இருப்பான். ஆனால் அவன் சமையல் அறைக்குப் போக முடியாது. பிராமணர்கள் வீட்டில் வேறு ஜாதியர் அடுப்பண்டை போகலாகா தல்லவா? வேலைக்காரி இல்லாமல் வீட்டு வேலை செய்து மாமியாரும் அஞ்சனையம்மாளும் அலுத்துப் போனார்கள். ஆகவே ஒரு சமையற்காரனைப் பார்த்து அமைத்துக் கொள்ள வேண்டும் என்று மேலே சொன்னபடி முடிவுக்கு வந்தார்கள்.

"இவர் ரொம்ப நல்லவர். ஹூரூர் தாலூகா போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமராயர் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தார். அந்த இன்ஸ்பெக்டருக்கு பாவம் வேலை டிஸ்மிஸ் ஆகிவிட்டது. வெங்கோபாசார் இந்த ஊருக்கு வந்திருக்கிறார். இவருக்குச் சமையல் நன்றாகத் தெரியும். நல்ல சர்டிபிகேட்டும் வைத்திருக்கிறார்" என்றான் ப்யூன் ராமராஜு.


பீமசேன ராயர் ஸர்டிபிகேட்டைப் பார்த்தார். அவருக்கு அதில் அவ்வளவாக நம்பிக்கை ஏற்படவில்லை. கையெழுத்து ஏதோ ஒருமாதிரி இருந்தது. டைப் செய்திருந்த ஸர்டிபிகேட்டின் கீழ் போட்டிருந்த "பி. ராமராவ்" என்ற கையெழுத்து எழுதப் படிக்க அவ்வளவாகத் தெரியாதவன் எழுதியது போல் இருந்தது.

"அந்த இன்ஸ்பெக்டர் அவ்வளவுதான். அவர் அதிகம் படித்தவர் அல்ல. 'ஹெட்'டாக இருந்து 'பிரமோஷன்' ஆனவர்" என்றான் வெங்கோபன் சிரித்துக் கொண்டு. என்னவாயிருந்தாலும் சமையல்காரன் ஒருவன் வேண்டியிருந்தது. அவனை அமைத்துக் கொண்டார்கள்.

* * *

வெங்கோபன் வெகு அடக்கமாக நடந்து கொள்வான்.







ராத்திரி "வெளிக் கதவைச் சரியாகத் தாழ்ப்பாள் போட்டுக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுத்தான் வேலையை முடித்துக் கொண்டு வெளியே போவான். வீட்டு வாசல் திண்ணையில்தான் அவன் படுப்பான். சில நாட்களானதும் எங்கேயோ ஓர் இடத்தில் இவனும் இவனைப் போன்ற ஏழைகள் இருவரும் சேர்ந்து ஓர் அறை இரண்டு ரூபாய் வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதில் படுத்து வந்தார்கள்.

வீட்டில் உள்ள ஒன்றிரண்டு வெள்ளித் தட்டுகள், டம்ளர்கள் இவற்றை எல்லாம் இரவில் சரியாக எண்ணிக் காட்டி ஒரு கூடையில் போட்டு, "பார்த்துக் கொள்ளுங்கள் அம்மா!" என்று அஞ்சனையம்மாளிடம் தினம் தவறாமல் ஒப்படைப்பான் வெங்கோபன்.

தினம் மத்தியானம் பீமராயர் சுவாமி பூஜை செய்வார். முடிந்ததும் வெங்கோபன் தாசில்தாருடன் தவறாமல் தரையில் விழுந்து கும்பிடுவான்.

"எவ்வளவு யோக்கியமானவன்! அந்த விபசார ஸ்திரீகளை அனுப்பிவிட்டது எவ்வளவோ நல்லதாயிற்று. ஆண்பிள்ளை வேலைக்காரர்களே மேல். ஏகாதசியன்று நாம் பலகாரம் செய்தாலும் இவன் உபவாசம் இருக்கிறான்" என்றாள் கிழவி மகளிடம்.

"நீ அப்படிச் சொல்லுகிறாய்; உங்கள் மாப்பிள்ளை அபிப்பிராயம் வேறே. காவேரி போனபோது எஜமானர் அவளுக்கு இரண்டு ரூபாய் அதிகப்படியாகக் கொடுத்து அனுப்பினார்" என்றாள் அஞ்சனையம்மா. காவேரியம்மாள்தான் கடைசியாகச் சமையல்காரியாக இருந்தவள்.

இந்த விஷயம் அதுவரையில் திரௌபதியம்மாளுக்குத் தெரியாது. இதைக் கேட்டதும் மிகவும் கோபம் கொண்டாள்.

அடுத்த நாள் மாப்பிள்ளை பீமராயரிடம் இதைப்பற்றி ஜாடையாகப் பிரஸ்தாபித்தாள். "இப்படி சம்பளத்துக்கு மேல் பரிசுகள் ஒரு பெண் பிள்ளைக்குக் கொடுத்தால் எல்லாரும் என்ன நினைப்பார்கள்?" என்று குற்றம் சாட்டினாள்.


"அப்படியெல்லாம் பேசாதீர்கள்! அதற்கு முன்னிருந்த சமையற்காரிகள் வேலையை விட்டுவிட்டுப் போனபோதும் இரண்டு ரூபாய் கூடச் சேர்த்துத்தான் கொடுத்தனுப்பினேன். வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது கொஞ்சம் சேர்த்துக் கொடுப்பது நியாயம்" என்றார் பீமராயர்.

"நீர் ரொம்ப தருமசாலி, எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் ஜனங்கள் சந்தேகம்தான் படுவார்கள்" என்றாள் கிழவி.

* * *

"அம்மா! பட்டுப் புடவை புறக்கடையில் உலர்த்தியிருப்பது எடுத்துவைக்காமல் ராத்திரி அங்கேயே இருந்தது. இது அபாயம், அம்மா. திருட்டு அதிகம். சரியாக எடுத்து வையுங்கள்" என்றான் வெங்கோபன்.

வெங்கோபன் எவ்வளவு யோக்கியன் என்று மறுபடியும் கிழவியும் மகளும் சிலாகித்துப் பேசினார்கள். ப்யூன் ராமராஜுவும் இந்தப் பேச்



சில் கலந்து கொண்டான். தான் பார்த்துத் தந்த வேலைக்காரன் இத்தனை நல்ல பேர் எடுத்தானே என்று அவனும் மகிழ்ச்சி யடைந்தான்.

* * *

இன்னொரு நாள் கிழவியம்மாள் தன் பெட்டியின் சாவியைக் குளிக்கும் கட்டில் வைத்து விட்டு மறந்திருந்தாள். வெங்கோபன் அதை எடுத்துக்கொண்டு வந்து, "இப்படிச் செய்கிறீர்களே? இது அபாயம்" என்று சொல்லிச் சாவியைத் திரௌபதியம்மாளிடம் தந்தான்.

கிழவி இன்னும் மகிழ்ச்சியடைந்து அவனைப் பற்றி இன்னும் சிலாகித்துச் சிலாகித்துப் பேச ஆரம்பித்தாள்.

* * *

ஒருநாள் எல்லாரும் சினிமா பார்க்கப் போனார்கள். டிக்கட்டுக்குப் பணம் இல்லை. தாசில்தார் வீட்டார் வந்து பார்ப்பதே தங்களுக்குக் கௌரவம் என்று சினிமாக்காரர்கள் அழைத்தார்கள்.

எல்லாரும் போனார்கள். சமையற்காரனையும் அழைத்துப் போனார்கள். ப்யூன் ராமராஜுவும் போனான். கூட்டத்தில் குழந்தையைப் பார்த்துக் கொள்ள அவன் போனான்.

வீட்டைப் பூட்டி விட்டு எல்லாரும் சென்றார்கள். வெளிக்கதவு வெங்கோபனே தான் போட்டுப் பூட்டிவிட்டுச் சாவியை அஞ்சனையம்மாளிடம் தந்தான்.

படம் பார்த்து முடிந்ததும் எல்லாரும் திரும்பினார்கள். "ஐயோ" என்று ஒரு சப்தம் கிளம்பிற்று. "நான் கெட்டேன்" என்று கதறினாள் திரௌபதியம்மாள்.

"என்ன சமாசாரம்?" என்று எல்லாருக்கும் முன்னதாக ஓடினான் வெங்கோபன்.

"எஜமானரே, பார்த்தீர்களா? நானாவது ராமராஜுவாவது வீட்டில் இருக்கிறோம் என்று சொன்னதை நீங்கள் கேட்கவில்லை, எங்களையும் சினிமாவுக்குக் கூட்டிக்கொண்டு போனீர்கள். திருடர்கள் வீட்டில் புறக்கடைச் சுவர் ஏறி உள்ளே புகுந்து மாமியார் அம்மாவின் பெட்டியைத் திறந்து துணிமணி எல்லாம் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்" என்று கூப்பாடு போட்டான்.

"அம்மா! என்ன வைத்திருந்தாய், பெட்டியில்?" என்று கேட்டாள் அஞ்சனையம்மாள்.

"ரூபாய் நூற்றிருபது ரொக்கம் ஒரு டப்பியில் வைத்திருந்தேன். மற்றதெல்லாம் கீழே கிடக்கின்றன. பணத்தை மட்டும் திருடி விட்டான் திருடன்" என்று கிழவி சொல்லித் தரையில் விழுந்து புரண்டு அழுதாள்.

"எனக்கு ஐம்பது ரூபாய் இன்ஷுரன்ஸ் கட்டுவதற்குப் பணம் கடன் கேட்டேனே. என்னிடம் ஏது காசு என்றீர்களே அம்மா! அதைக் கொடுத்திருந்தாலும் அதாவது மிகுந்திருக்குமே" என்றார் தாசில்தார்.

இதை அவர் சொன்னதும் மாப்பிள்ளை மேல் எரிந்து விழுந்தாள் கிழவி. "நான் பதரிக்குப் போய் பகவான் காலடியில் உயிரை நீக்க வேண்டும் என்று வைத்திருந்த ரூபாயைத் திருடிக் கொண்டு போய்விட்டார்களே" என்று அழுதாள்.

"இது யாரோ உள் உளவு இருந்து நடந்திருக்கிறது" என்றான் வெங்கோபன், புறக்கடைக் கதவு தாழ்ப்பாள் எல்லாம் போய்ப் பார்த்துவிட்டு வந்து.

"அப்படித்தான் இருக்க வேண்டும்" என்றாள் கிழவி.

* * *

மறுநாள் போலீசார் எல்லாரும் வந்து பார்த்தார்கள். ஹெட்கான்ஸ்டேபிளுக்கு வெங்கோபன்மேல் சந்தேகம். கிழவியம்மாளுக்கு ராமராஜு பேரில் சந்தேகம்.

"இல்லை, இல்லை, ஊரில் ஒரு புதுத் திருட்டுக் கூட்டம் வந்திருக்கிறது. அவர்கள் வேலைதான் இது" என்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

எப்படியாயினும் வெங்கோபனையும், ராமராஜுவையும் விசாரிக்க வேண்டும் என்று சொல்லி ஸ்டேஷனுக்கு அழைத்துப் போனார்கள்.

மறுநாள் "உங்கள் சமையற்காரன் பழைய குற்றவாளி. அவனுக்கு ஒவ்வொரு ஊரிலும் இதுவே வேலை. அவனை அடைத்து வைத்திருக்கிறோம்" என்றார் சப் - இன்ஸ்பெக்டர்.

* * *

"அவ்வளவு யோக்கியனாக இருந்தானே!" என்றாள் கிழவி வியப்படைந்து.

"இதோ பாருங்கள் அவனிடம் இருந்த சாவிக் கொத்து. எந்தப் பூட்டையும் பெட்டியையும் திறந்துவிடலாம், இதைக் கொண்டு" என்றார் சப்-இன்ஸ்பெக்டர், ஒரு பெரிய சாவிக்கொத்தைக் காட்டி.

"தன் தாயார் கிழவி திருப்பதி யாத்திரை போகிருள். அவளுக்குப் பத்து ரூபாய் அனுப்ப வேண்டும். சம்பளத்துக்குமேல் நீங்கள் கடன் கொடுங்கள் என்று ரகசியமாக என்னைக் கேட்டான். நான் யாருக்கும் தெரியாமல் என் பெட்டியைத் திறந்து எடுத்துக் கொடுத்தேன். இப்படி மோசம் செய்வான் என்று நான் எண்ணவில்லை" என்ருள் திரௌபதியம்மாள்.

"சாவி போட்டுத்தான் எடுத்திருக்கிருன். பெட்டியை உடைக்காமல் திருடன் பணத்தை மாத்திரம் எடுத்திருக்கிருன், பார்" என்ருள் அஞ்சனையம்மாள்.

"அவனிடத்தில் ஏதேனும் ரூபாய் கிடைத்ததா?" என்று அலறினள் கிழவி.

"அதுதான் கிடைக்கவில்லை. அதற்காக விசாரணை நடக்கிறது. அவனுக்கு யாரோ கூட்டு இருக்கிருர்கள்" என்ருர் போலீஸ் அதிகாரி.

"சினிமாவில் நம்மோடேயே இருந்தானே!" என்ருள் அஞ்சனையம்மாள்.

"திருட்டுப் பயல், இருட்டில் அவன் வெளியே வந்து இந்தக் காரியம் செய்துவிட்டு மறுபடியும் ஒன்றும் தெரியாதவன்போல் நம்மோடு கொட்டகைக்குள் உட்கார்ந்திருக்க வேண்டும்" என்ருர் பீமராயர்.

* * *

ஆறு மாதங்கள் கழித்து வெங்கோபனுக்கு ஏழு வருடங்கள் தண்டனை விதித்தார்கள். பழைய திருட்டுக் குற்றங்கள் நான்கு எடுத்து வாசித்துப் பெரிய தண்டனை கொடுத்தார்கள். அவனும் எல்லாம் ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்டான். நீதிபதி அந்த மன்னிப்பு விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. பணம் ஒரு சிநேகிதனிடம் இருக்கிறது என்ருன். அந்தச் சிநேகிதன் பராரி போலீசாருக்குச் சிக்கவில்லை.

* * *

திரௌபதியம்மாள் மற்ருெரு மகள் இருக்கும் ஊருக்குப் போய் விட்டாள். பீமராயர் ஒரு வயதான அம்மாளைத் தேடிப் பார்த்துச் சமையலுக்கு அமைத்துக் கொண்டார். சில ஆண்டுகளுக்குப் பின் பென்ஷன் வாங்கிக் கொண்டு கிராமத்துக்குப் போய்க் குடியிருந்தார். அவர் சிரித்துக் கொண்டு சொன்ன கதைதான் இது.

தூய உள்ளம்

விடிந்தும் விடியாமல் இருந்த வைகறைப் பொழுதினிலே அவ்வீட்டு வாசலில் குதிரை வண்டி ஒன்று வந்து நின்றதை, எந்தத் தேவதை உள்ளே போய் அறிவித்ததோ, தெரியவில்லை. அடுத்த நிமிஷம் புற்றிலிருந்து ஈசல்கள் கிளம்ப ஆரம்பித்து விட்டன.

பதினெட்டுக்கு மேற்பட்ட குடித்தனங்கள் கொண்ட ஸ்டோர் அது. குட்டிக்கிராமம் போன்றது. அம்பலவாழ் மக்களின் எண்ணிக்கைக்குக் கேட்பானேன்?

சிறிசும் பெரிசுமான வாண்டுகள் பட்டாளம் ஒன்றரை டஜனுக்கு மேல். தொண்டு கிழங்கள் அரை டஜன் தேறும். பத்துக்கு மேற்பட்ட இளவட்டங்கள். இவைகளுக் கேற்பப் பெண் தெய்வங்கள். அத்தனையுமே இரண்டு பிரும்மாண்டமான திண்ணைகளில் கூடி விட்டன.

வண்டியிலிருந்து வாட்ட சாட்டமான இளைஞன் ஒருவன் கையில் பையுடன் கீழே இறங்கி வந்தான்.

குண்டும் குழியுமாக இருந்த ஓட்டுத் திண்ணையின் ஓரத்தில், எஞ்சியிருந்த பற்கள் இரண்டையும் கால் மணி நேரமாக வேப்பங்குச்சி ஒன்றினால் துளைத்துக் கொண்டிருந்த கிழவர் ஒருவர் கண்களை இடுக்கிக் கொண்டு கவனித்தார்.

"பிள்ளையாண்டானைப் பார்த்தா நம்ம பாஸ்கரன் மாதிரின்னு இருக்கு!..." என்று அவர் வாய் குரல் கொடுத்ததுதான் தாமதம், "ஆமாம்ஓய்! பாஸ்கரனேதான்!" என்று மற்றொரு மத்திய வயதுக்காரர் ஒத்து ஊதினார்.

"ஆமாம்டி ஆமாம்!... பாஸ்கரனே தான்!... நேத்துக் குழந்தை அவன். மளமளன்னு ராஜாவாட்டம் வளர்ந்து விட்டானே!...." — கிழவி ஒருத்தியின் பொக்கை வாய் பிசுபிசுத்தது.

"பாஸ்கரன்!... பாஸ்கரன்!... நம்ம பாஸ்கர மாமா!..."

திண்ணையில் நின்று கொண்டிருந்த வாண்டுகளில் ஒரு சில கும்மாளம் அடித்துக் கொண்டே கீழே குதித்தன.

மறு விநாடி—

சந்தடியும் அமர்க்களமும் பொங்கி வழிந்த அந்த வாசலில் மௌனம் நிலவியது. கூடி

பிலஹரி

விஜயா



யிருந்தோர் அனைவரும் வண்டியிலிருந்து இறங்கிய மற்றோர் உருவத்தைக் கண் இமைக்காமல் பார்க்கத் தொடங்கினர்.

வானத்திரையில் சடேரென்று தோன்றி மறையும் மின்னல் ஒன்று, உருப்பெற்று வண்டியிலிருந்து இறங்கியது. ஒரு முறை தன்னைச் சுற்றி வெட்கத்துடன் பார்த்துவிட்டு, அந்த இளைஞனின் பின்னால் அமெரிக்கையுடன் நின்றது.

பாஸ்கரன் சற்றே தயங்கினான். திரும்பிப் பார்த்தான். அந்தப் பெண்ணின் முகத்தில் புன்னகை மாறவில்லை. வீட்டு வாசற்படியை நோக்கி நடந்தார்கள் இருவரும்.

"இந்தாடாப்பா குழந்தை! ஒரு நிமிஷம் அப்படியே நில்லு! இதோ வந்துடறேன்!..." என்றவாறே எவளோ ஒரு வயதான அம்மாள் உள்ளே ஓடினாள். மறு நிமிஷம் கையில் தட்டுடன் வெளிப்பட்டாள்.

"கிழக்கே பார்த்து நில்லுடா! அவளையும் நிற்கச் சொல்லு! எங்களுக்குத்தான் பத்திரிகைகூடக் கிடையாது போலிருக்கு...உம்... பரவாயில்லை!..." என்றவாறே ஆரத்தி எடுத்தாள் அந்த அம்மாள்.

வீட்டினுள் காலடி எடுத்து வைத்தனர் இருவரும். பல் தேய்த்துக் கொண்டிருந்த கிழவர் அருகில் வந்தார்.

"ஏண்டாப்பா! இங்கே இருக்கிற மட்டும் தாத்தா, தாத்தான்னு உயிரை விடுவியே! எந்தச் சமயத்தில் தாத்தாவை நினைக்கணுமோ, அந்தச் சமயத்தில் தாத்தாவை மறந்துட்டியாக்கும்!"

பாஸ்கரன் வெறுமனே சிரித்தான்.

"ஏண்டாலே! ஊரை விட்டுப் போய் ஒன்றரை வருஷம் ஆகல்லே; அதற்குள்ளே பத்து வருஷப் பழக்கத்துக்கு முழுக்குப் போட்டுட்டே போலிருக்கே!" இது மற்றொரு நபரின் விசாரணை.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. ஏதோ திடீர்னு நிச்சயமாயிடுத்து. உங்களுக்கெல்லாம் தகவல் அனுப்பக்கூட நேரம் இல்லாமல் போயிடுத்து!" என்று சமாதானம் கூறினான் பாஸ்கரன்.

"எப்படியப்பா எங்க நினைவு வரப் போறது? கிளியாட்டம் பெண்டாட்டியைப் பார்த்துத்தான் உலகமே மறந்து போயிருக்குமே உனக்கு!..."—பெண்கள் பகுதியிலிருந்து ஒரு நபர் உரிமையுடன் புகார் செய்தாள்.

"சரி! சரி! வந்தவளை வாசல்லே நிறுத்தி என்ன பேச்சு! உள்ளே போகட்டுமே!" என்று ஒரு குரல் கட்டளையிட்டது.

கூட்டம் விலகி வழிவிட்டது. பெண்டுகள், வாண்டுகள் புடைசூழ உள்ளே நுழைந்தனர் இருவரும்.

பெரிய முற்றம். அதன் மையத்தில் ஒரு குழாய். அதனடியில் ஏழெட்டு வாளிகள். ஏராளமான அழுக்குத் துணிகள் தாறுமாறாக இறைபட்டுக் கிடந்தன. 'க்யூ' வரிசையில் குடங்கள். குழாயை ஒட்டியே ஓடும் சாக்கடை. அதிலிருந்து எழும் இலேசான துர்நாற்றம். பரட்டைத் தலையும் அழுக்கு உடையுமாகக் குழந்தைச் செல்வங்கள். சற்றுத் தள்ளி, பெரிய கூடம். அனைவருக்கும் பொதுவானது போலும். வாசலுக்கு வராமல் உள்ளேயே தங்கியிருந்த நபர்களின் அரட்டைக் கச்சேரி அங்கே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

பழக்கமானதுதான். எல்லாமே பழக்கமானதுதான். பாஸ்கரனுக்கு ஒன்றும் புதிதல்ல இதெல்லாம். ஏன்? இதோ, இந்தப் பெரிய கூடத்திலேதானே அவனும், இதே ஊரில், பத்து வருடங்களுக்குமேல் - இத்தனை குடித்தனக்காரர்களின் அனுமதியையும் பெற்று, காலணா வாடகையின்றி, தன்னுடைய உடைந்த பெட்டியையும் புத்தகப் பையையும் வைத்துக்கொண்டு காலம் கடத்தியிருக்கிறான்? ஊரார் தயவில் ஸ்கூல் பைனல் தேறி, ஆறு வருஷங்களுக்கு மேலாக இதே வீட்டுத் தரையைத்தானே அவன் தேய்த்திருக்கிறான்? அவனுடைய அசாதாரண அழகைப் பார்த்து, அனாதையான அவனுக்குப் புகலிடம் அளித்தது இந்தச் சாக்கடை வாசம் அல்லவா?

"இந்தாடா, பாஸ்கரா! நம்ம வீட்டிலே இன்னிக்குச் சாப்பிடணும், ஆமாம்!"

"இல்லேடா குழந்தை! நம்ம வீட்டிலே பெட்டி படுக்கையைப் போட்டுட்டு, சாப்பிடுடா!"

"ஏலே! நம்ம பேரனுக்கு இன்னிக்குப் பிறந்த நாள்டா! வராதவன் வந்திருக்கே. அதுவும் பெண்டாட்டி சகிதமா வந்திருக்கே! நம்ம வீட்டிலேதான் கை நனைக்கணும்! ஆமாம்!"

மூலைக் கொருவராகப் பிய்த்தெடுத்தனர். அழகான வதனத்தில் அசடு வழிய, தன்



விளக்கு பொருள்களைப் பார்க்க உபயோகப்படுகிறது. அந்த விளக்கைப் பார்க்கிற கண் ஒன்று இல்லாவிடில் பயனில்லை. மயக்கம் அடைந்து விழும் போது கண்கள் திறந்து கொண்டிருந்த போதிலும் பார்க்க முடியாது. ஆகையினால் மனம் இருந்தால்தான் கண்கள் காண முடியும். அந்த மனம் தானாக இயங்காது. ஆத்ம ஒளி அதில் அடித்தால்தான் மனம் நினைக்கும் சக்தியைப் பெறுகிறது. மனம் நினைத்தால் கண் பார்க்கும்; கண்கள் பார்த்தால் விளக்கு வெளிச்சம் தெரியும். விளக்கின் ஒளியால் பொருட்கள் தெரியும். அந்த ஆத்மாவின் ஒளியைத்தான் அறிவு என்று கூறுகிறார்கள். அறிவு ஒரே விதம்தான். என்றாலும், ஒரே மின்சாரம் பல்புகளுக்கு ஏற்றவாறு பலவிதமாகப் பிரகாசிப்பது போல் அவரவர் பக்குவத்துக்கு ஏற்றபடி ஒரே அறிவு பலவிதமாகப் பிரகாசிக்கிறது.

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார்,
காஞ்சி காமகோடி பீடம்

மனைவியைப் பார்த்தான் பாஸ்கரன். அவளோ பார்வையைக் கீழே பதியவிட்டாள். பாஸ்கரனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. எண்சாண் உடலும் ஒரு சாணாகி விட்டதைப் போன்றதொரு உணர்வு. 'இங்கே வந்ததே தப்பு போலிருக்கிறதே. தான் மட்டுமாவது வந்து தொலைந்திருக்கலாம். அவளை அழைத்து வந்திருக்கக் கூடாது. தனக்கு எல்லாம் சரிதான். வர்ணம் பூசப்பட்டுப் பளபளக்கும் பொம்மை யெல்லாம், ஆரம்பத்தில் களிமண்ணாக இருந்ததுதானே? களிமண்தான் தனக்குப் பிறப்பிடம் என்பதை அந்தப் பொம்மை வேண்டுமானால் உணரலாம்; உணர்ந்து தொலைக்கலாம். ஆனால், பளபளக்கும் பொம்மையைக் கையில் வைத்திருப்பவருக்கு அந்த மண் நினைவு ஏன் இருக்கப் போகிறது? ஏன் இருக்க வேண்டும்? ஏன் அதை நினைவுபடுத்த வேண்டும்?'

''ம்......குழந்தை! துணிமணி யெல்லாம் கழற்றி விட்டுக் குளியேன்! பாரு, உனக்காகக் குழாயடியே சுத்தமாகப் போய் விட்டது!'' எவரோ உபசரிக்கும் குரல்.

குழாய் சுத்தமாயிருந்தது — அல்ல, அந்த ஒரு சில நிமிஷங்களில் சுத்தமாக்கப்பட்டிருந்தது. அழுக்குத் துணி மூட்டைகள் குடங்கள், வாளிகள்—எல்லாம் அவனுக்காக, வெறுங் கையுடன் போய், இன்று பட்டுச் சட்டையும், ஜரிகை வேஷ்டியும், கையில் கடிகாரமும், அருகில் ஜ்வலிக்கும் ஆரணங்கு சகிதமுமாய், தன்னுடைய பழைய வாசஸ்தலத்துக்குத் திடீர் விஜயம் செய்துள்ள, இந்தத் திடீர் பெரிய மனிதனுக்காகத்தான் அப்புறப் படுத்தப்பட்டிருந்தன.

மறுபடியும் அவளைத் திரும்பிப் பார்த்தான் பாஸ்கரன். அவளோ அதே புன்னகையுடன் சுற்றுப்புறம் சூழ்நிலையைக் கண்டு பிரமித்து நின்று கொண்டிருப்பதாகத் தோன்றியது.

ஒரு வழியாகக் குளிப்பு முடிந்தது. எந்தக் குடித்தனக்காரரோ நுனி இலையில் ஏதோ சிற்றுண்டி எடுத்து வந்து, சுத்தம் செய்யப் பட்டிருந்த அப் பெரிய கூடத்தின் ஒரு பக்கத்தில் வைத்திருந்தார். விருந்தாளிகள் இருவரும் சாப்பிட்டனர்.

''ஏண்டா; இப்போ எங்கேடா இருக்கே! பட்டணமா, பம்பாயா?''

''ஏண்டா குழந்தை! எங்கே வேலை செய்யறே? கம்பெனி வேலையா, சர்க்கார் வேலையா? 'பின்ஷின்' வருமா? உனக்கு என்ன சம்பளம்?''

''அதெல்லாம் கிடக்கட்டும். உன் பெண்டாட்டியைப் பற்றிச் சொல்லவே இல்லையடா? எந்தப் பக்கத்துப் பொண்ணு? எப்போ கல்யாணம் ஆச்சு? கையில் என்ன ரொக்கம் கொடுத்தா? என்ன சீர்வரிசை யெல்லாம் செஞ்சிருக்கா?''

''இதென்னடி கேள்வி? பொண்ணைப் பார்த்தா காஞ்சுபோன இடமாகவா தெரியறது? அதெல்லாம் பாஸ்கரன் கெட்டிக்காரனாச்சே! பணம் உள்ள இடமாகப் பார்த்துத்தான் வலை வீசியிருப்பான். தப்பு என்ன? அந்த நாளிலே கொஞ்ச நஞ்ச கஷ்டமா பட்டிருப்பான்? அதற்கெல்லாம் ஈடு செய்ய வேண்டாமோ?''

ஏதேதோ கேள்விகள். என்னென்னவோ சம்பாஷணைகள். அபிப்பிராய பேதங்கள்.

எங்கே வேலை? என்ன சம்பளம்? பெண்டாட்டி என்ன கொண்டு வந்தாள்? பெரிய இடத்துப் பெண்ணா, அல்லது பஞ்சை வீட்டுப் பொக்கிஷமா?

பாஸ்கரன் திணறினான்; திகைத்தான். இந்த ஊரில் இறங்கியிருக்கக் கூடாது. இது எல்லாம், இந்தக் கேள்விகளெல்லாம், இந்தச் சூழ்நிலையெல்லாம் அவள் மனத்தில் என்னென்ன அபிப்பிராயங்களை ஏற்படுத்துமோ?

பகல் கழிந்தது.

மனைவியை அழைத்துக் கொண்டு, ஊரெல்லாம் சுற்றிக் காட்டினான் பாஸ்கரன். கம்பீரமாக நின்றுகொண்டிருக்கும் மலைக் கோட்டையைக் காண்பித்தான். தாயுமானவர் தோன்றிய பரம்பொருளைச் சுட்டிக் காட்டினான். அருகிலே உயர்ந்து நிற்கும் கல்விக்கூடங்களை யெல்லாம் விவரித்தான். புனிதமான பொன்னி நதியைப் பற்றி வானளாவ உயர்த்து புகழ்ந்தான். கோவில், குளம் எல்லாம் சுற்றி வந்தனர் இளம் தம்பதிகள்.

இரவு வந்தது. மணி ஒன்பது இருக்கும். பழையபடியும் அவ்வீட்டு வாசலில் குதிரை வண்டி ஒன்று நின்று கொண்டிருந்தது.

''வந்ததும் வராததுமாகப் போறியேடா! ரெண்டுநாள் இருந்துட்டுப் போயேன்!''

''ஏண்டா பட்டணத்துக்குப் போனப்புறம் இந்தச் சாக்கடை வாசம் வெறுத்துடுத்தா? ஒரு பகலுக்கு மேலே இருக்க முடியல்லியா?''

புன்னகையைப் பதிலாக அளித்துவிட்டு, கையில் பையை எடுத்துக் கொண்டான் பாஸ்கரன். மணிபர்ஸைக் கையில் எடுத்தான். சுற்றி நின்ற பஞ்சைச் செல்வங்களுக்குத் தலைக்கு இரண்டணா கொடுத்தான். பையன்களுக்கு ஏகக் குஷி!

"அதெல்லாம் ஒன்றும் இல்லே! நாளைக்கு ஆபீஸ் போகணும்! அதுதான். அவன் எங்கே காணலை? வண்டிக்கு நேரம் ஆயிடுத்தே!" என்றான் பாஸ்கரன்.

"ஐயோ கரிசனமே! உன் பெண்டாட்டியை யாரும் கடிச்சுத் தின்னுட மாட்டா! உனக்குத்தான் பழைய ஞாபகமே இல்லே. பாவம், தங்கமான பொண்ணு. ஒருகாலத்திலே கணவன் இருந்த இடமாச்சேன்னு, ஒவ்வொரு குடித்தனக்காரர்களிடத்திலேயும் சொல்லிண்டு வரப் போயிருக்கு!"

பாஸ்கரன் பதில் பேசவில்லே. கிழவி ஒருத்தி உரிமையுடன் அருகில் வந்தாள்.

"என்னவோ அப்பா! சொந்தக் குழந்தை மாதிரி உன்னை இந்த வீட்டிலே எல்லோருமே எண்ணியிருந்தோம். ஏதோ நூறு ரூபாய் சம்பாதிக்கறயாம்! கம்பெனி வேலையாம்! 'இன்னும்கூட உசரும்!'ன்னு உன் மனைவி சொன்னா! நம்மைப்போல் ஏழை வீட்டுப் பொண்ணு! ஒட்டிண்டு ஒட்டிண்டு பழகறது; போறது!" என்றாள்.

பாஸ்கரன் பிரமித்து நின்றான்.

"பள்ளிக்கூட வாத்தியார் பொண்ணும்! நாலாவதுபெண்ணும்! 'சீர் செனத்தியெல்லாம் அதிகம் செய்யல்லே. ஏதோ இரக்கப்பட்டுப் பண்ணிண்டார்!'னு சொன்னான்! என் கண்ணிலே ஜலமே வந்து விட்டது! 'எங்கபாஸ்கரன் என்னிக்குமே இளகின மனசுக்காரன்!'னு சொன்னேன்! கையில் காதிலே, மூக்கிலே போட்டுண்டிருக்கிறதெல்லாம் ஒரே கவரிங்தானுமே! மனசு கவரிங் இல்லாமல் சுத்தமா இருக்குது

உயர்ந்த மனிதர்!

சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்த அமெரிக்கத் தூதர் கால்பிரெய்த் செனட் கட்டிடத்தில் 'பொருளாதார முன்னேற்றம்' பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

"இதே விஷயம் பற்றி இன்னும் பல இடங்களில் பேச எண்ணியிருக்கிறேன்" என்று ஆரம்பித்தவர், அடுத்து ஒரு ஹாஸ்ய வெடியைக் கொளுத்திப் போட்டார். "இந்தச் சொற்பொழிவுத் தொடர் முடிவுறும் முன்னர் 'அரசியல்வாதிகள் அளவாகப் பேச வேண்டும். அதை ஆற்றலுடன் சொல்ல வேண்டும்' என்பதில் உங்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டு விடும்!"

இந்தப் பொதுவான கொள்கைக்குத் தாம் விதிவிலக்கு என்பதை அன்றைக்கும் அதன் பின்னர் கல்கத்தாவில் பேசியபோதும் நிரூபித்து விட்டார் கால்பிரெய்த். நிறையவும் பேசுவார், நன்றாகவும் பேசுவார் என்பதை நிதர்சனமாகக் காண்கிறோம்.


"எந்தச் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தாலும் சரி; ஒரு விஷயத்தைப் பற்றி நினைத்து மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளலாம். அந்த விஷயம், 'எப்படியும் சொற்பொழிவு முடிந்தே தீரும்' என்பதுதான்!"

இப்படி சொற்பொழிவுக்கு இடை இடையே 'களுக்'குச் சிரிப்பை எழுப்பிக் கேட்பவர்களை உற்சாகப்படுத்தினார்.

பொருளாதாரத் துறையில் நிபுணரான அவர், "பொருளாதார முன்னேற்றத்துக்குப் பொறி இயல் நுணுக்கங்கள் பற்றிய அறிவு, மூலதனம், ஆள் பலம் இவை இருந்தால் போதாது; திறமைமிக்க அரசாங்கம், சமூக நீதி, கல்வி அறிவு இவையும் அவசியம்" என்றார்.

"கல்வி அறிவு மக்களிடையே பரவிவிட்டால் இயந்திரங்களை உற்பத்தி செய்ய வேண்டும், உபயோகிக்க வேண்டும் என்ற ஆர்வமும் ஆசையும் இயல்பாக ஏற்படும். ஆனால் இயந்திரங்களை மட்டும் தருவித்து வைத்து அவை கல்வி அறிவைப் பரப்ப நினைக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை!"

"மேல் நாடுகளுக்குச் செல்லும் ஏராளமான பொருளாதாரத் தூது கோஷ்டிகள் புதிதாகக் கண்டுபிடித்துச் சொல்பவை, ஏற்கெனவே எல்லாருக்கும் தெரிந்த விஷயங்களே!" என்று நகைச்சுவையுடன் சூடு கொடுத்த கால்பிரெய்த் நமது மதிப்பில் இன்னும் அதிகமாக உயர்ந்து விடுவார் என்று சொல்லத் தயக்கமாயிருக்கிறது: போதும் போதும் என்னுமளவுக்கு அவர் இப்போதே உயர்ந்திருக்கிறாரே!



> கண்ட்ரோல்கள் மிகக் கெடுதல். அவற்றினின்று நன்மை விளையும் என்று சிலர் தவறாக நினைக்கிறார்கள். அப்படித் தவறிப் போய் ஏதோ நன்மை விளைந்தாலும், முடிவில் விளையும் தீமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிக அற்பமாகவே இருக்கும். அதிலும் இந்தக் கண்ட்ரோல் முறைகளை ஆளும் கட்சியிலிருப்பவர்களுக்குச் சாதகமாகவும், எதிர்க்கட்சியிலிருப்பவர்களுக்குப்பாதகமாகவும் உபயோகிக்கும்போது அவை கலப்படமற்ற அப்பட்டமான கொடுமையாகவே முடிகின்றன. —ராஜாஜி

பாரு. அது போதும் நமக்கு!" மேலே பேச்சை நிறுத்தினான். உள்ளே யிருந்து அந்தப் பெண் வந்து விட்டாள்.

வாசலிலிருந்து வண்டி நகர்ந்தது.

மணி பத்தரை.

சென்னையை நோக்கிச் செல்லும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் திருச்சி ஜங்ஷனுக்கு விடையளித்து விட்டு, கடு வேகமாகப் பறந்து கொண்டிருந்தது.

பிரத்தியேகமாக்கப்பட்டிருந்த முதல் வகுப்புப் பெட்டியில், ஜன்னலின் வழியே பார்வையை வெளியில் செலுத்தியவாறு அமர்ந்து கொண்டிருந்தான் பாஸ்கரன். எதிரேயுள்ள மெத்தை ஆசனத்தில் அமர்ந்திருந்த அவன் மனைவி மாலதி, பளபளக்கும் பெரிய வெள்ளிக் கூஜாவிலிருந்து, சூடான பாலைத் தம்ளர் ஒன்றில் ஊற்றிக் கொண்டிருந்தாள். அடுத்த விநாடி, தம்ளருடன் அவனை நெருங்கினாள்.

"இந்தாருங்கள், பால்!"

தலையைத் திருப்பிப் பார்த்தான் பாஸ்கரன். மங்கிய நீலநிற விளக்கொளியில், வழவழப்பான உயர்ந்த ரக சில்க் புடவை உடலை அணைத்திருக்க, கைகளும், நாசியும், காதுகளும் 'பளி'ரென்று ஒளிக்கற்றைகளை வாரி இறைக்க, செல்வத்தின் செழிப்பு உடலெங்கும் அபூர்வ காந்தியுடன் வெளிப்பட, வானுலகக் கன்னியென நின்று கொண்டிருந்தாள் அவன் கைப்பிடித்தவள்.

ஆழ்ந்த பெருமூச்செறிந்தான் பாஸ்கரன். தம்ளரைக் கீழே வைத்துவிட்டு, பரிவுடன் அவன் தோள் பட்டையில் கைவைத்தவாறே அருகில் அமர்ந்து கொண்டாள் மாலதி.

"என்மேல் கோபம்தானே?" என்றாள் தித்திக்கும் தேன் குரலில்.

வெறுமனே சிரித்தான் பாஸ்கரன்.

"நான் ஏன் கோபிக்கப் போகிறேன், மாலதி! ஆனால், என்னுள்ளே என்னையும் மீறி — ஏதோ முள் போன்றதோர் எண்ணம் குத்திக் கொண்டிருக்கிறது. அந்த மக்களிடம் அப்படியொரு பொய், மனம் அறிந்துதானே சொன்னாய்? 'ஏன்'னு எனக்கு நானே ஆயிரம் தடவைகள் கேட்டுண்டுட்டேன். பதில் கிடைக்கல்லே!"

"எதைச் சொல்கிறீர்கள்? 'ஏழை வாத்தியார் பொண்ணு நான். பணம் காசு ஒன்றும் கிடையாது. இதெல்லாம் வெறும் போலி நகைகள்' என்று சொன்னதைத் தானே?"

மௌனமாகத் தலையசைத்தான் பாஸ்கரன். இன்னும் நெருங்கி, அருகில் வந்தாள் மாலதி. சற்று நேரம், கண் கொட்டாமல், கொண்டவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஏன்? அப்படிச் சொன்னதில் என்ன குறைவு வந்து விட்டது? செல்வச் சீமானின் ஒரே பெண் நான் என்பதை அவர்களிடம் சொல்லியிருக்க வேண்டுமா? என் அப்பாவிடம் காரியதரிசியாக வந்தவரைக் கண்டு உள்ளத்தைப் பறி கொடுத்து, தந்தையிடம் வாக்குவாதம் செய்து, அவர் மனத்தை மாற்றி, விரும்பியவரையே கைத்தலம் பற்றிய கதையைச் சொல்லவில்லை என்ற கோபமா? 'உங்கள் ஆதரவில், வறுமையின் கோரப் பிடிப்பில், ஒரு காலத்தில் வாழ்ந்தவர், இன்று பல லட்சங்களுக்கு அதிபதி, மாபெரும் கம்பெனி ஒன்றை நிர்வகிக்கும் பெரிய மனிதர்!' என்று நான் தம்பட்டம் அடித்திருந்தால், பாவம் — பிரதிபலன் எதிர்பாராமல் உங்களிடம் அன்பு செலுத்தும் அந்த ஏழை மக்கள், இவ்வளவு உரிமையுடனும், பாந்தவ்யத்துடனும் இன்று உங்களுடனும் என்னுடனும் பழகியிருப்பார்களா!"

மாலதி நிறுத்தினாள். வட்ட நிலா போன்ற அவள் வதனத்தில் முத்தைப் பழிக்கும் ஒன்றிரண்டு வியர்வைத் துளிகள் பனித்திருந்தன.

"குற்றாலம், கோடைக்கானல் என்றெல்லாம் சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு, ஊர் திரும்பும்போது நான்தானே உங்களை இந்த ஊரில் இறங்கும்படி தூண்டினேன்? உங்களுக்கு நிழல் கொடுத்த இடம், அது குப்பைமேடாக இருந்தாலும் என்னைப் பொறுத்தமட்டிலும், புனிதமான தெய்வ சந்நிதானம் போன்றது. அந்தத் திருச்சபையின் புனிதத்தன்மையை, களங்கமற்ற பிரதிபலன் எதிர்பாராமல் செலுத்தப்படும் உண்மை அன்பைத் தட்டிப் பறிக்க நான் யார்? அதற்காகத்தானே இந்தச் சாமான்களை யெல்லாம் ஸ்டேஷனிலேயே போட்டுவிட்டு, வெறும் பை மாத்திரம் கொண்டு போனால் போதும் என்று சொன்னேன்? ஒன்று மாத்திரம் உறுதி. என் பெருமையில், உங்கள் சிறுமை வெளிப்படக் கூடாது. அதை நான் என்றென்றும் அனுமதிக்கவும் மாட்டேன்."

உடலுக்கு இதமான மழைத்துளிகள் சற்று நேரம் உதிர்ந்து விட்டு, ஓய்ந்தாற் போலிருந்தது பாஸ்கரனுக்கு. மனைவியைப் பார்த்தான். இயற்கையிலேயே பளபளக்கும் அவளுடைய கெண்டை விழிகள், இப்போது ஒரு சொட்டு நீருடன் கலந்து, மின்னிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

ஜன்னல் வழியே அவன் பார்வை ஓடியது. உச்சந்தலையில் காந்த விளக்கை ஏற்றிக் கொண்டு, உலகத்து மக்கள் உள்ளத்தில் தூய விளக்கை எரியச் செய்வதற்காக, கம்பீரமாக நின்று கொண்டிருந்த மலைக்கோட்டையைக் கடந்து கொண்டிருந்தது வண்டி.

முப்புரம் எரித்த பிரான், தன் தனித்தன்மையைக் காட்ட, தந்தையாய்ப் பிறக்காமல், தாயுமாய்ப் பிறந்து, அக்கோட்டையினுள் ஏன் குடி கொண்டிருக்கிறான் என்ற அவனுடைய பழைய சந்தேகம் இன்று பறந்தோடி விட்டது.



ஆதரவுடன் சீராட்டி
ஆஸ்டர்மில்க்
பாலூட்டி ...
OSTERMILK
உங்கள் ஆசைக் கண்மணியின் பாக்கியம்: ஆஸ்டர்மில்க் அளிக்கும் ஆரோக்கியம். காரணம், தாய்ப் பாலுக்கு நிகரானது ஆஸ்டர்மில்க். பரிசுத்தமான பாலிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள ஆஸ்டர்மில்க், பாப்பாவின் பச்சிளம் ஜீரண சக்திக்கேற்பப் பிரத்தியேகமாகப் பக்குவப்படுத்தப்பட்டுள்ளது. தவிர, பற்களும், எலும்புகளும் திடவளர்ச்சிபெறுவதற்கான வைட்டமின் 'டி'யும் இரத்த சோகை தட்டாமல் காப்பதற்கான அயச்சத்தும் அதில் சிறப்புறச் சேர்க்கப்பட்டுள்ளன.
...தாய்ப் பாலுக்கு நிகரானது.
இலவசம்: 'ஆஸ்டர் மில்க் புத்தகம்' (ஆங்கிலப் பிரதி)...
...விரிவுமிக்க, குழந்தைப் பராமரிப்பு நூல் ...தபால் செலவுக்காக 50 ந. பைசாத் தபால் வில்லைகள் இணைத்து, எழுதுக: 'ஆஸ்டர்மில்க்' தபால் பெட்டி எண் 2430, சென்னை-2.

X51-M. TM



அஞ்சறைப் பெட்டி







அழகில்லா இடமுமுண்டோ? இவ்வுலகமே அழகு வடிவம். இவ்வழகிய உலகிடை நின்று அண்ணாந்து பார்த்தால் மேலும் கீழும் சுற்றும் முற்றும் அழகு சொரிவது காணலாம். அழகிய நீலப் படாத்தின் விரிவில் நித் திலந் தாவினுலென வானத்தி லூருஞ் செல்விய அழகை என் னென்று வருணிப்பது? ஞாயிற் றின் ஒளியை என்னென்று நவில்வது? திங்களின் நிலவை என்னென்று செப்புவது? கோள்களின் மின்னலை என் னென்று கூறுவது? கரிய காட் டின் காட்சியை எப்படி எடுத் துக் காட்டுவது? கை நீட்டும் அலைகடலின் கவினை எங்ங னம் கழறுவது? என்னே அண் டத்தின் அழகு! இவையெலாஞ் சேர்ந்த ஒன்றே இயற்கையன்னை யின் அழகு வடிவம். அவ்வழகே அழியா அழகு. அதுவே முரு கென்னும் பேரழகு.

பண்டைத் தமிழ் மக்கள் இயற்கை வழி வாழ்வு செலுத்தி அதற்கு அடிப்படையாயுள்ள அழகுண்மை கண்டு, அவ்வழ கால் இயற்கை அழகு பெறுவது நோக்கி, அவ்வியற்கையை வழிபட்டு, முழுமுதற்பொருட்கு அழகு என்னும் பொருள்பட முருகன் என்னும் பெயரணிந் தார்கள்.

* * *

சமய வேற்றுமைகளால் சண்டையிட்டு இறைவனைக் காண முடியாது. இறைவன் நிலையைச் சமரச சன்மார்க்க வழியில் சென்றே அடைய முடியும். எவ்வுயிரையும் தம் முயிர் போலக் கருதி, அன்பு பாராட்டித் தொண்டு செய் வோருக்கே இறைத்தன்மை எய் துதல் எளிதாகும். —திரு. வி. க.

ருஷ்ய நாட்டுக்குச் சென் திரும்பிய மந்திரி ஒருவரை நி பர்கள், "டாக்டர் ஷிவாகே பற்றி உங்கள் அபிப்பிராய என்ன?" என்று கேட்டார்கள் "எனக்கு ஏராளமான வேலை அவரைச் சந்திக்க நேரமில்லை என்று பதில் கிடைத்தது!

இது நிஜமோ கதையோ எ படியானாலும் மந்திரியை ம வித்துவிட முடியும், மன்னி னாகிய நாம் டாக்ட ஷிவாகோ என்ற நாவ ருஷ்யர் பாரிஸ் பாஸ்டர்நா எழுதினார் என்பதைத் தெரி வைத்துக் கொண்டால்.


பிரபலஸ்தர்களான ஓர் ஓவி ருக்கும் பியானோ வாசிப்ப ருக்கும் பிறந்த பாஸ்டர்நா சங்கீதத் துறையில் புக வே டும் என்று ஏற்பாடாயிற் ஆனால் எழுத்தாளராக அவ படவேண்டும் என்று அ தலையில் எழுதி யிருக்கிறதே

"என் வாழ்க்கையின் துண்டு" என்று ஆசிரி குறிப்பிடும் டாக்டர் ஷிவாகே அவரது அமர சிருஷ்டிகளி ருஷ்ய ஆளும் வட்ட அவர்களது கைப்பாவைகளா பத்திரிகைகளும் காட் விரோதபாவமே சுமார் இரு வருஷங்களுக்கு அவரை வெ மொழி பெயர்ப்பாளராக்கி என்பதைப் புலப்படுத்துகிற

டாக்டர் ஷிவாகோவை (யர்கள் பிரசுரிக்க மறுத்த பி அது அமெரிக்காவிலும் இ லாந்திலும் ஆங்கிலத் வெளியாயிற்று.

இலக்கியத்துக்கான நோ பரிசு இவருக்குக் கிடைத் அதனை ஏற்க மறுத்துவிட்ட அப்புறம் ருஷ்ய எழுத்தா யூனியனிலிருந்தே அவர் வெ யேற்றப் பட்டார்!







அபசகுனம் மாதிரி தும்மி வைக்கக் கூடாதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே சொல்லி வைத்தாற் போல் அடக்கமாட்டாமல் தும்மல் வருவதை நாம் அனுபவத்தில் கண்டிருக்கிறோம். இதில் ஆச்சரியம் ஒன்றுமேயில்லை. மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தால் தும்மல் வரும் பலருக்கு என்று வைத்தியர்கள் கூறுகிறார்கள். முடிவில்லாது சிலர் தும்முவதன் காரணமும் ஏதோ நேர்ந்து விட்டதோ என்ற கவலைதான்!

நாசிகளை உறுத்தும் பொருள் ஏதேனும் புகுந்து விட்டாலும் தும்மல் வருகிறது. அந்த அந்நியப் பொருள் தூசியாகவும் இருக்கலாம். அல்லது ஒரு கிருமிக் கூட்டமாயுமிருக்கலாம். இவற்றை அப்புறப் படுத்த இயற்கையாக எழும் செயல் தும்மல்.

ஒவ்வொரு முறை தும்மும்போதும் 4,600 துளிகள் வரை காற்றில் பரப்பப் படுகிறதாம்! தும்மி அரைமணி நேரமான பிறகும் அவ்விடத்துக் காற்றில் இவை மிதக்குமாம். ஒரு தும்மலின்போது 85,000,000 கிருமிகள் வெளியேறுகின்றன என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

ஆகவேதான் தும்முகையில் கைக்குட்டையால் மூக்கையும் வாயையும் மூடிக் கொள்வது அவசியம்.

புராணங்களில் வரும் அரக்கர்களைப் போல் கலியுக அரக்கர் நெ. 1 அடால்ப் ஈச்மன்.

தாம் ஆரம்பித்து வைத்த தேசிய சோஷலிஸ இயக்கத்தில் தேசப் புனர் நிர்மாணத் திட்டம் ஏதுமில்லாத குறையை மூடி மறைப்பும் நோக்கத்துடன் யூதர்கள் மீது வெறுப்பை வளர்த்தார் ஹிட்லர். உலக மேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கூட இந்த வசை புராணத்திலிருந்து தப்பவில்லை!

யூதர்களைப் பூண்டோடு அழித்து விடுவேன் என்று ஹிட்லர் எடுத்துக் கொண்ட சபதத்தை நிறைவேற்றும் பணி 'யூதர்கள் இலாக்கா' தலைவரான அடால்ப் ஈச்மனுக்குத் தரப்பட்டது. லட்சோப லட்சம் மக்களைப் படுகொலை செய்தார்கள்.

ஹிட்லர் தோல்வியுற்ற பிறகு அர்ஜென்டைனாவுக்குத் தப்பி ஓடிய ஈச்மனை இஸ்ராயில் ஒற்றர்கள் சென்ற வருஷம் கைது செய்து போனார்கள், தங்கள் நாட்டில் விசாரணை நடத்த.

“என் பேரில் குற்றமில்லை. மேலிடத்து உத்தரவை நிறைவேற்றினேன்” என்கிறார் ஈச்மன்.

எதேச்சாதிகாரத்துக்கு உட்பட்டு விட்டால் நல்லது கெட்டது பற்றிச் சிந்திக்கும் திறனையே இழந்து கட்டளைகளை நிறைவேற்றிக் கொண்டு போக வேண்டியதுதான் போலும்!

டாக்டர் சித்ரகுப்தா எல்லாரையும் பிரமிக்க வைத்தார். வைத்திய உதவி அளிக்கக் கிராமத்துக்குப் போனார்!

அங்கே அவருக்குப் பேரும் புகழும் கிடைத்தது. கிட்டாதது பணம் மட்டும்தான்!

இந்நிலையில் பண்ணையாருக்கு உடல் நலமில்லை என்று ஆள் வந்து சொன்னதும் விழுந்தடித்துக் கொண்டு அவர் ஓடியதில் வியப்பென்ன?

பாவம், 'பண்ணையார் பெரிய லோபி' என்பது அவருக்குத் தெரியாது!

சிகிச்சை முடிந்ததும் 'பில்'லை நீட்டினார்.

“பில் கிடக்கட்டுங்க. எங்கே ஓடிப் போவுது” என்றார் பண்ணையார்.

பொறுமையுடன் காத்திருந்த டாக்டருக்கு மீண்டும் சில நாட்களுக்குப் பின் அழைப்பு வந்தது.

மருந்து கொடுத்து விட்டு, “பில் பணம்...” என்று இழுத்தார் அவர்.

“அட, நீங்க ஒண்ணு பறக்கிறீங்களே கிடந்து! என் உயில்லே உங்க பேரையும் சேர்த்துக்கறேன். போய் வாங்க, கவலைப்படாமெ” என்றார் பண்ணையார்.

“அப்படியானால் இந்த மருந்து உங்களுக்குப் பிரயோசனமில்லை. ஆள் அனுப்புங்கள், வேறு மருந்து கொடுக்கிறேன்” என்று கூறிவிட்டு நகர்ந்தார் டாக்டர்.

பின்னோடு ஆள் வந்தான்; பணத்துடன்!



புது டயர்கள் கிடைப்பது அரிது!

என்றாலும்

தேய்ந்த டயர்களை புதுப்பிப்பதால் சாலைப் போக்குவரத்து தடைபடாமல் நடைபெறுகிறது

புது டயர்கள் கிடைப்பது சிரமமா யிருக்கிறது. மேலும் சில ரக பஸ்-லாரி டயர்கள் கிடைப்பது மிகவும் அரிது. நாட்டில் இன்றுள்ள டயர் உற்பத்தியால் மோட்டார்களின் டயர் தேவையைச் சமாளிக்க முடியாது. எனவே பற்றாக்குறை நீடிக்கும்.





ஆகையினால் தேய்ந்த டயர்களைப் புதுப்பிக்கும் (ரீடிரெடிங்) தொழில் இன்று தேசிய முக்கியத்துவம் பெற்றுவிட்டது. சென்ற ஆண்டில் மட்டும், நாடு முழுவதிலும் சுமார் நாலு லட்சம் தேய்ந்த டயர்கள் புதுப்பிக்கப்பட்டன. இதனால் சாலைப் போக்குவரத்து ஸ்தானங்களுக்கு ஆதாயமாகக் கிடைத்துள்ள தொகை சுமார் இருபத்தொரு கோடி ரூபாய் ஆகும்.

பஸ் - லாரி டயர்களை உரிய காலத்தில் - அதாவது டயர்களின் இழை தேய்ந்து வழுவழுப்பாகும் பொழுது புதுப்பித்தால் மூன்று முறை புதுப்பிக்கலாம். அதனால் பணம் ஆதாயம்; மேலும் டயர் கண்ட்ரோல் அல்லது பங்கீடு முறையைத் தவிர்க்கலாம்.



TVS

தேய்ந்த டயர் புதுப்பித்தல் சிறந்த சிக்கன முறை

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

(டி. வி. எஸ். ஸ்தாபனம்)

புதுக்கோட்டை - மதராஸ் - கோயமுத்தூர் - பெங்களூர்





நாவல் பிறக்கிறது

'பிறப்பதெல்லாம் இறக்கும்; இறப்பதெல்லாம் பிறக்கும்' என்பது நம்மவர் நம்பிக்கை.

'இறப்பதெல்லாம் பிறக்கும்' என்பதைச் சிலர் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் 'பிறப்பதெல்லாம் இறக்கும்' என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள்.

ஆனால், நாவல்கள்?....

பிறப்பதெல்லாம் இறந்து விடுகின்றனவா? — இல்லை; இறவாத புகழுடைய நாவல்கள் எத்தனை எத்தனையோ இருக்கின்றன. அவற்றின் பட்டியலைக் கொடுத்து, இங்கே நான் எவ்வளவு தூரம் படித்தவன் என்பதைக் காட்டிக்கொள்ள விரும்பாததால், மேலே தொடர்கிறேன்:

அத்தகைய நாவல்கள் எப்படிப் பிறக்கின்றன? எங்கிருந்து பிறக்கின்றன?

சென்னை மூர் மார்க்கெட்டில் விற்கும் பழைய பிறமொழிப் பத்திரிகைகள், பழைய பிறமொழி நாவல்கள் ஆகியவற்றிலிருந்தா? ஹிக்கின்பாதம்ஸில் விற்கும் புதிய ஆங்கிலப் பத்திரிகைகள், புதிய ஆங்கில நாவல்கள் ஆகியவற்றிலிருந்தா? — இல்லை; இல்லவே இல்லை. அதோ, எச்சில் சோற்றுக்கு நாயுடன் போராடிக் கொண்டிருக்கிறானே, அவனைக் கண்டு எவனுடைய நெஞ்சம் பதறுகிறதோ — அதோ, தோய்த்த புடவையில் பாதியைத் தோட்டத்து வேலியின்மேல் போட்டுவிட்டு, இன்னொரு பாதியை இடையிலே சுற்றிக் கொண்டு நிற்கிறாளே, அவளைக் கண்டு எவனுடைய இதயம் குமுறுகிறதோ — அவனுடைய நெஞ்சிலிருந்து, அவனுடைய இதயத்திலிருந்து அத்தகைய நாவல்கள் பிறக்கின்றன. அவ்வாறு பிறக்கும் நாவல்கள் காலத்தை மட்டுமல்ல, காலனையும் வெல்லும் சக்தி வாய்ந்தவையாகி விடுகின்றன.

'எதை எழுதினாலும் அதில் உயிர் இருக்க வேண்டும்; உணர்ச்சி பெருக்கெடுத்து ஓட வேண்டும்' என்பது, நான் எழுத ஆரம்பித்த போதே எடுத்துக்கொண்ட பிரதிக்ஞை. இவையிரண்டும் இல்லாமல் எழுதுவதில்தான் என்ன பயன்? படிப்பதில்தான் என்ன பயன்?

அநீதியையும் அக்கிரமத்தையும் அன்பென்றும் பண்பென்றும் பேசி எவன் மூடி மறைக்கிறானோ, 'நல்லவனாக மட்டும் வாழ்ந்தால் போதாது; வல்லவனாகவும் வாழ வேண்டும்!' என்ற தரித்தனத்தோடு எவன் தன்னை உலகமென்னும் அரங்கத்தில் நடிக்க 'மேக்-அப்' போடாத நடிகனாக்கிக் கொண்டுவிடுகிறானோ, அவனால் மேற்கூறிய நாவல்களை எழுத முடியாது; வாணிப நோக்கத்துடன் எழுத முயன்றாலும் வராது; வரவே வராது.

நண்பர் அகிலன் சொன்னார்: நன்றாகச் சொன்னார் — நதி மூலத்தையும் ரிஷி மூலத்தையும் ஆராயக் கூடாது என்பார்களே, அதுபோல நாவலின் மூலத்தையும் ஆராயக் கூடாதென்று — உண்மை; முக்காலும் உண்மை — நம் தமிழ்நாட்டு நாவல்களைப் பொறுத்த வரை!

ஏன் இந்த நிலை? — இதோ, சில காட்சிகள்:

களம்: மூர் மார்க்கெட் — காலம்: மாலை

"எங்கே ஸார், இப்படி?"

"சும்மாத்தான்!"

"சும்மா யாராவது வருவார்களோ? செப்படிவித்தைக்காரர்களிடம் தாயத்து, தாதுபுஷ்டி மாத்திரை ஏதாவது வாங்க வந்தீர்களாக்கும்?"

"ஹிஹி! அதெல்லாம் ஒன்றுமில்லை. உங்களுக்குத்தான் தெரியுமே, ஓய்ந்த நேரத்திலே நான் பத்திரிகைகளுக்கு ஏதாவது எழுதுவேன் என்று! அதற்காக ஏதாவது 'மெட்டீரியல்ஸ்' கிடைக்குமா என்று பார்க்க வந்தேன்!"

"மெட்டீரியல்ஸ் என்ன ஸார், வேண்டிக் கிடக்கிறது? தச்சனுக்கு உளியும், கொட்டாப்புளியும் தேவைப்படுவது போல, கொத்தனுக்குக் கரண்டியும்

மட்டப் பலகையும் தேவைப்படுவது போல, உமக்கு வேண்டியது காகிதமும் பேனாவும்தானே ?''

''காகிதமும் பேனாவும் இருந்து விட்டால் போதுமா? எழுத ஏதாவது....''

''மூளை வேண்டும் ; அவ்வளவுதானே?''

''நல்ல வேளை, ஞாபகப்படுத்தினீர்கள்! அப்படி ஒன்று இருப்பதாக இப்பொழுது தான் என்னுடைய ஞாபகத்துக்கு வருகிறது; நான் வரட்டுமா ?''

'' என்ன அவ்வளவு அவசரம்? அப்படி என்னத்தை மறைத்து மறைத்து எடுத்துக்கொண்டு போகிறீர் ?''

'' அதுதான் சொன்னேனே....''

'' ஓ, மெட்டீரியல்ஸா? அதை மறைப்பானேன்? அந்தப் பாவி ஒரே ஒரு பிரதி அச்சிட்டு உமக்கு மட்டும் அனுப்பி வைத்தாலும் பரவாயில்லே; அவன்தான் லட்சக்கணக்கில் அச்சிட்டு உலகம் முழுதும் அனுப்பித் தொலேக்கிறானே !''

'' நன்றாய்ச் சொன்னீர்கள் ! எனக்கும் சில சமயம் அப்படித்தான் தோன்றுகிறது—என்ன செய்யலாம்? எவன் முந்திக் கொள்கிறானே, அவனுக்கு அடிக்கிறது யோகம் !''

'' அடிக்கட்டும், அடிக்கட்டும்; சுய சிந்தனையாளர்களுக்கு உரிய கௌரவமும், தக்க பாதுகாப்பும் இந்த நாட்டில் கிடைக்கும் வரை உம்மைப் போன்றவர்களுக்கு யோகம் அடித்துக் கொண்டே இருக்கட்டும் !''

இதோ, இன்னொரு காட்சி :

களம் : ஒரு வீட்டின் முற்றம் —

காலம் : பிற்பகல்

''அடி, காமு! கோடி வீட்டுக் கோமளத்தைப் பார்த்தாயோ? அவள் ஏதோ ஒரு பத்திரிகைக்கு நாவல் எழுதினாளாம்; முழுசா ஆயிரம் ரூபாய் கிடைத்ததாம்; பத்து பவுனிலே இரண்டு வடம் சங்கிலி வாங்கிக் கழுத்திலே போட்டிண்டிருக்கா! நீயும்தான் இரவல் வாங்கியாவது தினம் ஏழெட்டு நாவல்கள் படிக்கிறே, என்னடி பிரயோசனம்? நாலு நாவல் படித்தால் உனக்கும் ஒரு நாவல் எழுத வராதோ ?''

'' ஏன் வராது, நல்லா வரும் ! நானும் எழுதி அனுப்பிண்டுதான் இருக்கேன்; அவா போட்டாத்தானே ?''

'' நீயே அனுப்பினால் போடுவாளோ ? பார்க்கிறவாளைப் பார்த்துக் கொடுக்கிறவா கிட்டே கொடுக்கணும் !''

'' அப்போ மட்டும் என்ன வாழுதாம்? தபால்காரன் திருப்பிக் கொண்டு வந்து கொடுக்கிறதுக்குப் பதிலா, அவாளே திருப்பிக் கொண்டு வந்து கொடுத்துடறா.... !''

'' அட பாவமே ! 'சமைக்கத் தெரியுமா, சாப்பிடத் தெரியுமா ?' என்றாவது ஏதாவது எழுதேண்டி !''

'' அதையும்தான் எழுதிப் பார்த்தேன்....''


'' என்ன எழுதினே ?''

'' 'அப்பளாம் இடுவது எப்படி, வடாம் போடுவது எப்படி?' என்று இரண்டு புத்தகங்கள் எழுதி வான்மதி பதிப்பகத்துக்கு அனுப்பிப் பார்த்தேன்; அந்தப் புண்ணியவான் என்னுடான்னு, 'பொரித்து எடுப்பது எப்படி, எடுத்துப் பரிமாறுவது எப்படி ?' என்று இன்னும் இரண்டு புத்தகங்கள் எழுதிஅனுப்பினால், நாலேயும் 'அவுட் ரைட்'டா எடுத்துண்டு நாற்பது ரூபாய் தரேன்னு எழுதியிருக்கான் ....!''

'' காகிதத்துக்கும் மசிக்கும்கூடக் காணாது போலிருக்கே ?''

'' அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறேள் ? இன்னும் கொஞ்ச நாட்கள் போனா, அந்த மனுஷன் எழுதிய கஷ்டப் புத் தீர ஒரு கப் காப்பிக்குக் காசு கொடுத்தால் போதாதோன்னு கூடக் கேட்பான் போலிருக்கிறது !''

'' பத்திரிகைக்காரர்கள்கூட விஷயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், இத்தனை பைசாவுக்கு இத்தனை அப்பளாம் என்று நாம் கணக்கிட்டு வாங்குவதுபோல, இத்தனை பக்கக் கதைக்கு இத்தனை ரூபாய்ன்னு கணக்கிட்டுக் கொடுக்கிறாளாமே ?''



விந்தன்

"அவ:்கள் என்ன செய்வார்கள், பாவம்! வாசகர்களும் பக்கம் கணக்குப் பார்த்துத்தானே எதையும் வாங்குகிறார்கள்!"

இன்றைய இலக்கிய கர்த்தாக்கள், பத்திரிகைக்காரர்கள், பதிப்பாளர்கள், வாசகர்கள் ஆகியவர்களின் நிலை இப்படியிருந்தால், இந்த நாட்டிலே நாவல் பிறக்கவா செய்யும்? இறக்குமதிதானே ஆகும்?

* * *

இந்த 'இறக்குமதி வியாபாரம்' 'ஏற்றுமதி வியாபார'மாக மாற வேண்டுமானால், நடுநிலையோடு எதையும் நாடும் நல்ல விமர்சகர்கள் நம்முடைய நாட்டுக்குத் தேவை.

நல்ல விமர்சகன் என்றால், அவனுக்கு நாலும் தெரிந்திருக்க வேண்டும்; கதை எழுத வரவில்லை என்பதற்காக விமர்சனம் எழுத வந்துவிட்டவனாக இருக்கக் கூடாது!

சில விமர்சகர்கள் இருக்கிறார்கள்; இன்னார் எழுதிய இன்ன நாவலுக்குப் பிறகு, தமிழில் நல்ல நாவல் எதுவும் வரவில்லை என்று கண்ணை மூடிக்கொண்டு எழுதுவார்கள். நமக்கோ அப்பொழுதுதான் அப்படி ஒரு நாவல் வந்திருப்பதே தெரியும்; தேடாத இடமெல்லாம் தேடி அதை வாங்கிப் படிப்போம்—பலன்?— இரண்டு பக்கங்களுக்குமேல் படிக்க முடியாது; புத்தகத்தை மூடிக் கீழே வைத்துவிட்டு, அந்த விமர்சகரால் பெற்ற புத்தியைக் கொள் முதல் கணக்கில் எழுதி வைப்போம்—இல்லையா?

இவர்களுக்கு நான் ஒன்று சொல்வேன் — நீங்கள் ஏதாவது எழுத வேண்டும் — பிழைப்புக்காக, அல்லது பெயர், புகழுக்காக—அவ்வளவுதானே?

இருக்கவே இருக்கின்றன, நம் அரும் பெரும் தமிழ் நூல்களில் சில — யார் எப்படி வேண்டுமானாலும், எத்தனை முறை வேண்டுமானாலும் வியாக்கியானம் செய்வதற்குரிய வசதியோடு — அரைத்த மாவையே அரைத்துக் கொண்டு, கரைத்த புளியையே கரைத்துக் கொண்டு, காலட்சேபம் செய்யுங்களேன்?

தாராள நோக்குடைய தமிழ்ப் பெருமக்களின் தயவு உங்களுக்குக் கிடைக்காமலா போய்விடப் போகிறது?— அவர்கள்தான் தயாராயிருக்கிறார்களே, உங்கள் வியாக்கியானங்களை வாங்கிப் படிப்பதோடு, விழாவும் கொண்டாட!

* * *

என்னைப் பொறுத்தவரை 'நாவல் பிறந்த கதை'யை நான் இங்கே சொல்லப் போவதில்லை; பிறக்கும் கதையைத்தான் சொல்லப் போகிறேன்:

அதோ, நாற்பது வருட காலம் இரவும் பகலுமாக மாறி மாறி உழைத்த பிறகு, ஓய்வு பெற்று வருகிறான் ஒரு மில் தொழிலாளி; 'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே!' என்பது போல, அவனுக்கு முன்னால் 'லொக், லொக்' என்ற இருமல் ஓசை வருகிறது; அவனை எதிர்நோக்கிக் குடிசையின் வாசலிலே நிற்கிறாள் அவன் மனைவி—'வரும்போது சும்மா வரமாட்டார்; ஆயிரமோ இரண்டாயிரமோ கொண்டு வருவார்; கல்யாணத்துக்குத் தயாராகிப் பத்து வருடங்களாகக் காத்துக் கொண்டிருக்கும் பெண்ணுக்குக் கல்யாணம் செய்து வைத்துவிடலாம்; பையன்களில் யாராவது ஒருவனைப் பத்தாம் வகுப்பு வரையிலாவது படிக்க வைக்கலாம்; குடிசையைப் பிரித்துக் கட்டலாம்; மாற்றிக் கட்டிக்கொள்ள மறு சேலை வாங்கலாம்; மாடும் இரண்டு பிடித்துக் கொள்ளலாம்' என்றெல்லாம் எண்ணமிட்டபடி!

அவன் அவளை நெருங்குகிறான்.

'லொக், லொக்!'

"கொஞ்சம் வெந்நீர் கொண்டு வரட்டுமா?" என்று கேட்கிறாள் அவள்; "கொண்டு வா!" என்கிறான் அவன்.

வெந்நீர் வருகிறது; குடிக்கிறான்.

அதற்குமேல் ஆவலை அடக்க முடியவில்லை, அவளால். "என்ன கிடைத்தது?" என்று கேட்கிறாள்; "டி. பி!" என்கிறான் அவன்!

அப்போது அவள் விடுகிறாளே, பெருமூச்சு—அந்தப் பெருமூச்சிலிருந்து என்னுடைய நாவல் பிறக்கிறது!

அதோ, வேலைக்கு வருகிறாள் ஒரு குடியானவப் பெண்; குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டு போய் அவளைக் கெடுக்கிறான் ஒரு மைனர்; அந்த அவமானத்தைத் தாங்காமல் தூக்கிலே தொங்குகிறாள், அவள்!



செய்தி பரவுகிறது; பெற்ற தாய் துடிக்கிறாள்; பேணிக் காத்த தந்தை பழிக்குப் பழி வாங்கும் நோக்கத்துடன் மைனர் வீட்டுக்குப் போகிறான்; எல்லோரையும் தீர்த்துக் கட்டிய பிறகு, எஞ்சி நிற்கிறது தொட்டிலிலே தூங்கும் ஒரு குழந்தை; அந்தக் குழந்தையை நெருங்குகிறான்; கத்தியை ஓங்குகிறான்—அது சிரிக்கிறது, தூக்கத்தில்தான்!

கத்தி கீழே விழுகிறது; கொலைகாரன் குனிந்து அந்தக் குழந்தையை முத்தமிடுகிறான்—ஆம், கொலைகாரன்தான் அந்தக் குழந்தையை முத்தமிடுகிறான்!

அப்போது அவன் முகத்தில் படர்ந்திருந்த இருள் மறைந்து ஒளி உதயமாகிறதே, அந்த ஒளியிலிருந்து என்னுடைய நாவல் பிறக்கிறது!

இவ்வாறு பிறக்கும் நாவல்களெல்லாம் வளர்ந்து விடுகின்றனவா என்றால், அது தான் இல்லை!

காரணம்? அந்த மூன்று எழுத்துக்கள் தான்—வறுமை! எழுத்துக்கு வறுமை நண்பனாயிருக்கலாம்; ஆனால் வாழ்வுக்கு அது பகைவனாகவல்லவா இருக்கிறது!

அந்தப் பகைவனை ஒவ்வொரு நாளும் எதிர்த்தபடி, நான் உடனுக்குடன் நிறைவேற்றியே தீரவேண்டிய சில கடமைகள், பொறுப்புகள்—இவற்றுக்கிடையே என்னைப் புரிந்து கொள்ள முடியாத என் மனைவி; அவளைப் புரிந்து கொள்ள முடியாத நான்!—'நாம் விரும்புவதையெல்லாம் வாங்கிக் கொடுக்க முடியாத அப்பா, என்ன அப்பா!' என்று நினைக்காமல் நினைக்கும் என் அருமைக் குழந்தைகள்; 'அந்தக் குழந்தைகளின் ஏக்கத்தைக்கூடத் தீர்க்க முடியாத அப்பா, என்ன அப்பா!' என்று ஏங்காமல் ஏங்கும் நான்—இந்த ஆசா பாசங்களுக்கு இடையே, அன்றாடப் பிரச்னைகளுக்கு இடையே, பிறந்தும் வளர முடியாத என்னுடைய நாவல்கள் — கடவுளே! சர்வவல்லமையுள்ள காசால்தானா என்னையும் என்னுடைய நாவல்களையும் காப்பாற்ற முடியும்? உன்னால் முடியாதா?

தாயுமானேசுவரர் திருக்கோவில் திருப்பணி

தந்தை தாயுநீ யென்னுயிர்த் துணையுநீ சஞ்சலமதுதீர்க்க
வந்த தேசிகவடிவுநீ உனையலால் மற்றொரு துணைகாணேன்
அந்தமாதியு மளப்பருஞ் சோதியே ஆதியே அடியார்தம்
சிந்தைமேவிய தாயுமானவனெனும் சிரகிரிப் பெருமானே

— **தாயுமான அடிகள்**

கங்கையிற் புனிதமாகிய காவிரிநதி பாய்ந்து, மண்ணைப் பொன்னாக்கும் சோழவள நாட்டிலே பல்லவப் பேரரசுகளால் எழுப்பப்பட்ட சரித்திரப் பிரசித்திபெற்ற இத் திருக்கோயில் பல ஆண்டுகளாகத் திருப்பணி செய்யப்படாமல் இருந்து வருகின்ற நிலை, ஆத்திகப் பெருமக்களின் கவனத்துக்குள்ளாகிக் கவலை கொள்ளச் செய்திருக்கிறது.

தமிழ்த்திரு நாட்டின் நடுநாயகமாய்க் கலையின் திருவிளக்காய் விளங்கி வருவது திருச்சிராப்பள்ளி நகர். மேலைநாட்டுப் பேரறிஞர்களும் கண்டு வியந்து போற்றும் அளவுக்குத் தமிழரின் கலைத்திறனுக்கும், நுண்ணறிவுக்கும் நிலைக்களனாய், விளங்குவது இந்நகரிலுள்ள தாயுமானவர் திருக்கோயிலே.

மாணிக்கவிநாயகர் சன்னிதிப் பிராகாரம் விரிவுபடுத்தல், இராஜகோபுரம், பிரதான வாயில் நிறந்த மண்டபம், யானை நிற்கும் மண்டபம், உச்சி மலைக்குப் போகும் பாதை, மீனாட்சி சுந்தரேசுவரர் மண்டபம், மணிமண்டபம், உச்சிப் பிள்ளையார் கோயில், அறுபத்துமூவர் மண்டபம், கொடிமரம், சுவாமி கோவில், சித்திர மண்டபம், சுவாமி—அம்மன் விமானங்கள் முதலியவைகளைப் பழுதுபார்த்து அழகுபடுத்துதலுடன், மேலும் மலைமீதேறும் பக்தர்களுக்குப் பாதுகாப்பு வேலைகளும் செய்து தங்கக் கவசம் வைக்கும் திருப்பணிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது.

இத்திருக்கோயிலில் இறுதியாகத் திருப்பணிகள் செய்யப்பட்டு 1899-ம் ஆண்டு குடமுழுக்கு விழா நடைபெற்றது. அறநிலைய ஆட்சித் துறையினர் விருப்பத்துக் கிணங்கவும், ஆத்திகப் பெருமக்களின் அவலைப் பூர்த்தி செய்யவும், பழம்பெரும் புகழ் கொண்ட இத்திருக்கோயிலை, நமது வழி வழித் தோன்றல்கள் எல்லாரும் ஊழி ஊழி கண்டு களிக்க இங்கே செய்யவேண்டிய திருப்பணிகள் யாவற்றையும் உடனடியாகச் செய்யவேண்டியது தமிழ்கூறும் நல்லுலகமெங்குமுள்ள ஆத்திகப் பெருமக்களின் கடமையாகும். இந்தத் திருப்பணிக்குப் பொருளுதவி செய்ய விரும்புவோர், **எக்ஸிகூடிவ் ஆபீசர், மலைக்கோட்டைக் கோயில், திருச்சி-2** என்ற விலாசத்துக்குக் கிடைக்கும்படி தாராளமாகப் பொருளுதவி செய்யுமாறு வேண்டுகிறோம்.

குடத்து விளக்கு குன்றேறியது

கன்னனொடு கொடை போயிற்று; உயர்கம்ப
நாடனுடன் கவிதை போயிற்று ;
உன்னரிய புகழ்ப் பார்த்தனொடு வீரம்
அகன்றது . . . .
. . . . அருட் சுப்ப
ராமனெனும் இணையிலா விற்
பன்னனொடு சுவை மிகுந்த பண் வளனும்
அகன்றதெனப் பகரலாமே.

என்று பாடினார் பாரதியார். சங்கீத நாடக அகாடமியின் ஆதரவில் சென்னை மியூசிக் அகாடமி செய்துள்ள ஒரு திருப்பணி காரணமாக அந்த இணையிலா இசை விற்பன்னர் ஸ்ரீ சுப்பராம தீட்சிதரும், அவர் வளர்த்த நம் பண்வளனும் மீண்டும் உயிர் பெற்றுள்ளன.


நாதப் பிரம்மத்தில் லயித்திருந்த மகான் ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதரவர்களின் சகோதரருடைய பேரர் ஸ்ரீ சுப்பராம தீட்சிதர். இசையில் பெரும் புலமை பெற்றிருந்ததோடு தாமே சிறப்பான சாஹித்தியங்கள் இயற்றியவர். சுருக்கமாகச்சொன்னால் கர்நாடக சங்கீதத்தின் கருவூலமாகத் திகழ்ந்தவர். சென்ற நூற்றாண்டில் இசைக்காகவே உயிர் வாழ்ந்த திரு ஏ. எம். சின்னசுவாமி முதலியார் அவர்களின் தூண்டுதலாலும், பரம ரசிகரான எட்டையபுரம் மகாராஜா ராம வேங்கடேசுவர எட்டப்ப ராஜாவின் பேருதவியுடனும் தாம்பெற்றிருந்த இந்த சங்கீதப் பொக்கிஷத்தை உலகுடன் பகிர்ந்துகொள்ள முன்வந்தார் ஸ்ரீ தீட்சிதர் அவர்கள். அதன் பயனாகப் பிறந்தது சங்கீத சம்பிரதாயப் பிரதர்சினி என்ற இசைக் களஞ்சியம்.



உள்ளத்தின் அடிவாரத்தில் பொங்கும் இரகசியங்களை வெளிப்படுத்தும் மொழியே இசை என்பார்கள். தீட்சிதர் அவர்களோ அந்த இசையின் இதயத்தையும், அதன் இனிய இரகசியங்களையும் கண்டறிந்தவர். அவற்றை மொழியின் மூலம் வடித்துத் தருவது மிகவும் சிரமமான காரியமே. அந்தச் சாதனையைப் புரிந்து காட்டி விட்டார் தீட்சிதரவர்கள். ஆத்மாவைக் கமகங்களின் மூலம் இழைத்து இழைத்துத் தரும் கர்நாடக சங்கீதத்தின் ஸ்வரஸ்தானங்களை உள்ளபடி துல்லியமாகப் பகுத்து, குறியீடுகளால் புரிய வைப்பதற்காகத் தீட்சிதரவர்கள் எடுத்துக்கொண்டுள்ள பிரயாசை நமக்கு மலைப்பூட்டுகிறது. காதினால் மட்டுமே கேட்டுப் புரியக் கூடிய இந்த நெளிவு சுளிவுகளைக் கண்களினால் கண்டறிவதற்கான வழி முறைகளைக் கண்டுபிடித்தவர் ஸ்ரீ தீட்சிதரவர்கள். இசை இலட்சணங்களை மட்டுமின்றி, பெருமை வாய்ந்த பலப் பல சாகித்யகர்த்தாக்களின் பாடல்களையும், வரலாறுகளையும் தமது நூலில் தந்திருக்கிறார் ஸ்ரீ தீட்சிதர்.

இந்த இசைச் செல்வத்தை அக்கறையுள்ளவர்கள் மட்டுமே பயனாக்கிக் கொள்ள வேண்டுமெனக் கருதிய தீட்சிதர் தமது நூலைத் தெலுங்கு மொழியில் செய்தளித்தார். அதன் விளைவாக, புதைத்து வைத்த பொருளைப் போலக் காலக்கிரமத்தில் சங்கீத சம்பிரதாயப் பிரதர்சினியின் நினைவே மெல்ல மெல்ல மறையலாயிற்று. அது அடியோடு மறைந்து விடாமற் செய்த பெருமை சங்கீத நாடக அகாடமியையும், மியூசிக் அகாடமியையும் சாரும். சங்கீத சம்பிரதாயப் பிரதர்சினியைத் தமிழில் மொழிபெயர்த்து, முதல் பாகத்தை வெளியிட்டிருப்பதன் மூலம் இசையுலகின் நன்றிக்கு அவை பாத்திரமாகியுள்ளன. ஜூலை 13ந் தேதி மயிலாப்பூர் சாஸ்திரி ஹாலில் ஸ்ரீ டி.எல். வேங்கடராமய்யர் அவர்கள் தலைமையில் சங்கீத நாடக அகாடமித் தலைவர் ஸ்ரீ பி. வி. ராஜமன்னார் அவர்கள் இந்த நூலை வெளியிட்டார். கலைப் பேரறிஞர் வே. ராகவன், இசை உலக ஜாம்பவான் முடிகொண்டான் வேங்கடராமய்யர், வாழையடி வாழையென புரந்தர தாஸர், வேங்கடமகி, தீட்சிதர் இவர்கள் வழி வந்துள்ள திருக்கூட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீ டி. எல். வேங்கடராமய்யர் ஆகியோருடைய மேற்பார்வையில் வித்வான்கள் ஸ்ரீ எஸ். ராமநாதன் அவர்களும், ஸ்ரீ பி. ராஜம் அய்யர் அவர்களும் தமிழாக்கத்தைச் செய்துள்ளனர். பயன்படுத்திக் கொள்ள வேண்டியது இசை உலகின் பொறுப்பு.

இப்புத்தகம் கிடைக்குமிடம் : மியூசிக் அகாடமி, 115E, மௌபரேஸ் ரோட், சென்னை - 14. விலை ரூ. 6.



புது வெள்ளம்

முன்னுரை

காலங் காலமாக நமக்கு உணவு தந்து, உணர்வூட்டி, உயிர் வளர்த்து வந்த காவேரி கொள்ளிடம் போன்ற பெருநதிகள் இப்போது புது வெள்ளப் பெருக்கால் கட்டுக் கடங்காமல் பொங்கிப் புரண்டோடுகின்றன. எந்த மக்களின் வாழ்வுக்கு அவை வளம் தந்து வந்தனவோ, அந்த மக்களையே அவை அவதியுறச் செய்கின்றன. வெள்ளப் பெருக்கால் இன்று மக்களுக்கு ஏற்பட்டுள்ள அல்லல்களைக் கேட்டு எந்த நெஞ்சமும் பதறாமல் இருக்காது.

ஆனால், இதுபோன்ற பயங்கரமான சோதனைகளைக் கண்டு நாம் சோர்ந்து விடுவதில் பயனில்லை. கட்டுக்கு மீறிச் சாடும் இயற்கைச் சக்திகளோடும், வரம்புக்கு மீறி வாழத் துடிக்கும் மனித சக்திகளோடும் நாம் போராடி வெற்றி பெறத்தான் வேண்டும். நம்முடைய வாழ்க்கைப் போராட்டத்துக்கு இது ஒரு சோதனைக் காலம்.

கால மாறுதல்களால் ஏற்படும் தீய விளைவுகளை வெல்வதற்கு, கால மாறுதலால் ஏற்படும் நல்ல விளைவுகளே கருவிகளாகின்றன. விஞ்ஞான யுகத்தில் வாழும் நமக்கு வெள்ளங்களை அடக்கி வாழ்வது, முற்காலத்தைப் போல் அவ்வளவு கடுமையானதல்ல. அறிவையும் அறத்தையும் அடித்தளங்களாகக் கொண்ட மனித சக்திக்குத் தீமைகளை வென்று நன்மைகளைப் பெருக்கும் திறமை உண்டு.

மனிதர்களுக்குத் துன்பம் நேரும் காலங்களில்தான், சமுதாயத்திடம் மறைந்து கிடக்கும் மனிதாபிமானம் தலைதூக்கிப் புது விழிப்புப் பெறுகின்றது. இன்றுகூட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை, மற்றவர்கள் பார்த்துக் கொண்டே ஒதுங்கி நிற்கவில்லை. அரசாங்கமும் தன் கடமையைச் செய்வதில் முந்திக் கொண்டு விட்டது.

பாதிக்கப்பட்டவர்களின் புனர் வாழ்வுக்கு இன்னும் பணம் வேண்டும்; பொருள்கள் வேண்டும்; உழைப்பு வேண்டும். இவை மட்டிலும் போதுமா? இவை யெல்லாவற்றையும் விட மனம் வேண்டும்!


புனர் வாழ்வுப் பணியில் நேரடியாகப் பங்கு கொள்ளும் ஒவ்வொருவரிடமும் நேர்மையும், நாணயமும், மனிதாபிமானமும் இருந்தால் தவிர, பணம், பொருள், உழைப்பு மட்டிலும் மனிதர்களுக்குப் புது வாழ்க்கையைத் தந்துவிட முடியாது. நம்பிக்கையை ஊட்டிவிட முடியாது.

இந்த வெள்ளக் கொடுமையிலிருந்து மக்களுக்குப் புது வாழ்வளிக்க வேண்டுமென்ற கடமை யுணர்வோடு, தியாகத் துடிப்போடு, நன்மைகள் செய்வோர் அனைவருக்கும் நான் சிரம் தாழ்த்திக் கரம் கூப்புகிறேன். மனிதர்களிடம் மறைந்து வெளிப்படுகிற கடவுட்தன்மைக்குத் தொண்டாற்றும் உத்தமர்களுக்கு என் வாழ்த்துக்கள்.

ஆனால், அதே சமயம் மற்றும் சிலருக்கு ஓர் எச்சரிக்கை:—பற்றி எரிகிற வீட்டில் பிடுங்கியவரை ஆதாயம் என்று காத்திருப்பவர்களும் இந்த நாட்டில் இருக்கிறார்கள். மக்களுக்குத் துன்பம் வருகிற போதெல்லாம் தங்களுக்கு இன்பம் தேடிக்கொள்ள நினைக்கும் சமூக விரோதிகள் இவர்கள். இத்தகையோரது ஒளிவு மறைவில்லாத தோற்றத்தை நாம் இரண்டாவது உலக யுத்தத்தின் போது வெளிப்படையாகக் காண முடிந்தது.

வெளிநாடுகளில் ஜெர்மன்காரர்களும் ஆங்கிலேயர்களும் மோதிக் கொண்டார்கள். ஜப்பானியரும் அமெரிக்கர்களும் சண்டையிட்டுக் கொண்டார்கள். வள்ளுவன் பிறந்த தமிழ் நாட்டிலோ, வலிமை படைத்தவன் எளியவன் மீது போர் தொடுக்கத் தொடங்கி விட்டான்.

வஞ்சனைப் போர்;
திருட்டுப் போர்;
லஞ்சப் போர்!





அங்கே போரில் மக்கள் மாண்டு மடிந்தார்கள். இங்கே பொது வாழ்வில் மனிதாபிமானம் மடியத் தொடங்கியது. தமிழனுக்குத் தமிழனே பகைவனானான்.

நாம் நாட்டு விடுதலையை அடுத்து வந்த புது வாழ்வுக் குமுறல்களினிடையே அகப்பட்டுக்கொண்டிருக்கிறோம். புனர் வாழ்வுக்கான வேலைகளும், பொருள் வளர்ச்சிக்கான திட்டங்களும் ஆங்காங்கே நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால், மனிதனுக்குப் புற வாழ்க்கையைத் தேடிக் கொடுக்க நினைப்பவர்கள், அக வாழ்வு அழிந்து கொண்டு வருவதைக் கவனிக்க மறந்து விட்டார்கள்.

அடிப்படையில்லாமல் மாளிகையை எழுப்பினால் அது நிலைத்து நிற்குமா? மனிதனின் மனத்தை உயர்த்தாமல், அவன் பணத்தை உயர்த்த நினைத்தால் அது நடக்குமா? சமூக விரோதிகள் சமூகப் பிரமுகர்களாகக் காட்சியளிப்பது ஏன்?

நாட்டு விடுதலைக்குப் பிறகு மனிதனின் மனம் உயர்ந்திருக்கிறதா? பொது வாழ்க்கைத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களில் பலர் நாட்டு மக்களிடம் நேர்மைத் துணிவையும், உற்சாகமான உழைப்

யையும், சமுதாய உணர்வையும் தூண்டி விடத்தக்க தகுதி உடையவர்களாக இருக்கிறார்களா? அடிமைப்பட்டிருந்த காலத்தில் பலரிடம் காணப்பட்ட பரந்த மனம் இப்போது ஏன் சுருங்கிவிட்டது?

இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கட்டாயம் புதுவாழ்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இதேபோல், அடிமை வெள்ளத்திலிருந்து குடியாட்சி வெள்ளத்துக்கு மாறிய நமக்கும் விடுதலை கிடைத்து விடும் என்று தான் நம்பிக் கொண்டிருக்கிறோம். அது எப்போது கிடைக்கும்? - தமிழனிடமிருந்து தமிழனுக்கு விடுதலை கிடைக்கும்போது!

தமிழ்ச் சமூகத்தின் வேற்றுமைச் சக்திகளுக்கும் அரசியல் சார்புகளுக்கும் அகப்படாத நடுநிலைத் தமிழன் நான். இந்த நாட்டில் எல்லோருக்கும் உழைத்துப் பிழைப்பதில் நம்பிக்கையும், சோறும், சுகமும் கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறவன்.

கவிப் பெருமகனான பாரதி முதன் முதலில் கணபதிராயனிடம் ஒரு வேண்டுகோள் விடுகிறார். அதையே நான் தமிழர்களுக்கு இப்போது நினைவூட்டுகிறேன்:—

"குணம் உயர்ந்திடவே — விடுதலை
கூடி மகிழ்ந்திடவே!"

ஆம், விடுதலை கூடி நாம் மகிழ்ந்து வாழ வேண்டும்; அதற்குள்ள ஒரே வழி தமிழ்ச் சமுதாயத்தின் குணம் உயர்ந்திட வேண்டும்.

என்னுடைய வாசகர்களை என் கதாநாயகன் முருகையனோடு சிறிதுகாலம் புறப்பட்டு வந்து அவன் காணும் மனிதர்களைக் காணும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

— அகிலன்.

அத்தியாயம் ஒன்று

எழும்பூர் ரயிலடி

'ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் ;...'

— குறள்

1945-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒரு நாள் முன்னிரவு நேரம். சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தின் பெரிய கடிகாரம் சரியாக ஒன்பது மணியைக் காட்டியது.




கடிகாரந்தான் அந் நாட்களில் சரியாக ஓடியதே தவிர, ரயில்கள் குறித்த நேரத்தில் ஓடுவதில்லை. இரண்டாவது உலகப் பெரும் போர் அப்போதுதான் ஒரு முடிவுக்கு வந்திருந்தது. ஐந்தாறு ஆண்டுகளாக இரு கூறுகப் பிரிந்து, முட்டி மோதிக் கொண்டு ரத்த வெள்ளத்தைப் பெருக்கெடுத்தோடச் செய்த உலகத்துக்கு அணுகுண்டு என்ற பயங்கரமான ஆயுதம் 'அமைதி'யைத் தேடித் தந்தது.

எழும்பூர் நிலையத்திலோ சிறிதுகூட அமைதி இல்லை. திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் தனது நெடும் பயணத்தைத் தொடங்குவதற்குத் தயாராக நின்று கொண்டிருந்தது. பிரயாணிகளும், வழியனுப்ப வந்தவர்களும், ரயில்வேக் கூலிகளும், புத்தகம் — பத்திரிகை — தின்பண்டம் விற்பவர்களும் சுறுசுறுப்பாக இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். திரும்பிய பக்கமெல்லாம் ஒரே வேகம்; ஒரே பரபரப்பு.

ரயிலில், கடைசியாக இருந்த இரண்டு மூன்று பெட்டிகளில், பட்டாளத்திலிருந்து விடு திரும்பிய ராணுவ வீரர்கள் சீட்டாடிக் கொண்டும் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டும் பொழுது போக்கினார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில் இடநெருக்கடி கிடையாது. மற்றப்படி முதல் வகுப்புக்களிலும் சரி, மூன்றாவது வகுப்புக்களிலும் சரி, கூட்டத்துக்குக் குறைவில்லை. முன்பெல்லாம் பெரும்பாலும் வெள்ளைக்காரர்களின் தனியுடைமையாக இருந்த முதல் வகுப்புப் பெட்டிகள், இப்போது இந்தியர்களுக்கும் இடம் தந்தன. யுத்த காலத்தில் திடீர்ப் பணக்காரர்களாக மாறிய தமிழர்கள் சிலர் அங்கு நிறைந்திருந்தார்கள்.

முதல் வகுப்புத் தமிழர் ஒருவருக்கு யுத்தம் இப்படி அநியாயமாகத் திடீரென்று நின்று விட்டதில் பெரும் கவலை ஏற்பட்டது. போர்க் காலத்துக்குமுன்பு அவருக்கு மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்வதற்குக்கூட வசதியில்லை. 'மகாராஜன் வெள்ளைக்காரன்







சண்டையில் மாட்டிக் கொண்டான்'. இங்கே இவர் மகா - மகாராஜனாக வளர முடிந்தது.

அவர் தமக்கு அருகிலிருந்த வெள்ளைக்காரனைப் பார்த்து, அரைகுறை ஆங்கிலத்தில் ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தார். "அடுத்த உலக யுத்தம் திரும்பவும் எப்போது வரும்? சமீபத்தில் வந்து விடுமா?"

கறுப்பு நிறத் தமிழரின் ஆர்வத்தைக் கண்டு விட்டு, வெள்ளைநிற ஆங்கிலேயன் வருத்தத்துடன் சிரித்தான். "இனிமேல் ஒரு யுத்தம் வந்தால் அதற்குப் பிறகு இந்த உலகமும் இருக்காது; அதில் நீங்களும் இருக்க மாட்டீர்கள்!"

தமிழர் தம் வாய்க்குப் பூட்டுப் போட்டுக்கொண்டார், தம் வீட்டின் பணப் பெட்டிக்கு அவர் செய்து விட்டு வந்ததைப் போல. பணம் பாங்கியில் போட்டு வைக்க முடியாத கறுப்புப் பணம். கணக்கில் இல்லாத பணம்.

'ப்பூ! நிலையில்லாத இந்த உலகத்தை நம்பித்தானா நாம் எப்படியெல்லாமோ பொய் சொல்லி, ஏமாற்றிப் பணம் சேர்த்து வைத்தோம்?' என்று அவருக்கே நினைக்கத் தோன்றியது. மறு கணம் அந்த நினைவை உதறி விட்டு, வசதியான மெத்தையில் சுகமாகச் சாய்ந்து கொண்டார்.

ரயில் இன்னும் புறப்படவில்லை. முதல் மணி அடித்து விட்டது. இந்தச் சமயத்தில்தான் குழந்தை குட்டிகளோடும், மூட்டை முடிச்சுகளோடும் ஓர் ஏழைக் குடும்பம் பரபரக்க 'பிளாட்பார'த்துக்குள் ஓடி வந்தது. ரயிலுக்குள் இடம் பிடிப்பதற்காகப் பெட்டி பெட்டியாக எட்டிப் பார்த்துக் கொண்டு அலைமோதியது.

இரண்டு ஆண் பிள்ளைகள், ஒரு கிழவி, ஒரு நடு வயதுப் பெண்மணி, மூன்று குழந்தைகள். குழந்தைகளில் ஒன்றைக் கையில் இடுக்கிக் கொண்டு முன்னால் வந்தவன்தான் அந்தக் குடும்பத்தின் தலைவனாக இருக்க வேண்டும்.

இன்ஜினை அடுத்திருந்த மூன்றும் வகுப்புப் பெட்டியிலிருந்து ஓர் இளைஞன் இந்தக் காட்சியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். வாட்டசாட்டமான உடற் கட்டிருந்தாலும், அவனுடைய முரட்டுக் கதராடையும், தாடியும், மீசையும் வாரிவிடப்படாத கிராப்புத் தலையும் என்னவோ போலிருந்தன. வயதின் இளமை முறுக்கு தோற்றத்தில் மறைந்திருந்தது.

கண்களில் கனிந்த பரிவுணர்ச்சியோடு அந்த இளைஞன் அவர்களுக்கு எங்காவது இடம் கிடைக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தான். அவர்கள் ஏதாவது ஒரு பெட்டிக்குள் நுழைவதைப் பார்த்துவிட்டு, தன் இடத்துக்குப் போய் உட்கார வேண்டுமென்று தோன்றியது அவனுக்கு.

ஒவ்வொரு பெட்டியாக அவர்கள் நுழையப் பார்த்தார்களே தவிர, ஒன்றிலாவது அவர்களுக்கு மற்ற பிரயாணிகள் இடம் விடவில்லை. இளைஞனின் பெட்டிக்கு அடுத்த பெட்டியிலிருந்த மறத் தமிழர்களும் தங்களது பரம்பரை வீரத்தையும் ஒற்றுமை உணர்ச்சியையும் இந்தச் சமயத்தில் காட்ட முன்வந்துவிட்டார்கள். எதிர்ப்பு மிகக் கடுமையாக இருந்ததால் ஏழைக் குடும்பத்தின் முயற்சி அங்கேயும் பலிக்கவில்லை.

அடுத்தாற்போல் அவர்கள் இளைஞனின் பெட்டிக்குத்தான் வந்தாக வேண்டும். இதை முன்கூட்டியே அறிந்து கொண்ட அவனது சக பிரயாணிகள், வெள்ளம் வருவதற்கு முன்பு அணை போடத் துடிப்பவர்கள் போல், முன்னெச்சரிக்கையோடு எதிர்ப்பு முன்னணி திரட்டி விட்டார்கள். சன்னல்களின் வழியே தலைகளை நீட்டிக் கொண்டு அவர்கள் வந்ததும் வராததுமாக, "இடமில்லை, போ! இடமில்லை, போ!" என்று விரட்டத் தொடங்கி விட்டார்கள்.



இளைஞன, கதவருகில் எதிர்ப்புப் படையின் தளபதியாக நின்ற ஒரு முரடனை வேதனையோடு பார்த்து விட்டு, பெட்டிக்குள் திரும்பினன். ஒரு பகுதியில் அதிகமான நெருக்கடி ; மறு பகுதியில், பத்துப் பேர்களுடைய இடத்தில் இருவரே படுத்துக் கிடந்தார்கள்.

"இடமில்லே, போ !"

"இடமில்லே, போ !"

"இனிமேல் நாங்க எங்கே போறது? போற ரயில் இன்ஜினிலே விழுந்து சாக வேண்டியதுதான் !" என்றான், குழந்தையும் கையுமாக இருந்த குடும்பத்தின் தலைவன்.

"தாராளமாப் போய்ச் செத்துத் தொலையேன் ! இங்கே ஏன் வந்து கழுத்தறுக்கிறே ? போ ! போ !" என்றான் கதவுக்குப் பின்னல் நின்ற முரடன்.

ரயிலில் ஏற முயன்றவனின் கையிலிருந்த பரட்டைத் தலைக் குழந்தை வீரிட்டு அலறத் தொடங்கியது. ஏற்கனவே அந்தக் குழந்தையின் ஒழுகிய மூக்கும், சாரை வடிந்த முகமும், எலும்புக்கூடான உருவமும் உள்ளே இருந்தவனுக்கு அருவருப்பைத் தந்தன. அத்துடன் அது அழவும் தொடங்கிவிட்டது.

குழந்தைக்கும் தகப்பனுக்கும் பின்னல் பரிதாப முகங்களோடு முண்டியடித்துக் கொண்டு நின்றது அவன் குடும்பம்.

"சாமி ! உங்களுக்கு ரொம்பவும் புண்ணியமாப் போகும் சாமி! நாங்களும் துட்டுக் கொடுத்து டிக்கட் வாங்கியிருக்கோம் சாமி !"—இது பின்னல் நின்று கொண்டிருந்த ஒரு கிழவியின் நடுங்கும் குரல்.

"நீ டிக்கட் வாங்கின என்ன, வாங்காட்டி எனக்கென்ன? டிக்கட் கொடுத்தவனைப் போய்க் கேள் !"

"அட, கடவுளே !" என்று அவள் அழாக்குறையாகக் கடவுளை நொந்து கொண்டாள். தங்களுக்கு இந்த வாழ்க்கைப் பிரயாணத்துக்கான டிக்கட்டையும் கொடுத்து விட்டு, தங்களுக்கு அதற்கான வசதியும் கொடுக்காத ஆண்டவனிடம் அவள் முறையிடுவது போலிருந்தது.





"ஆயா, நீ சும்மா இரு!" என்று அவளைக் கோபமாக அதட்டிவிட்டு, தன் பலமனைத்தையும் சேர்த்துக் கதவை ஒரு தள்ளுத் தள்ளினான் வெளிப் பிரயாணி. அதே நேரத்தில் உள்ளே இருந்த முரடன் அவனுடைய நெஞ்சில் கை வைத்து அவனை வெளியே தள்ளினான்.

முரடனின் முகத்தில் முறுக்கு மீசைகள் துடித்தன. ஏற்கனவே சிவந்த கண்கள் இன்னும் சிவந்தன.

வெளியில் பிளாட்பாரத்தில் அந்தப் பிரயாணி குழந்தையோடு தடாலென்ற சத்தத்துடன் விழுந்தான். குழந்தைக்கு அடி ஒன்றுமில்லை யென்றாலும், அதன் கூக்குரல் பன்மடங்காகியது.

வண்டிக்குள்ளிருந்தவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டுதானிருந்தார்கள். ஒரு சிலருக்கு அவன் அப்படித் தள்ளியது பிடிக்கவில்லை யென்றாலும், அவனைத் தட்டிக் கேட்கும் துணிவில்லை. அவன் மீசையும் கண்களும் பயங்கரமாக இருந்தன.

அவ்வளவுதான்! அதுவரை வேடிக்கை பார்ப்பவன்போல் நின்று கொண்டிருந்த இளைஞனுக்குத் திடீரென்று வெறி பிடித்துவிட்டது. சூறாவளிபோல் சுற்றியிருந்தவர்களைத் தள்ளிக் கொண்டு போய்க் கதவைத் திறந்தான். கிழவியைப் பிடித்து உள்ளே இழுத்து அந்த முரடன் மீது தள்ளினான். கீழே நின்று கொண்டிருந்த குழந்தைகள் இருவரையும் கோழிக் குஞ்சுகளைப் போல் உள்ளே தூக்கிப் போட்டான். விழுந்து எழுந்தவனையும் மற்றவர்களையும் பார்த்து, "சீக்கிரம் ஏறுங்கள்!" என்று கத்தினான்.

இதற்குள் ரயில் ஊதியது. சக்கரங்கள் உருண்டன. வண்டி நகர்ந்தது.

குடும்பத்தில் மூன்று பேர்கள் மட்டிலும் ரயிலுக்குள் இருக்க, மற்ற நான்கு பேர்களை வெளியில் விட்டுவிட்டு ரயில் புறப்பட்டது. ரயிலுக்குள்ளேயும் வெளியிலும் ஒரே பரபரப்பு. பின்னால் வேகமாகக் குழந்தையுடன் ஓடிவந்து கொண்டிருந்தான் கீழே தள்ளப்பட்டவன். வண்டிக்குள்ளிருந்த இளைஞனே குனிந்து குழந்தையை வாங்கிக் கொண்டு, "ஓடி வராதே! நில்! நின்று விடு! — உங்களால் இந்த வேகத்தில் ஏற முடியாது!" என்று கத்தினான்.

உள்ளே கிழவியும் குழந்தைகளும் கத்தினார்கள். வெளியேயிருந்த ஆண்கள் வெகு வேகமாக நிற்காமல் ஓடிவந்து கொண்டிருந்தார்கள். அவர்களோடு வந்த பெண்பிள்ளை-குடும்பத்தின் தலைவியாக இருக்க வேண்டும் — வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு துடிதுடித்தாள்.

இருதயமற்ற இயந்திரமான ரயில் இருதயமற்றவர்களான மனிதர்களைச் சுமந்து கொண்டு வேகமாக ஓட முற்பட்டது. அந்த இளைஞன் மட்டிலும் அதன் வேகத்தை அப்படியே விட்டுவிட விரும்பவில்லை.

அத்தியாயம் இரண்டு

ரயில் நட்பு

'ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் : மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்' — குறள்

பெட்டிக்குள்ளிருந்தவர்களில் பலர் பைத்தியக்காரனைப் பார்ப்பதுபோல் அந்த இளைஞனை வேடிக்கை பார்க்கலானார்கள். அவனுடைய இடத்துக்கு நேர் எதிரில் உட்கார்ந்திருந்த மற்றோர் இளைஞனுக்கு மட்டிலும் அவனிடம் மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டன. மெல்ல எழுந்து அவனருகில் வந்தான். 'ஏதாவது உதவி தேவையாக இருந்தால் செய்யக் காத்திருக்கிறேன்' என்று கூறின அவன் கண்கள்.

குழந்தையை வந்தவனிடம் கொடுத்துவிட்டு, அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்தான் இளைஞன். சங்கிலியை இழுப்பது அவ்வளவு எளிதாக இல்லை. பிடித்துக் கொண்டு தொங்கினான்.



"நான் விரும்பும் பழம்—
மாம்பழம். எனக்குப்
பிடித்தமான பானம்—
புருட்னிக்கே!"

—பத்மினி.



புத்தம்புதிய பழரச பானமாகிய புருட்னிக் சுவை மிக்கது. பருகும்போது உற்சாகத்தையும் புத்துணர்ச்சியையும் தருகிறது. இனிமையான சுவை முழுவதும் அனுபவிக்க புருட்னிக்கை குளிரச் செய்து பருகுங்கள்.

மாங்கோ, கிரேப், பைனப்பிள், ஆரஞ்சு இப்பொழுது ஆப்பிளும் கூட—எல்லாம் உங்களுக்குப் பிடிக்கும்.

fruitnik fp

புருட்னிக் (கரியமில வாயு கலவாதது)


புருட்னிக் ப்ராடக்ட்ஸ்,

பூந்தமல்லி ஹைரோட், சென்னை-10.

EP

வாடாத இளமையழகு
வாராதோ விரலசைந்தால்!

மேனி யெழிலைப் பராமரிப்பதே உங்களுக்கழகு! இளமை மாறாத மெருகுடன் மிளிர ஹிமாலயா புக்கே ஸ்நோ உபயோகியுங்கள். சோர்வுற்று வரண்ட சருமங்கூட துளிர்த்தெழும் புதுமலர்ச்சியோடு தளதளப்புடன் விளங்கக் காண்பீர்கள். வெயில், புழுதிக் காற்று ஆகியவற்றிலிருந்து மேனி யெழிலைக் காப்பதோடு, முகப்பருக்களும், கருக்கங்களும் வராமல் தடுக்கிறது ஹிமாலயா புக்கே ஸ்நோ. உங்கள் மேனி யெழிலுக்குத் தக்க பராமரிப்பு அளியுங்கள். இளமை மாறாத அழகைக் கொஞ்சியழைப்பது....



ஹிமாலயா புக்கே ஸ்நோ



HBS. 22-30 TM

இந்தச் செய்கையைக் கண்ட பிரயாணிகளில் சிலர் கசமுசவென்று காது கனைக் கடித்துக் கொண்டார்கள். பயந்த பார்வைகளைப் பரிமாறிக் கொண்டார்கள். ஒருவரிடம் ஒருவர் முகம் களித்துக் கொண்டார்கள்.—தங்களுக்கு மத்தியில் ஒரு குற்றவாளியைக் கண்டு விட்ட தவிப்பு அவர்களுக்கு.

குழந்தையை வாங்கிக்கொண்டவனோ, அதன் அழுகையை நிறுத்துவதற்காக அதனிடம் ஆடுவதும் பாடுவதும் கோமாளித்தனங்கள் செய்வதுமாக இருந்தான். அவன் செய்கை பெரியவர்களிடம் சிரிப்பை வரவழைத்ததே தவிர, குழந்தையிடம் ஒன்றும் பலிக்க வில்லை. குழந்தையைக் கிழவியிடம் கொடுக்கலாமென்றாலோ, அவள் நின்று கொண்டு வரவில்லை; ஆடிக்கொண்டும் அழுது கொண்டும் வந்தாள்.

ரயில் நின்று விட்டது. கதவருகில் நின்ற முரடன் வெளியே எட்டிப்பார்த்து விட்டு, பிறகு இளைஞனை முறைத்துக் கொண்டே மீசையை முறுக்கினான். 'உன்னை என்ன செய்கிறேன் பார்!' என்று சொல்லாமல் சொல்லி வைத்தான்.

ரயில்வே 'கார்டு' விளக்கும் கையுமாக, குழாயும்கோட்டுமாக,'சரக்சரக்'கென்று நடந்து வந்து கோபத்துடன் பெட்டிக்குள் ஏறினார். பிரயாணிகளின் கசமுசச் சத்தம் கப்சிப்பென்று அடங்கியது. கார்டு வண்டிக்குள் கேள்விக் குறியோடு ஒரு கண்ணோட்டம் விட்டார்.

"நான்தான் இழுத்தேன்" என்றான் இளைஞன்.

"சார்! முதல்லே இந்த ஆளை வெளியே இழுத்துக்கிட்டுப் போங்க!" என்றான் கதவருகில் நின்ற முரடன்.

இதைக் கேட்ட அதிகாரிக்கு, இளைஞன் 'அகாரணமாய்' இழுத்திருக்க வேண்டும் என்று தோன்றிவிட்டது. கோபத்துடன் இளைஞனை நெருங்கி, "உன் பெயரென்ன?" என்று கேட்டார்.

"முருகையன்!" என்று கதவுப் பக்கம் பார்த்துக் கொண்டே பதிலளித்தான் அவன்.

"காரணமில்லாமல் ரயிலை நிறுத்தினால் என்ன தண்டனை தெரியுமா? அபராதம், அல்லது ஜெயில், அல்லது இரண்டும் கிடைக்கும்!"

முருகையனின் கவனமெல்லாம் குழந்தையின் தாயும் தகப்பனும் ஓடி வந்து பெட்டியில் ஏறுகிறார்களா என்று பார்ப்பதில் திரும்பியிருந்தது. அவர்களும் வந்து விட்டார்கள். முதலில் பெண் பிள்ளை ஏறினாள். அவளைப் பார்த்தால் கர்ப்பிணிபோல் தோன்றியது. அடுத்தாற்போல் அவள் கணவனும் தம்பியும் ஏறிக் கொண்டார்கள்.—குழந்தையை வைத்திருந்தவன் அதைத் தாயிடம்



சேர்ந்து விட்டு, முருகையனுக்குப் பக்கத்தில் வந்து நின்றான்.

சற்று முன் கார்டின் பேச்சைச் சரிவரக் கேட்காத முருகையன், "என்ன?...என்ன சொன்னீர்கள்?......தண்டனையா?......" என்று கேட்டான்.

"ஆமாம், அபராதம் ஜெயில் ரெண்டும் கிடைக்கும். நாங்க எல்லாரும் சாட்சி!" என்று குறுக்கிட்டு, ரயிலதிகாரிக்கு வக்காலத்து வாங்கினான் முரடன்.

கார்டின் முகத்தை நேரே பார்த்துக் கொண்டு, முருகையன் அவரிடம் மரியாதையுடன் பேசினான்: "காரணத்தை நீங்களே நேரில் பார்த்து விட்டீர்கள். அந்தக் குடும்பத்தில் பாதி உள்ளேயும் பாதி வெளியேயும் இருந்தது. இது நியாயமான காரணம் என்றுதான் நினைக்கிறேன். நியாயமில்லை யென்று உங்களுக்குத் தோன்றினால் தாராளமாகத் தண்டனை கொடுங்கள்.—இப்போது கூடச் சிறையிலிருந்து விட்டுத்தான் வெளியில் வந்திருக்கிறேன்."

சுற்றியிருந்த பிரயாணிகளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. சிறையிலிருந்து வெளி வந்திருக்கும் சமூக விரோதியா இவன்? என்ன குற்றம் செய்துவிட்டுச் சிறைக்குப் போனான்?

முருகையனுக்குப் பக்கத்தில் நின்றவன் நடந்த விஷயங்களை அதிகாரியிடம் சிறிது விளக்கிக் கூறினான். கூறிவிட்டு, "தண்டனை கொடுப்பதானால் ஏற வந்தவர்களைப் பிடித்துத் தள்ளிய இவனுக்கும், தள்ளியதைப் பார்த்துக் கொண்டிருந்த எங்கள் எல்லோருக்கும்தான் கொடுக்க வேண்டும்" என்று, முரடனைச் சுட்டிக் காட்டினான்.

"இடமில்லை, தள்ளினேன்!" என்று விறைப்போடு பதிலளித்தான் முரடன்.

"இடமா இல்லை?-அதோ, அங்கே இரண்டு பேர் ஆனந்தமாக மெத்தைகளை விரித்துக் கொண்டு, நித்திரை போவது போல் வித்தைகள் செய்கிறார்களே, அங்கே போய்ப் பார்!"

முரடன் இதைக் கேட்டவுடன் தன் முகத்தில் சவுக்கால் அடிக்கப்பட்டதைப் போல் உணர்ந்தான். வண்டியில் மெத்தைகளை விரித்துப் போட்டுவிட்டு, தன் எஜமானர்களுக்காக வேட்டை நாய் போல் இடத்தைக் காத்து வந்தவன் அவன். இப்போது, வாலைச் சுருட்டிக் கொண்டு பதுங்கிப் பதுங்கி ஒதுங்கினான்.

முருகையனின் நண்பனுக்கு முரடன் பதுங்கியவுடன் தெம்பு அதிகமாகி விட்டது. "இங்கே குழந்தைகளுக்கு இடமில்லை! கர்ப்பிணிகளுக்கு இடமில்லை!

வயதான கிழவிக்கு இடமில்லே! ஆனால் பத்துப் பேருடைய இடத்தை இரண்டு பேர்கள் பங்கு போடலாம்; அதற்கு இந்தத் தடியன் ஒரு காவல்!''

ரயில்வே அதிகாரிக்கு இக்கட்டான நிலைமை ஏற்பட்டது. அந்தப் பக்கம் தயக்கத்தோடு திரும்பிப் பார்த்தார். குவிந்திருந்த சாமான்கள் முதல் வகுப்புப் பிரயாணிகளின் சாமான்களைப் போலப் பள பளப்பாகவும் 'நாகரிக'மாகவும் இருந்தன. 'நமக்கு ஏன் இந்த வம்பு?' என்று நழுவிக்கொள்ள முயன்றார்.

நழுவுகிற வித்தையைச் சாதுரியமாய்ச் செய்வதற்காக அவர் முகம் கோபத்துடன் முருகையன் பக்கம் திரும்பியது. கண்டிப்பான குரலில், ''மிஸ்டர்! உங்களாலே இன்னிக்கு எக்ஸ்பிரஸ் பத்து நிமிஷம் லேட். இருந்தாலும் உங்க மேலே நான் ஒண்ணும் நடவடிக்கை எடுக்கலே! கலாட்டாப் பண்ணாமல் உங்க வேலையைப் பார்த்துக்கிட்டுப் போய்ச் சேருங்க'' என்றார். பிறகு பதிலுக்குக் காத்திராமல் 'விர்'ரென்று பெட்டியிலிருந்து இறங்கினார்.

கார்டின் கை பச்சை விளக்கை உயர்த்தியது. வாய் ஊதுகுழலை ஊதியது. வண்டியும் கூக்குரல் எழுப்பிக் கொண்டு, பெருமூச்சுப் புகையைக் கக்கியபடி நகரத் தொடங்கியது.

முருகையனுக்கு இந்த நிகழ்ச்சிகளெல்லாம் ஏராளவுக்கு வெறுப்பையே தந்தன. பணத்தின் மினு மினுப்பைத் தொலைவிலிருந்து காணும்போதே அதிகாரம் எதிர்ப்பக்கம் திரும்பிவிடுவதை அவனால் பொறுக்க முடியவில்லை. இன்னும், வண்டியிலேறியவர்கள் நடைபாதையில் மூட்டை முடிச்சுக்களுக்கிடையில் நிற்கக்கூட முடியாமல் ஆடிக் கொண்டுதான் வந்தார்கள். முருகையன் தன்னுடைய பையைப் போட்டு வைத்திருந்த இடத்தில் போய் உட்காரவில்லை.

ஒருவாறு முருகையனின் உணர்ச்சியைப் புரிந்துகொண்ட மற்ற இளைஞன், உரத்த குரலில் அந்தக் குடும்பத்துக்கு உத்தரவு போட்டான். ''இங்கே வாங்க. உங்க எல்லோருக்கும் தாராளமா இடம் இருக்கு...வாங்க! வாங்க!''

அவன் குரலை உயர்த்தியதற்குக் காரணம், தூங்குவது போலிருந்தவர்களை எழுப்புவதற்காக என்பது அவன் முக மாற்றத்தால் தெரிந்தது. அவன் வேடிக்கையாகப் பேசுவது போலவே வினயமாகச் சாடை பேசத் தொடங்கி விட்டான். பின்புறம் பாசாங்கு செய்து கொண்டிருந்த இரண்டு சில்க் ஜிப்பா — ஜரிகை வேட்டி பயணர்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். 'நீங்கள் பேசாமல் இருங்கள்; நான் பார்த்துக், கொள்ளுகிறேன்' என்பது போல் முரடன் அவர்களுக்குத் துணிவு கொடுத்தான்.

இதற்குள் முருகையனின் நண்பன் ஏழைக் குடும்பத்தாரை வழி நடத்திக் கொண்டு, கோட்டைக் கதவுகளைத் தகர்க்கச் செல்லும் வீரனைப்போல் குறும் புத்தனமான சம்பிரமத்துடன் சென்றான். முரடன் நந்தியைப் போலல்ல, மத யானையைப் போல், குறுக்கே நின்றான்.

அவனை மேலும் கீழும் பார்த்து உரக்கச் சிரித்தான் இளைஞன். வாய் விட்டுச் சிரித்தான்.

''அண்ணே! நீயும் நானும் ஒரு சாண் வயித்துக்காகத்தான் இப்படியெல்லாம்



செய்யிறோம். என்னை நீ பார்த்ததில்லே? நாடகத்திலே 'காமிக்' குருசாமின்னு நீ கேள்விப்பட்டதில்லே? அவனேதான் நான்! மேடையிலே 'மேக்கப்' போட்ட வந்தா சிரிக்கிறே; இங்கே என்னடான்னு முறைக்கிறே!''

உடனே வண்டிக்குள் ஒரு கலகலப்பு ஏற்பட்டது. நகைச்சுவை நடிகன் குருசாமியைத் தரிசனம் செய்வதற்காகச் சிலர் எழுந்து நின்றார்கள். முன்பே அவன் முகத்தைப் பார்த்துச் சந்தேகப்பட்டவர்கள், ''நான் அப்பவே நினைச்சேன்'' என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டார்கள்.

இவ்வளவுக்குப் பிறகும் குருசாமியின் முயற்சி பலிக்கவில்லை. அந்த இருவரும் எழுந்திருக்க வில்லை.

''ஏண்ணே! எனக்கொரு சந்தேகம். ரயில்லே இவ்வளவு நேரம் என்னென்

னவோ நடந்திச்சே, அப்படியும் உங்க ஐயாக்கள் எழுந்திருக்கலேன்னு, அவுங்க தூங்கறாங்களா, இல்லே அவுங்களோட மூச்சே நின்னு போச்சா? போய்ப் பாரண்ணே!''

பெட்டிக்குள்ளிருந்து குபீரென்று சிரிப்பொலி கிளம்பியது. நாடக மேடை நடிகனுதலால் சிரிப்பு அடங்கும் வரை குருசாமி பொறுத்துக் கொண்டிருந்துவிட்டு, ''அண்ணே! வள்ளுவர் என்ன சொல்லியிருக்கார் தெரியுமா?'' என்றான். ''மத்தவங்களோட ஒத்து வாழத் தெரியாதவங்களைப் பட்டணத்திலே உள்ள செத்த காலேஜிலே பாடம் பண்ணி வைக்கச் சொல்லி யிருக்கார்!''

அதுவரை செத்துப் போய்க் கிடந்த இரண்டு மரக்கட்டை மைனர்களுக்கும் இப்போது உயிர் வந்துவிட்டது. அவர்களைக் காத்து நின்ற முரடனும் வழி விட்டு ஒதுங்கினான். ஏழையின் குடும்பம் மிகவும் பயபக்தியோடு போய், ஏதோ குற்றம் செய்கிற உணர்ச்சியோடு ஓர் ஓரமாக நெருக்கியடித்துக் கொண்டு உட்கார்ந்தது.

வெற்றி வீரனைப் போல் கைகளை ஆட்டிக்கொண்டு கம்பீரமாகத் தன்னுடைய இடத்துக்குத் திரும்பினான் குருசாமி. அவனுக்கு எதிரில் வந்து அமர்ந்துவிட்ட முருகையனின் கையில் ஒரு புத்தகம் இருந்தது. அவன் குருசாமியைப் பார்த்து ஒரு புன்னகை பூத்தான். எவ்வளவு ஆழம் நிறைந்த அழகான புன்னகை அது!

தனக்குக் கிடைப்பதற்கரிய பெரும் பரிசாக அதனை நினைத்துக் கொண்டு, ''அது என்ன புத்தகமண்ணே?'' என்று கேட்டான் குருசாமி.

''திருக்குறள்!''


''அப்படீன்னு நான் சொன்னதுபோல் அதிலே ஒரு குறள் இருக்கில்லே?''

'ஆம்' என்று மௌனமாகத் தலையாட்டினான் முருகையன்.

திருக்குறளைப் பற்றிய பேச்சைச் செவிமடுக்க நேரமில்லாமல் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் மணிக்கு முப்பது மைல் வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

திடீரென்று ''நீங்க எதுக்கண்ணே, சிறைக்குப் போனீங்க?'' என்று கேட்டான் குருசாமி.


அக்கம் பக்கத்தி லிருந்தவர்களும் முருகையனை ஆவலுடன் ஏறிட்டுப் பார்த்தார்கள். (தொடரும்)



பற்கள் வெண்மைபெற
ஈறுகள் திடமடைய
சுவாசித்தல் ஆரோக்யமுற

ரெமி
டூத் பேஸ்ட்
(அஸுலின் கலந்தது)

பவுடராகவும் டின்களில் கிடைக்கும்



பற்களை பாதுகாக்கவும், வெண்மை தரவும் உடனடியாக ரெமி பற்பசையை உபயோகிக்க ஆரம்பியுங்கள். அதனில் கமழும் நறுமணம், உபயோகித்த பின்னும் வாயினில் நீண்ட நேரம் தங்கி ஓர்வித இன்ப உணர்ச்சியை ஊட்டுகின்றது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் ரெமி தயாரிப்புகள் RP 932

இலங்கையில் கிடைக்குமிடம்: AVRA Ltd., Colombo

ரேடியோ ஸிலோன் 41.72 மீட்டரில் "ரெமி நாடக விருந்து"
வெள்ளிக்கிழமை தோறும் மாலை 6-30 விருந்து 6-45 வரை



லாஷாவைக் குறித்துக் குமாருக்குச் சந்தேகமிருந்தாலும் போதுமான சாட்சியங்கள் இன்றி அவனைக் கைது செய்யத் தயங்குகிறான். லாஷா அறியாதவாறு அவனுடைய கையாள் ரவிக்கு விலங்கிட்டு விசாரித்தும் பலனேதுமில்லை. ஆகவே....
நரிவேட்டை 17
கதை: ஜெயந்தி
சித்திரம்: விஜு
... வின்மியைக் காண வரும் குமார் காரியார்த்தமாக அன்பொழுகப் பேசுகிறான்.
வின்மி! நம்மிடையே இருந்த மனஸ்தாபங்கள் தீர்ந்து விட்டனவல்லவா?
குமார்! உங்கள் அன்பைப் பெற்று விட்ட எனக்கு அழ வேண்டும் போலிருக்கிறது!
ஆத்திரப்பட்டு வின்மி முன்பு திருப்பிக் கொடுத்த கடிகாரத்தை மீண்டும் அவள் கரத்திலேயே அணிவிக்கிறான் குமார்.
லாஷாவைப் பற்றி எங்களுக்கு நல்ல அபிப்பிராயமில்லை.
அப்படியானால் உடனே அவனைக் கைது செய்வதுதானே?
தீர்மானமாக ஒன்றும் தெரியவில்லையே, வின்மி! அதோடு, அவனைச் சேர்ந்த சதிகாரர்கள் நாடு முழுவதும் இருக்கிறார்கள்.
நாலு குருவிகளில் ஒன்றைச் சுட்டாலும் மற்றவை பறந்து விடுமோ எனப் பயப்படுகிறீர்கள்.
புத்திசாலிப் பெண்தான்! நீ எனக்கு உதவவேண்டிய தருணம் வந்து விட்டது, வின்மி! மிகச் சிறிய அளவில் உள்ள இந்த 'டேப் ரிகார்டரை' மறைத்து வைத்துக் கொண்டு லாஷாவிடம் பேச்சுக் கொடுத்துப் பார். உங்கள் சம்பாஷணை இதில் பதிவாகிவிடும்!



ஆலோசனை முடிந்ததும் கையிலுள்ள அலங்காரக் கூடையில் 'டேப்ரிகார்டரை' மறைத்து வைத்துக் கொண்டு விஜயா புறப்படுகிறாள்.
குட்லக்!
டாட்டா!
லாவடாவின் காரியாலயத்தில்...
அடடே! என் அருமை நண்பன் டெல்லிராமாவின் பெண்ணல்லவா நீ?
ஆமாம்! அப்பா உங்களைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார். அதனால்தான் உங்களுக்கு உதவ நினைத்தேன்.
துணுக்குற்று விழிப்படைகிறான் லாவடா...
உதவியா? நீ எனக்கு எவ்விதத்தில் உதவப் போகிறாய்?
போட்டோக்கள் எதுவும் தன் கைக்கு வந்து சேரவில்லை என்று தானே உங்களிடம் கூறினான் ரவி? அது பொய்!
தேசத் தலைவர்கள் சிலரது புகைப் படங்களைக் கேட்டிருந்தேன்...
என்னை நீங்கள் நம்பவில்லை என்பது புரிகிறது. உண்மையைத் தெரிந்து கொள்ளும் ஆவல் இருந்தால் சொல்லி அனுப்புங்கள்.
விஜயா போக யத்தனிக்கிறாள்.
விஜயா! என் நண்பனின் மகளுக்குப் புத்தி சொல்ல வேண்டியது என் கடமை. யாரோ குமார் என்பவனை நீ அடிக்கடி சந்திக்கிறாயாமே!
அதுவும் உங்கள் நலனுக்காகத்தான்!
ஏதேது! என் நலனில் அவ்வளவு அக்கறை பிறந்து விட்டதா உனக்கு? காரணம்?
நீங்கள் ரொம்பப் பணக்காரர் என்பது தான். என் ஓட்டலை பழுது பார்க்க ஐயாயிரம் ரூபாய் உடனடியாகத் தேவைப் படுகிறது.


பண பலத்தைக் கொண்டு லின்பி - குமாரின் நட்பைக்கூட விலைபேசி விடலாம் என்ற தெம்பு பிறக்கிறது லாஷாவுக்கு.
பணம் சும்மா வராது! அதைச் சம்பாதிக்க வேண்டும்.
பெட்டி நிறைய ரவி கொண்டு வந்த பிலிம் சுருள்களைப் போலீஸார் கைப்பற்றியிருக்கிறார்கள் என்ற செய்தி எவ்வளவு பெறும்?
லாஷா நிதானம் இழந்து லின்பி தன் சார்பிலிருப்பதாக நம்பி விடுகிறான்.
இந்தா, இப்போதைக்கு இதை வைத்துக் கொள். பாக்கி விவரங்களையும் சீக்கிரம் கூறு.
ரவியைக் கைது செய்தார்கள். ஆனால் அவன் யாரையும் காட்டிக் கொடுக்க மறுத்து விட்டான்.
சாம, தான, பேத, தண்டம் எதுவும் அவனிடம் பலிக்கவில்லை. என்றாலும் குமார் உங்களைச் சந்தேகிக்கிறார்.
என்னை என்ன செய்துவிட முடியும் அவனால்?
ஏன்? ரவியின் கதி உங்களுக்கும் நேராது என்பது என்ன நிச்சயம்?
என்னைத் தொட்டால் போதும்! குமார் தன் உயிருக்குயிரான ஷ்யாமாவை மறந்துவிட வேண்டியதுதான்!
இந்த உரையாடலெல்லாம் "ரிகார்டா"கிக் கொண்டிருக்கிறது.
என்ன?
ஆச்சர்யமாயிருக்கிறதா லின்பி! ஷ்யாமா என் பங்களாவில்தான் இருக்கிறாள், பத்திரமாக!
பல்வேறு உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்திக் கொண்டு நாடகத்தை வெற்றிகரமாக இறுதிவரை நடத்தி விட்டு விடை பெற்றுக் கொள்கிறாள் லின்பி.
அடிக்கடி வந்து போய்க் கொண்டிரு!
புதுத் தகவல்கள் ஏதாவது கிடைத்தால் உங்களை வந்து பார்க்கிறேன்.
அவள் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறான் குமார்.
குமார்! உங்கள் தங்கைக்கு ஆபத்து!
தொடரும்



யாருக்காக?

ஸ்ரீ வேணுகோபாலன்

அவள் அழுததே இல்லை.

இப்போது...

நினைவில் தெரிந்து எத்தனை துக்கங்கள் முகில்போல் படர்ந்து துன்பத்தின் நிழலைக் கப்பியிருக்கின்றன. எனினும் கண் கரந்ததுமில்லை; நீர் உகுத்ததுமில்லை.

இப்போது...

கண்களின் பார்வை தூரத்திலும் தூரம் நீந்திச் செல்வது போலிருக்கிறது. மனம் ஒரே வார்த்தையில் ஒடுங்கி இரைந்து கொண்டிருக்கிறது.

"வருவாரோ?" நினைவு ராட்டையாய்ச் சுழல்கிறது. மறைந்தது மீண்டும் முளைத்து முன் நிற்கிறது:

ஆடும் ஊஞ்சல் கட்டியிருக்கிறது. வேம்பின் கிளை ஊஞ்சலோடு தொய்ந்து கொடுக்கிறது: விண்ணில் ஏறி ஏறிப் போவது போலிருந்தது; கால்கள் பூமியை உதைத்துத் தள்ளியபடியே இருக்கின்றன. சுவர்ணா ஆடுகிறாள்.

"சுவர்ணா...." வீட்டுக்குள்ளிருந்து அப்பா அழைக்கிறார். ஊஞ்சலைத் தள்ளிவிட்டு ஓடுகிறாள். பிணக்கில் ஊஞ்சல் பின்னலிட்டுக் கொள்கிறது.

"அப்போ இந்த வரன் வேண்டாமா?"

"ஊஹூம்!"

அப்பா திகைக்கிறார். "நீ யாரைத்தான் கல்யாணம் செய்துகொள்ளப் போறே? இப்படி ஒவ்வொரு வரனைத் தட்டிக் கழிக்கிறயே!"

அப்பா ஒருகணம் நிற்கிறார். பிறகு போய் விடுகிறார். அவள் மீண்டும் தோட்டத்தை நோக்கி ஓடுகிறாள். ஊஞ்சல் ஓய்ந்து மௌனமாய் நிற்கிறது. கயிற்றை அணைத்துப் பிடித்து அதில் அமர்கிறாள். வேம்பின் கிளை தொய்கிறது. இலைகள் சிலிர்த்து ஆடுகின்றன. ஊஞ்சல் இன்பத்தில் விண்ணேறிப் பறக்கிறது.

"சுவர்ணா, நீ ராஜகுமாரி!"

அவளது உள் மனம் தனித்து நின்று பேசுகிறது.

"அப்படியென்றால்..."

"அவ்வளவு அழகு..."

"ம்."

"வதனம் நீரில் மிதக்கும் நிலவுத் தட்டாய் ஒளிர்கிறது. கண்கள் கனவில் பறக்கும் கருஞ்சிட்டுக்களாய் மிளிர்கின்றன. நீண்டு உயர்ந்து மடல் உதிர நிற்கும் தாழை போல் சுடர்கிறது உன் மேனி. சுவர்ணா, நீ ராஜகுமாரி!"

"இருந்துவிட்டுப் போறேன், போ!"

சுவர்ணா ஊஞ்சலில் வீசி வீசிப் பலமாக ஆடுகிறாள். ஊஞ்சல் மேலே போகும் போதெல்லாம் தூரத்தில் வளைந்துசெல்லும் நதியின் ஒரு பகுதி மின்னித் தெரிகிறது. "ராஜகுமாரி!" என்று அழைத்து விட்டு ஆற்று நீர் சிரித்துக் கொண்டே போவது போல் தோன்றுகிறது.



படித்துறையை அடைகிறாள். எதிர் பார்த்தது சரியாகவேயிருக்கிறது. ராமு அரசின் நிழலில் அமர்ந்திருக்கிறான். கையில் புத்தகம்! ஆழ்ந்து படிப்பது போல் பாவனை. அவள் அலட்சியமாக நடைவிடுகிறாள். அவன் தலை நிமிர்கிறது.

'பெரிய பண்ணை பிள்ளையாயிருந்தால் எனக்கென்ன?' அவள் மனம் நினைக்கிறது.

குளிரக் குடைந்து நீராடி எழுகிறாள். வானத்தில் முகில் மண்டிக் கிடப்பது தெரிகிறது. புறப்படும்போது தூறலும் விழுகிறது.

விநாயகர் கோவிலின் வாசலில் ஏறி நிற்கிறாள். சற்றுத் திரும்பியவள் அவனும் அங்கே நிற்பதைக் கண்டு திகைக்கிறாள். மெள்ள நழுவ முயல்கிறாள். குடத்தைக் குனிந்து எடுத்ததும் அவள் முன்னே அவன் நிற்பது தெரிகிறது.

"கதைப் புத்தகம் வேணுமா, கவர்ணு?"

"ம்ஹூம்! வேண்டாம்!"

விரைவாக நடக்கிறாள். 'கட்டாயம் வெல வெலத்து நிற்பான். என்னுடைய கவனத்துக்குக்கூடத் தகுதியற்றவன்' என்று எண்ணம் ஓடுகிறது.

"கவர்ணு, நீ ராஜகுமாரி!" அவள் உள் மனம் கூவுகிறது.

"சந்தேகம் வேறயா?"

ஊர்த் தெருவை நெருங்குகிறாள். அங்கேயும் ஒரு காட்சி தென்படுகிறது. ராமலிங்க வாத்தியார் வீட்டுத் திண்ணையில் அவர் பிள்ளை ராஜா அமர்ந்திருக்கிறான். ஓரக் கண்களால் அவளைப் பார்க்கிறான். என்றைக்கும் குனிந்து கொண்டு ஏதோ செய்வது போல் பாவனை செய்பவன் தலை நிமிர்ந்து பார்த்து விடுகிறான். அவள் கடைக்கண் வழியாக வீழ்ந்த சிறு கிறல் பார்வையில் அவன் எவ்வளவு துடிக்கிறான்? ஊரே துடிப்பது அவளுக்குத் தெரியாமலா இருக்கிறது? இவன் அதற்கு விதிவிலக்கா?

வீட்டுக்குள் குடத்தைக் கொண்டு வைக்கிறாள்.

"அப்பாவைப் பார்த்தியோடீ, கவர்ணு?"

"ம்ஹூம்."

"காலம்பறலேர்ந்து காணக்கலியோடீ! காப்பி ஆறிப் போறதே!"

ஒரு நாள், இரண்டு நாட்கள்; அப்பா திரும்பவேயில்லை!

போது ஒரு நாள் விடிந்து நண்பகலாகிறது. வீட்டுக்குள் யார் யாரோ திடீரென்று நுழைகிறார்கள். மனம் 'திக் திக்'கென அடித்துக் கொள்கிறது. யாரிடமிருந்து என்ன செய்தி வரப் போகிறது?

வந்தவர்களிடம் அம்மா பேசி விட்டு வருகிறாள். குமுறும் அழுகையின் விக்கல்கள் அம்மா முகத்தில் தோன்றித் தோன்றி மறைந்து செல்கின்றன.

"குடியைக் கெடுத்து விட்டாரடீ, உங்க அப்பா!" என்று இரைகிறாள் தாயார்.

"என்ன அம்மா?"

"வீடுஜப்திக்கு வந்துதேதுடி!"

கொல்லைப்புற வேம்பின் நிழலில் நிற்கிறார்கள். அவள், அவளருகில் அம்மா, பானு, பாலு மூவரும் நிற்கிறார்கள். வேம்பின் கிளையில் ஊஞ்சல் சலனமற்றுச் சோகக் கடராய்த் தொங்குகிறது. அப்பா வாழ்ந்ததெல்லாம் வெறும் 'வாய்ப்பந்தல்' வாழ்வா? அவள் திருமணத்துக்காக அவர் அவசரப்பட்டதெல்லாம் துக்கம் சூழ்வதற்கு முன் அவளது வாழ்க்கையை உருவாக்கி விட வேண்டுமென்பதற்காகவா?

கொப்புளித் தாத்தாவின் வீட்டில் குடியேறுகிறார்கள். பனங் கட்டைத் தூணும் மூங்கில் பிளாச்சுக்களும் அவளைப் பார்த்து நகைப்பது போலிருக்கின்றன.

"பாழ் என்று வெறுத்தோம்; இப்போது வாழ்வே இதில்தான்!"

தூசியையும் குப்பையையும் அவள் ஒதுக்கித் தள்ளுகிறாள்.

மைனர் வீட்டில் சாப்பிட அழைக்கிறார்கள். அவள் மனம் குன்றுகிறது. அம்மாவின் அழுத கண்கள் மேலும் கொட்டுகின்றன. மைனர் மனைவி வற்புறுத்துகிறாள். ஒரு கவளம்கூட உட்செல்ல மறுக்கிறது. விருந்திடுபவள் கனிவையே கொட்டிப் பேசுகிறாள். இருந்தும்...

எத்தனை நாட்கள் அவர்கள் வீட்டில் சாப்பிட முடியும்? அப்படிச் சாப்பிடாவிட்டால் வேறு என்னதான் செய்ய முடியும்?

ஒரு தினம். மைனர் மனைவி மாவுக்கு அரைப்பதைப் பார்க்கிறாள். அவள் வேண்டாமென்று சொல்லியும் ஒத்தாசை செய்ய அமர்கிறாள். பிறகு உரிமையோடு சின்னாட்களில் அரைக்க ஆரம்பிக்கிறாள். அன்பின் தளையில் அவர்கள் வீட்டுக்கு ஒத்தாசை செய்யும் இன்பமே பெருகி அரைக்கும் வேலை பல்வேறு வேலைகளாய்ப் பரிணமிக்கிறது.

உதவி செய்வதில் இன்னும் இரண்டு வீடுகள் பங்கெடுக்கின்றன. அவள் செய்யும் ஒத்தாசையும் இந்த இரண்டு வீடுகளுக்கும் பரவுகிறது. திடீரென்று ஒரு நாள் நினைக்கிறாள். தன்னையறியாமலேயே தான் கூலிக்கு வேலை செய்ய ஆரம்பித்து விட்டதை உணர்கிறாள். அப்படி உணராமலேயே படிப்படியாகத் தான் மாறியது நல்லதுதான் என்று தோன்றுகிறது.

அன்று நீராடச் செல்லச் சற்று நேரமாகி விட்டது. துக்கம் ஏற்பட்ட நாளிலிருந்து இருள் தெளியுமுன்பே குளித்து விடுவது வழக்கம். இன்று நேரமாகி விடுகிறது.

அதே விநாயகர் கோயில். அதே வாசல் படிக்கட்டு.

"கவர்ணு!"

அதே குரல் கேட்கிறது. நிமிர்ந்து பார்க்கிறாள். ராமு புன்னகையுடன் நிற்கிறான்.

"படிப்பை ஏன் நிறுத்திவிட்டே, கவர்ணு?"

"நீங்கள் அதை ஏன் கேட்கிறீர்கள்?"

"இல்லை...படிப்புக்குப் பணம் வேணும்னு நான் தந்திருப்பேனே!"

"உங்கள் பணம் இங்கே ஒருத்தருக்கும் தேவையில்லை!"

விறு விறென நடக்கிறாள்! நடையில் நளினத்தையும், மமதையையும் ஓட விடுகிறாள்.

"அன்று என்ன, இன்று என்ன? எப்போதுமே நான்தான்!"

கீழ வாய்க்கால் அருகில் மருதமரம் ஓங்கி வளர்ந்திருக்கிறது. அதன் அடியில் அவள் சற்று நிற்கிறாள்.

"கவர்ணு!"

குரல் கேட்டுத் திடுக்கிடுகிறாள். அவளுக்கே அதிசயமாக உள்ளது, ராமலிங்க வாத்தியார் பையன் ராஜா நிற்கிறான்.

"ஏது? அடக்கத்தோடு இருந்தீர்கள்! இப்போது தைரியமாகப் பேர் சொல்லி அழைக்கிறீர்களே!"

"இல்லை; இப்போதும் கண்யம் குறைய வில்லை! உங்கள் நிலை கண்டு மனந்தாளாது தான் பேசுகிறேன்...."

"எங்கள் குடும்பம் கீழே விழுந்து விட்டது என்பதால்தானே இப்படிப் பேசுகிறீர்கள்? செயலாக இருந்தால் வார்த்தையாட வருவீர்களா? எது எப்படிப் போனால் என்ன? எப்போதும் நான் நான்தான்!"

வீட்டுக்குள் நுழைகிறாள். ஈரம் கலையும் போது அம்மா வருகிறாள். அவளது கண்கள் ஈரத்திருக்கின்றன.

"ஏதாவது நடந்ததா, அம்மா?"

"பண்ணையார் வந்தார்!"

"எதுக்கு?"

"அதோ பாரு!"

அம்மா காட்டிய இடத்தில் நெருப்புத் தழலை வைத்திருப்பது போல் வெள்ளிப் பேலா ஒன்று ஜொலிக்கிறது. அதில் நுரைத்துப் பொங்கி நிற்கிறாற் போல் சர்க்கரை குவிந்து நிற்கிறது.

"என்ன விசேஷம்?"

"பண்ணையார் வீட்டிலே இரண்டு நாட்கள் ரகளைப் பட்டதுன்னுளே! காரணம் தெரிந்து போச்சு. அவர் பிள்ளை ராமு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஒற்றைக் காலில் நிற்கிறானும்."

"ம்!"

"அதான் பண்ணையாரே வந்து நிச்சயம் பண்ணிடலாம்னு சொல்லிப்போக வந்தார்!"

"நீயே நிச்சயம் பண்ணிட்டயாக்கும்!"

அவள் விழியில் தீ பறக்கிறது. அம்மா சற்றுத் தயங்குகிறாள். அவள் விறுவிறெனச் சென்று வெள்ளிப் பேலாவை எடுக்கிறாள்.

"கவர்ணு!"

"என் கல்யாணத்துக்கு நான் சம்மதிக்கணுமா, நீ சம்மதிக்கணுமா?" பதிலுக்கு அவள் இரைகிறாள்.

"நம்ப குடும்பம் கடைத்தேறுகிற வழி?"

"அந்த வழி என் கல்யாணத்தின் மூலமாகத்தான் வரணுமா?"

அம்மா செய்வதறியாது முற்றத்தைப் பார்க்கிறாள். நிறைந்தெழும் துக்கம் விம்மல்களாகக் கழல்கிறது.

வெய்யில் கொளுத்துகிறது. வயல்கள் அறுவடையாகி விட்டிருக்கின்றன. மருந்துப் புட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு வயற் காட்டுப் பாதையிடையே அவள் வந்துகொண்டிருக்கிறாள். அம்மாவுக்கு ஒரு வாரமாய் உடம்பு குணமில்லை.

மேலே வாய்க்கால் அருகில் வந்ததும் அவள் நடை தடைப்படுகிறது. வாய்க்கால் விளிம்போடு நீண்டிருந்த சாலையில் வண்டியொன்று 'ஜல் ஜல்' என்று நாதமிசைத்து வருகிறது. யார் ஊருக்குப் போகிறார்கள்?

வண்டி அவளருகில் நிற்கிறது. அவள் திகைக்கிறாள். ராமலிங்க வாத்தியார் பிள்ளை ராஜா உள்ளே யிருக்கிறான். இறங்க முயன்றவன் சற்றுத் தயங்குகிறான்.

"மன்னிக்கவும்; அன்று நான் பேசியதைத் தவறு என்று நினைத்தால் மன்னித்துவிடுங்கள். நான் வேலை தேடி ஊருக்குப் போகிறேன். மன நிறைவுடன் போக வேண்டும்."

அவள் பதில் பேசவில்லை.

"உங்கள் நிலை கண்டு இரங்கித்தான் அன்று பேசினேன்; வருகிறேன்."

வண்டி குலுங்கிப் பெயர்கிறது. ஒரு கணம் அவனைப் பார்த்து விட்டுத் திரும்பி நடையிடுகிறாள். வண்டியின் மணிகள் அவள் செவிகளில் சிலிர்த்து வழிந்து 'ஜில்'லொலி பாய்ச்சுகின்றன. வீட்டுக்கு வந்த பிறகும் அந்த ஒலிகள் கேட்கின்றன. பிரமையா? அல்லது உண்மையா? செவிகளை மூடிவிட்டுத் திறக்கிறாள். இன்னும் ஒலி கேட்கிறது. ஓசை ரேகைகள் செவியுள் நிரந்தரமாக உறைந்து விட்டனவோ?

மருந்தைக் கொட்டியெடுத்து அம்மாவிடம் செல்கிறாள். அம்மா கட்டிலில் படுத்திருக்கிறாள். பண்ணையார் வந்துவிட்டுப் போனதிலிருந்து அம்மா சரியாகப் பேசவில்லை!

"அம்மா!" பதில் இல்லை.

உலுக்கினாள். பதில் இல்லை. குளிகை விற்கும் பாட்டியை அழைத்து வருகிறாள். பாட்டி நாடி பார்த்து நிமிர்கிறாள்.

"என்ன பாட்டி?"

"இப்போதே அழ ஆரம்பிச்சுடாதே! நாளைக்குக் காலம்பற குரல் கொடு! இல்லாட்டா இன்னிக்கு ராத்திரியே தகனம் பண்ணணும்னு சொல்லப் போரு!"

மாரியும் வேனிலும் மாறி மாறிப் புரள்கின்றன. இதன் இடைப்பட்டு வையமும் வாழ்வும் எவ்வளவு மாறி விடுகின்றன?

கவர்ணு வெளி வாயிலில் நிற்கிறாள். ஊர்த் தெருவைத் தொடக்கத்திலிருந்து முடிவுவரை



செய்த கம்பெனியின் பெயர் மங்கிய எழுத்துக்களாய்த் தெரிகின்றன. என்ன எழுதியிருக்கிறது?

"ராஜா!"

என்ன, ராஜாவா?

சட்டென்று நினைவைக் கவ்வியிருந்த பிரமை வழுவுகிறது.

"ராஜா!"

இதயத்தின் ஆழத்தில், வெளிவரச் சக்தியில்லாது ஒதுங்கிக்கிடந்த சிறு காற்றுக் குமிழ் போன்ற உணர்வு, திடீரென்று உந்தப்பட்டு நீந்தி நீந்தி வெளிவந்து நினைவின் விளிம்பைத் தொட்டுவிட்டு 'ஜில்'லெனும் ஓசையை எங்கும் வாரி யிறைத்தவாறு உடைகிறது.

"ராஜா!"

வெறுமையென நினைத்த வாழ்வில் எங்கோ பசுமை படர்வது போலிருக்கிறது.

"அவன் நினைத்திருப்பானா?"

வீட்டுக்கு விரைந்து ஏகுகிறாள். கண்ணாடி எடுத்து முகத்தை நோக்குகிறாள். வெளிறிய வதனத்தில் நகை ஓடிப் பற்றிய பட்டாசுத் திரிபோல் சுடர்க்கிறது.

வானும் தோப்பும் துரவும் வயலும் காற்றும் யாவும் அவள் மனத்தின் பகுதியோடு குரல் இசைக்கின்றன.

"ராஜா!"

அவனது பரந்த முகம், அதில் கருணை சிலிர்த்த கண்கள், ஆழ்ந்து பார்க்கும் அவன் நோக்கு, யாவும் அவள் முன் தோன்றி மறைகின்றன.

"இந்த உருவம் எப்போது என்னுள் எப்படி உறைந்தது? என்னையறியாது என் மனம் அவன்மீது படர்ந்திருக்கிறது!"

"ராஜா!"

எங்கிருந்தோ அலையலையாய் இன்பம் அவள் மீது மோதித் திக்குமுக்காடச் செய்வது போலிருக்கிறது. சட்டையை உரித்து வெளிவந்த நாகம்போல் அவள் ஜொலிக்கிறாள்.

ஊரே கேட்கிறது. "சுவர்ணா! உனக்கு என்ன வந்தது?"

"எனக்கா?" என்று நிற்கிறாள். அந்த நினைவிலேயே நினைவிழந்து தனிக்கிறாள்.

வாடிய அவள் வதனத்தில் மெள்ளச் சதை ஏறுகிறது. பதுங்கிய அவள் அழகு மெள்ளப் பூரித்து எழுகிறது.

காலை, மாலை, இரவு, கிழமை என்று ஒன்றும் தெரிவதில்லை. நினைவே அமிர்தமாகவும் நினைப்பே தொழிலாகவும் இருக்கிறது.

ஒருநாள் காலை எழுகிறாள். மனம் பொறுக்காது துடிக்கிறது. ஊர்ப்புறத்தே நடக்கிறாள். வெள்ளி மலை மேட்டில் நின்று கொண்டு சாலையை நோக்குகிறாள். அவள் பார்வையின் விரைவைத் தாங்காததுபோல், தூரத்தில் வயல் வெளியில் புதைந்து சாலை மறைந்து போகிறது.

"வருவாரோ?

நீர் அவள் கண்களிலிருந்து குபுக்கெனக் கொதித்து வெளி வருகிறது.

அவள் அழுததேயில்லை. இதுவரை எவ்வளவு துக்கங்கள்? ஆனால் நீர் சொட்டியதேயில்லை. இப்போது....

புனலாய், புதுப் பிரவாகமாய், பிரளயக் கொந்தளிப்பாய் அழுகை வருகிறது.

அன்று அவன் ஊரை விட்டுப்போன காட்சி நினைவில் வந்து நிற்கிறது. அவனிடம் தான் எவ்வளவு உதாசீனமாக நடந்து கொண்டோம்? அதையெல்லாம் ஒரு பொருட்டாக அவன் எடுத்திருப்பானா? "உன் நிலை கண்டு இரங்குகிறேன்" என்றான்! இன்று என் நிலை நினைத்து ஓடி வருவானா?

அவன் எல்லோரையும் போலல்ல! முற்றிலும் புதிய மனிதன்! கட்டாயம் வருவான்! நினைவின் மறைவிலே வளர்ந்த அன்பு இன்று திடீரெனத் தோன்றித் தன்னை ஆட்டிப் படைக்கும்போது, நினைவின் நிதரிசனப் பார்வையிலேயே வளர்ந்த அவன் அன்பு அவனை ஆட்டிப் படைக்காதா?

இரவு வருகிறது. வீட்டுக்கு வருகிறாள். சங்கிலித் தொடரில் கடைசிக்கும் கடைசியாக ஒரு கண்ணி அவள் மனக் கண் முன் தோன்றி மறைகிறது. காற்று திரும்பவும் வீசுகிறது. யாரோ தட்டுவது போலவே கதவும் படபடக்கிறது. "யார், யார்?" என்று எழுந்து போய் ஏமாறுகிறாள்.

ஊரடங்குகிறது. நிசி வளர்கிறது. கதவு மீண்டும் படபடக்கிறது. பிரமைதானா?

"யார்?"

கதவு தட்டப்படும் சத்தம் தெளிவாகக் கேட்கிறது. எழுகிறாள். விளக்கைப் பெரிதாக்குகிறாள். திறக்கிறாள். பூமாரிபோல் தூறல் உள்ளே புகுந்து விழுகிறது.

"யார்?"

முகம் வற்றிப் போய் மெலிந்த தோற்றத்துடன் யாரோ நிற்கிறார்கள். நன்கு உற்றுப் பார்க்கிறாள்.

"ரா....ஜா...."

அவள் கூவுகிறாள். அவள் கண்கள் பளபளக்கின்றன. அவன் பாதங்களை அவள் பற்றுகிறாள்.

"வந்து விட்டீர்களா? எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும்" அவள் நாக்குழறுகிறாள்.

"எழுந்திரு, சுவர்ணா!"

"எழுந்திருக்கிறேன்! 'மன்னித்தேன்' என்று என்னுடைய தலையைத் தொட்டு ஆசீர்வதியுங்கள்."

"மனத்தால் ஆசி தருகிறேன், எழுந்திரு!"

எழுகிறாள். அவன் கைகள் இரண்டையும் பற்றப் போகிறாள். துணுக்குறுகிறாள்.

அவன் தன் கைகளைத் தூக்கிக் காண்பிக்கிறான். புஜத்துக்குக் கீழே கைகள் துண்டிக்கப் பட்டிருக்கின்றன.

"ஐயோ!"

"மில்லில் நேர்ந்த விபத்து! புரையோடிப் போய்ப் போன மாதந்தான் எடுத்தார்கள்!"

ஒரே கணத்தில் இன்பத்தையும் துன்பத்தையும் கலந்து அவள் முகத்தில் வாரி அடித்தாற் போலிருக்கிறது.

உழைப்பு! மீண்டும் உழைக்க வேண்டும்! உழைப்பு அவன் பிறப்புரிமை! நாளையிலிருந்து தினம் காலையில் எழ வேண்டும்! கைகளை மீண்டும் பரபரப்புடன் வேலையில் ஈடுபடுத்த வேண்டும். ஆனால் அதற்கு இனி சக்தி? ஓய்ந்து போன உடலில் சக்தி?

பிரபஞ்சத்தை நடுங்க வைக்கும் சக்தி அணுவிலே இருக்கிறதாம்!. அணுவிலே இருப்பது அன்பிலே மாத்திரம் இராதா?

கன்னியாக நீ யிருக்கிறாய்! இதை நினைத்துக் கொண்டே போய் வா!''

அவள் கண்களில் நீர் கொப்புளித்து வருகிறது. வண்டி பெயர்கிறது.

''அவன் எவ்வளவு தூரம் தன்னைப் புரிந்து கொண்டிருக்கப் போகிறான்?'' அவள் சிந்தனை எழுகிறது.

'ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் கனவுகள் தானே முக்கியம்! பிறர் கனவுகள் ஒரு பொருட்டாவதில்லை. பாலுவும் பாலுவும் என்ன நினைத்துக்கொண்டிருக்கப் போகிறார்கள். அக்காவுக்குக் கனவே கிடையாது! இருந்தாலும் அதை ஒதுக்கித் தள்ளி யிருப்பாள்!'

அவனிடமிருந்து கடிதங்கள் வருகின்றன. வேலை கிடைத்து விட்டதாகச் செய்தி வருகிறது. மாதம் இருபது ரூபாய் பணமும் வர ஆரம்பிக்கிறது. ஹோட்டல் வேலையை நிறுத்திக் கொள்கிறாள்.

''கவர்ணு! உனக்கு விடிவு வந்ததாடி?'' என்கிறார்கள்.

நீண்ட பொழுதெல்லாம் இப்போது புரளப் புரள உறங்கி, உடலை நீவி நிமிர விட்டு, வருட வருடமாய் உள்ளே வளர்ந்த சடைவைப் போக்க முயல்கிறாள்.

''கவர்ணு! உனக்கு முகம்கூடத் தெளிந்திருக்கிறது!''

அவளுக்கே உள்ளூற உணர்வுகள் கொழித்து எழுகின்றன. மீண்டும் காலம் வருகிறதா?

கனவ[illegible]ாலும் அவள் கண்களிலும் ஒரு சிறு [illegible] பொசிந்து விரிகிறது. பாலு பொ[illegible]லுக்கு வந்து விடுகிறான். போன வீடு [illegible]ம்பி வருகிறது. வண்டியும் மாடும் திரும்பி வருகின்றன. வயல், தோப்பு, தூரவெல்லாம் வந்து விடுகின்றன. கவர்ணு ஆடும் ஊஞ்சலில் அமர்கிறாள். ஊஞ்சல், அது தொங்குகிற வேப்பமரம், சூழ நின்ற தென்னைகள், அதைச் சூழ்ந்த வயல் வெளிகள், அதைக் கவ்விப் படர்ந்த மேற்குத் தொடர் மலை, அதைத் தொட்டுக் கடல்போல் பரந்திருக்கும் வானம் யாவுமே நின்று பழையபடி இரைய ஆரம்பிக்கின்றன.

'' நீ ராஜகுமாரி !''

வரும் கடிதங்களின் பகுதிகள் குறைகின்றன. அவனைப் பார்க்க வேண்டுமென்று அவள் எழுதுகிறாள். லீவு இல்லை என்று எழுதுகிறான். பிறகு ஆபீஸ் விஷயமாய்க் குற்றாலத்துக்குப் போகிறான் என்றும், ரயிலடியில் வந்தால் தன்னைச் சந்திக்கலாமென்றும் எழுதுகிறான்.

நெய்யில் அரிந்த ஜாங்கிரிகளைப் பொட்டலம் கட்டிக்கொண்டு ரயில் நிலையத்தில் நிற்கிறாள்.



'' உங்க பையனுக்குப் பரீட்சை தவறி விட்டதாமே ! பாவம்.....! ஆமாம், அவன் எதுலே வீக்?''

'' ஹூம் ! அவன் உடம்பே 'வீக்'தான்...!''

ரயில் வருகிறது. அவனைக் காணவில்லை. சுற்றுமுற்றும் பார்க்கிறாள். மேலும் கீழும் அலைகிறாள். வண்டி புறப்பட ஊதி விடுகிறது. திக்பிரமையுடன் நிற்கிறாள்.

'' அக்கா !''

குரல் கேட்டுத் திரும்புகிறாள். இரைப்பும் மூச்சுமாகப் பாலு நிற்கிறான்.

'' உன்னை இவ்வளவு நேரம் தேடினேன். கண்டுபிடிக்க முடியல்லே! இந்தா அக்கா! வாங்கிக்கோ! வண்டி புறப்பட்டு விட்டது....''

அவள் கைகளில் பத்து ரூபாய்த் தாள்களில் ஐந்தைத் திணிக்கிறான்.

'' நான் வரேன்; அப்புறம் காகிதம் போடுகிறேன்.''

ஓடுகிறான். நகர்ந்து கொண்டிருக்கும் வண்டியுள் ஏறுகிறான். அவளுக்கு ஜாங்கிரியின் நினைவு வருகிறது. வண்டியை நோக்கி ஓடுகிறாள். அவன் ஓர் ஆங்கிலோ இந்தியப் பெண்ணின் கழுத்தைச் சுற்றித் தன் ஒரு கையைப் போட்டிருக்கிறான். அந்தப் பெண்ணுடன் சேர்ந்து சிரித்தவன் அவளைப் பார்த்ததும் பிரமித்து விடுகிறான்.

அவள் நின்று விடுகிறாள். வண்டிகள் தொடர்ந்து தட தடவென்று ஓடுகின்றன. அவள் எண்ணங்களும் தொடர்ந்து உருவாகி வருகின்றன.

'இவளை மறைக்கவா வண்டி புறப்படும் வரை என்னிடமிருந்து மறைந்து நின்றான்?'

வீட்டை நோக்கி நடக்கிறாள். பிரபஞ்சத்தின் கனம் முழுதும் அவள் கால்களில் ஏறிக் கொண்டாற் போலிருக்கிறது. தள்ளாடி நடக்கிறாள்.

எதிரே கிராமத்து நாய் வாலாட்டி நிற்கிறது. ஜாங்கிரிகளை விட்டெறிகிறாள். '' நன்றி ! நன்றி !'' என்று முணு முணுக்கிறாள். உள்ளே குமைகிறாள்.

வீட்டுக்குள் புகுகிறாள். அயர்ந்து தரையில் படுக்கிறாள்.

கம்பியில்லாச் சாளரத்தின் வழியே வான வெளி! நீலமிட்ட சச்சவுக்கத் துண்டுபோல் தெரிகிறது. ''கவர்ணு! நீ....''என்று கூறி விட்டு வானம் வாய்மூடிக் கொள்வது போல் தெரிகிறது. இரவு வருகிறது. உடல் நடுங்குகிறது. போர்த்திக் கொள்கிறாள்.

'' கவர்ணு !'' வாசலில் குரல்.

'' என்ன மாமி ?''


'' சித்தே வரயா, ஜோலியிருக்கு !''

'' எனக்கு ஜுரம் மாமி !''

கோடை வெய்யிலை இறுக்கி அமிழ்த்திக் கொண்டு மேகம் 'குபுகுபு'வெனக் குவியலாகிறது. தூரத்தில் புள்ளிகள் நகர்வன போல் வானம்பாடிகள் ஆடி அந்தரத்தின்

இப் புதிய மாடலைப் பார்த்தீர்களா?

ராயல் என்பீல்ட் பிரின்ஸ் 150



சிறப்புமிக்க அம்சங்கள்:

- புதிய நேர்த்தியான அமைப்பு, கம்பீரமான தோற்றம்; இரட்டை வர்ணப் பூச்சு.
- புதிய உறுதியான பிரேம். நமது சாலைகளின் நிலைமைக்கு ஏற்ற அமைப்பு.
- பாதுகாப்பிற்கு முழுவதும் மறைத்துள்ள புதிய செயின் மூடி.
- புதிய, பெரிய இரட்டை ஆசனம், அதோடு உடைமைகளை வைக்கும் பெட்டி.
- புதிய உருவில் அமைந்த பெரிய பெட்ரோல் டாங்க். 12 லிட்டர் பெட்ரோல் கொள்ளும்.
- புதுவகை ஆழமான மட்கார்டுகள். மழை நீரை அதிகம் அள்ளித் தெளிக்காதவை.

தயாரிப்போர்:
என்பீல்ட் இந்தியா லிமிடெட்
மதறாஸ்-19

பூரண விற்பனையாளர்கள்:
மதறாஸ் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதறாஸ்—பெங்களூர்—டில்லி

வெறுமையிலே பசையாத கோலம் இடு கின்றன.

நான்கு தினங்கள் மூட்டமாகவே நின்று விடுகிறது. துக்கத்தைக் கொட்டி நீராய்க் கரைக்க வந்தவை, தீர்ந்து விடாத குறையால் அடைத்து நிற்பது போல் முகில்கள் கவிந்து நிற்கின்றன.

படுத்தென்ன? எழுந்தென்ன? யார் வினவப் போகிறார்கள்?

சென்ற நான்கு தினங்களில் ஜுரம் வறுத்துச் சென்றிருக்கிறது. இப்போது சற்றுக் குறைந்திருக்கிறது. எழுந்திருக்க முடிகிறது! என்ன பயன்?

''கொஞ்சம் கஷாயம் வைச்சுக் குடியேன், சுவர்ணு!'' இரண்டாய்ப் பிரிந்த அவள் உள் மனத்தின் ஒரு பகுதியே இப்படிப் பேசுகிறது. ஜுரம் வந்து போனதிலிருந்து இப்படி ஒரு பிரமை!

''நான் ஏன் குடிக்கணும்?'' மறு பகுதி உரைக்கிறது.

''வாழ வேண்டாமா?''

''ஏன் வாழணும்?''

வெளியே வருகிறாள். சிறு சிறு வென்று காற்று அடிக்கிறது. மழை எங்கேயோ பெய்கிறது. கலகல வென அரச இலைகள் சிரிக்கின்றன. அப்பா! உடம்புக்கு என்ன இதமாய் இருக்கிறது. நடந்து கொண்டே போகிறாள். தூரத்தில் நதி தெரிகிறது. அள்ளி அள்ளி நீர் பருக வேண்டும் போலிருக்கிறது. அப்படி ஒரு வறட்சி!

நடக்கிறாள். உடல் கனம் குறைந்து கொண்டே போகிறது. தரையில் நடை பாவவில்லை. மிதக்கிறாளோ? ஒன்றுமே தெரியவில்லை.

படித்துறையில் அமர்ந்த பிறகுதான் வெள்ளம் போவது தெரிகிறது. மேற்குத் தொடரில் சாரல் கட்டி விட்டதா? இருளா, பகலா? இதென்ன மாறி மாறித் தோன்றுகிறது. நினைவு துல்யத்தை அடையாது எங்கேயோ சுழன்று சுழன்று ஓடுகிறது.

குளிக்கலாம் போலிருக்கிறது. நீருள் அமிழ்ந்தால் உடல் வெம்மை மறையும் போலிருக்கிறது. படிப்படியாய்க் கால் வைத்து இறங்குகிறாள். நினைவு இருக்கிறது. ஆனால் இந்த வாழ்க்கையில் இருக்கிறதா, அல்லது வேறு ஏதாவது வாழ்க்கையில் புகுந்து நிற்கிறதா? அதன் குரல் கேட்கிறது.

''என்னோடு வா, அடுத்த வாழ்வுக்குப் போகலாம்.''

''ஏன்?''

''இந்த வாழ்வெல்லாம் உழைப்புத்தான். ஓய்வு கிடையாது; உன் மெய் சோர்ந்து விட்டது. உட்கார்ந்து உண்ண உனக்கு இந்த வாழ்வு இல்லை!''

விழித்துப் பார்க்கிறாள். மறு வாழ்வுக்குத் தன்னை யழைத்த நினைவே இப்போது நீராய், வெள்ளமாய்ப் படர்ந்து தன்னை அலங்கரம் நீட்டி வரவேற்பது போலிருக்கிறது.

கடைசிப் படி! இருளா, பகலா? நினைவா, பிரமையா? இம்மையா, மறுமையா?

பெருத்த ஓசையுடன் அவள் காலடியில் ஏதோ நெருடுகிறது. படியில் உட்கார்கிறாள். தேங்காய்ச் சிரட்டையா? எடுக்கிறாள். சோப்புப் பெட்டியின் மூடி! இவ்வளவு தானா? அதைத் திருப்பிப் பார்க்கிறாள். பெட்டி

திருநீர்மலை திருப்படித் திருப்பணி

கண்ணன் பிறந்த நன்னாளில் அடியார்கள் அவனை ஆராதித்துக் கொண்டிருந்த போது, அந்தக் கண்ணனும் தன் இல்லத்தில் வழிபாடு நடத்திக் கொண்டிருந்தானும்—அடியார்களின் பாததூளிக்குத்தான்!

அப்பேர்ப்பட்ட அடியார்களில் முடிமணிகளாக விளங்கிய பூதத்தாழ்வார், திருமங்கை ஆழ்வார் முதலியவர்களின் அடிபட்டுப் புனிதமான பதி திருநீர்மலை. இன்று அங்கு பக்தகோடிகள் சௌகரியமாக மலை ஏறிச் சென்று ஸ்ரீரங்கநாதனைத் தரிசிக்க இயலாதபடி படிகள் சிதைந்துள்ளன. இவற்றைப் புதுப்பிக்கவும், படிகளின் இரு புறமும் கைப்பிடிச் சுவர் அமைக்கவும் ஜீர்ணோத்தாரணக் கமிட்டியார் தீவிரமாக ஏற்பாடு செய்து வருகிறார்கள். தெய்வமே தொழும் தொண்டர் குழாத்தின் அடிப்பொடி படும் படிகளைப் புதுப்பிக்கும் இப்புனிதப் பணியில் பொதுமக்கள் யாவரும் பங்கு பெற விரைவார்கள் என்று நம்புகிறோம்.

மொத்தம் 230 படிகள். இவற்றில் 186 படிகள் ஓர் அடி அகலமும், 32 படிகள் இரண்டு அடி அகலமும், 12 படிகள் எட்டு அடி அகலமுமுள்ளவை. இவற்றில் ஒவ்வொரு படிக்கும் முறையே ரூ. 25—50—200 செலவாகிறதாம். கைங்கரியத்தில் ஈடுபடுவோரின் ஊரும் பெயரும் படிகளில் பொறிக்கப்படுமென அறிவிக்கப்படுகிறது.

பேட்டை முதலியார்களின் பேரபிமானத்துக்குப் பாத்திரமான இக்கோயிலின் ஜீர்ணோத்தாரணத்துக்குத் தயங்காமல் நிதி உதவலாம். வாகன மண்டப நிர்மாணம், கீழ்க்கோயிலுக்குத் தளமிடுதல், மின்சார விளக்கமைப்பு, இவைகளைத் திருப்பணிக் கமிட்டியார் பூர்த்தி செய்துவிட்டார்கள். மலைமீது சுற்றுமதில் எழுப்பவும், க்ஷீர புஷ்கரணியைச் செப்பம் செய்யவும் தொடங்கிவிட்டார்கள். வெகு விரைவில் மலைக் கோயில் பிராகாரத்தில் தளவரிசை போடவும், சந்நிதிகளையும் விமானங்களையும் புதுப்பிக்கவும், தெப்பம் கட்டவும் திட்டமிட்டிருக்கிறார்கள். இத்திருப்பணிகளை யெல்லாம் நிறைவேற்றி வைத்து அரங்கனின் அருளைப் பெறவேண்டியது நம் கடமை.

திருப்படித் திருப்பணிக்கும் மற்றத் திருப்பணிகளுக்கும் நன்கொடை அனுப்புவோர், காரியதரிசி, ஜீர்ணோத்தாரணக் கமிட்டி, ஸ்ரீ ரங்கநாதஸ்வாமி தேவஸ்தானம், திருநீர்மலை, குரோம்பேட்டை மார்க்கம் (சென்னைக்குச் சமீபம்) என்ற விலாசத்துக்கு அனுப்பக் கோருகிறோம்.


நமது நாட்டின்
இணையற்ற
பெங்கால்

செய்த கம்பெனியின் பெயர் மங்கிய எழுத்துக்களாய்த் தெரிகின்றன. என்ன எழுதியிருக்கிறது?

''ராஜா!''

என்ன, ராஜாவா?

சட்டென்று நினைவைக் கவ்வியிருந்த பிரமை வழுவுகிறது.

''ராஜா!''

இதயத்தின் ஆழத்தில், வெளிவரச் சக்தியில்லாது ஒதுங்கிக்கிடந்த சிறு காற்றுக் குமிழ் போன்ற உணர்வு, திடீரென்று உந்தப்பட்டு நீந்தி நீந்தி வெளிவந்து நினைவின் விளிம்பைத் தொட்டுவிட்டு 'ஜில்'லெனும் ஓசையை எங்கும் வாரி இறைத்தவாறு உடைகிறது.

''ராஜா!''

வெறுமையென நினைத்த வாழ்வில் எங்கோ பசுமை படர்வது போலிருக்கிறது.

''அவன் நினைத்திருப்பானா?''

வீட்டுக்கு விரைந்து ஏகுகிறாள். கண்ணாடி எடுத்து முகத்தை நோக்குகிறாள். வெளிறிய வதனத்தில் நகை ஓடிப் பற்றிய பட்டாசுத் திரிபோல் சுடர்க்கிறது.

வானும் தோப்பும் தூரவும் வயலும் காற்றும் யாவும் அவள் மனத்தின் பகுதியோடு குரல் இசைக்கின்றன.

''ராஜா!''

அவனது பரந்த முகம், அதில் கருணை சிலிர்த்த கண்கள், ஆழ்ந்து பார்க்கும் அவன் நோக்கு, யாவும் அவள் முன்தோன்றி மறைகின்றன.

''இந்த உருவம் எப்போது என்னுள் எப்படி உறைந்தது? என்னையறியாது என் மனம் அவன்மீது படர்ந்திருக்கிறது!''

''ராஜா!''

எங்கிருந்தோ அலையலையாய் இன்பம் அவள் மீது மோதித் திக்குமுக்காடச் செய்வது போலிருக்கிறது. சட்டையை உரித்து வெளிவந்த நாகம்போல் அவள் ஜொலிக்கிறாள்.

ஊரே கேட்கிறது. ''கவர்ணா! உனக்கு என்ன வந்தது?''

''எனக்கா?'' என்று நிற்கிறாள். அந்த நினைவிலேயே நினைவிழந்து தவிக்கிறாள்.

வாடிய அவள் வதனத்தில் மெள்ளச் சதை ஏறுகிறது. பதுங்கிய அவள் அழகு மெள்ளப் பூரித்து எழுகிறது.

காலை, மாலை, இரவு, இரமை என்று ஒன்றும் தெரிவதில்லை. நினைவே அமிர்தமாகவும் நினைப்பே தொழிலாகவும் இருக்கிறது.

ஒருநாள் காலை எழுகிறாள். மனம் பொறுக்காது துடிக்கிறது. ஊர்ப்புறத்தே நடக்கிறாள். வெள்ளி மலை மேட்டில் நின்றுகொண்டு சாலையை நோக்குகிறாள். அவள் பார்வையின் விழைவைத் தாங்காததுபோல், தூரத்தில் வயல் வெளியில் புதைந்து சாலை மறைந்து போகிறது.

''வருவாரோ?

நீர் அவள் கண்களிலிருந்து குபுக்கெனக் கொதித்து வெளி வருகிறது.

அவள் அழுததேயில்லை. இதுவரை எவ்வளவு துக்கங்கள்? ஆனால் நீர் சொட்டியதேயில்லை. இப்போது....

புனலாய், புதுப் பிரவாகமாய், பிரளயக் கொந்தளிப்பாய் அழுகை வருகிறது.

அன்று அவன் ஊரை விட்டுப்போன காட்சி நினைவில் வந்து நிற்கிறது. அவனிடம் தான் எவ்வளவு உதாசீனமாக நடந்து கொண்டோம்? அதையெல்லாம் ஒரு பொருட்டாக அவன் எடுத்திருப்பானா? ''உன் நிலை கண்டு இரங்கினேன்'' என்றான்! இன்று என் நிலை நினைத்து ஓடி வருவானா?

அவன் எல்லோரையும் போலல்ல! முற்றிலும் புதிய மனிதன்! கட்டாயம் வருவான்! நினைவின் மறைவிலே வளர்ந்த அன்பு இன்று திடீரெனத் தோன்றித் தன்னை ஆட்டிப் படைக்கும்போது, நினைவின் நிதரிசனப் பார்வையிலேயே வளர்ந்த அவன் அன்பு அவனை ஆட்டிப் படைக்காதா?

இரவு வருகிறது. வீட்டுக்கு வருகிறாள். சங்கிலித் தொடரில் கடைசிக்கும் கடைசியாக ஒரு கண்ணி அவள் மனக் கண் முன் தோன்றி மறைகிறது. காற்று திரும்பவும் வீசுகிறது. யாரோ தட்டுவது போலவே கதவும் படபடக்கிறது. ''யார், யார்?'' என்று எழுந்து போய் ஏமாறுகிறாள்.

ஊரடங்குகிறது, நிசி வளர்கிறது. கதவு மீண்டும் படபடக்கிறது. பிரமைதானா?

''யார்?''

கதவு தட்டப்படும் சத்தம் தெளிவாகக் கேட்கிறது. எழுகிறாள். விளக்கைப் பெரிதாக்குகிறாள். திறக்கிறாள். பூமாரிபோல் தூறல் உள்ளே புகுந்து விழுகிறது.

''யார்?''

முகம் வற்றிப் போய் மெலிந்த தோற்றத்துடன் யாரோ நிற்கிறார்கள். நன்கு உற்றுப் பார்க்கிறாள்.

''ரா....ஜா....''

அவள் கூவுகிறாள். அவள் கண்கள் பளபளக்கின்றன. அவன் பாதங்களை அவள் பற்றுகிறாள்.

''வந்து விட்டீர்களா? எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும்'' அவள் நாக் குழறுகிறாள்.

''எழுந்திரு, கவர்ணா!''

''எழுந்திருக்கிறேன்! 'மன்னித்தேன்' என்று என்னுடைய தலையைத் தொட்டு ஆசீர்வதியுங்கள்.''

''மனத்தால் ஆசி தருகிறேன், எழுந்திரு!''

எழுகிறாள். அவன் கைகள் இரண்டையும் பற்றப் போகிறாள். துணுக்குறுகிறாள்.

அவன் தன் கைகளைத் தூக்கிக் காண்பிக்கிறான். புஜத்துக்குக் கீழே கைகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.

''ஐயோ!''

''மில்லில் நேர்ந்த விபத்து! புரையோடிப் போய்ப் போன மாதந்தான் எடுத்தார்கள்!''

ஒரே கணத்தில் இன்பத்தையும் துன்பத்தையும் கலந்து அவள் முகத்தில் வாரி அடித்தாற் போலிருக்கிறது.

உழைப்பு! மீண்டும் உழைக்க வேண்டும்! உழைப்பு அவள் பிறப்புரிமை! நாளையிலிருந்து தினம் காலையில் எழ வேண்டும்! கைகளை மீண்டும் பரபரப்புடன் வேலையில் ஈடுபடுத்த வேண்டும். ஆனால் அதற்கு இனி சக்தி? ஓய்ந்து போன உடலில் சக்தி?

பிரபஞ்சத்தை நடுங்க வைக்கும் சக்தி அணுவிலே இருக்கிறதாம்! அணுவிலே இருப்பது அன்பிலே மாத்திரம் இராதா?

உண்மையான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா ஒன்றே ஒன்று

போலிகளை ஏற்றுக் கொள்ளாதீர்கள் * முத்திரையுடன் பாதுகாப்பு அமைக்கப்பட்ட மூடி இருக்கிறதா என்று கவனியுங்கள்.

உண்மையான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா ஒன்றே ஒன்று

முத்திரையுடன் பாதுகாப்பு அமைக்கப்பட்ட மூடி இருக்கிறதா என்று கவனியுங்கள் * போலிகளை ஏற்றுக் கொள்ளாதீர்கள்.




ஒவ்வொரு பிலிப்ஸ் பாட்டிலின் மூடியும் போலிகளை கலக்க முடியாதபடி பாதுகாக்கிறது. இந்த மூடி பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவின் ஒவ்வொரு துளியையும் அசல் என உத்திரவாதம் அளிக்கிறது. மலச் சிக்கல் ஏற்படும் பொழுது உங்களுக்கு பத்திரமாகவும், நிச்சயமாகவும் பூரண நிவாரணத்தை உறுதியாக்குகிறது.

பிரசித்தி பெற்ற மில்க் ஆப் மக்னீஷியா ஒரே நிலையே, ஆரோக்கிய ஒழுங்கை திரும்ப ஒப்படைக்கிறது. அதி சீக்கிரம் அமிலத்தை சமைப்படுத்தி அதனால் ஏற்படும் வயிற்றுக் கோளாறையும், மார்பு எரிச்சலையும், வாயு உபாதைகளையும் தவிர்க்கிறது.

போலிகளை கலக்க முடியாதபடி மூடி அமைக்கப்பட்டிருக்கும் கீழ் கீற பாட்டிலை கவனித்து பாருங்கள். எப்பொழுதும் அசல் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவையே வாங்குங்கள். 2 அவுன்ஸ் 4 அவுன்ஸ் மற்றும் 12 அவுன்ஸ்களில் கிடைக்கிறது.



இரைப்பையில் மிக மிஞ்சிய அமிலத்தால் ஏற்படக்கூடும் அஜீரணத்திலிருந்து உடனடியாக நிவாரணம் பெற எங்கும், என்றும் இன்பமான, இனிப்பான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வில்லைகளை உட்கொள்ளுங்கள். 4 வில்லைகள் கொண்ட கையடக்கமான பாக்கெட்களிலும், 75, 150 கொண்ட புட்டிகளிலும் கிடைக்கும்.



உண்மையான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா ஒன்றே ஒன்று

ஏகபோக விநியோகஸ்தர்கள்: டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட்.



திருமூலர் தவமொழி

ராஜாஜி - சோமு

17

தீய செயல்களிலே ஐந்து குற்றங்களை மிகத் தீயன என நம்முடைய முன்னோர்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்றனர். கொலை, களவு, கள்ளுண்ணல், காமம், பொய் ஆகிய இவைகளைப் 'பஞ்சமா பாதகங்கள்' என்று வகுத்துப் பெயரிட்டார்கள்.

"கொலையே களவு,கள்
காமம்,பொய் கூறல்
மலைவான பாதகமாம்"

என்பது முனிவர் வாக்கு.

நரகத்தில் தள்ளக் கூடிய இந்தக் கொடிய தீச் செயல்களைச் செய்யாதீர்கள் என்று நமது சாஸ்திரங்களும் அற நூல்களும் பன்னிப் பன்னி எச்சரிக்கின்றன. அப்படியிருந்தும் மக்கள் இந்தப் பாதகங்களைச் செய்து அழிகிறார்களே என்று வருந்துகிறார் திருமூலர்.

காம வெறியிலே அறிவழிந்து பிறர் மனைவியிடம் இச்சைப்பட்டு நாசம் அடைகிற பாவிகளைப் பற்றிப் பாடுகிறார் முனிவர்.

**ஆத்த மனையாள்
அகத்தில் இருக்கவே**

[ஆத்த மனையாள்—ஆப்த மனையாள், அல்லது யாத்த மனையாள். ஆப்த மனையாள் — இதம் தரும் மனையாள். யாத்த மனையாள்—வரித்து இணைத்துக் கொண்ட மனையாள். அகத்தில் இருக்கவே—தனது ஆன்ம உடைமையாகத் தன் வீட்டிலேயே இருக்கும்போது.]

**காத்த மனையாளைக்
காமுறும் காளையர்**

[காத்த மனையாளை — பிறருடைய காவலிலே இருந்து பிறரால் காக்கப்படுகிற பிறர் மனைவியை. அதாவது இன்னொருவர் திருமணம் செய்து அந்த இல்லறக் காவலிலே வாழ்கிற மனையாளை; அந்தக் காவலைத் தாண்டி, காமுறும் காளையர் — இளமை வெறியால் ஆட்டப்பட்டு ஆசைப்படுகிறவர்கள்.]

**காய்ச்ச பலாவின்
கனிஉண்ண மாட்டாமல்**

[காய்ச்ச பலா—நன்றாக உண்டாகி வளர்ந்து பழம் தருகிற பலாமரம். பலாவின் கனி—அந்த மரம் தருகிற பலாப்பழத்தை. உண்ண மாட்டாமல்—உண்ணுவதற்குக் கொடுத்து வைக்காமல், அதாவது அனுபவிப்பதற்குப் புத்தி செல்லாமல்.]

**ஈச்சம் பழத்துக்கு
இடர்உற்ற வாறே**

புதரும் முள்ளும் அடர்ந்த சூழலில் நிற்கும் ஈச்சம் பழத்துக்கு ஆசைப்பட்டுச் சென்று இடர்ப்படுகிறது போலத்தான்! இடர் உற்றவாறே—இடர்ப்படுகிற, துன்பப்படுகிற காரியந்தான் அது! அவ்வளவு மதியீனமாகும்.

நல்ல பலாவானது வீட்டுத் தோட்டத்தில் பழம் காய்த்து நிற்கிறது. அதை உண்டு திருப்தி அடையாமல் முள் அடர்ந்து நிற்கும் ஈச்ச மரத்திலே உள்ள ஈச்சம் பழத்துக்கு ஆசைப்பட்டு அதைப் பறிப்பதற்காகச் சென்று அவதிப்படுகிறது போலத்தான், பிறர் மனைவியை நாடும் மூட்டாளின் தன்மை. தனக்கே வகுத்திருக்கும் பழத்தை விட்டு வேறு பழத்தை இச்சிப்பது குற்றம்.

அந்தப் பழத்துல் பலாவின் சுவையில்லை, அற்ப இன்பமே என்பதைப் பலாவுக்கு எதிராக ஈச்சம் பழத்தை வைத்து எடுத்துக் காட்டுகிறார் முனிவர். பிறர் மனைவியை விழைதலில் உள்ள அபாயங்களையும் கஷ்டங்களையும் "இடர்" என்ற சொல்லில் பொதிந்து காட்டுகிறார்.

ஆத்த மனையாள்
அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக்
காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின்
கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு
இடருற்ற வாறே!

மேலும் சொல்லுகிறார் முனிவர்.

திருத்தி வளர்த்ததோர்
தேமாங் கனியை

[திருத்தி வளர்த்தது – ஒட்டுமாஞ் செடியை வளர்ப்பது போல் தனக்குப் பிடித்த முறையிலே பண்படுத்தி வளர்த்ததான. ஓர் தேமாங்கனியை–ஒப்பற்ற மாமரத்தின் தித்திப்பான பழத்தை.]

திருத்தி வளர்த்ததோர்
தேமாங் கனியை
அருத்தமென்று எண்ணி
அறையில் புதைத்து

[அருத்தம் என்று எண்ணி–பாதுகாத்து அப்படியே வைத்திருக்க வேண்டிய பொருள் போல் நினைத்து. அதாவது மனையாளின் ஆன்ம தத்துவத்தை மறந்து உயிரற்ற பொருளாகப் பாவித்து, அது எப்போதும் தனது உடைமையாக இருக்கும் என்று எண்ணி. அறையில் புதைத்து–வீட்டு அறையிலே பூட்டி வைத்துவிட்டு. லோபிகள் பணத்தைப் பூட்டி வைப்பது போல் நல்வழியில் அனுபவிக்காமல் அறையில் பூட்டி வைத்துவிட்டு.]

பொருத்தம் இலாத
புளிமாங் கொம்பேறி

[பொருத்தம் இலாத – தனக்கு நன்மை தராத. புளிமாங் கொம்பு ஏறி–உடம்புக்கும் மனத்துக்கும் கேடு தருகிற புளிமா மரத்தின் கொம்பில் ஏறி.]


கருத்தறி யாதவர்
காலற்ற வாறே

[கருத்தறியாதவர்–அறிவை இழந்து மயங்கிப் போன காமிகள். காலற்ற வாறே–கீழே விழுந்து கால் ஒடிந்தது போலவேதான் ஆகும்.]

திருத்தி வளர்த்ததோர்
தேமாங் கனியை
அருத்தமென் றெண்ணி
அறையில் புதைத்துப்
பொருத்தம் இலாத
புளிமாங்கொம் பேறிக்
கருத்தறி யாதவர்
காலற்ற வாறே!

இதம் சொல்லும் அன்னையைப் போல் அறத்தை எடுத்துச் சொல்லி உபதேசம் அருளுகிறார் முனிவர். அவர் சொல்லுகிற உவமைகளில் காவியப் பண்பும், அறநோக்கும், கருணை உள்ளமும் கலந்து நிற்கின்றன. பாவக் குழியிலே விழாமல் மக்கள் நடந்து சென்வதற்கு வழி காட்டுகிறார் அருள் முனிவர்.





மணிபல்லவம்

19 - பவழச் செஞ்சுடர் மேனி

'ஒலிகள் ஒலியின்மையிலிருந்து பிறக்கின்றன. ஒலியின்மை, ஒலியுண்மையால் உணரப்படுகிறது' என்று தருக்க நூற்பாடத்தின்போது அடிகள் தனக்குச் சொல்லியிருந்த உண்மையை நினைத்துக் கொண்டு எதிரே பார்த்தான் இளங்குமரன். முல்லை அவனையே வைத்த கண் வாங்காமல் கவனித்துக் கொண்டு நின்றாள். அவளுடைய கண்கள் எவ்வளவோ பேசித் தீர்ப்பதற்குத் தவிப்பது தெரிந்தது. ஆனால் வாய் திறந்து எதுவும் பேசாமல் நின்றாள் அவள். இளங்குமரனுக்கும் தான் அவளிடம் என்ன பேசுவதென்று தோன்றவில்லை. வாய் திறந்து பேசுவதைவிடச் சுவை நிறைந்த பேச்சை மௌனத்தினால் பேச முடிந்த சமயங்களும் உண்டு. நீண்ட மௌனத்துக்குப் பின் பிறக்கிற ஒரே ஒரு சொல்லுக்கும் ஆயிரம் சொற்களின் பொருளாற்றல் அமையும். அப்படி ஒரு சொல் தங்களில் யாரிடமிருந்து முதலில் பிறக்கப் போகிறதென்று இருவருமே ஒருவரையொருவர் எதிர்பார்த்துத் தயங்கிய நிலையில் நின்றார்கள். இருவர் நெஞ்சிலும் கொள்ளை கொள்ளையாக-நிறையப் பேச வேண்டும் என்று நினைத்தும் ஒன்றுமே பேச வராததொரு நிலை.



அங்கே பூம்பொழிலில் மலர்ந்திருந்த மாலைப் பூக்களின் நறுமணமெல்லாம் ஒன்று சேர்ந்து உருப்பெற்றுக் கண்ணும், சிரிப்பும், முகமுமாய் எதிரே வந்து நிற்பதுபோல் முல்லை நின்றாள். ஒப்புக்குச் சிறிது நேரம் பேசிவிட்டுக் கதக்கண்ணன் அவர்கள் இருவரையும் தனிமையில் விட்டுச் சென்றிருந்தான். கதக்கண்ணன் இவ்வாறு தங்களை விட்டுச் சென்றிராவிட்டால் இந்த நிலை ஏற்பட்டிருக்காதென்று எண்ணினான் இளங்குமரன். முல்லையின் பார்வையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் பராக்குப் பார்ப்பதுபோல் மேலே அண்ணாந்து நோக்கினான் அவன். சிறு, சிறு வெண் மணல் திட்டுக்களைப் போல் சரிவு சரிவாய் வானில் மேக அடுக்குகள் மிதந்தன. அனைத்தையும், அளாவி நிற்கும் அந்த எல்லையற்ற பெரு வெளியிலே சலனத்தைக் காட்டி இயங்குவது போலக் கூட்டமாக வெண்ணிறப் பறவைகள் சில பறந்தன. பூம்பொழிலின் வாய்க்கால்களில் நீர் பாயும் ஒலியும், காற்றில் இலைகள் அசையும் ஒரே விதமான சலசலப்பும் தவிர எங்கும் ஒரு நிதானமாய்ப் பரவி அழகு சேர்க்கும் மாலைப் போதின் மயங்கிய சூழ்நிலை. அங்கே வானுயர வளர்ந்திருந்த நாகலிங்க மரத்தின் பூக்கள் தரையில் உதிர்ந்திருந்தன.



ஒரே நிலையில் கற்சிலைபோல் நிற்க இயலாமல் முல்லை பாதங்களை இடம் பெயர்த்து நின்றதனால் சிலம்பொலி கிளர்ந்தது. அந்தச் சிலம்பொலியும் கலைக்கக் கூடாத மௌனத்தை அநாவசியமாகக் கலைத்து விட்டதற்காக அஞ்சுவது போல மெல்லத்தான் ஒலித்தது. சிலம்பிலிருந்து பிறந்த ஒலியும், ஒலியிலிருந்து பிறந்த இனிமையும் பரவி அடங்கியபின் மீண்டும் பழையமௌனமே நீடித்தது. இலைகளின் அசைவு, நாகலிங்கப் பூவின் தெய்விக நறுமணம், நீரின் ஒலி, மேகக் கணங்கள் நகர்ந்து செல்லும் வானம், காலக் கணங்கள் நகர்ந்து செல்லும் பூமி, நகராமல் நீடிக்கும் பெரிய மௌனம்.

நா. பார்த்தசாரதி

முல்லை பொறுமையிழந்தாள். நீண்ட மௌனத்துக்குப்பின் பிறக்கும் சொற்கள் அவளுடையவையாக இருந்தன :—

"வானத்திலும், மேகங்களிலும் யாரும் கால் கடுக்க நின்று கொண்டிருக்கவில்லை. நீங்கள் பார்க்க வேண்டிய பேதைப் பெண் இங்கே பூமியில்தான் உங்கள் எதிரே நின்று கொண்டிருக்கிறாள்."

இந்தச் சொற்களைக் கேட்டு இளங்குமரனின் கவனம் திரும்பியது. அவன் அவளுடைய முகத்தைப் பார்த்தான். சிரித்தான்.

"பூமியில் இருப்பதை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று நீ சொல்கிறாய். அதற்கு மேலே உள்ளவற்றையும் கண்டு உணர நான் விரும்புகிறேன்."

"விரும்புவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் அதற்காக என்னை மறந்துவிட முயலாதீர்கள்."

"முயற்சி செய்வதனால் உலகில் எந்த நினைவையும் மறந்துவிட முடியாது, முல்லை! 'மறக்க வேண்டும்' என்று முயல்வதனாலேயே மறக்க இயலாதபடி நினைவில் ஆழமாகப் பதிந்துகொள்ளும் நினைவுகளும் இருக்கின்றன. ஒன்றை ஒழுங்காகவும், தொடர்பாகவும் நினைக்கத்தான் முயற்சி வேண்டும். பிடிவாதமாக ஒரு பொருளைத் தொடர்ந்து நினைப்பதை முனிவர்கள் தவம் என்கிறார்கள். மனிதர்கள் சிந்தனை என்கிறார்கள். மறதி என்பது நினைவில் தானாக வரும் சோர்வு. அதற்கு முயல வேண்டியதே இல்லை."

"அந்தச் சோர்வு என்னைப் பொறுத்த வரையில் முயலாமலே உங்கள் மனத்தில் ஏற்பட்டுவிட்டது போலிருக்கிறது...?" முல்லையின் இந்தக் கேள்விக்கு இளங்குமரனிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. அவள் முகத்தில் பதிந்த தன் பார்வையை மீட்காமல் அவன் நின்று கொண்டிருந்தான்.

மேலேயிருந்து உருண்டையாய்ப் பெரிதாய்ச் செழுமையான நாகலிங்கப் பூ ஒன்று இளங்குமரனின் காலடியில் உதிர்ந்து விழுந்தது. முல்லையே பேச்சை மேலும் தொடர்ந்தாள்.

"நீராட்டு விழாவன்று கழார்ப்பெருந் துறையில் உங்களைச் சந்திக்க முடியாமல் ஏமாந்தேன். அடுத்தமுறை புறவீதியில் எங்கள் வீட்டு வாயில் வழியே நீங்கள் தேரைச் செலுத்திக் கொண்டு போன போது கை நீட்டிக் கூவியழைத்தேன். பார்த்தும், பாராதவர்போலத் தேரைச் செலுத்திக்கொண்டு போய் விட்டீர்கள். அப்போதும் ஏமாற்றமே அடைந்தேன். இப்போது கண் முன்னால் நேர் எதிரே வந்து நிற்கிறபோதும் எவர்முன்பு நின்று கொண்டிருக்கிறேனோ, அவரிடமிருந்து எதையோ பெற முடியாமல் ஏமாந்து கொண்டிருப்பதாகத்தான் என் மனம் உணர்ந்து தவிக்கிறது. நான் எதைப் பெற இயலாமல் தவித்துக் கொண்டிருக்கிறேனோ, அதை வேறு யாரோ, உங்கள் இதயத்திலிருந்து பெற்றுக்கொண்டு விட்டார்கள் என்று என் மனத்தில் சந்தேகமும் உண்டாகிறது. தேருக்கும், சிவிகைக்கும் சொந்தக்காரர்களான பெருமாளிகைப் பெண்கள் பூம்புகாரின் பட்டினப் பாக்கத்தில் நிறைய இருக்கிறார்கள். அவர்களில் எவரேனும் உங்களுடைய அன்பைப் பெற்றிருக்கலாம்..."

மிக விரைவாகப் படபடவென்று சீற்றம் உற்றவளைப் போலப் பேசிக் கொண்டே வந்த முல்லையின் குரலில் விம்மலும், ஏக்கமும் கலந்து அழுகையின் சாயல் ஒலித்தது.

இளங்குமரன் கீழே குனிந்து காலடியில் விழுந்திருந்த நாகலிங்கப் பூவை எடுத்துக் கொண்டு நிமிர்ந்தான். இதயத்தில் சேர்த்து வைத்திருந்த உணர்ச்சித் தவிப்பைச் சொற்களாகக் கொட்டித் தீர்த்தது போதாதென்று கண்ணீராகவும் கொட்டித் தீர்ப்பதற்கு இருந்தாற்போல விழி கலங்கி நின்றாள் முல்லை. அவள் முகத்தை நேரே பாராமல் தன் வலது உள்ளங்கையில் நாகலிங்கப் பூவை வைத்து அதைப் பார்த்துக் கொண்டே அவளிடம் பேசினான் இளங்குமரன் :—

"உன்னைப் போன்ற உலகத்துப் பெண்களின் மனங்களையெல்லாம் சந்தேகத்தையும், ஆசையையும் இணைத்துப் படைத்திருக்கிறார் படைப்புக் கடவுள். நீங்கள் எல்லாரும் என்னைப் போன்ற ஆண்மகனிடமிருந்து எதிர்பார்க்கிற பொருள் ஒன்றே ஒன்றுதான். அந்த ஒன்றையும் உங்களுக்கே சொந்தமாக்கி வெற்றி கொள்ள விரும்புகிறீர்கள். எந்த ஒன்றை முதலாகக் கொண்டு உலகத்தின் மற்றப் பொருள்களையெல்லாம் நாங்கள் வெற்றி கொள்ள வேண்டுமோ, அந்த முதலையே நீங்கள் கொள்ளையிட்டு வென்றுவிட முயல்கிறீர்கள்."

"அப்படியா? நாங்கள் கொள்ளையிட்டு வெற்றி கொள்ளத் தக்கதாக உங்களிடமிருக்கும் அந்த விசித்திரப் பொருள் என்ன என்று நான் தெரிந்து கொள்ளலாமோ?"

"இதுவரை உனக்குத் தெரியாமலிருந்தால் தெரிந்து கொள்ள வேண்டியதுதான். உண்மையாகவே தெரியாதா? அல்லது தெரிந்து கொண்டே வாயைக் கிளறுகிறாயா?"

"மெய்யாகவே தெரியவில்லை. சொல்லுங்கள், அந்த விந்தைப் பொருள் எது?"

"வேறெதுவுமில்லை! ஆண்பிள்ளையின் மனம். ஒவ்வொரு பெண்ணும் அதை வெற்றி கொண்டு ஆள்வதற்கு ஆசைப்படுகிறாள். ஆசை நிறைவேறாதபோது சந்தேகப்படுகிறாள். கண் கலங்கி நின்று மனம் கலங்கச் செய்கிறாள். என்னைப் பொறுத்த வரையில் ஞானத்தைப் பயிர் செய்யும் விளைநிலமாக என் மனத்தை அளித்திருக்கிறேன்."

"மிக்க மகிழ்ச்சி! அதே மனத்தின் ஒரு கோடியில் அன்பைப் பயிர் செய்து கொள்ளவும் சிறிது இடம் வேண்டி நிற்கிறேன் நான்."

"முல்லை! நீ அதை வேண்டுவது தவறில்லை! சுரமஞ்சரியும் அதைத்தான் வேண்டுகிறாள். எனக்காக உங்களுடைய மனத்தைத் தோற்கக் கொடுப்பதாய்த் தான் நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் உங்களுடைய அந்தத் தோல்வியை, என்னுடைய வெற்றியாக அங்கீகாரம் செய்துகொள்ள நான் துணிய முடியாதவனாயிருக்கிறேன். காவிரிப்பூம் பட்டினத்துப் புறவீதியில் செருக்கு மிகுந்த இளைஞனாக உன்னுடைய சிரிப்புக்கும், நீ அளித்த சுவையான விருந்து உணவுகளுக்கும் ஆட்பட்டிருந்த பழைய இளங்குமரனை நீ மறந்து விட வேண்டும்."

"முயற்சி செய்வதனால் உலகில் எந்த நினைவையும் மறந்துவிட முடியாது. 'மறக்க வேண்டும்' என்று முயல்வதனாலேயே மறக்க இயலாதபடி நினைவில் ஆழமாகப் பதிந்து கொள்ளும் நினைவுகளும் இருக்கின்றன"—என்று அவன் சற்றுமுன் தன்னிடம் கூறியிருந்த தத்துவத்தையே அவனுக்குத் திருப்பிச் சொல்லிச் சிரித்தாள் முல்லை.

நல்ல நேரத்திலே தன்னை அவள் வகையாகப் பேச்சில் மடக்கி விட்டாளே என்ற மலைப்பினாலும் சில கணங்கள் என்ன பேசுவதென்று தோன்றாமல் நின்றான் இளங்குமரன். உலகத்தின் கண்ணீரைத் துடைப்பதற்காகத் தன் கண்களில் நீரைச் சுமக்கும் விசாகையையும், ஓர் ஆண்பிள்ளையின் அன்பு தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்பதற்காகக் கண் கலங்கும் சுரமஞ்சரி, முல்லை போன்ற பெண்களையும் மனத்தில் நினைத்து நிறுத்துப் பார்த்தான் அவன்.

இளங்குமரன் தன்னைப் பார்க்காமல் இருந்த அந்த நேரத்தில் தன் இரு கண்களும் நிறைய அவனை நன்றாகப் பார்த்தாள் முல்லை. முன்பிருந்ததை விட இளைத்திருந்தாலும் அந்த இளைப்பினாலேயே அவனுடைய அழகு வளர்ந்திருப்பதுபோல் தோன்றியது. காவிரிப்பூம் பட்டினத்தில் முரட்டுத்தனமாகச் சுற்றிக்கொண்டிருந்தவன் பூம்பொழிலுக்கு வந்த பின் மேனி நிறம் மாறி நளினமாகக் காட்சியளித்தான். பவழச் செஞ்சுடர் மேனியில் வைகறைக் கதிரவனின் வண்ணம் மின்னியது. முகத்தில் அறிவின் அடக்கமும், நிறைந்த ஒளியும் தெரிந்தன. அழகிய கண்களில் துறவினாலும், உடல் வலிமையாலும் தோன்றும் பழைய செருக்கு மறைந்து பேரமைதி—எதையோ பருகக் காத்திருக்கும் அமைதி தென்பட்டது. நாகலிங்கப் பூவை ஏந்தியிருந்த வலது உள்ளங்கை அந்தப் பூவின் நிறத்தைக் காட்டிலும் அதிகமாகச் சிவந்து காட்சியளித்தது. பொன்னில் வார்த்துப் பொருத்தினாற்போன்ற சுந்தரமணித் தோள்கள் காண்பவர் உள்ளத்தைக் கவர்ந்தன.

தான் இளங்குமரனுடைய சொற்களையே அவனிடம் திருப்பிச் சொல்லியதனால் அவன் மனம் நொந்து போயிருக்குமோ, என்று வருந்திய முல்லை பேச்சை வேறு வழியில் மாற்றினாள்:

"நானும், அண்ணனும், இங்கு வரும்போது நீங்கள்கூடக் கண் கலங்கி வருத்தத்தோடு உட்கார்ந்திருந்தீர்களே? உங்கள் வருத்தத்தின் காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமோ?"

"என்னுடைய தாயைப் பற்றி நினைவு வந்தது. கண்ணிலும், மனத்திலும் கலக்கமும் வந்தது."

"மறக்க வேண்டியவர்களை நினைத்துக் கொண்டு வருந்துவதும், நினைக்க வேண்டியவர்களை மறந்துவிட்டு மகிழ்வதுவுமாகச் சிறிது காலத்துக்குள் எப்படி எப்படியோ மாறி விட்டீர்கள் நீங்கள். தோற்றத்திலும் மாறிவிட்டீர்கள். சிந்தனையிலும் மாறி விட்டீர்கள்."

"இன்னும் ஒன்றையும் அவற்றோடு சேர்த்துக்கொள். விருப்பங்கள், ஆசை, அன்பு இவற்றில்கூட மாறி விட்டேன்."

"இல்லை! மாற்றிக் கொண்டு விட்டீர்கள்."


"எப்படியானால் என்ன? திருநாங்கூரில் இந்தப் பூம்பொழிலில் பழைய இளங்குமரனை நினைத்துத் தேடிக் கொண்டு வந்திருந்தால் உனக்கு ஏமாற்றமாகத் தான் இருக்கும்."

முல்லை எந்த வழியிலிருந்து பேச்சை மாற்றினால் இருவருடைய மனமும் நோகாமல் உரையாடல் வளரும் என்றெண்ணினாளோ அந்த வழிக்கே திரும்பி வந்தது பேச்சு. முகத்தில் அறைவது போல் எடுத்தெறிந்து அவன் சொல்லிய ஒவ்வொரு சொல்லும் அவளை இரண்டாம் முறையாக அழுதுவிடுகின்ற நிலைக்குக் கொண்டு வந்தன.

நான் தேர்ந்தெடுக்கும் ட்ரக்?


நிச்சயமாக

டாட்ஜ்தான்



நண்பா, நானும் வெகுகாலமாக ட்ரக் ஓட்டி வருகிறேன். இதுவரையில் டாட்ஜ் ட்ரக்குகளின் உயர்ந்த தன்மையைப்பற்றி எவரும் குறை கூறி நான் கேட்டதில்லை. உதாரணமாக, இதன் ஆக்ஸில்களைப் பார். உலகப் பிரசித்திப் பெற்றதும், இப்பொழுது ராக்வெல்-ஸ்டாண்டர்ட் என்று அழைக்கப்படும் டிம்கன் ஆக்ஸில்கள் டாட்ஜ் ட்ரக்குகளில் பொருத்தப்படுகின்றன. இந்த ஆக்ஸில்கள் பலத்த சுமையை தாங்கக்கூடியவை. மிகவும் நம்பகமானவை—என்னைப் போன்ற ட்ரக் ஓட்டுபவர்களுக்கு இதுதான் தேவை.

இதைத்தவிர அநேக உன்னதமான அமைப்புகளும் டாட்ஜ் ட்ரக்குகளில் உள்ளன. இவைகளையெல்லாம் பார்க்கும்பொழுது டாட்ஜ் ட்ரக்கை மிகச் சிறந்த ட்ரக் என்று சொல்லுவது மிகையாகாது. இந்த ட்ரக் இழுக்கும் வலிமையை அதிகம் கொண்டது. நீண்டகாலம் உழைக்கக்கூடியது. நிறைய லாபத்தைத் தரக்கூடியது. நீங்களும் டாட்ஜை உங்களுடைய ட்ரக்கு ஆக்குவீர்களென நான் உறுதியாக நம்புகிறேன்.




டாட்ஜ்

டீஸல் ட்ரக்

உங்கள் அருகாமையிலுள்ள டீலர்களிடம் விசாரியுங்கள்

தயாரிப்பாளர்கள்:
தி பிரீமியர் ஆட்டோமொபைல்ஸ் லிமிடெட்
பம்பாய்.

TAM


Kalinga tubes
தண்ணீர், காஸ்
இவற்றுக்குக்
கலிங்கா குழாய்களே
பிரிட்டிஷ் தர நிர்ணயத்
திட்டங்களின்படி உருவாக்கப்
பட்டுள்ள கருமை நிறம் மற்றும்
முலாம் பூசப்பட்ட உயர்ந்த ரக
எஃகுக் குழாய்கள்
கலிங்கா டியூப்ஸ் லிட்.
33, சித்தரஞ்சன் அவின்யூ : கல்கத்தா - 12
தொழிற்சாலை:
சௌதவார் - கட்டாக் - ஒரிஸ்ஸா
KALPANA K. T. 31

அவன் முகம் வாடி விட்டதைக் கண்டும் இளங்குமரன் புன்னகை புரிந்தான். "முல்லை! உன்னுடைய நிலையைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமா யிருக்கிறது."

"பரிதாபத்தை உண்டாக்கியவரே அதைப் பார்த்து நகைப்பதில் பொருள் இல்லை" என்று இதழ்கள் துடிக்கச் சினத்தோடு பதில் கூறிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள் முல்லை. அந்தச் சமயத்தில் பூம்பொழிலைச் சுற்றிப் பார்க்கப் போயிருந்த கதக்கண்ணன் திரும்பி வந்து சேர்ந்ததனால் அவர்களுடைய பேச்சு மேலே வளராமல் நின்றது. வளநாடுடையாருக்குத் தன் அன்பையும் வணக்கங்களையும் தெரிவிக்கச் சொன்னான் இளங்குமரன்.

"வருகின்ற பௌர்ணமியன்று முல்லைக்குப் பிறந்தநாள் மங்கலம். அன்றைக்கு நீ காவிரிப்பூம்பட்டினத்துக்கு வர வேண்டும். முல்லை உனக்கு விருந்து படைக்கப் போகிறாள். எங்கள் தந்தையாரும் உன்னைக் காண்பதற்கு ஆவலா யிருக்கிறார். எங்களால் உன்னைக் காணும் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. உன்னையும் பார்த்தாயிற்று. முல்லையின் பிறந்தநாள் மங்கலத்துக்கு வரவேண்டுமென்றும் அழைத்தாயிற்று" என்று கதக்கண்ணன் மறுமொழி கூறியதைக் கேட்டு இளங்குமரன் சிறிது திகைத்தான். அந்தத் திகைப்பைப் பார்த்து விட்ட கதக்கண்ணன், "ஏன் திகைக்கிறாய்? உன்னால் வர முடியாதா?" என்று சந்தேகத்தோடு கேட்டான்.

"கதக்கண்ணா! நீங்கள் இருவரும் என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். குருகுலவாசம் முடியும் வரை நான் திருநாங்கூர்ப் பூம்பொழிலிலிருந்து எங்கும் வெளியேறுவதற்கு இயலாது" என்று இளங்குமரன் உறுதியாக மறுமொழி கூறியபோது முல்லையின் முகம் மேலும் வாட்டம் கண்டது.

"இவரை ஏன் அண்ணா தொல்லைப் படுத்துகிறீர்கள்? இவரால் இப்போது எதுவுமே இயலாது! அன்பு, ஆசை, பாசம் ஒன்றுமே இல்லாத இரும்பு மனிதராகி விட்டார் இவர். நீலநாக மறவருடைய மாணவர் அல்லவா? அதே வழியில் வளர்கிறார்" என்று சினம் மாறாத குரலில் குமுறிப் போய்ப் பேசினாள் முல்லை.

அப்போது அவளுடைய பூநெற்றியில் சினம் பரவியிருக்கும் செம்மையைக் கண்டு சிரிப்பதைத் தவிர இளங்குமரனுக்கு வேறு ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. கதக்கண்ணனும் ஏதேதோ பழைய உறவுகளையும், நட்பையும் கூறி இளங்குமரன் மனத்தை நெகிழச் செய்ய முயன்றான். முடியவில்லை. முல்லையின் பிறந்தநாள் மங்கலத்துக்குக் காவிரிப் பூம்பட்டினம் வர இயலாதென்று கண்டிப்பாக மறுத்து விட்டான் அவன்.

அவ்வளவு தூரம் பயணம் செய்து வந்ததற்கு அருட்பயனாவது கிடைக்கட்டும் என்று முல்லையும், கதக்கண்ணனும் தவச்சாலைக்குள்ளே போய் நாங்கூர் அடிகளை வணங்கி வாழ்த்துப் பெற்றுக் கொண்டு வந்தார்கள். அவர்கள் சென்றபோது விசாகை ஏதோ ஒரு சுவடியை விரித்து வைத்துக் கொண்டு அடிகளிடம் தன் சந்தேகங்களைக் கூறி விளக்கம் கேட்டுக் கொண்டிருந்தாள். விசாகையைப் பற்றி அவர்களுக்கும், அவர்களைப் பற்றி விசாகைக்கும் சுருக்கமாகக் கூறி அறிமுகம் செய்துவைத்தார் நாங்கூர் அடிகள்.

பூம்பொழிலிலே மேற்கு வானத்துப் பொன் வெயில் தங்க ஓடையாய் உருகித் தகதகத்துக் கொண்டிருந்த நேரம். முல்லையும், கதக்கண்ணனும் புறப்படுவதற்கிருந்தார்கள். நாகலிங்க மரத்தின் அருகே முன்பிருந்தபடியே இளங்குமரன் இருந்தான். மனத்துக்கு மனம் ஒட்டுதல் இல்லாமல் விட்டுப் போயிருந்தாலும் விடைபெற்றுக்கொள்ள வேண்டிய முறைக்காகப் போய் விடை பெற்றுக் கொண்டு பூம்பொழிலின் வாயிலை நோக்கி நடந்தார்கள் அவர்கள். சிறிது தொலைவு நடந்ததும், தன் பின்னால் யாரோ தொடருவதுபோலக் காலடி ஓசை கேட்டு முல்லை திரும்பினாள். வேறு யாருமில்லை. இளங்குமரன்தான். அவன் கண்களில் நீர் நெகிழ்ந்திருந்தது.

"முல்லை! இவற்றை உன்னுடைய பிறந்த நாள் மங்கலத்துக்கு நான் அளிக்கும் பரிசாக ஏற்றுக் கொள்."

ஒற்றை ஓலையான ஒரே ஓர் ஏட்டையும், சற்று முன் கையில் வைத்து அழகு பார்த்துக் கொண்டிருந்த நாகலிங்கப் பூவையும் அவளுக்கு அளித்தான் அவன். முல்லையின் கைகள் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு முன் நீண்டிடாமல் தயங்கின. அந்த ஓலையை அவன் அப்போது தான் எழுதியதற்கு அடையாளம் போல் எழுத்தாணியும் கையில் இருந்தது.

"வாங்கிக்கொள், முல்லை!"

அவள் தயங்கியபடியே வாங்கிக் கொண்டாள். கதக்கண்ணன் முன்னால் விரைவாக நடந்து போயிருந்தான். ஏட்டில் முத்துமுத்தாகக் கீறப்பட்டிருந்த எழுத்துக்களை ஆர்வத்தோடு படிக்கலானாள் அவள்.

சித்தம் தடுமாறச் செய்கை நினைவழியப்
பித்தம் தலைநிறையப் பார்க்குமே—
—இத்தரையில்
சித்திரம்போற் சேர்ந்த விழிநோக்கும்
முல்லையெழில்
முத்துநகை பூக்கும் முகம்.

என்று அழகாகக் கிறுக்கப்பட்டிருந்த அந்த வெண்பாவின் பொருளும், அதனோடு இருந்த நாகலிங்கப் பூவின் நறுமணமும் முல்லையைக் கனவுகளில் மூழ்கச் செய்தன. ஆனால் அக்கனவுகள் நீடிக்கவில்லை. அதன் கீழே 'ஒரு காலத்தில் இந்தச் சிரிப்புக்குச் சற்றே ஆட்பட்டிருந்தவனின் வாழ்த்து' என்று எழுதப்பட்டிருந்த வாக்கியத்தைப் படித்துவிட்டு, 'அதற்கென்ன அர்த்தம்?' என்று அவனையே கேட்டு விடுவதற்காகச் சீற்றம் கொண்டு முல்லை தலை நிமிர்ந்தபோது, அவன் நின்ற இடத்திலிருந்து நீண்ட தொலைவுக்கு அப்பால் தவச்சாலையை நோக்கி விரைவாக நடந்து போய்க் கொண்டிருந்தான் அவன். மாலை வெயிலில் அவனுடைய பவழச் செஞ்சுடர் மேனி அக்கினியே நடந்து போவது போல் மின்னியது.

௨௦ - செல்வச் சிறை

பொழுது புலர்ந்து கொண்டிருந்த அந்த வைகறை நேரத்திலே இருகாமத்திணை ஏரியின் கரையும், காமவேள் கோயிலும், தனிமையின் அழகில் அற்புதமாய்த் தோற்றமளித்துக் கொண்டிருந்தன. கிழக்குவானத்தில் வைகறைப் பெண் செம்மண் கோலமிட்டுக் கொண்டிருந்தாற்போல ஒரு காட்சி. காமவேள் கோயில் விமானத்திற் பொற் கலசங்கள் மின்னிக் கொண்டிருந்தன. விடிகாலைக் காற்றினால் ஏரி நீர்ப்பரப்பிலே பட்டுத் துணியில் மடிப்புக்கள் விழுவதுபோலச் சிற்றலைகள் புரண்டன. நீர்ப்பரப்பின் தெளிவு கண்ணாடி போலிருந்தது. அந்தத் தெளிவுக்கு மாற்றாகச் செங்குமுதப் பூக்கள்.

மேகக்காடு போல் நீராடிய கூந்தலை அள்ளி முடித்து கொண்டு நின்றாள் சுரமஞ்சரி. தோழி வசந்தமாலையும் அப்போதுதான் நீராடி முடித்துவிட்டுக் கரையேறிக் கொண்டிருந்தாள். அவளை நோக்கிக் குறும்புநகை குலவக் கேட்டாள் சுரமஞ்சரி :—'' நீ யாரை நினைத்துக் கொண்டு நீராடினாயடி வசந்தமாலை ?''

'' நான் ஆண்பிள்ளை யாரையும் நினைத்துக் கொள்ளவில்லையம்மா. விடிந்ததும் விடியாததுமாக இந்தக் குளிரில் என்னை நீராடுவதற்காக இங்கே இழுத்து வந்த உங்களைத்தான் நினைத்துக் கொண்டேன்.''

"கொடுத்து வைத்தவளடி நீ. உலகத்தில் மிகவும் துன்பமான முயற்சி நம்மிடம் அன்பு செலுத்தாதவர்மேல் நாம் அன்பு செலுத்திக் கொண்டு வேதனைப் படுவதுதான். உன்னைப் பொறுத்த வரையில் அப்படி ஒரு வேதனையும் இல்லையே ?''

"உங்களுக்கும் இந்த வேதனை மிக விரைவிலே தீர்ந்துவிடும் அம்மா ! சோம குண்டம், சூரிய குண்டம், துறைகளில் நீராடிக் காமவேள் கோட்டத்தை வலங் கொள்ளும் அளவுக்குப் பெரிய முயற்சிகளைச் செய்கிறீர்களே. இவற்றுக்கு வெற்றி ஏற்படத்தான் செய்யும்.''

" தீர்த்தமாடுவதும், கோட்டம் வலங் கொண்டு சுற்றுவதும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதற்குத்தான். காமன் என்று தனியாக யாருமில்லை. நம்முடைய மனத்தின் உள்ளே ஊற்றெடுத்துப் பாயும் நளினமான ஆசைகளுக்கு உருவம் கொடுத்தால் அவன்தான் காமன். அவன்தான் ஆசைகளின் எழில் வாய்ந்த வடிவம். அவன்தான் அன்பின் பிறவி.''

"இந்தக் கற்பனை மெய்யானால் நீங்கள் வணங்கி வழிபட வேண்டிய காமன் இங்கே இல்லை'' என்று கூறிச் சிரித்தாள் வசந்தமாலை. இருவரும் காமவேள் கோட்டத்தைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். ஈர ஆடையும் நெகிழ முடிந்த கூந்தலும்—ஆசையும், ஏக்கமும் தேங்கி நிற்கும் விழிகளுமாகச் சுரமஞ்சரி அன்றைக்குப் புதிய கோலத்தில் புதிய அழகோடு விளங்கினாள். மோகன நினைவுகளைக் கிளரச் செய்யும் நறுமணங்கள் அவள் பொன்னுடலிலிருந்து பரவிக் கொண்டிருந்தன. பூக்கள் சூட்டப்படுவதனால் பூக்களுக்கே இந்தக் கூந்தலிலிருந்து மணம் கிடைக்குமோ, என்று எண்ணத்தக்க வாசனைகள் அவள் குழற் கற்றைகளிலிருந்து பிறந்தன. கரும்பாம்பு நெளிவது போலத் தழைத்துச் சரிந்த கூந்தலில்தான் என்ன ஒளி!

சுரமஞ்சரி ஈரம் பட்டு வெளுத்திருந்த அழகிய பாதங்களினால் மணலில் நடக்கும் வேகத்தைப் பார்த்து வசந்தமாலை வியந்தாள். புகை மண்டலத்தினிடையே கொழுந்து விடும் தழல் கதிர்போல்

சரப்புடவையின் கீழே பொன்னொளி விரிக்கும் அந்தப் பாத கமலங்கள் மணலில் பதிந்து பதிந்து மீளும் அழகை அதிசயம் போலப் பார்த்துக் கொண்டே உடன் சென்றாள் வசந்தமாலை.

''என்னம்மா பார்க்கிறாய் வசந்தமாலை?'

''உங்களுடைய பட்டுப் பாதங்கள் இன்னும் எவ்வளவு நாள் இந்தக் காமன் கோவிலை வலம் வந்து வெற்றி பெறப் போகின்றனவோ என்று நினைத்துப்பார்த்தேன் அம்மா!''

''என்னுடைய வேதனை மிக விரைவில் தீர்ந்து விடுமென்று நீ தான் முதலிலேயே வாழ்த்துக் கூறிவிட்டாயே. இனிமேல் எனக்கென்ன கவலை?'' என்று தோழிக்குப் பதில் கூறிவிட்டு மேலும் வேகமாக நடந்தாள் கரமஞ்சரி.

வழிபாடு முடிந்ததும், வந்ததைப் போலவே யாரும் அறிந்து ஐயம்கொள்ள இடமின்றி மாளிகைக்குப் போய்விட வேண்டுமென்று இருவரும் புறப்பட்டார்கள். வசந்தமாலை தன் தலைவியைத் துரிதப்படுத்தினாள்.



''நாம் திட்டமிட்டிருந்ததை விட அதிக நேரமாகி விட்டதம்மா. ஆள் பழக்கம் ஏற்படுவதற்கு முன் இங்கிருந்து திரும்பிவிட வேண்டுமென்று வந்தோம். சிறிது நாழிகைக்கு முன்பு கூட இந்த நாணற் புதரருகே யாரோ நடந்து போனார்கள். விடிகிற நேரத்தில் புதர்களிலிருந்து நரிகளைக் கலைத்து விட்டு வேட்டையாடுவதற்காகப் பரதவ இளைஞர்கள் இங்கே கூட்டம் கூட்டமாக வருவார்களென்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தக் கூட்டமெல்லாம் வருவதற்குள் நாம் இங்கிருந்து போய்விட வேண்டும்.''

''போகலாம் அதற்காக இறக்கை கட்டிக் கொண்டு பறக்க முடியுமா,

ஒரு மலரில் எவ்விதம் சுகந்தமானது சேர்ந்திருக்கிறதோ, அமிருதத்திலே சுவை எப்படிக் கலந்திருக்கிறதோ, அம்மாதிரி ஈசுவரனுடைய உருவத்தோடு அம்பிகையின் உருவம் கலந்திருக்கிறது. அக்னியோடு சேர்ந்திருக்கும் பிரகாசத்தை அக்னி வேறு பிரகாசம் வேறு என்று எப்படிப் பிரிக்க முடியாதோ அவ்விதமே ஈசுவரனையும் அம்பிகையையும் பிரிக்கமுடியாது. அம்பிகையும் ஈசுவரனும் அர்த்தநாரீசுவரக் கோலத்தில் சேர்ந்து இருக்கின்றனர். ஒரே சரீரத்தில் ஒரு பாகம் ஈசுவரனாகவும் ஒரு பாகம் அம்பிகையாகவும் சேர்ந்து அவதாரம் செய்து எல்லா ஜீவராசிகளுக்கும் அருள் புரிகின்றனர்.

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார்
காமகோடி பீடம்

என்ன? விடிந்ததும் நரி முகத்தில் விழிக்கிற உரிமை பரதவ இளைஞர்களுக்கு மட்டும் சாசனம் இல்லையே? வாய்த்தால் நாமும் நரி முகத்தில் விழிக்கலாமே தோழீ!'' என்று விளையாட்டுப் பேச்சில் இறங்கினாள் சுரமஞ்சரி. பேச்சு விளையாட்டாயிருந்தாலும் நடை வேகமாகவேதான் இருந்தது. என்ன இருந்தாலும் யாருக்கும் தெரியாமல் வந்திருக்கிறோம் என்ற பயம் பயம்தானே? காமன் கோவிலிலிருந்து அவர்கள் மாளிகையை அடைந்தபோது யாருடைய சந்தேகத்துக்கும் இலக்காகவில்லை. மாளிகை அமைதியாயிருந்தது. பெருமாளிகைத் தோட்டத்தில் நகைவேழம்பரும், தந்தையாரும் தோளோடு தோள் இணைந்தபடி கனிவாகப் பேசிக் கொண்டிருந்ததையும் தன்னுடைய மாடத்திலிருந்தே சாளரத்தின்வழியே சுரமஞ்சரி பார்க்க நேர்ந்தது.

''வசந்தமாலே! இங்கே வந்து இந்த விந்தையைப் பாரேன்'' என்று தன் தோழியைக் கூப்பிட்டு அவளுக்கும் இதைக் காண்பித்தாள் சுரமஞ்சரி.

''நேற்றிரவு இரண்டு பேரும் பயங்கரமான கருத்து மாறுபாடு கொண்டு கடுமையாகப் பேசினார்கள் என்றாயே? இப்போது என்ன சொல்கிறாய், தோழீ?''

தோழி பதில் ஒன்றும் சொல்லாமல் சிரித்தாள். ''நல்லவேளை, தோழீ! தோட்டத்தில் நின்று பேசிக் கொண்டிருந்ததனால் இவர்கள் பார்வையில் தென்படாமல் உள்ளே வந்தோம். இவர்கள் பார்வையில் பட்டிருந்தால் நாமிருவரும் நிறையப் பொய்கள் சொல்ல நேர்ந்திருக்கும். சொன்னாலும் நம் பொய்களை இவர்கள் நம்பியிருக்க மாட்டார்கள்.''

''உங்கள் தந்தையார் நம்பினாலும் நம்புவார். நகைவேழம்பர் இருக்கிறாரே, அவர் உண்மைகளையே நம்பாத மனிதர். பொய்களை எப்படி நம்புவார் என்று எதிர்பார்க்க முடியும்?'' என்றாள் வசந்தமாலை. யாருக்கும் தெரியாமல் செய்ய நினைத்த செயலை நினைத்தபடி செய்து விட்டோம் என்று சுரமஞ்சரி அன்று மிகவும் மகிழ்ச்சியாயிருந்தாள்.

அன்றைக்கு மாலை ஆலமுற்றத்துக்குப் போய் வர வேண்டுமென்றும் அவள் நினைத்திருந்தாள். தந்தையாருக்குச் சந்தேகம் ஏற்படாமலிருப்பதற்காகத் தன் தோழியோடு சகோதரி வானவல்லியையும் உடன் அழைத்துப் போகத் திட்டமிட்டிருந்தாள். ஓவியன் மணிமார்பன் தான் கூறியனுப்பியிருந்த செய்திகளை ஆலமுற்றத்தில் உரியவரிடம் போய்த் தெரிவித்திருப்பானென்றே சுரமஞ்சரி நம்பினாள். அன்றியும் இளங்குமரன் ஆலமுற்றத்துப் படைக்கலச் சாலையில் இருப்பதாகவே அவளுக்கு எண்ணம்.

தன் எண்ணப்படி மாலையில் ஆலமுற்றத்துக்குப் புறப்படுமுன் அவள் அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். வசந்தமாலை அணிகலன்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கொடுத்த வண்ணமிருந்தாள்.

தன் அலங்காரம் முடிந்ததும், ''நீ போய் வானவல்லியையும் புறப்படச் சொல்லு'' என்று தோழியை அனுப்பி விட்டுக் காத்திருந்தாள் சுரமஞ்சரி. தோழி திரும்புவதற்கு வழக்கத்தை மீறிய நேரமாயிற்று.

தோழி திரும்பி வந்தபோது அவள் முகம் வாட்டம் கண்டிருந்தது.

''ஏன் இவ்வளவு நேரம்?''

''ஒன்றும் புரிந்துகொள்ள முடியவில்லை, அம்மா! நமக்குத் தெரியாமலே இங்கே என்னவெல்லாமோ நடக்கிறது.''

''புரியும்படியாகத்தான் சொல்லேன்!''

''நீங்களே என்னோடு வந்து பாருங்கள், புரியும்...'' உடனே சுரமஞ்சரியும் தோழியோடு எழுந்து சென்றாள்.

அங்கே தன்னுடைய மாடத்திலிருந்து வெளியேறிச் செல்லும் வாயிலில் புதிய ஏற்பாடாக இரண்டு யவனக் காவலர்கள் நிற்பதைக் கண்டு திகைப்போடு தோழியின் முகத்தைப் பார்த்தாள் சுரமஞ்சரி.

'' அங்கே பார்த்துப் பயனில்லை. என்னுடைய முகத்தைப் பாருங்கள். நான் சொல்கிறேன். உங்களுடைய அலங்கார மண்டபத்தில் நீங்கள் அரும் பெரும் சித்திரங்களைச் சிறை செய்து வைத்திருக்கிறீர்கள் அல்லவா? அதே போல் இந்த மாளிகையின் உயிர்ச் சித்திரமாகிய உங்களைத் தந்தையார் பாதுகாக்க விரும்புகிறார்'' என்று தூண் மறைவிலிருந்து வெளி வந்த நகைவேழம்பர் வன்மம் தீர்க்கிற குரலில் சொல்லிக் கொடுமையாகச் சிரித்தார். (தொடரும்)


அவர்களுடைய பாதுகாப்பு உங்கள் கடமை

Firestone

பயர்ஸ்டோன் பொருத்துங்கள்

நீடித்த காலத்திற்கு அபாயமின்றி இருங்கள்





தேய்வடைந்த டயர்களை உபயோகித்து மோட்டார் ஓட்டுவதில் சிக்கனம் யாதொன்றுமில்லை. அதனால்—வழுக்குவதாலும் டயர்கள் வெடிப்பதாலும், பிரேக் கண்ட்ரோல் இல்லாமையாலும்—அபாயம் மட்டும்தான் இருக்கிறது.

உங்களுடைய காரிலுள்ள டயர்களைவிட எவ்விதத்திலும் நீங்களோ உங்களுடைய குடும்பமோ கூடுதலான பாதுகாப்புடனிருக்க முடியாது!

பயர்ஸ்டோன் வாங்குவதால் உங்களுக்குக் கிடைப்பவை...


★ வழுக்குவதைத் தடுக்கவும், நிச்சயமாக பிரேக் பிடிப்பதற்கும் தேவையான, இன்று வரைக்கும் பயர்ஸ்டோனுக்கே பிரத்தியேகமான, ஆயிரக்கணக்கான கோணங்களையுடைய, பாதுகாப்பளிக்கும் டிரெட்.

★ நீடித்த காலத்திற்கு உங்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டி நீடித்து உழைக்கவும் தேவையாயிருக்கவுமெனத் தயாரிக்கப்பட்டுள்ள பயர்ஸ்டோன் ரப்பர்.

★ டயர் தயாரிப்பில் எந்தத் தொழில் நுட்பத்தை உலக மோட்டாரோட்டப் பந்தயக்காரர்கள் அவர்கள் உயிருக்காக நம்பி இருக்கிறார்களோ அதே தொழிலியல் திறமை.

பயர்ஸ்டோன் நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர்கள்

இன்று சிறந்தவை — நாளை இதிலும் சிறந்தவை








JEYRAD
RADIO

முடி வேண்டி இடி கொண்டேனே!

திருப்பழனம் ஸ்ரீநிவாசன்

தாகூர் நூற்றாண்டு விழாக் கூட்டத்தில் அவரைப் பார்த்தவுடன் என் தலையிலிருந்த ஒன்றிரண்டு ரோமங்களும் குத்திட்டு நின்றன. நன்செய் நிலத்தில் பச்சைப் பசேலென்று நெற்பயிர் விளைந்து காற்றில் அலைபாய்வது போல் அவரது தலை முழுதும் கருகருவென்று கேசங்கள். கற்பனை மிக்க கவிஞரின் கூட்டமாக இருந்தால் கூட, வழுக்கை மண்டை மனிதருக்குச் சிகை முளைத்த அதிசயம் நடக்குமா, என்ன?

எனக்குச் சற்று சந்தேகம் வந்துவிட்டது. பார்த்துப் பழகிய அதே முகமா? அல்லது வேற்று மனிதரா? நிச்சயம் இதில் தவறு இருக்க முடியாது. அதே ஆசாமிதான். ஒருவேளை தாகூர் விழா என்பதற்காக 'டோப்பா' வைத்துக் கொண்டு வந்திருப்பாரோ?



எனக்குப் பிரசங்கத்திலே மனம் ஈடுபடவில்லை. நினைவு முழுதும் அந்த நண்பரது உச்சியின்மீது ஊசலாடும் மயிர்க் கற்றையின் மீது இருந்தது! நான்கு மாதங்களுக்கு முன்பு குடும்பத்தோடு நான் திருப்பதி சென்ற போதுதான் அவர் அறிமுகம் ஆனார். விமானத் தளம்போல் ஒரே வழுக்கை. எனக்கும் இளநீரின் உட்புறம் போல் தலை. குழந்தைகளுக்கு 'மொட்டை' அடித்தபோது அவரிடம், 'நமக்கு அவசியமே இல்லை. நம்முடைய மண்டை களர் நிலம்' என்று ஹாஸ்யமாகச் சொன்னேன் அவர் தமது கண்ணாடிப் பரப்புத் தலையைத் தடவி விட்டுக் கொண்டார். 'என்னுடைய தகப்பனார் ஒரு முறை நான் வியாதியாகக் கிடக்கும் போது இங்கு வந்து முடி இறக்குவதாக வேண்டிக் கொண்டு நிறைவேற்றத் தவறி விட்டார். அதன் விளைவுதான் கேசப்பூண்டு அற்ற பாலைவனம். வழுக்கைத்தலை என்ற இழுக்கு!' என்று அவர் வரலாறு விவரித்தார். "இதற்குச் சாபவிமோசனம் கிடையாதா?" என்று கேட்டேன். "திங்கள் சடையான் கருணைபுரிய வேண்டும்" என்றார். அதற்குப் பிறகு இந்த நகரத்தில் அவரை இவ்வாறு ஜடாதாரியாகச் சந்திப்பேன் என்று எதிர்பார்க்கவே இல்லை!

தாகூர் பிறந்து, வளர்ந்து, அவர் மகரிஷியாகும் வரை பிரசங்கிகள் பேச்சை வளர்த்து முடிப்பதற்குள் சடையோருக்குத் தாடி முளைத்து விடும் போலாகிவிட்டது. இறுதியாக ஒருவாறு கூட்டம் முடிந்தவுடன் அவரது அருகில் சென்று, 'என்ன சார், தெரிகிறதா என்னை' என்று கேட்டு வைத்தேன். அவர் சற்றுத் திகைத்து, விழித்து, தலைமயிரைத் திருகிவிட்டுக் கொண்டு சிந்தித்தார். ஆஹா, எத்தனை



கதைகளில் நெற்றியில் படிந்த முன் கற்றைக் கேசங்களைப் பற்றி எழுதியிருக்கிறார்கள்! கஷ்டம் வந்தபோது தலைமயிரைக் கலைத்து விட்டுக்கொண்ட கதாநாயகர்கள் எத்தனை! இடது கை விரலால் கேசத்தைக் கோதி விட்டுக்கொண்டு சிந்தனை புரியும் பாக்கியம் நமக்கு வாழ்க்கையில் இனி

கிடையவே கிடையாதா என்று ஏங்கியது எனது உள்ளம்.

"என்னய்யா, நீர்தான் அடையாளம் தெரியாத சடையாண்டி ஆகிவிட்டீர். எனது வழுக்கை வழுக்கையாக இருக்கும் போதுகூட ஆளைப் புரியவில்லையா? திருப்பதியில் சந்திக்கவில்லையா?" அவரது கண்களில் ஞாபக ஒளி வீசியது. திருப்பதியில் வழுக்கைத் தாதனைக் கண்ட நினைவு பிறந்தது. "மன்னிக்கவும், சற்றே மறந்து விட்டது. சுகந்தானே!"

"சுகம் கிடக்கு, விடும். நாலு மாதங்களுக்கு முன்பு அறுவடையான நிலம் போலிருந்த உமது மண்டையில் இத்தனை ரோமங்கள் விளைந்த வித்தைதான் என்ன. என்ன?....."



"அது ஒரு ரகசியம். கூட்டத்தில் வேண்டாம். தனியாகப் போவோம்!"

பிறரது பொம்மையைக் குழந்தை கொஞ்சுவது போல், அவரது சிகையை ஒரு முறை தடவிப் பார்த்து ஆனந்தித்தேன். போலியல்ல; சவுரியுமல்ல: அவ்வளவும் உண்மை!

ஓர் ஓட்டலுக்குள் சென்று சாவகாசமாகப் பேசினோம். "இது ஓர் அபூர்வ மருந்து. ஒரு சாமியார் எனக்குச் சொல்லி அருளினார். உபயோகித்ததில் உரமுள்ள பூமியில் பயிர்போல் மளமளவென்று வளர்ந்து விட்டது!"

"எனக்குச் சொல்லி அருளும், எழுதிக் கொள்கிறேன். என்ன மருந்து?" காரோட்டியின் வலது கை விரல்கள் வாகனத்தின் கூரைமீது தாளமிடுவது போல், எனது விரல்கள் எனது வழுக்கைத் தலையில் நடனமாடின.

"மன்னிக்கவும். அந்தப் 'பார்முலா' சொல்வதற்கில்லை. தைலம் தயாரித்து எல்லோருக்கும் பயன்படப் 'பிஸினஸ்'.."

"எவ்வளவு நாட்களில் சந்தைக்கு வரும்? முதல் புட்டி நான் வாங்கிக் கொள்கிறேன்!"

"மூலதனம் தேடிக் கொண்டிருக்கிறேன். அகப்பட்டதும் இந்த அபூர்வ சக்தி வாய்ந்த......"

எனது வழுக்கைத் தலையுள் வீற்றிருந்த மூளை வேலை செய்ய ஆரம்பித்தது.

"இதோ பாரும். நான் 'பிஸினஸ்' புரியும் ஆசாமி. எனது தொழிற்சாலையில் தயாரிப்பது எளிது. அந்தப் 'பார்முலா'வை எனக்கு விற்று விடும்."

அவர் வெகுநேரம் 'பிகு' செய்தார். தலைக் கேசங்களை அவர் விரல்களால் உழுதபோது எனக்குப் பொறுமையாக இருந்தது. இறுதியாக ஒப்புக் கொண்டார். மறுநாள் ஒரு கவரில் மருந்து ஜாபிதாவை நிறை விசிதத்துடன் எழுதிக் கொடுத்தார். இரண்டாயிரம் ரூபாய் கை மாறியது. வியாபாரம் 'கரு கரு' வென்று வளர்ந்தால் இன்னுமோர் ஆயிரம் தருவதாக வாக்களிப்பு.

எனது ஸ்தாபன சோதனைச் சாலையில் மருந்து தயாராயிற்று. முதல் 'போணி' யாக எனது தலையைக் கொடுத்தேன். தந்தத்தில் ஒரு சீப்பு ஒன்றும் முன் ஜாக்கிரதையாக வாங்கி வைத்தேன். ஒன்று இரண்டு நாட்கள்; ஒரு வாரம், பதினைந்து நாட்கள் - ஊஹூம். தப்பித் தவறிக்கூட ஒரு ரோமம் முளைக்க வேண்டுமே! மீண்டும் ஜாபிதாவை ஆராய்ந்து, சோதனை செய்து, தயாரித்துப் பார்த்தாகி விட்டது. இப்பொழுதும் மொட்டை மரம் துளிர்க்கவில்லை!

'மனிதன் உண்மையான 'பார்முலா' வைக் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டான். எப்படியும் சந்தையில் அவன் 'ப்ராடக்ட்' வரும்போது சிக்கெனப் பிடித்துக் கொள்ளலாம். இந்தப் பேரத்தில் தலை 'மொட்டை'யாகி விட்டது. சரி, திருப்பதி சென்றாவது மனச் சாந்தி பெறலாம்' என்று புறப்பட்டேன்.

அதே வண்டியில், என்னெதிரே அதே மனிதர், கருங்குழல் கற்றை இழந்து, புத்தர் வேஷத்தில்!


பாங்க் தொழில்
நாட்டின் செல்வத்தைப்
பெருக்குகிறது
பஞ்சாப் நேஷனல் பாங்க்
நாட்டின் தொழிலுக்கும்,
விவசாயத்திற்கும்,
வாணிபத்திற்கும் பணி
பாற்றுகிறது
எல்லாவித பாங்க்
பணிகளும் அளிக்கிறது.
தி
பஞ்சாப் நேஷனல்
பாங்க் லிட்.
ஸ்தாபிதம் 1895
தலைமைக் காரியாலயம்: புது டில்லி.


மக்கள்
பலரும்
விரும்புவது
தங்கபஸ்பம்
புகையிலை
M/S N. ஆறுமுகம் பிள்ளை
காரைக்குடி
BS

"ஓய் என்ன வேஷமா போடுகிறீர்? உம்மைப் போலீஸில் ஒப்படைக்கிறேன்" என்று கோபத்துடன் கத்திக் கொண்டே அவரது மொட்டைத் தலையில் ஓங்கி அடிக்கப் போனேன். பக்கத்திலிருந்த தாடி மனிதர் தடுத்தாட்கொண்டார்.

"என்னய்யா இந்த ருத்ர வேஷம், நல்ல வேளை தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்!" என்று பக்கத்து மனிதருக்கு அவர் நன்றி கூறினார்.

"எதையோ 'மண்ணாங்கட்டி' மருந்தை எழுதிக் கொடுத்து விட்டு இன்று ஒன்றும் தெரியாத குழந்தைபோல் விழிக்கிறீரே!" என்று இரைந்தேன்.

"விவரமாகச் சொல்லுங்கள்; சென்ற தடவை திருப்பதியில் சந்தித்த பிறகு..."

"மீண்டும் என்னைச் சந்தித்து என் தலையை இன்னும் நன்றாக 'மொட்டை' அடித்தீர்......"

அவர் ஆடு திருடாத கள்ளனைப் போல் விழித்தார்.

"சார் மன்னிக்கணும். கருகரு வென்ற தலைமயிருடன் தாங்கள் சந்தித்தது எனது தம்பியை. நாங்கள் இரட்டைப் பிறவி. அவன் வேலை ஒன்றும் செய்யாமல் சுற்றித் திரியும் காலி. 'உனக்கும் எனக்கும் உறவே இல்லை' என்று அவனை விரட்டி விட்டேன். ஒரு கருவிலே உதித்தாலும் இறைவன் குணத்திலும், தலை மயிரிலும் எங்களுக்கு வித்தியாசத்தை வைத்து விட்டான். உங்கள் ஆவலைப் புரிந்து கொண்டு, எனது வழுக்கையையும் பயன்படுத்தி, எதையோ கொடுத்து ஏமாற்றி விட்டான்......"

எனது வழுக்கை மண்டையில் யாரோ ஆயிரம் கூந்தல் தைலப் புட்டிகளைப் போட்டு உடைப்பது போன்ற வேதனை எனக்கு ஏற்பட்டது!


கால்கேட்டின் மூலம்
நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை
அகற்றி பற்கள்
சொத்தையாவதையும் தடுங்கள்!
ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர்நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.
COLGATE DENTAL CREAM
வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:
துர்நாற்றத்தை அகற்றுகிறது
சொத்தையைத் தடுக்கிறது
பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது
COLGATE
TOOTH POWDER
நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.
COLGATE
COLGATE DENTAL CREAM
பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.
DCG. 32 QT-TAM.

குற்றாலத்துறை கூத்தன்


தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

சென்னை கிறிஸ்தவ கலாசாலையில் அன்று இருந்த பேராசிரியர்களில் பலர் ஸ்காட்லாந்து தேசத்தவர். அந்தக் கல்லூரியில் ஒரு விழா. விழாவுக்கு அந்தக் கல்லூரியின் பழைய மாணவரான ரசிகமணி டி. கே. சி.யை அழைத்திருந்தார்கள். விழா நடக்கும்போது டி. கே. சி.யின் பக்கத்தில் ஒரு பேராசிரியர் உட்கார்ந்திருந்தார். இருவரும் அளவளாவிக் கொண்டிருந்தார்கள். பேராசிரியருக்கு இந்தியர்கள், அதிலும் தமிழர்கள் என்றால் என்னவோ ஏளனம். பேச்சோடு பேச்சாகக் கேட்டார் அவர் டி. கே. சி.யிடம்: " நாங்கள் இயற்கையை மிகவும் மதிப்பவர்கள். மரங்கள் என்றால் எங்களுக்கு மிக மிகப் பிரியம். நீங்கள் அப்படி இல்லை தானே" என்று. அதற்கு டி. கே. சி. சொன்ன பதில் இதுதான். " மரங்களிடம் எங்களுக்குப் பிரியம் கிடையாது. அதனிடம் நாங்கள் பக்தியே செலுத்துகிறோம். எங்கள் கோயில் எல்லாம் ஒவ்வொரு மரத்தைச் சுற்றியே எழுந்திருக்கிறது. ஏன், மரத்தையே கடவுளாகப் பாவிக்கும் மனப் பக்குவம் பெற்றவர்கள் நாங்கள். நான் இருக்கும் குற்றாலத்திலே கோயிலுள் இருப்பது ஒரு பலாமரம். பலாப்பழம், பழத்துக்கு உள்ளிருக்கும் சுளை, சுளைக்குள்ளிருக்கும் கொட்டை எல்லாவற்றையுமே சிவலிங்க வடிவில், இறைவனது வடிவில் கண்டு மகிழ்கிறவர்கள் நாங்கள் " என்றெல்லாம் சொன்னார். மேற்கோளாக,

கிளைகளாய்க் கிளைத்த பல கொப்பு எலாம்
சதுர்வேதம், கிளைகள் ஈன்ற
சுளை எலாம் சிவலிங்கம், கனி எலாம்
சிவலிங்கம், கனிகள் ஈன்ற
சுளை எலாம் சிவலிங்கம், வித்து எலாம்
சிவலிங்க சொரூபமாக
விளையும் ஒரு குறும்பலவின் முளைத்து
எழுந்த
சிவக் கொழுந்தை வேண்டுவோமே.

என்ற பாடலையும் பாடிக் காட்டியிருக்கிறார். ஆம், மரங்களை விரும்புவதோடு நிற்காமல் அவைகளையே சிவலிங்க சொருபமாக வழிபடவே தெரிந்தவர்கள் தமிழர். அப்படி வழிபாடு இயற்றுவதற்கு உரிய வகையில் இருப்பதுதான் குறும்பலா. அந்தக் குறும்பலா இருக்கும் தலம்தான் குற்றாலம். அந்தத் திருக்குற்றாலத்துக்கே செல்கிறோம் நாம் இன்று.

திருக்குற்றாலம் எங்கிருக்கிறது என்று இந்தச் சாரல் கால சமயத்தில் நான் சொல்லித் தெரியவேண்டியவர்கள் அல்ல நீங்கள். தென்காசிக்கு ஒரு டிக்கட் வாங்கி அங்கு போய் இறங்கி மேற்கு நோக்கி மூன்று மைல் சென்றால் குற்றாலம் போய்ச் சேரலாம். இப்போது தான் மதுரையிலிருந்தும், திருநெல்வேலியிலிருந்தும், தூத்துக்குடியிலிருந்தும் எக்ஸ்பிரஸ் பஸ்கள் வேறு விடப்படுகின்றனவே. கோடை காலத்தில் உதகை, கோடைக்கானல் என்றெல்லாம் செல்லும் சுகவாசிகளைவிட எண்ணிறந்தோர் இந்த ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் குற்றாலம் நோக்கிச் செல்கிறார்கள். குற்றாலத்தின் பெருமை எல்லாம் அது ஒரு சுக வாசஸ்தலம் என்பதினால் மட்டும் அல்ல, அங்குள்ள அருவியில் நீராடி மகிழலாம் என்பதினால்தான். உலகில் குற்றாலத்தைவிடப் பிரும்மாண்டமான, அழகிய நீர் வீழ்ச்சிகள் எத்தனை எத்தனையோதான். என்றாலும், இப்படி உல்லாசமாக அருவிக்குள்ளேயே நுழைந்து நீராடும் வசதியுடையது அதிகம் இல்லை. அப்படிக் குளிப்பதற்கு வசதியாய், உடலுக்கும் உள்ளத்துக்குமே ஒரு மகிழ்ச்சி தருவதாய் அருவி அமைந்திருப்பதினால்தான் இந்தத் தலத்துக்கே ஒரு சிறப்பு. ஆதலால் நாமும் குற்றாலம் சென்றதும் நேரே அருவிக்கரைக்கே சென்று விடுவோம். பஸ் ஸ்டாண்டிலிருந்து கொஞ்ச தூரம் சென்றதும் சிற்றாறு வரும் அதன்மேல் கட்டியிருக்கும் பாலத்தின் வழியாகக் கோயில் வாயில் வரை சென்று அதன்பின் அருவிக்கரை செல்லலாம். இப்போதெல்லாம் சிற்றாற்றைக் கடக்காமலேயே நேரேயே அருவிக்கரை செல்ல நல்ல பாதை போட்டிருக்கிறார்கள். நாம் அந்த வழியிலேயே செல்லலாம். குற்றாலமலை ஐயாயிரம் அடி உயரமே உள்ள மலை. இம்மலை மூன்று சிகரங்களையுடைய காரணத்தால் திரிகூடமலை என்று வழங்கப்படுகிறது. இச்சிகரங்களில் உயர்ந்தது 5135 அடி உயரமுள்ள பஞ்சந்தாங்கி. இம்மலையில் உள்ள காடுகளுக்குச் செண்பகக்கா என்றும் பெயர்




குற்றாலம் கோயில்

உண்டு. மலை முழுதும் நல்ல மரங்களும் செடிகொடிகளும் வளர்ந்து நிற்கும் மூலிகைகளும் நிறைந்திருக்கின்றன என்பர். இந்த மலையிலிருந்து குதித்துக் குதித்து வருகிறது சிற்றாறு. மிக்க உயரத்தில் இருப்பது தேனருவி; அடுத்தபடியாக, செண்பகதேவி அருவி. அதன் பின்தான் நாம் வந்து சேர்ந்திருக்கும் வட அருவி. இங்குதான் இருநூறு அடி உயரமுள்ள மலையிலிருந்து அருவி குதிக்கிறது. இந்த இருநூறு அடியும் ஒரே வீழ்ச்சியாக இல்லாமல் இடையில் உள்ள பாறைகளில் விழுந்து வருவதால் வேகம் குறைந்து குளிப்பதற்கு ஏற்றவாறு இருக்கிறது. முதலில் இவ்வருவி பொங்குமாங் கடலில் விழுகிறது. அங்கிருந்தே பின்னர் கீழே நீர் வழிகிறது. குளிப்பதற்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. அருவியாடும் அனுபவம் ஓர் அற்புத அனுபவம், அது சொல்லும் தரத்தன்று.

ஆகவே அருவியாடித் திளைத்து அதன் பின் கோயில் வாயில் வந்து கோயிலுள் நுழையலாம். அருவிக் கரையிலிருந்து அரை பர்லாங்கு தூரம் தான் கோயில் வாயில். கோயில் வாயிலை ஒரு சிறு கோபுரம் அணி செய்கிறது. கோயிலில் நுழைந்தால் விஸ்தாரமான மண்டபம் இருக்கிறது முதலில். இதனையே திரிகூட மண்டபம் என்பர். இதனைக் கடந்தே நமஸ்கார மண்டபம், மணிமண்டபம் எல்லாம் செல்ல வேணும். இதற்கு அடுத்த கருவறையில் தான் திருக்குற்றாலநாதர் லிங்கவடிவில் இருக்கிறார். இவர் ஆதியில் விஷ்ணுவாக இருந்தவர். பின்னர் அகத்தியரால் சிவலிங்கமாக மாற்றப்பட்டார் என்பது புராணக்கதை. இறைவன் இட்ட கட்டளைப்படி வடநாடிருந்து அகத்தியர் தென் திசைக்கு வருகிறார். அப்போது இக்குற்றாலநாதர் கோயில் பெருமாள் கோயிலாக இருந்திருக்கிறது. அகத்தியர் சிவனடியார் கோலத்தில் வந்திருந்தார் என்பதற்காக அவரைக் கோயிலுள்விட அர்ச்சகர் அனுமதிக்கவில்லை. ஆதலால் மனம் உடைந்து அகஸ்தியர் திரும்பி, சிறிது தொலைவில் உள்ள இலஞ்சி சென்று, அங்குள்ள முருகனை வணங்குகிறார். அந்த முருகன் இந்த அர்ச்சகர்களை வஞ்சனையால் வெல்ல வழி சொல்லிக் கொடுக்கிறார். அவர் சொல்லிக் கொடுத்த வண்ணமே துவாதச நாமம் தரித்து, பரம வைஷ்ணவராக மறுநாள் அகத்தியர் கோயிலுக்கு வருகிறார். அர்ச்சகர்களும் ஏமாந்து உள்ளே அனுமதித்து விடுகிறார்கள். உள்ளே சென்றவர் தாமே விஷ்ணுவுக்குப் பூசை செய்வதாகச் சொல்லி, மற்றவர்களை வெளியே அனுப்பிவிட்டு, கதவைச் சாத்திக்கொண்டு நின்ற கோலத்தில் இருந்த பெருமாள் தலையில் கைவைத்து ஓர் அமுக்கு அமுக்கி, 'குறுகுக குறுகுக' எனக் கைலாயநாதனை நினைக்கிறார். அப்படியே அவரும் குறுகிக் குற்றாலநாதன் ஆகிவிடுகிறார். அகஸ்தியரால் இப்படி மாற்றப்பெற்ற இறைவனை அகஸ்தியரே பாடித் துதிக்கிறார். பாட்டு இதுதான் :

முத்தனே! மூளரிக் கண்ணா!
மூலம் என்று அழைத்த வேழப்
பத்தியின் எல்லை காக்கும்
பகவனே! திகிரியாளா!
சுத்தனே! அருள் சூல் கொண்ட
சுந்தரக் கதுப்பினனே!
நத்தணி செவிய கோல
நாடுதற்கரிய நம்பி!

இந்தப் பாட்டைப் படித்தால் இதில் உள்ள துதி விஷ்ணுவுக்கும், சிவனுக்கும் பொருத்தமாயிருப்பதைப் பார்க்கலாம். இப்படிப் பாடிக் கொண்டு வந்ததினாலே தான் வைஷ்ணவ அர்ச்சகர்கள் ஏமாந்திருக்கிறார்கள். இப்படி ஆதியில், விஷ்ணுவாகவும், பின்னர் சிவனாகவும் மாறிய இறைவனே திருக்குற்றாலநாதன். நாமோ இரண்டு பெருமான்களையும் நினைத்தே வணங்கித் திரும்பலாம். குற்றாலநாதருக்கு வலப்பக்கத்தில் தனிக் கோயிலில் குழல்வாய்மொழி அம்மை கோயில் கொண்டிருக்கிறாள். நின்ற கோலத்தில் அங்கிருந்து காட்சி தருகிறாள். அம்மையின் கோயிலுக்குத் தென்புறத்தில் தான் தல விருட்சமான குறும்பலா. நான்கு வேதங்களுமே தவம் செய்து இப்படிப் பலாமரம் ஆயிற்று என்பர். இப்பலா மரத்தடியிலே ஒரு லிங்கம். இம்மரத்தில் பழுக்கிற பலாப்பழத்தை எவரும் பறிப்பதில்லை. குற்றாலத்திலே உள்ள குரங்குகளே கீறித் தின்னும் என்பர். இவ்விரு கோயில்களையும் சுற்றியுள்ள மேலப் பிராகாரத்திலேதான் நன்னகரப் பெருமாள், நெல்லையப்பர், மணக்கோலநாதர், நாறும்பூநாதர் முதலியோர் கோயில் கொண்டிருக்கின்றனர்.


சித்திரசபைக் குளம்

குற்றாலத்தில் இறைவன், குற்றாலம், கோவிதாஸ், சமருகம் என்ற பெயருடைய வரையாத்தி மர நிழலிலே எழுந்தருளியிருந்ததனால் அம்மரத்தின் பெயரே தலத்தின் பெயர் ஆயிற்று என்பர். கு என்னும் பூமியாகிய பிறவிப் பிணி, தாலம் என்னும் தீர்ப்பது. ஆகவே பிறவிப் பிணி தீர்க்கும் தலம் ஆனதால் குத்தாலம் ஆகி குற்றாலம் என்று திரிந்தது என்றும் கூறுவர். ஆதி சக்தி மூவரைப் பயந்த தலமாதலால் இத்தலத்துக்குத் திரிகூடம் என்ற பெயர் வந்தது

உங்கள் வீட்டில் வலியின் தொல்லை இல்லாமல் செய்ய

ஸாரிடான்

உபயோகியுங்கள்





தலைவலி, உடம்புவலி, பல்வலி, ஜுரம் போன்ற உணர்ச்சி, தேக அசௌக்கியம் முதலானவைகளால் உங்கள் குடும்பத்தினர் வருந்தினால் அவர்களுக்கு ஸாரிடான் கொடுங்கள். விரைவில் சிறிதும் அபாயமின்றி நிச்சயமாக நிவாரணமளிக்கும். அத்துடன் ஸாரிடான் தெம்பையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும்! பெரியவர்களுக்கு ஒரு ஸாரிடான் வில்லை பூர்த்தியான டோஸ்; குழந்தைகளுக்கு ¼ முதல் ½ வில்லை வரை போதுமானது.



ஒரே வில்லை போதும்

ஒரு வில்லை 13 நயா பைசா

'ரோஷ்' தயாரிப்பு

ஸோல் டிஸ்டிரிப்யூட்டர்கள் : வால்டாஸ் லிட்.

TWT-VT-2099

என்றும் தலபுராணம் கூறும். அதற்கேற்பவே, கோயிலுன் வடபக்கத்தில் பராசக்திக்கு ஒரு சிறு கோயில் இருக்கிறது. இங்கே பராசக்தி யோகத்தில் இருப்பதால் இதனை யோகபீடம் என்றும், உலகம் எல்லாம் தோன்றுவதற்கு மூலமாயிருத்தலால் தரணி பீடம் என்றும் அழைக்கப்படுகிறது. இப் பராசக்தியே அரி, அயன், அரன் என்னும் மூவரையும் ஒவ்வொரு கர்ப்பத்தில் பயந்தாள் என்பதைக் குறிக்கத் தாணு மாலயன் பூந்தொட்டில் இச்சந்நிதியில் ஆடிக் கொண்டிருக்கிறது.

இத்தலத்துக்கு ஞானசம்பந்தர் வந்திருக்கிறார். குற்றாலத்துக்கு ஒரு பதிகமும், குறும்பலாவுக்கு ஒரு பதிகமும் பாடியிருக்கிறார்.

வம்பார் குன்றம் நீடு உயர்
சாரல் வளர் வேங்கை
கொம்பார் சோலைக் கோல வண்டு
யாழ் செய் குற்றாலம்

என்றும்

மலையார் சாரல் மகவுடன்
வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி
மாந்தும் குற்றாலம்.

என்றும் குற்றாலத்தைப் பாடிப் பரவியவர்.

அரவின் அணையானும் நான்முகனும்
காண்பரிய அண்ணல் சென்னி
விரவிமதி அணிந்த விகிர்தருக்கு
இடம்போலும் விரிபூஞ் சாரல்
மரவம் இருக்கையும் மல்லிகையும்
சண்பகமும் மலர்ந்து மாந்தக்
குரவமுறுவல் செய்யும் குன்றிடம்
சூழ்தண் சாரல் குறும்பலாவே

என்று குறும்பலாவையும் பாடியிருக்கிறார். நாவுக்கரசர் 'குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு உற்றார் யாருளர்?' என்றே கேட்கிறார்.

மணிவாசகரோ,

உற்றாரை யான் வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத்தமர்ந்து உறையும்
கூத்தா உன்குரை கழற்கே
கற்றாவின் மனம் போலக்
கசிந்துருக வேண்டுவனே

என்று கசிந்து கசிந்து பாடியிருக்கிறார். கபிலரும் பட்டினத்தடிகளும் குற்றாலத்தானை நினைந்து பாடிய பாடல்களும் உண்டு.

இத்தலத்தில் நிறைய கல்வெட்டுகள் உண்டு. கி. பி. பத்தாம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆண்ட பரகேசரிவர்மன் என்னும் முதல் பராந்தகன் காலத்தில் பாண்டிய நாடு சோழ நாட்டுடன் இணைந்திருக்கிறது. இன்னும் மாறவர்மன் சுந்தரபாண்டியன், மாறவர்மன் விக்கிரம பாண்டியன் முதலிய மன்னர்கள் காலத்தில் ஏற்படுத்திய நிபந்தங்களையெல்லாம் குறிக்கும் கல்வெட்டுகள் உண்டு. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் பல திருப்பணிகள் செய்திருக்கிறான். இப்படிச் சோழரும் பாண்டியருமாகக் கட்டிய கோயிலை, சொக்கம் பட்டி குறுநில மன்னர்களும் விரிவுபடுத்திப் பல திருப்பணிகள் செய்திருக்கிறார்கள். குழல்வாய் மொழி அம்மை கோயிலைத் தேவகோட்டை காசி விசுவநாதன் செட்டியார் குடும்பத்தினர் திருப்பணி செய்திருக்கின்றனர். கோயிலில் திருப்பணி வேலை செய்யஇப்போதும் தொடங்கியிருக்கின்றனர்.

இக்கோயிலை விட்டு வெளியே வந்ததும் நேரே ஊர் திரும்ப முடியாது. கோயிலுக்கு வடபுறம்தான் இத்தலத்தில் பிரசித்தி பெற்ற சித்திர சபை இருக்கிறது. அம்பலக் கூத்தன் ஐந்து திருச் சபையில் அவன் கூத்தை ஆடியிருக்கிறான். திருவாலங்காட்டில் ரத்னசபையிலும், சிதம்பரத்தில் பொன்னம்பலத்திலும், மதுரையில் வெள்ளியம்பலத்திலும், திருநெல்வேலியில் தாமிர சபையிலும் ஆடிய பெருமான் இத்தலத்தில் சித்திர சபையில் நின்று நிருத்தம் ஆடியிருக்கிறார். ஐந்தருவிக்குச் செல்லும் ரோட்டில், ரஸிகமணி டி. கே. சி. தமிழ் வளர்த்த இல்லத்துக்குக் கீழ்ப்புறமாகச் செல்லும் பாதையில் சென்றால் சித்திர சபை சென்று சேரலாம். இச்சபையே தெப்பக் குளத்துடன் கூடிய ஒரு பெரிய கோயில். கோயில் முழுதும் சித்திரங்களால் நிறைந்திருக்கின்றன. ஆடும் பெருமானும் இங்கே சித்திர உருவிலேயே அமைந்து காட்சி தருகிறார். ஆதலால் சித்திரசபையைக் காணாது திரும்பினால் திருக்குற்றாலத்தைப் பூரணமாகக் கண்டதாகக் கூற முடியாது.

குற்றாலநாதர், குழல்வாய் மொழி, குற்றாலத்துக் கூத்தர் எல்லோரையும் பார்த்தபின் அவகாசமிருந்தால் வடக்கே ஒன்றரை மைல் தூரத்தில் உள்ள இலஞ்சி சென்று அங்கு ஒரு பெரிய சோலையின் நடுவே அழகாக அமைந்திருக்கும் கோயிலில் உள்ள இலஞ்சிக் குமரனையும் காணலாம். இன்னும் நாலு மைல்கள் வடக்கே சென்று திருமலை சென்று மலை ஏறி அங்கு கோயில் கொண்டிருக்கும் முருகனையும் வணங்கலாம்.

குற்றாலம் செல்லும் இலக்கிய ரசிகர்கள், கையோடு கையாகக் குற்றாலக் குறவஞ்சியை எடுத்துப் போக மறக்க வேண்டாம். அத்தலத்தில் இருந்து கொண்டு,

வானரங்கள் கனிகொடுத்து
மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு
வான்கவிகள் கெஞ்சும்
தேனருவித் திரை எழும்பி
வானின் வழிஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும்
தேர்க்காலும் வழுகும்

என்றெல்லாம் பாடல்களைப் படித்துப் பாருங்களேன். ஒரு புதிய உலகமே உங்கள் கண் முன் வராதா என்ன ?



நாயகி

வாசவன்

இளங் கதிரின் பட்டுத் தளிர்கள் என் நெற்றியில் கொடியோடி, மனத்தின் இறுக்கமான எண்ணக் கதவுகளையெல்லாம் அடுக்கடுக்காய்த் திறந்து வைத்த பிறகும்கூட, ஆழ்ந்த ரகசியத்தின் புதை இருட்டிலிருந்து இன்னும் நான் விடுபடவில்லை.

பவித்திரமற்ற இருட்டின் முள் வேலியிலிருந்து என்னைக் கருணையுடன் விடுவிக்கும் பேரொளி இன்று என்னை வஞ்சித்து விட்டது. நித்யாவஸ்தையின் பனிப் புதரிலிருந்து என்னை மலர்போல் ஏந்திக்கொண்டு என்னை வழி நடத்திச் சென்ற ஒரு மாபெரும் இயக்கம், இன்று சக்தியற்று, கண்ணுக்கும் கருத்துக்கும் புரிபடாத நெடுந் தொலைவில் மேகத் திரளாய்க் கரைந்து விட்டது.

என் நெஞ்சுக்கு நினைவாய், என் உயிருக்கு மூச்சாய் இருந்த அபிராமி, விடிந்தபொழுதின் ஒளிப்பூக்களை யெல்லாம் திருடிக் கொண்டு எங்கே போய்விட்டாள்?

நீண்ட பெருமூச்சில் இற்று விழுந்த எண்ணங்களையெல்லாம் குருட்டுத்தனமான திருஷ்டியில் அள்ளி முடிந்து கொண்டு என் உலகமாய், உள்ளமாய்க் குறுகிக் கிடந்த அறையைப் பார்க்கிறேன்.

தரையை நிறைத்திருந்தது தெருப்புழுதி. குபேரர்கள் அதிகமாக வசிக்கும் தெரு எங்களுடையது. எனவே பிரம்ம ரதங்கள், கார்கள் மட்டுமே தெருவில் அதிகமாக 'நட'மாடும். அங்கே கேவலம், மனிதர்களாகவும், நரர்களாகவும் இருந்தவர்கள் என்னைப் போன்ற ஏழைகளே! அந்தத் தெருவில் ஏழைகளின் நடையில் அழுந்தி மறைந்து போகும் அபிலாஷைகளும், ஏக்கங்களும், கனவுகளும் சீறிப் பறந்து வரும் கார்ச் சக்கரங்களினால் அடியோடு பெயர்த்தெடுக்கப்பட்டுப் புழுதியாய், தூசியாய்ப் பறந்து, இறந்துபோகும்.

எத்தனையோ பேர்களின் நிறைவேறாத அபிலாஷைப் புழுதிகள், தெருவை ஒட்டியிருந்த என் அறையை நாளெல்லாம் நாற வைத்துக் கொண்டிருக்கும். ஜாக்கிரதையாக நோயாளிக்கு நேரம் தவறாமல் மருந்து கொடுப்பதைப் போல் மணிக்கொருதரம் மறக்காமல் பெருக்காவிட்டால் என் அறையும் ஒன்றுதான்; அதை அடுத்த தெருவும் ஒன்றுதான்.

கையில் கடிகாரம் கட்டிக் கொண்டிருப்பவனைப் போல் நேரம் தவறாமல் கச்சிதமாக வந்து பெருக்குவதில் ஒருநாளாவது தவறி இருக்கிறாளா அபிராமி?

உற்றவர் என்று சொல்ல எனக்குப் பேறு உண்டு; காகிதம் உண்டு; கொஞ்சம் ரசிகர்கள் உண்டு. அதைத் தவிர உரிமை கொண்டாட எனக்கு யாரும் இல்லை. இந்த அபிராமி யார் பெற்ற பெண்ணோ?

வேளை தவறாமல் வந்து பெருக்கி விட்டுப் போகிறாளே!

ஒரு நாள் கேட்டே விட்டேன்: "அபிராமி! என் அறையைப் பெருக்கித் தூசியைப் போக்குகிறாய். அதே சமயம் என் மனத்தில் அந்தத் தூசியைக் கொண்டு போய்ச் சேர்க்கிறாய் என்று உனக்குத் தெரியுமா?"

வெள்ளையாய் மணப்பதுண்டு முல்லை. கருமையாய்க் கனத்து மணம் பூப்பதுண்டோ அது? அதே போலத்தான் அவள் முகத்திலிருந்த வெண்மை ஒளி எல்லாம் வற்றிக் கருமை நிற இதழ்கள் துடித்தன. "ஸார்!" அவள் நெஞ்சு விம்மியது.

நான் மௌனமாய் அவள் முகத்தைப் பார்த்தேன். நான் இதழ்களைப் பிரிக்காவிட்டால் என்ன? என் இதயத்தைப் பிரிக்கத் தெரிந்திருந்தாள் அவள்.

"ஏன் ஸார், என்னை வேற்றவளாகத் தானே நினைத்துப் பேசுகிறீர்கள்? உங்கள் அறையைப் பெருக்கும் பாக்கியம் எனக்குப் பூர்வஜன்ம சுகிர்தத்தால் கிடைத்திருக்கிறது. என் இழப்புகளிலிருந்து என்னைக் கொஞ்சமாவது கரை ஏற்றி வைக்கும் அந்த ஆத்ம கைங்கரியத்தையும் தட்டிப் பிடுங்கப் பார்க்கிறீர்களா?" அவள் கண்ணிமைகளில் கோத்து நின்ற மணிகள் அவளுடைய துரதிர்ஷ்டத்தை ஒலிக்க முடியாமல் களைத்து வளைந்தன.

அவள் சொன்னது உண்மையே. அவள் இழப்புகளின் தலைவிதான். அறியாப் பருவத்திலேயே தாயையும், விவரம் தெரிந்த பிறகு தந்தையையும் பறி கொடுத்தாள். அவள் தகப்பனார் ஊருக்கெல்லாம் கடவுளாக இருந்தார். எழுத்தறிவித்தவனை இறைவன் என்று தானே சொல்கிறார்கள்? அந்தப் பள்ளிக்கூட வாத்தியார் ஒரு மனிதனைப் போல் வாழாமல் கடவுளாக வாழ்ந்து விட்டுப் போனதுதான் அபிராமியின் துரதிர்ஷ்டம்.

அபிராமிக்கு ஒரு சித்தப்பா இருந்தார். இருந்தாரா? இருக்கிறார். அண்ணனைப் போல் அவர் ஒரு பைத்தியக்காரர் இல்லை. ஏதோ வியாபாரம் அவருக்கு. ஆதரவற்றுப் போன அண்ணன் மகள் அபிராமியை ஊர் உலகத்துக்காகப் பயந்து தலையில் கட்டிக் கொண்டார்.

அபிராமியைச் சும்மா சொல்லலாமா? சித்தப்பா தலையில் கட்டிக் கொண்டதற்காக அவள் பாரமாக அழுத்தவில்லை. அவருடைய குடும்பம் என்கிற ஆலியோதனப் பட்டாளத்துக்குச் சம்பளம் கேட்காத வேலைக்காரியாக இருந்தாள். ஐந்து பேர்கள் செய்யக் கூடிய ஐந்து நாள் வேலைகளை ஒரே நாளில் செய்தும் கூட அவள் சித்தியின் வாயில் விழாமல் தப்ப முடிந்ததோ?

அபிராமி ஓர் அலை கடல். எப்பொழுதேனும் அவளுக்கு ஓய்வு இருந்ததுண்டா?

இவ்வளவையும் நான் நாளெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அபிராமியின் சித்தப்பா வீட்டில் குருவிக்கூட்டைப் போன்ற ஒரு சின்னஞ்சிறு அறையில்தானே என்னுடைய இலக்கிய மாளிகைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன?

இத்தனைக்கும் மத்தியில் அபிராமிக்குப் படிக்க நேரம் எங்கே இருக்கிறது? சாக்கடை போன்ற ஒரு நாற்றமெடுக்கும் குடும்பத்தில் சிக்கிக் கொண்டவருக்கு இலக்கியத்தில் இவ்வளவு ஈடுபாடா? புறம்பான சூழ்நிலையில் வசிப்பவருக்கு இலக்கியக் குளிர்வில் ஒரு ருசியா?...

என் பிரமிப்புகளெல்லாம் அப்பொழுது அலைகள் போலக் கரைந்தன.

"என்ன ஸார், சிந்தனையில் ஆழ்ந்துவிட்டீர்களா? என் திருப்திக்காக உங்கள் அறையைப் பெருக்குகிறேன். இதையும் உங்கள் அரிய சிந்தனையால் பறித்துக் கொள்ளப் பார்க்கிறீர்களா?"


"அப்படி இல்லை, அபிராமி! உன் சித்தப்பாவீட்டில் உழைத்து உழைத்து ஓடாகப் போகிறாய். அது போதாது என்று...."

"அது போதாமல் தானே ஸார் இங்கேயும் வந்து வேலை செய்கிறேன்? அங்கே மாடாக உழைக்கிறேன். இங்கே வந்து பணி புரியும் சிறு போதில்தான் அந்த மாடு மனித உயிர்ப்புப் பெறுகிறது. சில கணங்களுக்கு மட்டுமே கிடைக்கும் அந்தச் சுகத்தையும் இழக்கச் சொல்கிறீர்களா?"

அபிராமியின் பேச்சில் பொதிந்த கருத்தை எண்ணி வியந்தேன் நான். அங்கேமாடாக உழல்கிறவள் இங்கே மனுஷியாக உருப்பெறுகிறாளாமே! ரொம்ப எழுத்தாளர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், தங்கள் பேனா முனையில்தான் உயர்ந்த கருத்துகள் உறங்கிக் கொண்டிருக்கின்றன என்று. ஆனால் எளியவர்களின் உதடுகளில் அந்த உயர் கருத்துக்கள் விழித்துக் கொண்டேயிருக்கின்றன என்பது அவர்களுக்குத் தெரியுமா? நான் கூடத் தெரியாதவனாகத்தான் இருந்திருப்பேன் அபிராமியைச் சந்தித்திருக்காவிட்டால்.

"ஸார்!"

நான் எல்லோருக்கும் எப்படியோ? அவளுக்கு மட்டும் ஸார்தான். நிமிஷத்துக்கு நூறு ஸாராவது போடா விட்டால் அவள் அபிராமி அல்ல!



நான் ஏக்கத்தின் இதழ் பிரித்த அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"நீங்கள் ரொம்ப ரொம்பச் சிந்தனை செய்வதைப் பார்த்தால் ஒருநாளில் நான் சில நிமிஷங்களாவது மனித உயிர்ப்புப் பெறும் பணியை நிரந்தரமாகப் பறித்து விடுவீர்களோ என்று பயமாக இருக்கிறது ஸார்!"

"என்னுடைய திருப்திக்காக உன் திருப்தியைப் பறிக்கப் போவதில்லை, அபிராமி!"

"எப்படியோ எனக்கு வரம் அருளினீர்களே அதுவே போதும் ஸார்! என் ஆயுள் முழுதுக்கும் இந்தச் சிறு பணி ஒன்றே போதும்."

அபிராமி என்ன சொல்கிறாள்? அவள் ஆயுள் முழுதுக்கும் என் அறையைப் பெருக்கிக் கொண்டிருக்க வேண்டும் என்றா? அது சாத்தியமா? ஒரு பெண்ணின் ஆயுள் பிறந்த இடத்தில் காலும், புகுந்த வீட்டில் முக்காலுமாகப் பங்கு பிரித்துக் கொள்கிறது. இந்த அபிராமிக்கு இன்றில்லாவிட்டால் என்றாவது ஒருநாள் புகுகிற இடம் என்று ஒன்று வந்துதானே ஆகவேண்டும்? இவளுடைய பேச்சு பிரமாதம்தான்! இவளுக்காக இன்றைய இந்த ஒரு விநாடியே யுகக் கணக்காக நிலைத்து வருமா என்ன?

அவளிடம் கேட்கத் தோன்றிய ஓர் எண்ணம் ஊமைத்தனமான புன்னகையாக என் உதடுகளில் பிறந்து ஓய்ந்தது.

அப்படிச் சொன்ன அபிராமிதானா இன்று காணாமல் போய் விட்டாள்? என் அறையைப் பெருக்காமலே மனித உயிர்ப்புப் பெறும் புது மார்க்கம் எதையாவது கண்டுபிடித்து விட்டாளா?

என் நெஞ்சக் களைப்பின் நிழல் படிந்த கண்களை மேஜையின் பக்கம் திருப்பினேன்.

ஒரே அலங்கோலம்!

அபிராமிக்கு என் மேஜையே கோயில். அங்கே கணக்கற்ற இலக்கியத் தெய்வங்களைச் சிருஷ்டிப்பவனும் நான்.

எனக்கு அதில் அழுத்தமான அபிப்பிராய பேதம் இருந்தது. மனிதன் தெய்வங்களைச் சிருஷ்டிப்பதா? பாண்டங்கள் குயவனைச் சிருஷ்டிப்பதா?

"என் எழுத்தில் உள்ள மோகத்தால் தெய்வங்களை நிந்திக்காதே அபிராமி! நித்தியத்தின் சத்தியம் கடவுள். நித்யமற்ற உலகத்தின் அலைகளை எழுப்பிக் காட்டும் கடல் என் இலக்கியம். இரண்டும் வேறு!" என்றேன் நான்.

"உங்கள் இலக்கியத்தைக் கடவுள் என்றாவது ஒப்புக் கொண்டீர்களே! அந்த மட்டுக்கும் மகிழ்ச்சி. ஆனால் ஒரு சந்தேகம் ஸார்! கடல் அழியமாட்டாத ஒன்றுதானே?" அபிராமியின் பிடிகை பலமாக இருந்தது.

"ஆமாம்."

"அழிய மாட்டாதது என்றால் உண்மையானது என்றுதானே அர்த்தம்?"

"ஆமாம்."

"உண்மையானது என்றால் நித்யமானது என்றுதானே பொருள்?"

"அப்படித்தான்."

"நித்தியமானது எல்லாம் கடவுள் என்றால் உங்கள் இலக்கியமும் கடவுள்தானே?"

என்ன சொல்வேன் நான்? அபிராமி என்னை விட ஒரு படி மேலே போய்விட்டாள். கடவுளில் கடவுளைப் பார்க்கும் என்னைவிட எல்லாவற்றின் சாயலிலும் கடவுளைப் பார்க்கும் அபிராமி மனித அளவிலிருந்து எவ்வளவோ தூரம் உயர்ந்து விட்டாள். இவள்தானே தன்னை இங்கே வந்து பெருக்கும் சமயத்தில் மனித உயிர்ப்புப் பெறுவதாகச் சொல்லிக் கொண்டாள்? வானை அளந்துவரும் காற்று மண்ணை முத்தமிடத் தாழக் குனிவதுபோன்ற இரக்கம்தானோ அவள் பேச்சின் பொருளும்?

அவளுடைய இலக்கியக் கோயில் — என் மேஜை—ஒவ்வொரு நாளும் புனிதம் பெறும் காரியம் இன்று நடக்கவில்லை. புத்தகம் ஒரு பக்கம். காகிதங்கள் ஒரு பக்கம். தூசியும் துப்பட்டையும் மீதமிருந்த பகுதிகளில்.

அபிராமியின் இலக்கியக் கோயில் இதோ பாழடைந்து கிடக்கிறது. பிரதிஷ்டை செய்வதற்குரிய கடவுள்களை இனி நான் சிருஷ்டிப்பேனா? எழுதுவேனா இனி? தன்னோடு என் எழுத்தின் ஊற்றையும் பெயர்த்துக்கொண்டு போய் விட்டாளோ?

அவள் தன் நினைவின் நெருப்புத் தழலாய் விட்டுப் போயிருந்த ஜன்னல் என் நெஞ்செல்லாம் அடைத்துக் கொண்டது. என் அறைக்கு வரும் சமயங்களில் அவள் சிற்றன்னை அழைப்பதற்கு முன்னால் ஒரு நிமிஷமாவது அந்த ஜன்னலில் உட்காராமல் போகமாட்டாள். சில சமயங்களில் வீதியை வெறிக்க வெறிக்கப் பார்ப்பாள். பல சமயங்களில் என் மேஜையை விழியால் விழுங்கிக் கொண்டிருப்பாள்.

ஒருநாள் கேட்டேன்: "என்ன அபிராமி! என் மேஜையையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறாய்?"

"வெளியே பார்க்கப் பிடிக்கவில்லை."

"ஏன்?"

"தெருவில் மனிதர்கள் நடக்கிறார்கள்."

"மனிதர்கள் நடக்காமல் பறக்கவா செய்வார்கள்...?"

"மனிதர்கள் நடக்கவும் வேண்டாம்; பறக்கவும் வேண்டாம். அவர்கள் நொண்டியாய், குருடாய்ப் போய் விட்டால் நல்லது என்பேன் நான்!"

"ஏன் அபிராமி, மனித ஜன்மங்களிடத்தில் இவ்வளவு பெரிய கோபம்?"

"நான் பரமசிவனாக இருக்கவில்லை என்று வருத்தப்படுகிறேன் ஸார். எனக்கு மட்டும் நெற்றிக்கண் இருந்தால்..."

"மனித உலகத்தையே எரித்திருப்பாயாக்கும்...?"

"சந்தேகம் இல்லாமல். நேர்மை இல்லை; நாணயம் இல்லை. வீட்டை விட்டுத் தெருவில் காலெடுத்து வைக்கும்போதே எவன் தலையில் கைவைக்கலாம் என்றுதான் சிந்தனை. அபூர்வமாக இரண்டொரு நல்லவர்கள் இருக்கலாம். அவர்களையும் நாம் நாம் மனிதர்களில் தேவர்களாக்கி 'பிரமோஷன்' கொடுத்துவிடுகிறோமே?"

"அபிராமி! இரண்டொரு நல்லவர்கள் இருக்கலாம் என்று சொன்னாயே, அது நீயும் நானும்தானே?"

"போங்கள் ஸார்!"

அன்று என்னைப் போகச் சொன்னவள் இன்று அவளே போய்விட்டாள்!

மற்றொரு நாள்.

பர்னல் உங்களுக்கு உதவியாயிருக்கும்பொழுது



சமையல் வேலையை நிறுத்த வேண்டாம். பர்னல் தடவுங்கள். அது உடனே நிவாரணமளித்து, புண்ணை சீக்கிரத்தில் ஆற்றுகிறது. வெட்டுக்காயங்கள், சுட்ட புண்கள், பூச்சி கடிகள் மற்றும் சிராய்ப்பு போன்றவைகளுக்கு நிவாரணமளிக்கக்கூடிய ஒரு ஆண்டிஸெப்டிக் மருந்து பர்னல். எதிர்பாராத விபத்துக்களுக்கு ஒரு பர்னல் ட்யூப்பை உங்கள் கைவசம் வைத்திருங்கள் – உங்களுக்கு உபயோகப்படும்.



பர்னல்

சிறந்த ஆண்டிஸெப்டிக் ஆயின்ட்மெண்ட் — 20 வருஷங்களுக்கு மேலாக பெயர் பெற்றது.

பிளுக்ஸ் மற்றும் க்ரைமிக்ஸ் தயாரிப்பாளர்களான பூட்ஸ் Boots கம்பெனியாரின் ஓர் சிறந்த தயாரிப்பு.

இனம் நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பர்னல் ட்யூப்புடனும் ஒரு அழகான புட்-ரூல் கிடைக்கும்.

NATIONAL BB-361

என் கதை ஒன்றை அப்பொழுது தான் படித்துவிட்டு என் அறைக்கு வந்தாள் அபிராமி. ஈரம் படிந்த அவள் இமைகள் கதையில் அவள் எத்தனை அளவுக்கு ஒன்றிக் கரைந்திருக்கிறாள் என்பதைத் தெரிவித்தன.


''ஸார்!''

''என்ன அபிராமி?''

''உங்கள் கதாநாயகி சீதாவுக்கு அநியாயமான முடிவை அளித்து விட்டீர்கள் ஸார்!''

''எதை அநியாயம் என்று சொல்கிறாய்?''

''அவள் ஸ்ரீதரை உயிருக்கு உயிராய்க் காதலித்தாள். காதலை அடைய ஒரு குருக்ஷேத்திரப் போரை நடத்தினாள். கடைசியில் அவளுக்கு வெற்றி கிடைத்தது. அந்தக் கணத்திலேயே உயிரையும் விட்டாள் சீதா. இது அநியாயம் இல்லையா? மகத்தான போராட்டங்கள் மட்டும்தான் சீதாவா? மகத்தான இதயம் ஒன்றையும் வைத்துக் கொண்டிருந்த சீதாவை இந்த உலகத்தில் இன்னும் கொஞ்ச நாட்கள் வாழவிட்டால் உங்களுக்கு என்ன ஸார் நஷ்டம்?''



வானதி பதிப்பகம் பிரசுரித்துள்ள திரு அ. லெ. நடராஜனின் 'மகாபாரதம்' நூலின் மலிவுப் பதிப்பு வெளியீட்டு விழா மயிலாப்பூர் ஸ்ரீநிவாச சாஸ்திரி ஹாலில் ஜூலை 2ந் தேதி திரு கே. பாலசுப்பிரமணிய அய்யர் எம். எல். ஸி. அவர்கள் தலைமையில் சிறப்பாக நடந்தது. மந்திரி திரு பக்தவத்சலம் அவர்கள் அப்புத்தகத்தை வெளியிட்டார்.

சண்டை போடுபவளைப் போலக் குரலை உயர்த்திப் பேசினாலும், அவள் வார்த்தைகளைத் தெளித்த விதத்தில் ஓர் உருக்கம் இழை பின்னிக் கிடந்தது.

''நஷ்டம் எனக்கு ஒன்றும் இல்லை, அபிராமி! சீதா உயிரோடிருந்திருந்தால் நஷ்டம் அவளுக்குத்தான்.''

''எப்படி? ஸ்ரீதரை அடைந்த பிறகுமா?''

''ஆமாம். தெய்விகமான காதலுக்கு அழிந்துபடுகிற உடல் வாழ்க்கை களங்கம் இல்லையா? காதலை அடைவதற்காகச் சீதா மகத்தான போராட்டங்களை நடத்தி வெற்றி கண்டாள் இல்லையா? அவளை வாழவைப்பதன் மூலம் அவள் கண்ட வெற்றியை நஷ்டமடைய வைக்க விரும்பவில்லை நான். அதனால்தான் அழியாத காதலுக்கு அற்பமான உயிரைக் காணிக்கையாக்கினாள் சீதா.''

''உண்மையான காதலுக்கு உடல் சத்துரு என்கிறீர்களா?''

''எழுத்தாளர்கள் அப்படி நினைக்கிறார்கள்!''

''இன்றைய உலகில் காதலித்துக் கல்யாணமும் செய்துகொண்டு வாழ்பவர்களை எல்லாம் உண்மையான காதலர்கள் இல்லை என்றுதான் எழுத்தாளர்கள் சொல்வார்களோ?''

''சொல்ல மாட்டார்கள். வாழ்பவர்கள் இலக்கணம்தானே தவிர இலக்கியம் அல்ல. இலக்கியத்தில் காணும் மகத்தான காதலர்கள் வாழ்க்கையில் காண முடியாதவர்கள்.''

''இலக்கியக் காதலர்கள் அத்தனை உயர்ந்தவர்களா?''

''எதற்காக அபிராமி இவ்வளவு துருவிக் கேட்கிறாய்?''

''ஏதோ தெரியாததைக் கேட்டேன். என் சந்தேகங்களைத் தெளிய வைப்பதற்கு ஸாரைத் தவிர வேறு யாரால் முடியும்?''

அந்த அபிராமியைத்தான் இன்று காணவில்லை! சந்தேகங்களைத் தெளிய வைக்கிற இந்த ஸாரை விட்டு எங்கே போனாள்? அவளுடைய சந்தேகங்களுக்கெல்லாம் ஒரு முடிவு கண்டு விட்டாளோ?

''உள்ளே வருகலாமோ?''

அறைக் கதவோரமாகக் குரலை வளைத்து நீட்டுகிறவர் மகாதேவன்.

எதிரும் புதிருமாகப் பத்துப் பதினைந்து அறைகளைத் தனித்தனி வீடுகளாகக் கொண்டது எங்கள் ஸ்டோர். நடுவில் குழாயடி. கடைசியில் அபிராமியின் சித்தப்பா குடி இருக்கும் வீடு. எதிர் வரிசை இரண்டாம் எண் அறைவாசி மகாதேவன். அதிகமாக என் அறைக்கு வருவதில்லை. அவர் வருகிறார் என்றால் ஏதேனும் ஒரு பரபரப்பான விஷயம் என்னைத் தாக்குவதற்கு அவர் நெஞ்சில் தேங்கியிருக்கும்.

இப்பொழுது அவர் எதற்காக வந்து தொலைக்கிறார்? கேட்க முடியாமல் பசையற்ற சிரிப்புடன், ''வருகலாமே!'' என்றேன்.

மகாதேவன் வினயமாகச் சிரித்துக் கொண்டே என் எதிரே வந்து அமர்ந்து கொண்டார். ''நீங்கள் எழுத்தாளர். ஆயிரம் எழுதுகிறீர்கள். பதினாயிரக்கணக்கான பேர்கள் படிக்கிறார்கள். ஆனால் பலன் என்ன? பூஜ்யம். உலகம் அவ்வளவு தூரம் கெட்டு விட்டது'' என்றார்.

மகாதேவன் ஒரு வியூகம் அமைத்து என்னை நடுவில் நிறுத்தி வைக்கப் பார்க்கிறார். உலகம் கெட்டதற்குக் காரணம் எழுத்தாளர்கள் தாம் என்று மறைமுகமாகக் குறிப்பிடுகிறார். இவ்வளவு பெரிய வளையத்தை அவர் எதற்காகக் கிழிக்கிறார் என்று நான் சிந்தித்துக்

கொண்டிருந்த போதே, அவர் பலமாக கனைத்தார். நான் மௌனமாக அவர் முகத்தைப் பார்த்தேன்.

"அபிராமியை எடுத்துக் கொள்ளுங்களேன்! உங்கள் கதைகளை விழுந்து விழுந்து படித்தாள். ஒழுங்காக இருக்கத் தோன்றவில்லை. ஓடி விட்டாள். மது வகைகளைத் தடை செய்தது போல் இலக்கியத்தையும் தடை செய்ய வேண்டும். உலகம் அப்பொழுது தான் உருப்படும்."

"போங்கள் வெளியே!" எப்படி அலறி விட்டேன் நான்?

மகாதேவன் கழுத்தை அப்படியே அழுத்தி இருக்க வேண்டும் நான். அபிராமி போய் விட்டாள்தான். ஆனால் ஒழுக்கமில்லாமல் ஓடி விட்டாளாமே! என்னுடைய இலக்கியத்தை இவர் பிரதம மந்திரியாக வந்து தடைசெய்து விட்டுப் போகட்டும். ஆனால் என் பழுதற்ற அபிராமியைக் களங்கத்தால் கட்டி வைக்க இவர் கடவுளானாலும் விடமாட்டேன் நான்.

மகாதேவன் எதற்கும் அசையாத கல்லாகச் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தார். என்னைக் கோபப்படுத்தியதோடுமல்லாமல் அவமானப் படுத்த விரும்பியது போலும் இருந்தது அவருடைய செய்கை.

நான் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். மகாதேவன் சொன்ன அபிப்பிராயம் அவருக்கு மட்டும் சொந்தமானதல்ல. இந்த ஸ்டோரில் குடியிருப்பவர்களின் பொது அபிப்பிராயம் அது. என் கருத்தை அபிராமிக்கு வழங்கி அவளை நான் மயக்கி வைத்திருக்கிறேன் என்று ஒரு நாள் காமுப் பாட்டி என் காதுபடச் சொல்லவில்லையா?

எவ்வளவு மட்டமான மனிதர்கள்? இவர்களுக்கு நேர்கொண்ட பார்வையே இல்லையா? அபிராமி ஒரு நெருப்பு. அவளைத் தீண்ட அருகதை அற்றவர்கள் திசை விலகிப் போய்ப் பேசுகிறார்கள்.

வேண்டா வெறுப்பாகப் பார்வையைத் திருப்பினேன். மகாதேவன் மறைந்து விட்டிருந்தார்.

"ஸார்!"

மீண்டும் பிடுங்கலா?

அறைக்குள் நுழைந்து கொண்டிருந்தார் அபிராமியின் சித்தப்பா சோமசுந்தரம்.

"வாருங்கள்."

"வரும்படியான காரியத்தைத்தான் செய்து விட்டீர்களே! நான் யாருக்கும் ஒரு கெடுதல் செய்தவனில்லை. ஆனால் எனக்கு மலைபோல வந்திருக்கிறது. என்னைக் காப்பாற்றுங்கள்!" சோமசுந்தரத்துக்கு அழமாட்டாத குறை.

"நான் காப்பாற்றுவதா?"

"ஆமாம் ஸார்! தயவுசெய்து அபிராமியை என்னிடம் அனுப்பி வையுங்கள். எனக்கு மானம் போகிறது."

மகாதேவனுக்கும் மகாதேவனாக இருக்கிறாரே. இவர்? அவர் கோட்டைத்தான் கிழித்தார். இவர் என்னைக் குற்றவாளியாகவே ஆக்கி விட்டாரே!

"அபிராமியை நான் மடிக்குள்ளேயா கட்டி வைத்திருக்கிறேன், அனுப்பி வைக்க?" ஆத்திரத்தால் என் கண்களில் நெருப்புக் கரைந்தது.

"நீங்கள் எழுத்தாளர், புத்திசாலி! எல்லோருக்கும் தெரியும்படியாக அவளை மடியிலேயா கட்டி வைத்திருப்பீர்கள்? யாருக்கும் தெரியாத இடத்தில் அவளைக் கொண்டு போய் வைத்து..."

"வாயைக் கழுவுங்கள் ஸார்! அபிராமியிடம் நான் அன்பு காட்டினேன். அது தெய்வத்திடம் வைக்கும் தூய அன்பு. என் தெய்வத்தைக் கொண்டு போய் ஏன் ஒளித்து வைக்கப் போகிறேன்."

சோமசுந்தரம் என் பேச்சைக் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை. "ஏன் ஒளித்து வைக்கப் போகிறேன் என்று கேட்கிறீர்கள்? அதுவும் என்னிடமா கேட்கிறீர்கள்?"

"உங்கள் தாத்தாவிடம் கூடக் கேட்பேன் நான்."

"எனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும். கதை எழுதுகிறவர். யோக்கியமானவராக இருப்பார் என்று நினைத்து உங்களைக் குடி வைத்தேன் பாருங்கள், அதற்கு நல்ல காரியம் செய்து விட்டீர்கள். போங்கள். போய் விடுங்கள். இன்றைக்குள் நீங்கள் வீட்டைக் காலி செய்யா விட்டால் நான் கெட்டவனாகி விடுவேன்!"

"நீங்கள் கெட்டவராவது ஆட்சேபனைக்குரியது இல்லை, சித்தப்பா! ஆனால் ஸாரை எதற்காகக் கெட்டவராக்குகிறீர்கள்? அவர் என்னை எதற்காகக் கொண்டு போய் ஒளித்து வைக்கிறார்? என்னைத்தான் வருஷம் எல்லாம் தூற்றினீர்கள். நான் மானமற்ற பிணமாய் நீங்கள் ஊற்றும் கஞ்சிக்குக் காலமெல்லாம் காத்திருந்தேன். இப்பொழுது என்னை விலைப் பொருளாக்கி ஒரு கிழவன் தலையில் கட்ட முடிவு செய்தீர்கள். அதைத் தாளாமல் நானே ஓடிவிட்டேன். அதற்கு ஸாரை ஏன் பொறுப்பாளியாக்குகிறீர்கள்?" வானத்திலிருந்து தெய்வம் பேசுகிறதா?

இருளைக் குடித்து விட்டிருந்த பகல் இப்போதுதான் ஒளி மலர்களை மெல்ல அவிழ்த்துத் தூவுகிறதா? என் இதயத்தின் த்வனி நீர்ச்சுனை போல் பொங்கிக் களிப்பது ஏன்?

அறை வாசற்பக்கம் என் விழிகள் தாவின. நின்று கொண்டிருந்தவள் அபிராமி.

"வந்து விட்டாயா, அபிராமி!" என் உள்ளம் எவ்வளவு வேகமாய்த் திறந்து கொண்டு விட்டது? எதிரே என்னைக் குற்றம் சாட்டியவர் கல்பிள்ளையார் போல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவர் முன்னிலையில் என் உள்ளம் திறந்து கொள்ளலாமா?

"வந்து விட்டேன் ஸார்!" என்று உள்ளே நுழைந்த அபிராமி, நேராகப் போய் ஜன்னலில் உட்கார்ந்து கொண்டாள். என்னை அவள் பார்த்த பார்வை என்றுமே பார்த்திராத பார்வை. அவள் நடைகூட வழக்கமானதாக இல்லை. அலாதியான சோர்வு அவளை அப்படிக் குழைத்து விட்டதா? கருணையும் கனிவும் ஊறி நிற்கும் அவள் விழிகள்கூட இமையோரம் மறைந்து விடத் துடிக்கின்றனவே!

அவளிடம் ஏன் இந்த மாற்றம்?

ஜன்னல் கம்பிகளைப் பற்றி இருந்த அவள் கரங்கள் அடிக்கடி பிடி நழுவித் தளர்ந்தன.



அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனுக்கு விஜயஞ் செய்த தமிழ்நாட்டு நிதி, கல்வி மந்திரி திரு சி. சுப்பிரமணியம் அவர்களைக் கௌரவிப்பதற்கென ஜூன் 18ந் தேதி இந்தியர்கள் பிரசித்திபெற்ற ஹோட்டல் ஒன்றில் தேநீர் விருந்து நடத்தினர். படத்தில் மந்திரியையும், வாஷிங்டன் தமிழ்க் குடும்பத்தினரையும் காணலாம்.

இரண்டொரு முறை விழுந்து விடுபவளைப் போலப் பின்னால் சாய்ந்தாள்.

நான் அவளை நோக்கி ஓடினேன். "என்ன அபிராமி உனக்கு?"

என் முகத்தில் அவள் விழிகள் மொய்த்தன. "எனக்கு ஒன்றும் இல்லை, ஸார்! உங்களுக்குத்தான் எல்லாம். பிடுங்கலிலிருந்து தப்புவதற்காக நான் வீட்டை விட்டுப் போனேன். அப்படிப் போனது சரியில்லை என்பதை அப்புறம்தான் உணர்ந்தேன். என்னையும் உங்களையும் பற்றி ஏற்கனவே இங்கே கதைகட்டி விட்டிருக்கிறார்கள். நான் பதேசசையாகப் போனாலும் நீங்கள்தான் என்னை எங்கோ அப்புறப்படுத்தி வைத்திருப்பீர்கள் என்று இங்கே உள்ளவர்கள் உங்களைப் பழிப்பார்கள் என்பதைப் பின்னால் தான் தெரிந்து கொண்டேன். என்னுடைய 'ஸார்' அவ்வளவு கீழ்த்தரமானவரல்ல என்பதை இவர்களுக்குத் தெரியப்படுத்திப் போகவே இப்பொழுது வந்தேன். அதோடு உங்களையும் கடைசிமுறையாகச் சந்தித்து..."

"கடைசி முறையாகச் சந்தித்தா? என்ன சொல்கிறாய் அபிராமி?" என் பலத்தை எல்லாம் அழுகையாக வடித்துக்கொண்டு அலறினேன் நான்.

"ஆமாம் ஸார்! நாம் கடைசியாகத்தான் சந்திக்கிறோம். காலையில் இங்கிருந்து கிளம்பிய நான் கடற்கரையில் மரங்களடர்ந்த சோலையில் போய்ப் படுத்துக் கிடந்தேன். அப்படியே உறங்கியும் விட்டேன். ஏதோ ஒன்று கடித்தது போன்ற ஓர் உணர்ச்சி என் இமைகளைத் திறக்க வைத்தது. திடுக்கிட்டேன். பார்த்தேன். எதிரே ஒரு நல்ல பாம்பு மண்டலமிட்டுக் கொண்டிருந்தது.

"அப்படியானால் அபிராமி, உன்னைப் பாம்பா கடித்து விட்டது?"

"ஊம்! பாம்பு கடித்திராவிட்டால் எனக்கு மரணம் ஏது? மரணம் இல்லாவிட்டால் எனக்கு வெற்றிதான் ஏது?..."

"மரணத்தான் வெற்றியா?"

"ஆமாம், ஸார்! உங்கள் கதையில் வந்தாளே சீதா, அவள்தான் நான். சீதா செத்திருக்காவிட்டால் அவள் காதலில் வெற்றி கண்டிருப்பாளா?"

"அட, அசட்டுப் பெண்ணே! கதையைப் படித்து விட்டு இந்த முடிவைத்தானா நீ தேடிக் கொள்ள வேண்டும்? அபிராமி! நீ ஒரு வார்த்தை என்னிடம் சொல்லியிருந்தால், உன் சித்தப்பா என்ன, இந்த உலகத்தையே நிர்மூலம் செய்து உன் காதலனை உன்னிடம் கொண்டு வந்து ஒப்படைத்திருப்பேனே!"

நான் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, அவள் ஜன்னலிலிருந்து நழுவி விழ இருந்தாள். நான் அவளைத் தாங்கிப் பிடித்தேன்.

"எனக்கு இது போதும் ஸார்! இதுதான் எனக்குக் கிடைத்த வெற்றி! உங்களுடைய சீதாவாக நானாகிவிட்ட பிறகு, என் ஸ்ரீதராக நீங்களாகாவிட்டாலும் நான் விடுவேனா ஸார்? உங்கள் அணைப்பில் கண்ணை மூடுவதை விட எனக்கு வெற்றி என்ன வேண்டும்?"

நெருப்பின் தளிர் போன்ற அவள் நாக்கு உள்ளே ஓடி விட்டது. வெளிறிய அதரங்கள் ஜீவவெளி யாத்திரையின் படகுகள் போலத் துடித்துக் கொண்டிருந்தன. புருவத்தின் இறுக்கத்தை முறித்துக் கொண்டு விழிகள் எங்கெல்லாம் ஒளி இருக்கிறதோ, அதையெல்லாம் ஒரேயடியாகக் குடித்துவிடத் தாகாக்கியுடன் அலைந்தன.

"அபிராமி! என்னையா நீ..." மேலே என் நாப் புரளவில்லை.

"ஊம். உங்களைத்தான்....உங்கள் கதாநாயகியுமாகி விட்டேன். ஏன் அழுகிறீர்கள்? என் வெற்றியைக் கண்டா அழுகிறீர்கள்? நான் மகத்தான வெற்றியைக் கண்டிருக்கிறேன். சிரியுங்கள். சிரித்துக் கொண்டே இருங்கள்." அவள் உதடுகளில் ஒரு மலர்ச்சி. உதடுகளில் மட்டும்தானா? அவள் முகத்தில் கண்ணில், எங்குமே மீண்டும் ஒரு முறை பார்க்க முடியாத மலர்ச்சி....

எதிரே யிருந்த சோமசுந்தரத்தைக் கற்சிலையாக்கி விட்டு என் கைகளில் குழைந்த அபிராமி, என் நெஞ்சில் நெருப்பைக் கொட்டி விட்டு இதோ போகிறாள்; போய்க் கொண்டே இருக்கிறாள்.

"அபிராமி....!" இறக்கை முளைக்காத நான், அவளைத் தொடரும் நிழலாக முடியாமல், அவள் என் எல்லைக்குள் விட்டுப்போன உடலைக் கட்டிக் கொண்டு அலறுகிறேன்.



சிரிக்காதே!



சாமா

"ஏ, கமலம்! இந்தச் சட்டை சின்னதாகப் போயிட்டதா, என்ன? கழுத்தை இறுக்கிப் பிடிக்கிறதே!"



"இருக்காது! இப்பத் தான் தெச்ச சட்டை. ஒரு சமயம் அவசரத்திலே நீங்கள் 'பட்டன்ஹோலில்' தலையை விட்டுக் கொண்டிருக்கிறீர்களோ, என்னமோ!"

✿

"சின்ன வயசிலே உங்க பயல் காசை விழுங்கி விட்டானே! எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கு....அந்தப் பயல் இப்பொழுது என்ன பண்ணுகிறான்?"



"ஒரு பாங்கியில் காஷியராக இருக்கிறான்!"

"அப்படியா! ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லுங்கோ!"

✿

வயதான இரு தம்பதிகளின் வாக்குவாதம்:



"நான் உங்களுக்கு முன்னால் போய் விட்டால் நான் நிச்சயம் சொர்க்கத்துக்குத்தான் செல்வேன்!"


"எனக்கு முன்னால் நீ போய் விட்டால் இதுவே எனக்குச் சொர்க்கம்தான்!"

✿

என்பது வயதான கிழவர் சாகும் தறுவாயில் தம் மனைவியைக் கூப்பிட்டு உயில் விஷயமாகப் பேசினார்: "நான் போன பிறகு என் வியாபாரத்தை நம் மூத்த பையனுக்குக் கொடு" என்றார்.



"வேண்டாம், இளைய பையனுக்குத்தான் பிசினஸ் தெரியும்" என்றாள்.



"சரி! என் மோட்டார் காரைப் பெண்ணுக்குக் கொடு" என்றார் கிழவர்.

"வேண்டாம் சின்ன மகனுக்குக் கார் இருக்கட்டும். நகைகளைப் பெண்ணுக்குக் கொடுக்கலாம்" என்றாள் அவர் மனைவி.



"சரி! கொடுத்துத் தொலை.....நம் காவிரிக் கரை பங்களாவை மூத்த பையனுக்குக் கொடுக்கலாம்!" என்றார் அவர்.

"வேண்டாம்! அது எனக்கு இருக்கட்டும்!" என்றாள் மனைவி.

கிழவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. "என்ன இது? எல்லாம் உன் இஷ்டத்துக்காகவா நான் கொடுப்பது? இப்பொழுது இறந்து போவது நீயா? நானா?" என்றார் கிழவர்.



✿

"என்னுடைய பயல் டாக்டருக்குப் படிக்கிறான், சார்!"

"வாஸ்தவமாகவா? அவன் சின்னப் பயலாக இருக்கும் போது மருந்துக்குக் கூடப் படிக்க மாட்டேன் என்றானே!"



✿

கைதி: உங்களை நம்பிக் கேஸ் தோற்று விட்டது. ஜெயிலுக்குப் போகிறேன்!

வக்கீல்: போய் விட்டு வா. சிறையில் இருக்கும் கைதிகளையும் விசாரித்ததாகச் சொல். அவங்களும் என் 'கிளையண்ட்ஸ்' தான்!

✿

ஒரு சங்கீத வித்வானிடம் ஒரு ரசிகர்:— என்னய்யா சுத்த கர்நாடகப் பேர்வழியா இருக்கிறீரே! கர்நாடக சுத்தமா உமக்குப் பாட வராது என்கிறீரே!"



✿


டெய்லர் கடையில் பேச்சு:

"'காதற்ற ஊசியும் வாராதுகாணும் கடைவழிக்கே' என்றார் பட்டினத்தார்."

"அட! வந்தால்தான் என்ன? அங்குபோய்த் தையல் கடையா வைக்கப் போறோம்!"

✿

"மனிதனுக்கு வாழ்க்கையில் எப்போது கசப்பு ஏற்படும்?"



"ஸ்வீட்டைத் தின்று விட்டுக் காரம் சாப்பிடாமல் காப்பி சாப்பிடும் போது!"

✿

டாக்டர்: எதற்கு எனக்கு நன்றி தெரிவிக்கிறீர்கள்?

நோயாளி: நீங்கள் கொடுத்த 'டானிக்'கைச் சாக்கடையில் கொட்டினேன். கொசுத் தொல்லை ஒழிந்தது.





காந்தி சொன்ன கதை

"காந்தி சொன்ன கதை"யை முதல் கதையாகக் கொண்ட இந்தச் சிறு கதைத் தொகுதியில் பன்னிரண்டு கதைகள் அடங்கியிருக்கின்றன. இந்த முதல் கதை இந்தத் தொகுதியின் சிகரமாக அமைந்திருக்கிறது. பாதிரியாரின் மதமாற்ற முயற்சி தோல்வியடைந்ததைக் குறித்து மகாத்மா காந்தி ஒரு கூட்டத்தில் கூறிய ரசமான கதையை. இத் தொகுதியின் ஆசிரியர் என். ஏ. வேலாயுதம் சுவை ததும்பக் குறிப்பிட்டுள்ளார். இந்த அருமையான கதையை வாசிப்போர் சிரிக்காமலிருக்க முடியாது. அதே சமயத்தில் இந்தியாவில் பாதிரிமாரின் மதமாற்றங்கள் எவ்விதம் நடைபெற்று வந்துள்ளன என்பதுபற்றி இந்தக் கதை அழகாகக் கூறுகிறது. 'இவரு காலேஜில் படித்துப் பெரிய எம். பி. பி. எஸ். ஆகப் போறாரு!' என்ற தன் மாமாவின் ஏளனப் பேச்சைத் தாரக மந்திரமாகக் கொண்டு, எம். பி. பி. எஸ் பட்டத்துடன் திரும்பிய ஏழை இளைஞனின் விடா முயற்சியைச் சித்திரிக்கிறது இரண்டாவது கதை.

"இந் நூலைப் படித்து முடிக்கும்பொழுது, பன்னிருவகையான உணர்ச்சிகள் உங்கள் உள்ளத்தை வட்டமிடும். அந்த நல்லுணர்ச்சிகள் நாட்டுக்கு நன்மை பயக்குமென உறுதியாக நம்புகிறேன்" என்று ஆசிரியரே முன்னுரையில் குறிப்பிட்டிருக்கும்போது, கதைகளைப் பற்றி நாம் வேறு சொல்லுவானேன்!

கிடைக்குமிடம்: அன்பு நிலையம், அலெக்சந்திரா ரோடு, நாகர் கோவில். விலை: ரூ. 1—50.

நூல் காணிக்கை

பாரத புண்ணிய பூமியில் அவதரித்த காந்தியடிகள் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம். அவர் அமர வாழ்வு பெற்ற தினமும் நினைவு நாளாகப் போற்றப்படுகிறது. நினைவு தினத்தை எவ்விதம் அனுஷ்டிக்க வேண்டும்? இதை, 'நூல் காணிக்கை' என்ற இந்த நூல் அருமையான முறையில் விளக்கியிருக்கிறது.

கிடைக்குமிடம்: சர்வோதயப் பிரசுராலயம், தஞ்சை. விலை: 30 ந. பை. —வாஞ்சி

சமூகத்தொண்டன்

இருநூற்றைம்பது பக்கங்களுக்கு மேற்பட்ட சமூகத்தொண்டன் ஆண்டு மலரில் ஈழ நாட்டின் பல்வேறு வகை இலக்கியக் குரல்களும் ஒலிக்கின்றன. ஈழத்து மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் அனைவரும் எழுதியுள்ளார்கள்.

'சமூகத் தொண்டனை' இயக்கும் சமூகத் தொண்டராகிய திருவாளர் க. பே. முத்தையா அவர்கள் தேனீயைப் போல் சுறுசுறுப்பாக முயன்று இந்த ஆண்டு மலரை ஆக்கியளித்திருக்கிறார். 1961-ம் ஆண்டு மலராகிய இதனுள் பயன்படும் கதை, கட்டுரை, கவிதைகள் நிறைந்துள்ளன.

பிரசுரம்: சமூகத் தொண்டன், யாழ்ப்பாணம், இலங்கை. விலை: ரூ. 2—50.

அழைக்காதே அனுசூயா

இந்நூலில் சின்னச் சின்ன நிகழ்ச்சிகளெல்லாம் கதைகளுக்கு அடிப்படையாக அமைந்து விடுகின்றன. ஒவ்வொரு கதையும் எதிர்பாராத முடிவைக் கொண்டிருக்கிறது. "அழைக்காதே அனுசூயா" என்ற முதல் கதையில் வரும் அனுசூயா எத்தகைய உத்தமி என்பது கதை முடிவில் பளிரென்று விளங்குகிறது. "பொல்லாத மாப்பிள்ளை" என்னும் கதையில் அந்த மாப்பிள்ளை எவ்வளவு நல்லவரென்பது கடைசியில் விளங்குகிறது. ஒருவன் தன் தங்கையின் திருமணம் முடியவேண்டுமே என்பதற்காகத் தனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்று புளுகுகிறான். அது அவன் காதலுக்கே உலை வைத்துவிடுகிறது. "அவரேதான்" என்னும் கதை இதை உருக்கமாகக் கூறுகிறது. மற்றக் கதைகளும் படிக்கச் சுவாரஸ்யமாயிருக்கின்றன. இருந்தாலும் ரசக் குறைவான பல பகுதிகளையும் எழுத்தில் தவிர்த்திருக்கலாம்.

எழுதியவர்: ஆர். எஸ். மணி; பிரசுரம்: மின்னொளிப் பதிப்பகம், 3, மயிலைப்பெருமாள் தெரு, சென்னை—1. விலை: ரூ: 1—50.

இலக்கிய நயம்

இனிக்கும் இன்தமிழ் மொழிக்கு மேலும் சுவை ஊட்டுபவை சங்க காலப் பாடல்கள். அவற்றைப் படிக்கப் படிக்க உள்ளத்தில் தமிழ்ச் சுவை அமுதெனப் பொங்கும். கயமனார் என்ற பண்டைத் தமிழ்ப் புலவரின் பாடல்கள் பலவற்றுக்கு விரிவான விளக்கம் தரப்பட்டிருக்கிறது இந்நூலில். எல்லாம் அகத்துறைப் பாடல்கள். தமிழில் ஆர்வங்கொண்ட மாணவர்களுக்குப் பயன்படும்.

எழுதியவர்: புலவர் செந்துறை முத்து: பிரசுரம்: வள்ளுவர் பண்ணை, நெ. 137, பிராட்வே, சென்னை—1. விலை: ரூ. 2—50.

* எல்லோராலும் புகழப்படுவது



"டிரெயான்ஸ்" ரேயான் நூல்களினுல் நெய்த ஆடைகள் எல்லோராலும் புகழப்படுகிறது.

இந்தியாவில் முதல் முதலாக சிறந்த ரசாயன முறையில் தயாரிக்கப்பட்ட உன்னத நூல் "டிரெயான்ஸ்" ரேயான் நூல்கள். விலை மலிவு-நீண்ட கால உழைப்பு-பகட்டான உடைகளுக்கு ஏற்றது.

"டிரெயான்ஸ்" ரேயான் நூல்கள் 100, 120, 150, 300 டினேயர்களில் தயாரிக்கப்படுகின்றன.

* ஸ்டாக்கிஸ்டுகள்

ரேயான் டிரேடர்ஸ் பிரைவேட் லிமிடேட்

போன்: 21641. 61, செம்புதாஸ் தெரு, சென்னை-1. தந்தி: "CELYARN"

கிளைகள்:

போன்: 253. தந்தி: "CELYARN" 68/416, மெயின் ரோடு, செவ்வாப்பேட்டை, சேலம்.

போன்: 598. தந்தி: "CELYARN" 114/A, தெற்கு மாசி வீதி, மதுரை.

போன்: 3441. தந்தி: "RAYONS" யுனைடெட் இந்தியா பில்டிங் அவிநாசி ரோடு, கோவை.

அன்பே ஆரமுதே

தி. ஜானகிராமன்

அத்தியாயம் பதினெட்டு

ராமலிங்கத்தின் பையன் பாகவதர் கூறியதைக் கேட்டு ஏதோ புரிந்து விட்டாற் போல் இடி இடியென்று சிரித்தான். குழந்தையின் சிரிப்பு சிவபாக்கியத்தையும் தொற்றிக் கொண்டது. பாகவதரின் முக சேஷ்டையைப் பார்த்துத்தான் அவன் அப்படி சிரித்திருக்க வேண்டும். எப்படியோ, விடாமல் ஒரு நிமிஷம் சிரித்தான். நினைத்து நினைத்துச் சிரித்தான். அதைப் பார்த்துச் சிவபாக்கியமும் சிரித்தாள். அந்தச் சிரிப்பு சுமையைக் கொஞ்சம் இறக்கி அவள் மனசை இலேசாக்கிற்று. மூட்டம் போட்டுப் புழுங்கிக் கொண்டிருந்த வேளையில் குளிர் காற்று ஒன்று சில்லென்று தவழ்ந்தாற்போல், சோர்வும் வறட்சியும் நிலவிய அந்தச் சூழலில் கலகலப்பை ஊட்டிற்று.

"சிரி, சிரி, நல்லாச் சிரிடா" என்றார் பாகவதர்.

"ராத்திரி மருந்து சாப்பிட்டியாடா, குழந்தை" என்று கேட்டார் அனந்தசாமி.

"ம். அம்மாதான் கொடுத்திச்சு."

"தூங்கினியா?"

"நல்லாத் தூங்கினேனே......ம்...... அப்புறம் ராத்திரி முழிச்சிட்டு அம்மாவைக் கூப்பிட்டேன். அம்மா பிஸ்கத் வாங்கப் போயிருக்காங்கன்னு சொல்லிச்சு ராணி. அப்புறம் ஒரு கதையும் சொல்லிச்சு" என்றான்.

"இன்னும் நல்ல மருந்தாக் கொடுக்கப் போகிறேன். அப்புறம் கட்டிலை விட்டு இறங்கி நீ ஓடி என்னோடவே விளையாட ஆரமிச்சிருவே."

"அப்ப, அப்பா கூப்பிட்டாக்கூட வர மாட்டே ன். ஓடியே போயிருவேன்."

"சரி-இதைச் சாப்பிடு" என்று மடியிலிருந்த ஒரு சிறு சீசாவிலிருந்து வெறும் சர்க்கரை மாத்திரை ஒன்றைக் கொடுத்தார் அனந்தசாமி.

வாங்கிச் சாப்பிட்டான். "நீங்க தர மருந்தெல்லாம் தித்திக்குதே. உங்கிட்ட சப்பு, புளிப்பு மாத்திரையே கிடையாதா?"

"கிடையாதுடா. எங்கிட்ட இருக்கிறதெல்லாம் தித்திப்பு மாத்திரைதான்" என்று அவன் காலைத் தொட்டுப் பார்த்து, நாக்கு, கண்ணையெல்லாம் பார்த்து விட்டு, "சரி, நான் வரட்டுமா?" என்று எழுந்தார் அவர்.

"சாயங்காலம் வருவீங்களா?"

"ஏன், வரணுமா?"

"முடிஞ்சா வாங்க."

குழந்தையின் இங்கிதத்தைப் பார்த்து, அனந்தசாமிக்கு உள்ளுக்குள் வேதனை செய்தது. "பகவானே! உன்னை நல்லவன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேனே" என்று நெஞ்சில் கசிந்து கொண்டே "முடிஞ்சா வரேன்" என்று சிரித்து விட்டு வெளியே வந்தார்.

"இரு. தம்பி! ஐயாவை விட்டுட்டு வந்திடறேன்" என்று சிவபாக்கியம் அவர்களைப் பின்தொடர்ந்தாள், முதல் ஹால் வரையில். அங்கே போட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தார் அனந்தசாமி.

"குழந்தை நல்ல புத்திசாலியம்மா" என்றார். "இதைப் பார். கவலைப் படாமலிரு. எல்லாம் சரியாகிவிடும்."

"எப்படிச் சரியாகும்? நீங்க ஏதாவது செய்தாத்தானே சரியாகும்?"

"நான் என்ன செய்யணும்?"

"அவங்களை வீட்டிலே கொஞ்ச நேரம் கால் தரிக்கச் செய்தாப்போதும். வீட்டிலேன்னு, சிநேக ஆபீசிலே இல்லே. இங்கேதான்....!"

"பார்க்கலாம்."


"உட்கார்ந்து பேச உங்களைப் போல் பெரியவங்க இல்லியா? உதவாக்கரைங்களோடவா சுத்தணும்?"

"அப்படி அவர் சுற்றுகிறதாகவும் தெரியவில்லையே. நேற்று நீ போன போது அந்த ரங்கன் தனியாகத்தானே அங்கே இருந்தான்? அவனோடு போகவில்லையே அவர்."

"நேத்திக்கு. மத்த நாளெல்லாம்?"

"மற்ற நாட்களிலே என்ன? அவர் தான் ரொம்பச் சிநேகமா அவருக்கு?"

"அவரும்...இன்னும் இரண்டு மூன்று பொறுப்பில்லாத, போக்கத்த ஜன்மங்களும்தான்."



"ரங்கன் எப்படிப் பொறுப்பில்லாதவன் என்கிறாய்?"

"நேத்து அவர் அழைச்சிட்டுப் போயிருக்கிறாரே, அந்தப் பொண்ணு ரங்கனுக்குத் தெரிஞ்ச பொண்ணாத் தானே இருக்கணும்......அந்த வீட்டிலே தானே ரங்கன் இருந்தாரு, நான் போய்ப் பார்க்கறப்ப!"

"அப்படியா நினைக்கிறே நீ?"

"ஆமாம். இந்தமாதிரி ஆளுங்க இப்படி சிநேகம் எல்லாம் பண்ணி வைக்கிறாங்க. ஒரு பெண்பிள்ளைன்னா அதை மதிப்பில்லாத ஜன்மமா நினைக்கிறவங்க தானே இவங்க. இந்தப் பட்டணத்திலேயும் இப்படி சீரழியறதுக்குத் தயாரா எத்தனை ஜன்மங்க இருக்கு. இவங்க தானே அப்படி ஆக்குறாங்க."

"வேறு தினுசா யோசிச்கப் பார்க்கப்படாதா? ஒரு விஷயத்தைப் பல வகையிலே யோசிச்கப் பார்க்கிறது நல்லதில்லையா?"

"எப்படி?"

"இந்த ரங்கனுக்குத் தெரியாமலே அவர் போயிருந்தால் ...?"

"எப்படி? எப்படி?" என்று சரியாக வாங்கிக் கொள்ளாததுபோல் கேட்டாள் சிவபாக்கியம்.

அனந்தசாமி மீண்டும் சொன்னதையே சொன்னார்.

சிறிது யோசித்தாள் சிவபாக்கியம். அதை ஒப்புக்கொள்ளுகிற களையே முகத்தில் தெரியவில்லை.

"என்னமோ ...?" என்று நம்பாமல் இழுத்தாள் அவள்.

"எப்படியிருந்தால் என்னம்மா. நீ கொஞ்சம் பொறுத்துக்கொள். என்னால் ஆனதைச் செய்கிறேன்."

"குழந்தைக்கு மருந்து கொடுக்க மாத்திரம் வரதாக நீங்க நினைச்சுக்காம, அவங்களுக்கும் வைத்தியம் பண்றதாக நினைச்சுக்கிட்டாத்தான் தேவலாம்" என்று முடித்தாள் சிவபாக்கியம்.

"சரி, அப்படியே நினைத்துக் கொள்கிறேன்" என்று நாற்காலியின் முதுகில் தலையைச் சாய்த்தவாறு கண்ணை மூடிக் கொண்டார் அனந்தசாமி, தியானத்தில் ஆழ்கிறாற்போல.

சிவபாக்கியம் உள்ளே போனாள். ஒரு நிமிஷம் கழித்துக் கண்ணைத் திறந்தார் அனந்தசாமி.

"உங்களால் ஒரு காரியம் ஆக வேண்டும் எனக்கு" என்றார் பாகவதரைப் பார்த்து.

"கேட்க வேண்டுமா? சொன்னால் செய்து விடுகிறேன்."

"வெளியே வந்து சொல்கிறேன். நாம் நடந்துதான் போக வேண்டும். இவன்

கார் கொடுப்பான் இல்லையா, நம்மைக் கொண்டுவிட?'' என்றார் அனந்தசாமி.

'' கட்டாயம் கொடுக்கத்தான் போகிறான்'' என்றார் பாகவதர்.

'' வேண்டாம் என்று சொல்லிவிட்டு நடந்து போக வேண்டும்.''

'' இவ்வளவுதானே. என்னமோ பெரிதாகச் சொல்லப் போகிறீர்களோ என்று பார்த்தேன்.''

கதவு திறப்பதைக் கேட்டுப் பாகவதர் பேச்சை நிறுத்தினார். காப்பியைக் கொண்டு வந்தாள் சிவபாக்கியம்.

வாங்கிச் சாப்பிட்டுவிட்டு, மூட்டையை அவிழ்த்து இரண்டு மருந்துப் பொட்டலங்களைக் கொடுத்தார் அனந்தசாமி, அவளிடம். '' அம்மா! இந்த மருந்தை இன்னும் சிறிது நேரம் கழித்துக் கொடு. ஏதாவது வலியோ, உபாதையோ இருந்தால், மருந்து வேலை செய்யத் தொடங்கி விட்டது என்று அர்த்தம். கொஞ்சம் உபாதை அதிகமானாலும் கவலைப் பட வேண்டாம். வைத்தியத்தை மாற்றி விடாதே அதிகமாகி விட்டதென்று. ம்?''

'' இல்லை.''

'' அப்படி யாராவது போதனையும் செய்வார்கள்.........அவர்கள் விஷயம் தெரியாதவர்கள்.''

'' எந்தக் கஷ்டமும் படத் தயார். இத்தனை நாட்களா குத்தின ஊசிங்களை விட இது குத்திப்பிடாதே.''

'' அப்படியிராது. நான் வரட்டுமா ?''

'' சரி...பின்னே சாயங்காலம் வரீங்களான்னு கேட்டுதே.''

'' நானே பதில் சொல்லுவேனே அதுக்கு.''


'' சரீங்க.''


விடைபெற்றுக் கொண்டு கீழே இறங்கும்பொழுது. '' சித்த இருங்க'' என்று பித்தானை அமுக்கப் போனாள் சிவபாக்கியம்.

'' கார் வேண்டாம்மா, எங்களுக்கு வேறு வேலை யிருக்கு. நடந்துதான் போகப் போறோம்'' என்றார் பாகவதர்.

'' எத்தனை வேலை யிருந்தாலும் கார் அழைச்சிட்டுப் போகும்.''

'' இல்லேம்மா......நான் ஒரு காரியமாகத்தான் சொல்கிறேன். பேசாமல் இருங்கள்'' என்று என்னமோ சொல்லி அவளைக் குழப்பிவிட்டு, '' வாருங்கள், ஸ்வாமி !'' என்று இறங்கி விட்டார் சுப்பராம பாகவதர்.





அதுவும் நமது பண்ணையிலிருந்தே!

தென்னிந்தியாவிலுள்ள சொந்த லாரிகள், வாடகை லாரிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை இருபதாயிரத்துக்கு மேல். அவை தினந்தோறும் ஏற்றிச்செல்லும் சாமான்களின் எடை எழுபதாயிரத்து இருநூறு டன். தொலைதூரத்திலுள்ள பண்ணைகளிலிருந்து அரிசி மூட்டைகளைமட்டுமல்லஆனால் விதவிதமான சாமான்களை—துணி பேல்கள், காய்கறி, மேஜை முதலியன, செய்தித் தாள்கள், மோட்டார்கள் போன்றவற்றை ஏற்றிச் செல்கின்றன.

முப்பது ஆண்டுகளுக்கு முன், டிவிஎஸ் சதர்ன் ரோட்வேஸ் சர்விஸ் ஆரம்பித்த பொழுதே, தென் இந்தியாவின் வியாபாரம் வளர்ச்சியுறுகிறது எனவும் அதன் பூரண வளர்ச்சிக்கு விரிவான சாலைப் போக்குவரத்து ஸ்தாபனங்கள் இன்றியமையாதவை என்றும் உணர்ந்தது. அத்தகைய ஸ்தாபனங்களுக்கு வழிகாட்டி, உறுதுணையாக நின்று உதவி செய்ய டிவிஎஸ் முன்வந்தது.

பண உதவி முதல் 'சேஸிஸ்' சப்ளை செய்து 'பாடி' கள்கட்டி, தேய்ந்துபோன உருப்புக்களைப்புதுப்பிப்பது வரை டிவிஎஸ் ஸ்தாபனங்கள் தென்னிந்தியாவில் வளர்ந்தோங்கும் மோட்டார்த் தொழிலின் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன.

டி. வி. எஸ். ஸ்தாபனங்கள் :

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ்
பிரைவேட் லிமிடெட்
மதுரை, திருச்சி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, சேலம், கோயமுத்தூர்
மோட்டார் வண்டி விற்பனையாளர்கள், ஆட்டோமோபைல் என்ஜினியர்கள்

சதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட், மதுரை
பிரயாணிகள், பார்சல் போக்குவரத்து

மதராஸ் ஆட்டோ சர்வீஸ்
பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பெங்களூர்
மோட்டார் சாமான்கள் விநியோகிப்பவர்கள்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்
புதுக்கோட்டை, மதராஸ் கோயமுத்தூர்
டயர் ரீடிரெட் செய்பவர்கள்

மதராஸ் மோட்டார் அண்ட் ஜெனரல் இன்ஷுரன்ஸ்
கம்பெனி லிமிடெட், மதராஸ்

சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட், மதராஸ்

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் அண்ட் அக்ஸெஸரீஸ் லிமிடெட், மதராஸ்
G. M. சாமான்களை இந்தியா முழுவதற்கும் விநியோகம் செய்பவர்கள்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ்-பெங்களூர்-செகந்திராபாத்
பியட், பிரீமியர், பார்கோ, லேலண்ட், பெர்கூஸன் டிராக்டர்கள் விற்பனையாளர்கள்

TVS

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை

> வேடன் மரத்தில் உட்கார்ந்திருக்கும் ஒரு பறவையை அடிக்க முயலுகிறான். அப்பொழுது அவனுடைய கண்களுக்குப் பட்சி மாத்திரம் தெரியவில்லை; மரம் கிளை, இலை, பூ, பழம் முதலியவையும் தெரிகின்றன. என்றாலும் அவன் கண்களின் லட்சியம் பறவையின் மேல்தான் நன்றாகப் பதிந்திருக்கிறது. அதேபோல் உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் பார்த்தாலும் உண்மைப் பொருளான பகவானைப் பார்ப்பதையே நாம் கண்ணின் லட்சியமாகக் கொள்ள வேண்டும்.
>
> ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடி பீடம்

கீழே இறங்கி ஹால் பக்கம் வரும் பொழுது வலது பக்கத்து அறையில் காசிலிங்கத்தின் குரல் கேட்டது.

வியப்புடன் அனந்தசாமியின் பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டுப் பாகவதர் உள்ளே போனார்.

"எப்ப வந்தாப்போல?" என்றார்.

"அடேடே வாங்க — இப்பத்தான் அஞ்சு நிமிஷம் ஆச்சு. நீங்க வந்திருக்கிறதாகச் சொன்னாங்க. இவங்களோட பேசிட்டு வரலாம்னு இருந்தேன். சித்தை இருக்கலாம்ல?"

"கிளம்பியாச்சு."

"அடே!" என்று கூறிக் கொண்டே வெளியே வந்தான் காசிலிங்கம். "வாங்க ...குழந்தையைப் பார்த்தீங்களா......?"

"பார்த்தாயிற்று. மருந்தும் கொடுத்தாயிற்று."

"வாங்க," என்று பின்னால் உள்ள மற்றொரு ஹாலில் நகர்ந்தான் அவன்.

"உட்காருங்க.........எப்படி இருக்கு குழந்தைக்கு?"

"இப்பத்தானே வைத்தியம் ஆரம்பித்திருக்கிறது."

"ஏதோ நீங்கதான் எல்லாம் இனிமே. மறுபடியும் போய்ப் பார்க்கலாம்னு..."

"இல்லை—பார்த்தாகிவிட்டது."

"சரி...சாமிக்கு எப்படிப்படுது? குணமாகும்னு......" என்று இழுத்து நிறுத்தினான் காசிலிங்கம்.

அனந்தசாமி அவனுடைய கண்களையே அசையாமல் பார்த்தார்; சிரித்தார்; சொன்னார். "நாம் பிறருக்கு இம்சை நினைக்காமல், இம்சை செய்யாமல் இருந்தால் நமக்கும் இம்சையில்லாமல் பார்த்துக் கொள்வான்" என்றார்.

"என்னங்க இது?" என்று குலுங்கக் குலுங்கச் சிரித்தான் காசி. மறுகணம் குலுங்கலும் சிரிப்பும் கடைந்து அடங்கி முகம் இலேசாகச் சுருங்கியது.

"சாமி என்ன சொல்றீங்க?"

"ஒன்றும் சொல்லவில்லை. பிறருக்கு இம்சையில்லாமல் நாம் நடக்க வேண்டும்" என்றார் அனந்தசாமி.

"யாருக்கு நான் அப்படி ஏதாவது நடக்கிறதாகத் தோணுதா?"

"இல்லை. பொதுவாகச் சொல்கிறேன். நம்முடைய பந்து ஜனங்களோ, அன்னியோ, அசலோ, யாருக்கும் நம்மால் இம்சை வரக்கூடாது. நான் இதை யாருக்குமே சொல்கிற வழக்கம். நீங்கள் இதை நினைவில் வைத்துக் கொண்டால் போதும். நீங்கள் என்னமோ செய்துவிட்டதாக மனசைப் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டாம்..."

"சரிங்க......மனசிலே நீங்க சொன்னதைப் போட்டுக்கிட்டேன் ஒரு காரணமிருந்தாத் தானே காரியம் வருது. விதைக்கிறோம். அறுக்கிறோம். சாமி சொல்கிறது சரிதானே."

"அதுதான். எங்கே, வெளியூர் போயிருந்தாற் போலிருக்கிறது" என்றார் அனந்தசாமி.

"ஆமாங்க. இப்பத்தான் வர்றேன்... காப்பி கீப்பி கொடுத்திச்சா உள்ளார?"

"எல்லாம் சாப்பிட்டோம்."

"எல்லாம்னு?"

"காப்பியிலே சகலமும் அடக்கமில்லையா?" என்றார் பாகவதர்.

"அது சரி சரி சரி சரி" என்று பணிவோடு சிரித்தான்.

இருவரும் மீண்டும் கார் உபசாரத்தை விலக்கி, விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தார்கள்!

கடற்கரைச் சாலையில் காலை அமைதி நிலவியது. ஏறிக் கொண்டிருந்த வெயில் பட்டுத் துள்ளித் துள்ளி விழும் வெள்ளலைகள் பொடித்த பளிங்காக மின்னி மின்னி விழுந்தன. அந்த அமைதியைக் கெடுத்து விடாமல் கடலலையின் இரைச்சல் 'சல்சல்'லென்று ஒலித்துக் கொண்டிருந்தது. கரையோரமாகக் காக்கைகள் அலைக்குப் பயந்து பயந்து, பறந்து பறந்து உட்கார்ந்து கொண்டிருந்தன. மீனவர்கள் வலையை உலர்த்தப் பரப்பிக் கொண்டிருந்தார்கள்.

"ஏன் சுவாமி, அவனைக் குழப்புகிறதையும் குழப்பிவிட்டு, மனசைப் போட்டுக் குழப்பிக்கொள்ள வேண்டாம் என்று வேறு சொல்லிவிட்டு வந்தீர்களே" என்றார் பாகவதர்.

"பொதுவாகச் சொன்னேன். அவன் குழம்பினால் ஏதோ இருக்கிறது என்றுதானே அர்த்தம். ஒரு மனசை எப்படித்தான் தயார் செய்கிறது, சொல்லுங்கள். ஏதாவது ஓர் இடத்தில் ஆரம்பித்துத்தானே ஆக வேண்டும்."



அஜந்தா கொண்டை அழகுக்கும்
அடர்த்தியான நீண்ட கூந்தலுக்கும்
கேசவர்த்தினி
உபயோகியுங்கள்
கேசவர்த்தினி
கூந்தலைப் பாதுகாத்து
வளர்த்து
அழகுபடுத்துகிறது
தயாரிப்பவர்கள் கேசவர்த்தினி பிராடக்ட்ஸ், கோயமுத்தூர்-12



அழகுக்கு
திறவுகோல்
மகிழ்ச்சியூட்டும் மாசமருவற்ற முகப்
பொலிவு; மிருதுவான தளிர் சருமம்;
மோகனப் புன்னகையை அள்ளி வீசும்
ஆனந்தம் - இவைகளுக்குக் காரணம்
ஆப்கன் ஸ்னே
அழகு சாதனங்கள்

"அதற்காக அவனைப் பார்த்ததும் பார்க்காததுமாக, வெடுக்கென்று எதையோ சொல்லி—"

"ஏதாயிருந்தால் என்ன? அவன் மனசில் கல்மஷம் இல்லாத வரையில் அவனுக்கு ஒன்றும் நேரிடாது...... எத்தனை புத்திசாலிகள்!" என்றார் அனந்தசாமி.

"யாரு?"

"இந்தக் கடற்கரை இவ்வளவு விசாலமாக, இவ்வளவு அழகாக இருக்கிறதே... எத்தனை நீளம்! என்ன காட்சி! உலகத்தில் கிடைக்காத காட்சி. நிற்கத் துளி நிழலில்லாமல் ஒரு மரம் இல்லாமல் வைத்திருக்கிறார்களே... அவர்களைச் சொன்னேன்."

"இங்கே ஒன்றும் வளராது, சுவாமி."

"அதெல்லாம் இல்லை சோம்பேறித்தனம்...... சோம்பேறித்தனம் என்றதும், ஞாபகம் வருகிறது. நான் வெளியே வந்ததும் ஒரு காரியம் உங்களால் ஆகவேண்டும் என்று சொன்னேனே. சொல்லட்டுமா?"

"ம்!"

"நேற்று அந்த ரங்கன் யார் வீட்டிலோ உட்கார்ந்திருந்தான் என்று சொன்னீர்களே... இந்தக் காலி அந்த வீட்டுப் பெண்ணைத்தானே அழைத்துக் கொண்டு போனான்?"

"அப்படிக் கேள்விப்பட்டதாகச் சிவபாக்கியம் சொன்னாள்."

"நாம் அங்கே போகவேண்டும் இப்பொழுது."

"என்ன சுவாமி இது!"

"போகவேண்டும். அவர்கள் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டும்."

"யார் என்ன என்று எப்படி விசாரிக்கிறது?"

"நீங்கள் வீட்டைக் காட்டினால் போதும். இல்லை, விலாசம் சொன்னால் போதும். நான் போய்க் கொள்கிறேன்."

"எதற்காக அவதி. ஏதோ சந்து. பேர்கூடச் சரியாக ஞாபகம் இல்லை. நானே கொண்டு காண்பித்து விட்டுப் போய் விடுகிறேன்" என்று

பாராசூட்!

மணிக்கு இருநூறு மைல் வேகத்தில் விமானம் பறந்து சென்று கொண்டிருக்கிறது!

"'பாராசூட் ஜம்ப்' ஒத்திகைக்குத் தயாராகுங்கள்" என்று அறிவிக்கிறது ஒலிபெருக்கி. வீரர்கள் பாராசூட்டை முதுகில் சரி செய்து கொண்டு தயாராகிறார்கள்.

விமானத்தின் கதவு திறக்கப்படுகிறது. மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு சேனாபதி திறந்த கதவருகே நிற்கிறார்.

ஒலிபெருக்கி அலறுகிறது: "பத்து, ஒன்பது, எட்டு, ஏழு, ஆறு, ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று.

உடனே பாராசூட் வீரர்கள் ஒவ்வொருவராகக் கீழே குதிக்கிறார்கள். ஒவ்வொருவர் முதுகிலும் ஒரு தட்டை தட்டிக் கொடுப்பது போலத் தள்ளி விடுகிறார் சேனாபதி. "....பதினெட்டு, பத்தொன்பது, இருபது, இருபத்தொன்று..." பேர்கள் குதித்தாயிற்று. இன்னும் ஒரே ஒரு வீரர் தான் பாக்கி. சேனாபதியின் பார்வை விமானத்துக்குள்ளே செல்கிறது ஸ்ரீமான் நிதானம் மெல்ல எழுந்திருக்கிறார். சேனாபதியை நோக்கி நகருகிறார். சேனாபதியின் கண்களில் அனல் பறக்கிறது. கதவருகே வந்து நின்று ஒரு கொட்டாவி விடுகிறார் ஸ்ரீமான் நிதானம்.

சேனாபதியின் உடல் கோபத்தில் நடுங்குகிறது. "இரவு நல்ல தூக்கமில்லை" என்கிறார் நிதானம் சாவதானமாக. கீழே குதிக்க யத்தனிக்கிறார்.

அவர் சட்டையைப் பற்றித் தடுத்து நிறுத்துகிறார் சேனாபதி.

"ஓய்! எங்கேய்யா போகிறீர்?"


"ஹி, ஹி! ஓ இது கூடவா தெரியவில்லை? கீழேதான்!"

ஆத்திரத்தில் குரல் நடுங்கச் சேனாபதி கேட்கிறார்:

"பாராசூட் அணிந்து கொள்ளாமலே குதிக்கிறீரே! உமக்கு மூளை இருக்கிறதா, ஓய்?"

ஸ்ரீமான் நிதானம் மெல்ல முதுகைத் தடவிப் பார்த்துக் கொள்கிறார். 'மறந்து விட்டேன்போலிருக்கிறது. அதனாலென்ன ஸார்? பரவாயில்லை! இப்போ வெறும் ஒத்திகைதானே பார்க்கிறோம்? அதற்குப் போய் பாராசூட் அணிந்து கொள்வானேன்? நிஜமாகவே குதிக்கப் போகும் சமயத்தில் மறக்காமல் கட்டிக் கொண்டால் போயிற்று!"

— சாமா



திரும்பிப் பார்த்தார் பாகவதர். அவசரம் அவசரமாக நடந்தார்.

"ஏன் பாகவதர்வாள் திடீரென்று இப்படி?" என்றார் அனந்தசாமி.

"அதோ...பாருங்கள், பஸ் வருகிறது. அது வருவதற்குள் நிற்கிற இடத்துக்குப் போக வேண்டும். என்றால் நடக்க முடியாது."

"அது அடையாறு போகிற பஸ் அல்லவா?"

"ஆமாம். மந்தைவெளியில் இறங்கித்தான் போக வேண்டும்."

அனந்தசாமியும் காலை எட்டிப் போட்டார். பஸ் வந்ததும் ஏறினார்கள். வெளியில் இறங்கி நாலைந்து சந்து பொந்துகளில் நுழைந்தார்கள். ஒரு சின்னச் சந்து. கோடியில் நின்று, "அதோ பார்த்தீர்களா? கறிகாய் வாங்குகிறாரே ஒரு கிழவர். அந்த வீடு தான்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தார் பாகவதர்.

அனந்தசாமி நடந்தார். ஓர் ஆள்கூடப் புரண்டு படுக்க முடியாத திண்ணை. அங்கே கடை வைத்து நின்ற அங்காடிக் காரியின் தராசில் கத்திரிக்காயைப் போட்டு முள்ளைப் பார்த்துக் கொண்டிருந்தார் கிழவர்.

யார் இவர்? எங்கோ பார்த்தாற் போலிருக்கிறதே என்று யோசித்தார். நின்று அவரைப் பார்த்தார். முள்ளைப் பார்த்த கிழவர் கத்தரிக்காயைப் பிரம்புக் கூடையில் வாங்கிக் கொண்டு தன்னைப் பார்க்கிற யாரோ ஒரு சாமியைச் சற்று நோக்கினார்.

இருவரும் அப்படி நாலைந்து விநாடிகள் பார்த்துக் கொண்டார்கள்

"என்ன?" என்றார் அனந்தசாமி.

"யாரு. தெரியலையே!" என்று பொக்கைவாயுடன் புன்சிரிப்பு சிரித்தார் கிழவர். அப்படித் தொண்டு கிழவராகவும் இல்லை. வயது ஐம்பத்தைந்து, அறுபது இருக்கும். பல்லெல்லாம் விழுந்து விட்டது.

"உங்களை எங்கேயோ பார்த்தாற் போலிருக்கே" என்றார் அனந்தசாமி. "எந்த ஊர்?"

"எனக்குத் தெற்கே..."

"திருச்சிராப்பள்ளியில் இருந்திருக்கிறீர்களோ?"

"இருந்திருக்கிறேன்."

"ஆனைகட்டி மைதானத்துக்கிட்ட."

"ஆமாம்."

"திண்ணை யொட்டினாற்போல் ஒன்று கூட இருக்கும் நீங்க இருந்த வீட்டிலே."

"கரெக்டாகச் சொல்கிறீர்களே?" என்று சிரித்தார் கிழவர். "முப்பத்தஞ்சு வருஷமாச்சே நான் அங்கே இருந்து......நீங்க......"

"என்னைத் தெரிகிறதோ?" என்றார் அனந்தசாமி.

"சட்டென்று தெரியவில்லையே?"

"நீங்கள் இருந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலே அனந்து என்ற ஒரு பையன் ரூம் வைத்துக் கொண்டு வாசித்துக் கொண்டிருந்தானே."

கிழவர் யோசித்தார். மறுபடியும் மந்தஹாசம். "எங்கே! எத்தனையோ வருஷமாச்சு......உள்ளே வாங்களேன்."

அனந்தசாமிக்கு அந்தப் பழைய முகம் ஞாபகம் வந்தது. இளமையின் முறுக்கு. காதில் ஒற்றைக்கல் வெள்ளைக் கடுக்கன். இளமையில் இலேசாகச் சொட்டை விழுந்து விட்ட தலை, சில்க் சட்டை, கையில் குடை, வாயில் வெற்றிலை. கீழே ஜரிகை வேட்டி, காலையில் பத்து மணிக்கு இந்த உருவம் தினமும் இறங்கிப் போகும் ஆனால் பேசிப் பழக்கம் இல்லை. அவர் எந்த ஆபீசில் வேலை பார்த்தார் என்றும் அவருக்கு ஞாபகம் இல்லை இப்போது.

மனத்தைத் துருவிக்கொண்டே உள்ளே போனார் அனந்தசாமி. மிகவும் சிறிய வீடு. வெள்ளையடிக்காத சுவர்கள். குழந்தைகள் பென்சிலால் எண்ணற்ற கணக்குகள் போட்டிருந்த சுவர்கள். எண்ணெய்ப் பிசுக்கு வேறு. 'சங்கரன் வீடு' என்று பெரிதாக எழுதியிருந்தது. "இல்லை பெரமிலாவின் வீடு" என்று கீழே மாற்று உரிமை வரைந்திருந்தது. சங்கர் ரப்பர் இருடிஜன் என்று அதற்கும் கீழே ஒரு வாசகம். அனந்தசாமி எல்லாவற்றையும் வாசித்துக் கொண்டே உட்கார்ந்தார், கிழவர் காட்டிய கிழிசல் கயிற்றுக் கட்டிலில்.

கறிகாயை உள்ளே தள்ளிவிட்டு வந்தார் கிழவர். அவரோடு சூறை வயிறும் இடுப்பில் பல முடிகள் போட்ட கறுப்புக் கயிறுமாக ஒரு பிள்ளைக் குழந்தை சூம்பல் கைகாலுடன் வாயில் விரலைப் போட்டுக் கொண்டு, கட்டிலில் வந்து உட்கார்ந்த கிழவரின் துடைமீது தலையைச் சாய்த்துக் கொண்டு நின்றது. மூச்சு வாங்கிற்று அதற்கு. அவ்வளவு பலஹீனம். பச்சை நரம்பு ஓடும் அழுக்கு உடம்பு. தலையைச் சாய்த்துக் கொண்டே அனந்தசாமியைப் பார்த்தது. அதே சமயம் பளிச்சென்று சம்பங்கிப்பூ மாதிரி ஒரு பெண் சிவப்புப் பட்டுப் பாவாடையும் தாவணியுமாக வந்து நிலையில் நின்று எட்டிப் பார்த்ததை அனந்தசாமி கவனிக்கவில்லை. அவர் குழந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தார். (தொடரும்)





என்னைப் பற்றி நானே சொல்லக் கூடாது தான்; இருந்தாலும் சொல்லுகிறேன். காதிலே விழுந்தால் கேளுங்கள்; கொஞ்ச காலத்துக்கு முன் இந்த ஊரில் டிராம் வண்டி என்று ஒன்று ஓடிக்கொண்டிருந்து இந்தப் பட்டணத்தையே அதிர அடித்தது உங்களுக்கு நினைவு இருக்கலாம். பிறகு அந்த ரோடுகள் பண்ணின புண்ணியம் அந்த வண்டியையே ஒழித்துவிட்டார்கள். அதன் பிறகு ஊருக்கு ஒரு நிம்மதி ஏற்பட்டது பல பேர்களுக்குப் பிடிக்கவில்லை. என்னைச் சிருஷ்டி செய்து ரோடுகளில் பவனி வரச் செய்தார்கள். முதன்முதலில் விபூதியும் ருத்ராக்ஷமும் அணிந்த ஒருவர்தான் என் ஸீட்டில் உட்கார்ந்து பழனியாண்டி போல் காட்சியளித்துப் பவனி வரத் தொடங்கினர் என்பது என் ஞாபகம். திடீரென்று சாலைகளில் போகும் பல ஆஸ்திகர்கள் என்னைப் பார்த்து 'முருகா! முருகா' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டு கைகூப்ப ஆரம்பித்தார்கள். காரணம் தான் மயில் வாகனம் மாதிரி காட்சியளித்ததுதான்.

என் பிழைப்பு என்ன பிழைப்பு போங்க! கண்ட வேளையில் எனக்கு ஆகாரம். எதுவும் ஒத்துக்கொள்ளவில்லை. இந்த நாற்றப் பெட்ரோலும் அந்த எண்ணெயும் தான் நிரந்தர ஆகாரம். இது இரண்டையும் கலந்து என்னுள்ளே ஊற்றும்போது எனக்குக் குமட்டிக் கொண்டு வருகிறது. குமட்டும் சத்தமும் உங்களுக்குக் கேட்டிருக்கும் என்று நம்புகிறேன்.

சாலையில் நடமாடும் மக்கள் எந்த வாகனமும் கிடைக்காமல் கதியற்ற நிலையில் தவிக்கும்போது தான் என்னைச் சவாரிக்கு அழைக்கிறார்கள்....பாவம்! உள்ளே உட்கார்ந்து சவாரி செய்கிறவர்கள் கீழே இறங்கும்போது எலும்பு வேறு, கூடு வேறாகப் பிரிந்துதான் போய் விடுகிறார்கள்!

ஒரு சமயம் ஒரு பாட்டி முட்டை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு, வாயில் 'பல் செட்'டையும் கட்டிக்கொண்டு என்மீது பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். நான் குலுக்குகிற குலுக்கலில் பாட்டியின் 'பல் செட்' எகிறிக் கீழே விழுந்து விட்டது.

பொக்கைப்பல்லான பாட்டி "ஏ! தொந்தம் நிறுத்து!" என்று பலக்கக் கத்தினாள். இன்னும் ஒரு பெரிய குலுக்கலில் பாட்டியும் என்னைக் கை விட்டு வண்டியை விட்டு வெளியே விழுந்தாள்.



டிரைவருக்குச் சாதாரணமாக எல்லாம் பின்பக்கம் என்ன நடக்கிறது என்பதே தெரியாதாகையால் வளைந்து, வளைந்து எகிறி, எகிறிப்போய்க் கொண்டே இருந்தான். பாட்டி விட்டுப்போன முட்டை முடிச்சுகள் இங்கும் அங்குமாகக் குதித்து ஒன்றொன்றாக ரோட்டில் குதித்தன. என் மனத்துக்கு என்னவோ செய்தது. 'பிறந்ததுதான் ஆட்டோ ரிக்ஷாவாகப் பிறந்தோம். ஒரு நல்ல காரியம் செய்ய வேண்டும்' என்று நினைத்து, கொஞ்சம் 'மக்கர்' செய்தேன். 'புக், புக், பட், பட்' என்று சொல்லி நின்றுவிட்டேன். டிரைவர் உடனே இறங்கி என்னைப் பரிசோதனை செய்து விட்டுப் பின்னால், ஆசனத்தில் ஒருவரும் இல்லாததைக் கண்டு திடுக்கிட்டுத் திரும்பி வந்து வழியில் விழுந்து கிடந்த முட்டைகளை வாரிப் போட்டுக் கொண்டான். பிறகு கொஞ்சதூரம் போய் உருண்டுகிடந்த பாட்டியையும் வாரிப் போட்டுக் கொண்டான். ரயிலடிக்குப் போய்ச் சேர்ந்தால் மறுபடியும் அந்தப் பாட்டியைக் காணவில்லை; எப்படி இருக்கிறது!

ஒரு தடவை ஒரு கனபாடிகளை ஏற்றிக் கொண்டு போகும்படியாக நேரிட்டது. பாவம்! அவருக்கு ரொம்ப அவசரம் போலிருக்கிறது. "உம்...ரொம்ப வேகமாகப் போகணும். நுங்கம்பாக்கத்துக்கு" என்று பறந்தார். கேட்க வேண்டுமா என்னுடைய சாரதி வெகு வேகமாகப் போனார். உள்ளே கனபாடிகள் குலுங்கினார், பக்கவாட்டில் சாய்ந்தார், பின்பக்கம் உருண்டார்......தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மை போல் உருண்டார். குறிப்பிட்ட இடம் வந்த உடனே சத்தம் போட்டு, என்னை நிறுத்தி, 'சற்று நில்லுமய்யா. இதோ உள்ளே போய்ப் பூஜை செய்துவிட்டு வந்து விடுகிறேன்' என்றார்.

மந்திரம் சொல்லும்போது 'ஆபோ ஹிஷ்டா மயோ புவஹ' என்பதற்குக் கனபாடிகள் 'ஆட்டோ ரிக்ஷா மயோ புவஹ!' என்று சொல்லி எல்லோரையும் திணற அடித்தார். 'கனபாடிகளே நீங்க ஆட்டோவில் வந்ததில் மந்திரமே மாறிவிட்டதே' என்று சொல்லி எல்லோரும் சிரிக்கத் தொடங்கினார்கள்.

என் கவனம் திடீரென்று இதோ ரோட்டில் புரண்டு வரும் ஒரு தினசரிப் பத்திரிகையில் செல்கிறது. கொஞ்சம் இருங்கள். என்னைப் பற்றித்தான் எழுதியிருக்கு. 'இனி ஆட்டோ ரிக்ஷாக்களுக்குப் புதிதாக லைசென்ஸ் கொடுப்பது நிறுத்தப்பட்டது'.....அடடா! சொச்சம் படிப்பதற்குள் பத்திரிகை பறந்து விட்டதே! பார்த்தீங்களா, நம்ம கதை எப்படி முடியப் போவுது என்று? மெல்ல மெல்ல எங்களை ஒழிக்க ஏதோ சதி நடந்திண்டு வரது. ...உம்.... நான் மறைந்துபோனாலும் யாரும் எனக்காகக் கண்ணீர் விடமாட்டார்கள்.



ஆனால் நான் மட்டும் பஸ் கிடைக்காமல் தவிக்கும் நடுத்தர வகுப்புப் பிரயாணிகளுக்காகக் கண்ணீர் விடுவேன். இருக்கட்டும். லைசென்ஸ் இருக்கும் வரையில் என் பணியை நான் செய்கிறேன்... குட்பை! டாட்டா! டாட்டா டர்ர்....ர் டர்...


— குமார்

அறிமுகப்படுத்துகிறோம்...

பாமாலிவ்

லவண்டர் டால்க்

பெருமிதமும்... வசீகரமும் தரும் பிரசித்தி பெற்ற லவண்டரின் நறுமணம் இப்பொழுது உங்களுக்குப் பிடித்தமான பாமாலிவ் டால்க் மூலம் கிடைக்கிறது. இந்த மிக நுண்ணிய சேர்த்தியான டால்க் உங்கள் சருமத்தில் பரவி நாள்முழுவதும் நீடித்திருந்து, உங்களைப் புத்துணர்ச்சியுடனும் பரிமள அழகுடனும் வைத்திருக்கும் சேர்த்தியை நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்.




டால்கம் பவுடர்

PT.G.S.T.

தமாஷ்!






இருபது வருடங்களுக்கு முன்!
இருபது வருடங்களுக்குப் பின்!



டாக்டருக்கு ஏராளமான 'பேஷண்ட்ஸ்': அவர் என்ன செய்வார் பாவம்!



"ஓட்டலுக்குப் போய் நன்றாக வயிறு புடைக்கச் சாப்பிட்டேன்."
"ஆமாம், அதற்கு உங்கள் மண்டை ஏன் புடைச்சிருக்கு? பில் கொடுக்காமல் வெளியே வந்தீரோ?"



"அவர் பெரிய 'பில்டிங்' எஞ்சினீயர் என்பது எல்லோருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி...!"

சாமா

மிகச்சிறந்தது !



வீட்டிற்கும் — ஹோட்டலுக்கும்

ப்ரூக் பாண்ட்

ஸ்பெஷல் ஹோட்டல் ப்ளெண்ட்

டஸ்ட் தேயிலையே

- ஒவ்வொரு பாக்கெட்டும் அதிகப்படியான கோப்பைகள் நல்ல தேநீர் கொடுக்கிறது.
- ஈரம்படியாதவாறு பாக்செய்யப்பட்டிருப்பதால் புத்தம் புதுமைக்கு உத்திரவாதம் அளிக்கிறது
- லட்சக்கணக்கான வீடுகளில் இதனை விரும்பி அருந்தி ஆனந்தம் அடைகின்றனர்.

மூன்று அளவுகளில் கிடைக்கிறது
500 கிராம், 100 கிராம்,
50 கிராம்

இடைவேளை!

கோமதி சுவாமிநாதன்



வெங்காயத்தின் நறுமணம் காண்டீன் கதவு வழியாகவும், ஜன்னல் வழியாகவும் வராந்தாவில் சூழவே, பாலாஜி பூரி மசாலா தயாரித்து முடித்து விட்டான் என்னும் செய்தி அந்தக் காண்டீன் தயாரிப்புகளை நம்பி வாழும் காரியாலய ஊழியர்களுக்கு எட்டிவிட்டது. அவர்கள் ஒரு நாளும் கடிகாரத்தைப் பார்த்து வேலை செய்து பழக்கப்பட்டவர்கள் அல்ல! காண்டீன் தயாரிப்பின் நறுமணத்தைக் காலவரையாகக் கையாண்டு பழகியவர்கள்.

அனுப்பப்பட வேண்டிய தபால் ஒன்றில் பங்களூர் என்று எழுத ஆரம்பித்த ரகுபதி 'பங்....' என்ற இடத்திலேயே பேனா ஓட்டத்தை நிறுத்தி, பேனாவை மூடிவிட்டு ஆசனத்திலிருந்து எழுந்திருந்தான்.

காண்டீனின் தினசரித் தயாரிப்புகளை அறிவிக்கும் கரும் பலகையில் பலகார வகைகளையும், விலையையும், காலையில் காரியாலயம் வந்தவுடன் பாலாஜியைக் கேட்டு எழுதும் திருப்பணியைக் கௌரவ வேலையாக மேற்கொண்டிருந்தான் ரகுபதி. ஒரு சமயம் கத்திரிக்காய்பஜ்ஜி என்பதை ஏதோ நினைவில் கத்திரிக்கோல் பஜ்ஜி என்று அவன் எழுதி வைத்து எல்லோரும் பஜ்ஜிக் கடலைமாப் போர்வைக்குள் இரும்புத் துண்டுகளைத் தேட ஆரம்பித்து விட்டார்கள்!

காண்டீன் களை கட்ட ஆரம்பித்தது! வரதன் குரல் அமர்க்களமாக இட்டிலியின் தத்துவத்தை விமர்சித்து ஒலிக்கத் தொடங்கியது. அவன் இந்தக் காரியாலயத்துக்கு வந்து சேருமுன் ஓர் எலிமெண்டரி பள்ளிக்கூடத்தில் கொஞ்ச நாட்கள் உபாத்தியாயராக இருந்தவன். காச்சு மூச்சென்று கத்தும் குழந்தைகளின் ஒலியை அமுக்கி அதட்டும் வகையில் தன் குரலைச் சாதகம் பண்ணியிருந்தான்.

''பாலாஜி! இட்டிலி மிஞ்சிப் போனால் கவலைப்படாதே! ஆபீஸிலே பேப்பர்வெயிட் சப்ளை பண்ணமாட்டேங்கறாங்க! அதற்குப் பதிலாக உன் இட்டிலியை சப்ளை பண்ணிவிடலாம். யானையை நிறுத்தி அதன் மேலே உன்னுடைய ஓர் இட்டிலியைத் தூக்கி வைத்தால் அந்த யானையாலே ஒரு மில்லிமீட்டர் கூட நகரமுடியாது! எத்தனை மில்லிமீட்டர்? ஒரு மில்லிமீட்டர்! பிரமாதம்! இட்டிலிக்கு உளுந்து போட்டாயா? ஞாபகமில்லாமல் உளுத்தம்பருப்பு சாக்குக்குப் பதிலா சிமெண்டுசாக்குக்குள் கைவிட்டாயா? உண்மையைச் சொல்லிவிடு! இல்லே...''

''இல்லாத போனால் பெஞ்சி மேலே நிற்கணுமாக்கும்! வரதனுக்கு இன்னும் பழைய வாத்தியார் வேலையின் நினைவு போகலே! ...அன்றைக்கு நம்ப மானேஜர்கிட்டே என்ன சொன்னே? ஒரு தடவை எங்களுக்கும் சொல்லேன்! கேட்போம்'' என்று சொல்லிக்கொண்டே வேதாந்தம் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

வேதாந்தம் ஒரு தனிப் பிரகிருதி. காண்டீன் தயாரிப்புக்களைக் கண்ணெடுத்துப் பார்ப்பான். ஆனால் கையால் தொடமாட்டான். வேதாந்தம் ஒரு வெங்காய விரோதி என்று ஆபீஸ் முழுதும் அறிந்த ரகசியம். ஆனால் வேதாந்தத்துடன் நெருங்கிப் பழகும் சிலருக்கு வேதாந்தத்துக்கு வெங்காய வாசனை நன்கு பிடிக்குமென்றும், ஆனால் வெங்காயம்தான்

பிடிக்காதென்றும் தெரியும். வீட்டிலிருந்து சிக்கனமாக ஒரு பெரிய மூட்டையை டிபனைக் கொண்டு வந்து மாலை மூன்று மணிக்கு பீரோவில் பைல்கள் தேடும் பாணியில் நின்று டிபனை அப்படியே விழுங்கும் வேதாந்தம் இடைவேளையில் வம்புப் பேச்சுக்காகக் காண்டீன் பெஞ்சுகளை நாடி வருவதைத் தவிர்ப்பதில்லை.



"ஓ! அதுவா? நான் சொல்றேன்! நான்தான் ஒரு நேரடி சாட்சி ஆயிற்றே!" என்று குறுக்கிட்டான் நரசிம்மன். "அன்னிக்கு நடந்தது இதுதான்! நம்ப ஹரன் ஒரு கடுதாசிக்கு 'டிராப்ட்' போட்டு மானேஜரின் கையெழுத்துக்கு அனுப்பிச்சான். பைல் உள்ளே போன அரை மணி நேரத்துக்கெல்லாம் மானேஜர் மகானுபாவனிடமிருந்து தாக்கீது வந்தது. ஹரன் உள்ளே போய், ராமர் பட்டாபிஷேகப் படத்திலே ஆஞ்சநேயர் பவ்யமாக நிற்பதுபோல் நின்றான்..."

'என்ன எழுதியிருக்கிறீர்? தலையெழுத்து! படியும்!' என்றார் மானேஜர். ஹரன் பைலை எடுத்துத் தான் எழுதியதையே திக்கித் திணறிப் படித்தான். அவன் படித்து முடிக்கும் வரை ஜன்னல் வழியாகத் தோட்டத்தில் சண்டை போட்டுக் கொண்டிருந்த குருவிகள் மீது கர்ம சிரத்தையாகக் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்த மானேஜர் 'இன்னொரு தடவை படியும். ஒண்ணும் புரியலே!' என்றார் தலையைத் திருப்பாமலே! அவ்வளவுதான்; ஹரன் தன்னை மறந்து விட்டான். பழைய வாத்தியார் ரத்தம் 'ஜிவ்' என்று ஓட ஆரம்பித்துவிட்டது! 'புரியலே! புரியலே! புரியலே! மடஜன்மங்கள்! உங்களுக்கு எப்படிச் சொல்லிக் கொடுத்தால்தான் புரியும்? உங்களைக் கொண்டு என் தலையிலே கட்டியிருக்கிறான் பாரு, அந்தப் பாழும் பகவான்! சே! சே!... இந்தக் கடிதாசியைப் பார்த்துப் பத்து தடவை இம்போஸிஷன் எழுது!' என்று பைலைத் தொப்பென்று மானேஜர் மேஜையில் போட்டு விட்டான். மானேஜருக்கு மயக்கமே வந்து விட்டது. நான் மெதுவாக ஹரனைப் பிடிச்சு வெளியே அனுப்பி விட்டு, நிலைமையை மானேஜருக்குத் தெளிவு படுத்தினேன்!" நரசிம்மன் நிறுத்தினான்.



"சரிதான்! அந்தச் சம்பவத்துக்குப் பிறகுதான் ஹரனை வேறு இலாகாவுக்கு அனுப்பினாரோ!..... வாத்தியாரே! மானேஜரை மாணவன் என்று நினைத்து வெளுத்துக் கட்டி விட்டாயாக்கும்! பேஷ்! இனிமேல் யாரையும் கூப்பிட்டு அப்படி எழுதினதைப் படிக்கச் சொல்ல மாட்டார்!" என்றான் எல்டு கிருஷ்ணசாமி.

'எல்டு' என்ற அடைமொழி கிருஷ்ணசாமிக்கு வந்த விதமே விநோதமானது. எந்தக் காலத்திலேயோ கல்லூரி நாட்களிலே அவன் யாருக்கோ ஆங்கிலத்தில் அழுத்தம் திருத்தமாகத் தன் காதலைத் தெரிவிக்கும் ஆர்வத்தில் 'லவ்' என்ற பதத்துக்கு இரண்டு 'எல்'களைத் தாராளமாகப் போட்டு 'ல்ல்லவ்' என்று ஒலிக்கும்படி எழுதினானாம். அந்தக் கடுதாசி கல்லூரிப் பிரின்ஸிபால் வரை போயிற்று! பிரின்ஸிபால் 'ஸ்பெல்லிங் மிஸ்டேக்கை'த்தான் பெரிய குற்றமாக நினைத்தாரே தவிர அவன் காதல்செய்ய முயன்றதைக் கருதவில்லை. அதிலிருந்து 'எல்டு' அதாவது இரண்டு 'எல்'கள் என்ற பெயர் அவனை ஒட்டிக்கொண்டு அவனுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்த பிறகுங்கூட காரியாலயம் வரை துரத்திக் கொண்டு வந்து விட்டது.

"நம்ப ஹரனுக்கு வாத்தியார் பிசாசு பிடிச்சது போன மாசம் இருபத்திமூணாம் தேதிதானே!" என்று சரித்திர உபாத்தியாயர் பாணியில் ஒரு கேள்வியை வீசினான் வேதாந்தம்!

"இதை வை தலையிலே! வேதாந்தம். ஏண்டா பழைய பஞ்சாங்கத்தை விரிக்க ஆரம்பிச்சுட்டாய்?" என்றான் பாச்சு.

"எல்லாம் காரணமாகத்தான் கேட்கிறேன்! போனமாசம் இருபத்திமூணாம் தேதிதான்! ஆமாம்! அன்றைக்குக் காலையிலேதானே ஹரனுக்குக் குங்குமம் தடவிய கார்டு வந்தது. பிரசவத்துக்கு ஊருக்குப் போயிருக்கும் மனைவிக்கு நாலாவது பெண் குழந்தை பிறந்திருக்கிறதென்று!. அப்புறம் மனுஷனுக்குப் புத்தி நிதானத்திலா இருக்கும்?" வேதாந்தம், மற்றவர்களும் தன் கூடச் சேர்ந்து சிரிப்பார்கள் என்ற எண்ணத்தில் தானே சிரித்தான்.

"பாலாஜி! இன்னொரு இட்டிலி!" என்று குரல் கொடுத்தான் ஹரன். பாலாஜி வஞ்சம் தீர்த்துக்கொள்

னக் காத்திருந்தவன் போல் ''சிமிண்டு இட்லி சார்! வேணுமா?'' என்றான்.


''சிமிண்டு இட்லி தின்றால்தான் இந்த ஆபீஸில் கான்கிரீட்டாக வேலை செய்ய முடியும்! கொண்டா!'' என்றான் ஹரன்.

தட்டு ஸ்பூன் கிளாஸ் ஒலிச் சேர்க்கைகள் எதிரொலித்தன.

பாச்சா, அரட்டைக் கச்சேரியிலிருந்து ஒரு நிமிட அவகாசம் பெற்றுப் பாலாஜியிடம் போய் ஒரு கீரை வடையையும் வடையளவு கெட்டிச் சட்டினியையும் வாங்கிக் கொண்டு வந்து ஹரன் பக்கத்தில் உட்கார்ந்தான்.

''எத்தனை காரம் சாப்பிட்டு என்ன பிரயோசனம்? உடம்பிலே காரம் ஏறவில்லையே? தோப்புக்கரணம் போட்டுப் போட்டு உடம்புக்கு 'எக்ஸர்ஸைஸ்' கிடைப்பதுதான் மிச்சம்!'' என்றார் குப்புசாமி, வீட்டிலிருந்து கொண்டு வந்த டிபன் பாக்ஸைத் திறந்து கொண்டே.

பாச்சா என்ற பார்த்தசாரதி வீட்டில் ஒரு 'மனைவி கைப் பொம்மை' என்பது காரியாலயத்தில் பிரசித்தமான விஷயம். பேச்சில் நாலு வார்த்தைகளுக்கு ஒரு வார்த்தை 'என் வொய்ப்' என்று சொல்லாமல் பாச்சாவினால் பேச முடியாது.



''என்ன அக்கிரமம் பார்த்தீர்களா? காங்கோவிலே நடக்கிற அட்டூழியங்களுக்கெல்லாம் நாகரிகம் நிறைந்த நாடுகள்தான் காரணம். அதுதான் என் 'வொய்ப்' சொல்றாள்.'' என்று உலக அரசியலில் தொடங்கிப் பலவித பிரச்னைப் பாதைகளில் புகுந்து, ''என்ன சார், இந்த ஆபீஸ் உத்தியோகம்! சுத்த அடிமைப்பிழைப்பு! மாடாக உழைத்தாலும் அதைப் பாராட்ட ஒரு பயல் இல்லை. அதுதான் என் 'வொய்ப்' சொல்றா...'' என்ற ரீதியில் காரியாலய அரசியலில் வந்து நிற்பான்.

''ஷோ...ஷோ..ஷோம்பே வந்துட்டார்!'' என்று அறிவித்தான் ரகுபதி, சங்கரனைக் காண்பித்து! டைப்பிஸ்ட் சங்கரனுக்கு வெளித் தோற்றத்தில் எல்லாம் நம்பிக்கை கிடையாது. அவன் தலை எந்த மழைக்காலத்திலும் 'சம்மர்' கிராப்புடன்தான் விளங்கும். முகக்ஷவரம் மாதம் ஒரு முறைதான். நிறம் கார்பன் பேப்பரை விட ஒரு மாற்றுக் கம்மி. ஆகவே, கடாங்காவின் தலைவர் ஷோம்பேயின் படம் பத்திரிகைகளில் வெளிவந்த தினத்தன்று ரகுபதி அந்தப் பத்திரிகைப் படத்தைக் கிழித்து அதனடியில் 'சங்கரன்' என்று எழுதி டைப்ரைட்டிங் மெஷினில் ஒட்டிவிட்டான்.

படம் கிழிஞ்சு போச்சு! ஆனால் சங்கரனுக்கு அந்தப் பெயர் ஒட்டிக் கொண்டது!

சங்கரன் ரகுபதியை அலட்சியமாகப் பார்த்துவிட்டு, பாலாஜியிடம் ஒரு பிளேட் பூரி மசாலாவை வாங்கிக் கொண்டு வந்து சும்மா உட்கார்ந்து கொண்டிருந்த வேதாந்தத்தின் பக்கம் அமர்ந்தான். வெங்காய நெடி மூக்கைத் தாக்கவே முகத்தைச் சுளித்துக் கொண்டான் வேதாந்தம்.

''காம்ரேட்ஸ்! இதோ கண்கொள்ளாக் காட்சி! நம்ப வேதாந்தம் வெங்காய வாசனையை ரசிக்கும் காட்சியைப் பாருங்கள்! கட்டணமில்லை!'' என்று எக்ஸிபிஷன் மைதானங்களில் ஒலிபரப்புக் கருவியின் விளம்பரப் பாணியில் கூச்சலிட்டான் ஹரன். இறுகிப் போயிருந்த 'சிமிண்டு' இட்டிலி மென்னியைப் பிடித்ததைக்கூடப் பொருட்படுத்தவில்லை.

''வேதாந்தம்! இந்த அசத்துக்களோடு எல்லாம் ஏன் பழகுகிறீர்? நம்மாழ்வார் பாசுரத்திலே என்ன சொல்றார் தெரியுமோ? பகவான் வந்து...'' என்று கீரை வடையை விண்டு கொண்டே பாச்சா ஆரம்பித்தான்.

''நம்மாழ்வார் இருக்கட்டும். முதலில் நீ இப்படிக் காண்டீனிலே தைரியமாக ஒரு வடையும் ஓசியாக ஒன்றரைக் கிலோ சட்டினியையும் விழுங்குவது பற்றி உன் 'வொய்ப்' என்ன சொல்லப்போறா? இந்த ஏழு பைசா செலவுக்கு 'அட்வான்ஸ் சாங்ஷன்' வாங்கியாச்சா? உன் 'வொய்ப்' இந்தச் செலவை அனுமதிக்க மாட்டேன் என்று சொன்னால் பிறகு எப்படி இந்தச் செலவினத்தைச் சரிக்கட்டுவாய்?'' என்றான் சங்கரன்.

''எல்லாம் வீட்டுக்கு வீடு வாசற்படிதான்! எவன்தான் வீட்டில் மனைவிக்குப் பயப்படவில்லை! மீசை இருக்க வேண்டிய இடங்களை இங்கே வந்து தடவுறாங்களே தவிர வீட்டிலே கை வாயைப் பொத்திக் கொண்டிருக்கிறது! என்ன பார்த்தசாரதி, சொல்லேன் ஐயா!'' என்று கண்களைச் சிமிட்டினான் எல்டு கிருஷ்ணசாமி.

''ஆசாமி வெண்ணெயாக உருகிய கதை உங்கள் ஒருவருக்கும் தெரியாது போலிருக்கு! பிரமாதமாக இவருக்கு 'சப்போர்ட்' பண்ணிண்டு வர்றியே? என் சம்சாரம் என்கிட்டே சொல்லிப் பார்க்கட்டும்! அப்படியே அந்த நெய்ப் பாத்திரத்தை அவள் தலையிலே கவிழ்த்து ஒரு மூணாம் கிளாஸ் டிக்கட்டையும் வாங்கிக் கையிலே கொடுத்துப் பிறந்த வீட்டுக்கு விரட்டியிருக்க மாட்டேனா?... பாவம்! நம்ப பாச்சாவைத்தான் அவன் சம்சாரம் விரட்டினா! மனுஷன் மறுபடியும் ஒரிஜினல் வெண்ணெய்க் கடைக்கு ஓடினான்!''

ஹரன் தனக்கே உரித்தான உச்ச ஸ்தாயியில் கூறினான். அவன் எதிர்பார்த்தபடி எல்லோர் கண்களும் அவன் மேல் பதிந்தன.

''பார்த்தசாரதி! சொல்லட்டுமா?'' என்று பயமுறுத்தினான் ஹரன். பாச்சாவா இந்தப் பூச்சாண்டிகளுக்குப் பயப்படுவான்! அலட்சியமாகத் தட்டில் மிஞ்சியிருந்த சட்டினியை வழித்து விழுங்குவதில் ஈடுபட்டான். ஹரன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு ஆரம்பித்தான்:

''பார்த்தசாரதி சம்சாரம் வைகுண்டம் கடை வெண்ணெயைத் தவிர வேறு வெண்

ணெயைக் கையாலே தொட மாட்டான். கண்ணால் பார்க்க மாட்டான். மூக்கால் முகர மாட்டான். 'அந்தக் கடை வெண்ணெயை உபயோகிக்காதவர்கள் மனிதர்களா?' என்று கேட்கும் சுபாவம். நம்ப பாச்சா எத்தனை தான் தலைபோகிற வேலையாக இருந்தாலும் அதை விட்டுவிட்டுப் பிரதி வியாழக்கிழமை சாயங்காலமும் டவுனுக்குச் சைக்கிளிலே போய் அரை வீசை வெண்ணெய் வாங்கி வருவான். இரண்டு வாரங்களுக்கு முன்னாலே ஒரு வியாழக்கிழமை நம்ப பாச்சா ஏதோ நினைவிலே பழைய சிநேகிதனோடு பேசிக்கொண்டிருந்து விட்டு வெண்ணெய் வாங்க மறந்து போனான். வெண்ணெய் இல்லாமல் வீட்டுக்குள் நுழைய முடியாதே!.. தெரு முனையிலே இருக்கிற கடைக்காரன்கிட்டே அரை வீசை வெண்ணெய் வாங்கிக் கொண்டு போய்க் கொடுத்து விட்டான். அவன் மனைவியும் அதை உருக்கி உபயோகிக்க ஆரம்பித்து விட்டாள். மறுநாள் சாயங்காலம் இரண்டு பேருமாகச் சேர்ந்து கறிகாய் வாங்க அதே தெரு முனை மார்க்கெட்டுக்கு வந்தார்கள். அந்த வெண்ணெய்க் கடைப் பிரகஸ்பதி சும்மா இருக்கக் கூடாதோ? 'அம்மா! ஐயா நேற்று அபூர்வமாக நம்ப கடையிலே வெண்ணெய் வாங்கிட்டு வந்தாரே?.... அந்த வைகுண்டம் கடைச் சரக்கை விட உயர்ந்ததாக இருந்ததா இல்லையா, நீங்களே சொல்லுங்க!... இதுக்காக இனிமே டவுனுக்குப் போக மாட்டீங்களே?' என்று கேட்டு வைத்தான். படுபாவி! நம்ப பாச்சா, வைகுண்டம் கடைவெண்ணெய்தான் என்றுசொல்லிமனைவியிடம் ரீப் அடித்திருக்கிறான் என்று கண்டாளா?



"அவ்வளவுதான்! பாண்டியனைப் பார்த்து விழித்த கண்ணகி போல் பாச்சா சம்சாரம் பாச்சாவைப் பார்த்து விழித்தாள். பாச்சா உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை நடுங்கினான். 'ஹி! ஹி!... நான் இப்பவே டவுனுக்குப் போயிட்டு வந்துடறேன்! நேற்று வாங்கி உருக்கின வெண்ணெயை....' என்று ஆரம்பித்தான். 'கோவில் விளக்கிலே கொண்டு விடுங்கள்! உங்கள் புத்தியாவது தெளியும். என்னடாப்பா வயிற்றில் ஒரு மாதிரி வேதனையாக இருக்கிறதே என்று பார்த்தேன்! இந்தக் கடை வெண்ணெயா!' என்று முடித்தாள் மிஸஸ் பாச்சா. அப்படியே பஸ் ஏறி விட்டான் பாச்சா!... ஆஹா! இந்தக் காட்சியை நான் எதிர்க் கடையிலிருந்து ரசித்தேன்."

ஹரன் நிறுத்தினான். "பெரிய வெண்ணெய் வெட்டி சிப்பாய் கதையாக இருக்கிறதே! புதுக் கடைக்காரன் சொன்ன பிறகு தான் வயிற்றில் ஏதோ வேதனை தோன்றியதாகச் சொன்னாளோ?... இந்தப் பொம்மனாட்டிகள் இருக்கிறார்களே!... அவர்கள் எதையாவது நினைத்துக் கொண்டு விட்டார்களோ..." சங்கரனை முடிக்க விடாமல் அப்போதுதான் வந்த சுப்பாமணி "அதை நடத்தியே தீருவார்கள்! அதிலே என்ன சந்தேகம்! என் 'வொய்ப்'கூட இப்படித்தான்..." என்று ஆரம்பித்தான்.

"ஆஹா பார்த்தசாரதி — 2 வாழ்க! உங்க 'வொய்பு'ம் சொல்ல ஆரம்பிச்சுட்டாங்களா?" என ஏகோபித்த குரல்கள் எழுந்தன.

ஏகோபித்த குரல்கள் கேலியாக எழுப்பிய ஒலியால் சுப்பாமணியா அயருவான்? சுப்பாமணி டெலிபோனில் பேசினால் நடுவிலே கம்பியே அவசியமில்லை! அடையாறுக இருந்தாலும் சரி, அயனாவரமாக இருந்தாலும் சரி! கணீரென்று காதில் விழும்' என்று அவனுடைய அசுரக் குரல் காரியாலய நண்பர்களிடம் ஆட்சேபணையே இல்லாத நற்சாட்சியைப் பெற்றிருந்தது. சுப்பாமணிக்குக் காரியாலயத்தில் மற்றச் சிப்பந்திகளுக்கான, பேப்பர், பென்சில், குண்டூசி, கிளிப் முதலிய சாமக்கிரியைகளை விநியோகிக்கும் பொறுப்பு. நாலு குண்டூசி கேட்டால் 'இல்லை! இல்லவே இல்லை!' என்று முதல் மூன்று நாட்கள் 'இல்லை' பாட்டுப் பாடிவிட்டு, நாலாம்நாள் ஒரு குண்டூசியை அது கையில் குத்திவிட்ட வேதனையுடன் எடுத்துக் கொடுப்பான். 'கர்ண மகாராஜனின் பேரனடா நீ!' என்று சொல்லி ரகுபதி அந்த ஒற்றைக் குண்டூசியையும் வாங்கிக்கொண்டு வருவான். எது கேட்டாலும் இல்லை என்று ஓங்கி அடிப்பது சுப்பாமணியின் ரத்தத்தில் கலந்து ஓடும் இயல்பு. ஒருசமயம் அவன் சம்சாரம் வீட்டில் அவசரமாக 'ஐயோ! தேன் ஓடுகிறது. அடிக்க ஒரு கம்பு தாருங்களேன்' என்றாளாம். 'ஹூம்! இல்லை. ஸ்டாக் தீர்ந்து போச்சு! நாலு நாட்கள் கழித்துக் கம்பு சப்ளை வரும். அப்போ பார்க்கலாம்!' என்றானாம் ஆபீஸ் நினைவில். நாலு நாள் கழித்து மீண்டும் வரத் தேனுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? அது அடுக்களைப் பொந்துக்குள் அடைக்கலம் புகுந்தது. நாலு வார்த்தை சுப்பாமணி வாயிலேயிருந்து உதிர்ந்தால் மூன்று வார்த்தைகள் 'இல்லை' என்ற வார்த்தையாகவே இருக்கும்.

'என் வொய்ப் என்ன சொன்னாள் என்றுதானே கேட்கிறீர்கள்? சொல்றேனே! 'நான் சொன்னபடி கேட்டால்தான் ஆபீஸ் போவதற்குள் சாப்பாடு கிடைக்கும்' என்றாள். நான்




ஆல மரத்தடி நிழலிலே...

முன்பெல்லாம் சாதாரணமாக நம்நாட்டு கிராமவாசிகள் அன்றாட வேலை முடிந்தவுடன ஆலமரத்தின நிழலில் கூடி பொழுதைக் கழிப்பது வழக்கம். இப்பொழுதோ அவர்கள் மத்தியில் டிரை-ஸெல் ரேடியோ ஸெட் ஒன்று செய்தி அறிக்கைகளையும், அவர்களுக்குப் பிடித்தமான பாட்டுக்களையும் ஒலிபரப்பிக் கொண்டு அவர்களை இன்பத்தில் ஆழ்த்தி வருவதை சாதாரணமாகக் காண்கிறோம்.

இக்காலத்து கிராமவாசிகள் ரேடியோ நிகழ்ச்சிகளை மிகத்தெளிவாகக் கேட்பதற்கு அதிக சக்தி அளிக்கக்கூடிய எஸ்ட்ரெலா பாட்டரிகளையே உபயோகிக்க விரும்புகிறார்கள். நீண்ட காலம் உழைக்கக்கூடியதும், டிரை-ஸெல் பாட்டரி உற்பத்தியில் 20 வருஷ அனுபவத்தினால் தயாரிக்கப்பட்டதுமான எஸ்ட்ரெலா பாட்டரிகள் வெளிநாடுகளில் உற்பத்தியாகும் சிறந்த பாட்டரிகளுக்கு சமமானவையென்று பரிசோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

உங்கள் ரேடியோவிற்கு ஒரு எஸ்ட்ரெலா பாட்டரியை இன்றே பொருத்துங்கள். இது உங்களுக்குத் தேவையான எல்லா அனுகூலங்களையும் ஒருங்கே அளிக்கவல்லது.



எஸ்ட்ரெலா

ரேடியோ பாட்டரி

இப்பொழுது உங்கள்
ரேடியோ டீலரிடம் கிடைக்கிறது



எஸ்ட்ரெலா பாட்டரீஸ் லிமிடெட்
பம்பாய் • மதராஸ் • டெல்லி • கல்கத்தா • கான்பூர்

ES-G-6 TAM.

கேட்டேன்! சாப்பிட்டு விட்டும் வந்தேன். இரண்டு பக்கமும் பரஸ்பரம் புரிந்து கொண்டால்தான்வாழ்க்கை நிம்மதியாக இருக்கும்! அதற்குப் பெரு பயப்படறது இல்லே!'' சுப்பாமணி ரகுபதி நீட்டியிருக்கும் காண்டீன் சாமான் பட்டியலில் கண்களை ஓட்டினான்.

"'அவள் என்ன சொல்லியிருப்பாள்? இவன் என்ன கேட்டிருப்பான் தெரியுமா? எனக்குத் தெரியும்'' என்று கொக்கரித்தான் ஷோம்பே சங்கரன்.



"'அந்தப் புடவையைத் தோய்த்து உணர்த்துங்கள்! அதற்குள் இந்தப் புடலங்காயை நறுக்கி வேக வைக்கிறேன்' என்று சொல்லியிருப்பாள்'' என்றான் வேதாந்தம்!

"கர்மம்! கர்மம்! அது போன நூற்றாண்டு 'ஜோக்கு'டாப்பா வேதாந்தம்!...நீயே நூறு வருஷங்கள் பின்னாலே பிறந்திருக்கிறாய்! வாயை மூடிக் கொண்டு பிறர் சொல்வதைக் கேளேன்!'' என்று ஹரன் ஒரு வெட்டு வெட்டிவிட்டுச் சங்கரனைப் பார்த்தான்.

"'இதோ பாருங்கோ! எனக்குச் சோம்பலாக இருக்கிறது. லட்சுமண பவனிலே போய் ஓர் எடுப்புச் சாப்பாடு கொண்டுவந்து எனக்கும் போட்டுட்டு நீங்களும் சாப்பிட்டு விட்டுப் போங்கள்' என்று சொல்லியிருப்பாள்! அப்படித்தானே சுப்பாமணி? நீ அந்த உத்தரவுக்குக் கீழ்ப்படிந்திருப்பாய்'' என்றான் சங்கரன்.

'ஓட்டல் சாப்பாடா? நோ ஸ்டாக்! ஆர்டர் கொடுத்திருக்கு! அடுத்த வாரம் வரும்' என்று சொல்லியிருப்பானே சுப்பாமணி!'' என்றார் குப்புசாமி. இதற்குள் சுப்பாமணி பாலாஜியிடம் போய் ஒரு பிளேட் வாழைக்காய் பஜ்ஜியும் இரண்டு ரொட்டித் துண்டுகளும் வாங்கிக்கொண்டு வந்து உட்கார்ந்தான்.

"உங்களுக்குத்தான் கற்பனை ஸ்டாக் இல்லே!....'உடம்பு சரியாக இல்லே! நீங்களே ஓர் ஆழாக்கு அரிசி வடித்து ஒரு வற்றல் குழம்பையும் வைத்துச் சாப்பிட்டு, எனக்கும் போட்டு விட்டுப் போங்கள்' என்று என் 'வொய்ப்' சொன்னாள். ஆஹா தயார்! என்று கச்சத்தைக் கட்டிக்கொண்டு சமையலில் இறங்கினேன்! இதனாலே நான் பெண்டாட்டிதாசன் என்று ஆகிவிடுமா?...என்னவோ நாலாவது ஹென்றி எட்டாவது ஹென்றி என்று சரித்திரப் புஸ்தகம் புரட்டுகிறமாதிரி இரண்டாம் பார்த்தசாரதி என்று அளக்கிறீர்களே!'' என்றான் சுப்பாமணி!

"பலே! பலே! இதுதான் குடும்ப கோஆப்பரேஷன். ஆனால் எனக்கு ஒரு சந்தேகம்...'' என்று ஆரம்பித்தான் ஹரன்.

"உன் சந்தேகம் எனக்குப் புரிகிறது! சுப்பாமணி சமையல் செய்து, தான் சாப்பிட்டு விட்டு ஆபீஸுக்குக் கிளம்பிய பிறகு, அவன் சம்சாரம் துணிந்து அந்தச் சமையலைச் சாப்பிட்டிருப்பாளா? அல்லது அப்புறம் தானே ஏதும் தயார் பண்ணிச் சாப்பிட்டிருப்பாளா என்பது தானே அந்தச் சந்தேகம்?'' என்று கேட்டான் பார்த்தசாரதி.

"உங்க சந்தேகத்தில் நியாயம் இருக்கிறது! ஆழாக்கு அரிசி வடித்து, சுண்டை வத்தல் குழம்பு வைக்கச் சொன்னாள் அல்லவா? நான் ஓர் ஆழாக்கு சுண்டை வத்தலை எடுத்து அரிசி வெங்கலப் பானையில் போட்டு விட்டேன்!...அப்புறம் நல்ல வேளையாக...''

அவனை முடிக்க விடாமல் ஹோவென்ற சிரிப்பொலி எழுந்தது! "பலே! பலே!...பாலாஜி! கவனமாய்க் கேட்டு வைத்துக் கொள்! நீ என்னவோ தேங்காய் கொட்டாங்கச்சியை லொல்லாம் உடைத்துப் போட்டுக் கோகோனட் பாத் பண்ணுகிறாயே! சுப்பாமணியிட்டே கேட்டுண்டு நாளைக்குச் சுண்டைக்காய் பாத் பண்ணிவிடு!'' என்றான் எக்ஸ் கிருஷ்ணசாமி.

"பேச்சு வெண்ணெய் வியாபாரத்தில் ஆரம்பித்துச் சுண்டைக்காய் வற்றலில் வந்து முடிந்ததாக்கும்? மினிமி தர்பார் பேச்சு வழி பிசகி எங்கேயோ போய்விட்டதே!'' என்றான் ரகுபதி. ரகுபதி கட்டை பிரம்மச்சாரி.

"நீ இப்பவே பாடம் கற்றுக்கொள்ள ஆரம்பித்து விட்டாயா? அவசியம்தான்! நாளைக்கு ஒருத்தி வந்து விரட்டு விரட்டென்று விரட்டும்போது நீ, நம்ப பாச்சா மாதிரி விழிக்கக் கூடாது பாரு!'' என்றான் ஹரன்.

"பத்து வருஷ குடும்ப சர்வீஸ் ஆகுமா பாச்சா விழிக்கிறான்? இது என்ன இன்னொரு வெண்ணெய்க் கதையா?'' என்று கேட்டான் சுப்பாமணி.

"இது நெய் வியாபாரமில்லே! பொய் வியவகாரம்! நம்ப பாச்சா ஹிந்திப் படம் பார்த்த கதை!'' என்றான் சங்கரன்.

"ஹிந்திப் படமா? பார்த்தசாரதி அது கூடப் பார்க்கிறானா?'' என்றார் குப்புசாமி.

"நான் சொல்றேன், அந்த ரகளையை'' என்று ஆரம்பித்தான் சங்கரன்.

"நம்ப பாச்சாவோட ஹிந்திபாஷா ஞானம் 'அச்சா, டீக் ஹை! பஸ், மாலூம்' முதலிய வார்த்தைகளோடு சரி! ஆனால் சம்சாரத்திடம், தான் பிரவீண் படித்தவன் என்ற ரீதியில் தம்பட்டம் அடித்துக் கொள்வான். மிஸஸ் பாச்சாவுக்கு ஹிந்தி கொஞ்சம் கொஞ்சம் வரும். ஹிந்தித் திரைப் படங்கள் பார்க்கும் ஆசை மாத்திரம் அடிக்கடி வந்து விடும். துணைக்குப் பாச்சாவும் போக வேண்டும். படத்தில் புரியாத சம்பாஷணைகளை யெல்லாம் அங்கேயே பாச்சாவிடம் விளக்கம் கேட்பாள்! பாச்சா ஏதோ சண்டப் பிரசண்டமாக வியாக்யானம் செய்து விடுவான். இதற்காகவே மறுநாள் குறிப்பிட்ட படத்துக்குப் போவதாக இருந்தால் முதல்நாளே, அந்தப் படத்தின் கதையைப் பல பத்திரிகை

களிலிருந்தும் சினிமா சஞ்சிகைகளிலிருந்தும் பரீட்சைக்குப் போகும் மாணவன் மாதிரி உருப்போட்டுத் தயார் செய்து கொள்வான். சில சமயங்களில் இரண்டு மூன்று படங்களுக்கான கதை சம்பாஷணை ஞானத்தையும் சேர்த்து வைத்துக் கொள்வான்.

''ஒருநாள் நம் அபூர்வ தம்பதிகள் மிட்லண்டுக்குப் புறப்பட்டார்கள். பஸ் கிடைக்கவில்லை. வீரத் தம்பதிகள் பின்வாங்குவார்களா? அசோக்குக்குப் போகும் பஸ் பிடித்து உட்கார்ந்து விட்டார்கள். தியேட்டருக்குள்ளும் போய் உட்கார்ந்து விட்டார்கள்.

''பாச்சா இந்தப் படம் பார்க்க நேரிடும் என்று நினைத்தவனில்லை. படத்தில் வரும் சம்பவங்களுக்கு அவள் ஏதோ விளக்கங்கள் கேட்கப் பாச்சா, மிட்லண்ட் படத்துக்கான கதையைப் போட்டுக் குழப்ப, கடைசியில், 'இல்லை! இல்லை! அது வேறே படம்' என்று அவன் ஒப்புக்கொண்டு தவிக்க, அவள் 'ஓஹோ! நீங்கள் ஆபீஸ் போறேன் போறேன் போறேன் என்று சொல்லி ஒரு சினிமா விடாமல் பார்க்கிறீர்களா? திடீரென்று ஒரு நாள் உங்களைத் தேடி வருவதுபோல் உங்கள் ஆபீஸுக்கு வந்து நீங்கள் இருக்கிறீர்களா என்று பார்க்கப் போகிறேன்' என்று பயமுறுத்த, நான் பின்னால் சீட்டிலிருந்து இந்த விரட்டல்களையும் மிரட்டல்களையும் படத்தை மறந்து ரசித்தேன்! அப்பவாவது பாச்சா, உண்மையை ஒப்புக் கொண்டானா? ஊஹூம்!'' சங்கரன் நிறுத்தினான்.

''அச்சா! உங்ககிட்டே எவனாவது மாட்டிக் கொண்டால் அவன் தீர்ந்தான்!'' என்று சொல்லிக் கொண்டே பார்த்தசாரதி எழுந்திருந்தான்.

''உட்காரு பாச்சா! இன்னும் டிபன் நேரம் முடியலே! சீட்லே போய் உட்கார்ந்து என்ன வெட்டிக் கட்டப் போகிறாய்! பாலாஜி! நம்ப பாச்சாவுக்கு ஒரு பிளேட் சட்னி மாத்திரம் கொடப்பா!'' என்றான் நரசிம்மன்.

''பிரதர்ஸ்! நான் புள்ளி விவரம் சேர்க்கலாம்னு பார்க்கிறேன். நம்ப ஆபீஸிலே முதல் முதலாக நீங்கள் எதற்காவது பொய் சொல்லியிருக்கலாமல்லவா?...லீவு லெட்டரிலோ, தாமதமாக வந்ததாலோ, மானேஜர் இந்தக் கடிதத்துக்குப் பதில் போக ஏன் தாமதம் என்று விரட்டியபோதோ சொல்லியிருப்பீர்களே: அந்த முதல் பொய்யை அவரவர்கள் வாயாலேயே சொல்லுங்களேன்! ரசிக்கக் கூடிய பொய்யைச் சொன்னவர்களுக்கு நான் என் கணக்கில் ஒரு கப் காப்பி வாங்கித் தருகிறேன்'' என்றான் ரகுபதி.

''முதல் பொய்யைச் சொல்ல வேண்டுமா? சமீபத்திய பொய்யைச் சொல்லவேண்டுமா?'' என்றான் வேதாந்தம். தொடர்ந்து ''சமீபத்திய பொய்யாக இருந்தால், எல்டி கிருஷ்ணசாமி சொன்னதுதான் பிரமாதம். 'பையனுக்கு அட்மிஷன் வாங்கப் பள்ளிக்கூடத்துக்கு அலைகிறேன்' என்று சொல்லி மூணுநாள், சீசன் பொய்யைச் சொல்லி விட்டு வீட்டிலிருந்தான். உண்மையில் பள்ளிக்கூடம் போவதற்கு அவனுக்கு இனிமேல் தான் பையன் பிறக்க வேண்டும்!'' என்று முடித்தான்.

''யாருக்கப்பா பையன் பிறக்க வேண்டும்?'' என்று கேட்டுக் கொண்டே 'நியூமரிக்கல்' ஜகதீசன் வந்து சேர்ந்தான். அவன் கையில் பெரிய எவர்சில்வர் ஒற்றை டிபன் 'பாக்ஸ் இருந்தது.

என். ஜகதீசன் நியூமரிக்கல் ஜகதீசன் என்று அழைக்கப்படுவதற்கு நிறையக் காரணம் இருந்தது. காரியாலய பைல்களுக்கு நம்பர் கொடுப்பதுபோல் சக ஊழியர்களுக்கும் உட்கார்ந்திருக்கும் வரிசையைப் பொறுத்து நம்பர் கொடுத்திருந்தான். மானேஜர் ஓ—1. அதாவது ஆபீஸ் நம்பர் ஒன். இதே ரீதியில் பார்த்தசாரதிக்கு ஓ. 7. எல்டிவுக்கு ஓ—11 இத்தியாதி. இது தேவலையே! ஜகதீசன் தன் வீட்டில் குடும்ப உறுப்பினர்களுக்கே நம்பர் கொடுத்துத் தொலைத்திருக்கிறான். 'எப்-3க்கு ரொம்பக் கோபம்' என்றால் மனைவிக்கு கோபம் என்று பொருள். 'டேய்! எப் 5 இங்கே வாடா!' என்றால் இரண்டாவது பையனைக் கூப்பிடுகிறான் என்று புரிந்து கொள்ள வேண்டும். எப் என்னும் வார்த்தை 'பாமிலி'யைக் குறிக்கும், ஓ என்பது ஆபீசைக் குறிப்பதுபோல.

''வா ஐயா நியூமெரிக்கல்! உட்காரு!..... அதோ ஓட்டிலே ஒரு காக்காய் உட்கார்ந்திருக்கிறதே! அதற்கு என்ன நம்பர் கொடுத்திருக்கிறாய்?'' என்று கேலியாகக் கேட்டான் எல்டி கிருஷ்ணசாமி.

''என்ன ஓ—11! கிண்டலா பண்ணுகிறாய்? பரவாயில்லை. அந்தக் காக்காயை ஓ.சி. 1 என்று கூப்பிடு. ஆபீஸ் குரோ ஒன்! அதோடு நிற்காதே! அதன் முதுகிலே ஒரு நம்பரையும் போட்டு வை! நாளைக்கு இதே காக்காய்க்கு வேறு நம்பர் கொடுத்துவிடப் போகிறாய்!'' என்று ஒரு போடு போட்டான் ஜகதீசன்.

அப்போது ஹரி கையில் ஒரு நீளமான காகிதத்துடன் வந்து சேர்ந்தான்.

''ஹரி என்னவோ ஓலை கொண்டு வருகிறான் பார்!... எவனாவது கல்யாணம் பண்ணிக்கொண்டு தொலைகிறானா? இல்லை, இந்தக் காரியாலயத்துக்குத் தலைமுழுகித் தொலைகிறானா? எப்படி இருந்தாலும் நாம் காசு அழுது தொலைக்க வேண்டுமே! இந்த மாதம் இது நாலாவது பார்ட்டியா அப்பா!'' என்றான் பூவராகன்.

''இன்னொரு முக்கிய விஷயம்! எந்தக் கழுதை கல்யாணம் பண்ணிக் கொண்டாலும் தொலையிறது. நமக்கு அக்கறையில்லை. ஆனால் ரிசப்ஷனுக்குப் போகும்போது தேங்காய்ப் பை கொடுக்கிறாளா என்று தீர்மானமாகக் கேட்டுக் கொள். அப்படியானால்தான் பார்ட்டிக்கு நான் பணம் கொடுப்பேன்'' என்றான் சங்கரன் உறுதியான குரலில்.

''நீ என்னப்பா! நம்ப கோபாலகிருஷ்ணன் கல்யாணத்தை இன்னும் நினைவு வைத்துக் கொண்டிருக்கிறாய்? அவனுக்கு இந்த மாசமோ அடுத்த மாசமோ குழந்தை பிறக்கப் போகிறது! அவன் பையன் கல்யாணத்துக்கு நிச்சயமாகத் தேங்காய் கொடுத்து விடுவான்'' என்றான் பார்த்தசாரதி.

''மெனக்கெட்டு அத்தனை பேரும் சிந்தாதிரிப்பேட்டைக்குக் கல்யாணம் விசாரிக்கப்

அவசரம்
அவசரம்
அவசரம்

கடுமையான சுரம். உடல் நிலை கவலைக்

கிடமாயிருக்கிறது... உடனே செய்தி அனுப்ப வேண்டும்

அதற்காகவே "ப்ரயாரிட்டி" தந்தி உள்ளது

நோய், விபத்து. மரணம் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் "ப்ரயாரிட்டி" தந்தியை உபயோகியுங்கள்.

எல்லா எக்ஸ்பிரஸ், அவசர தந்திகளைவிட இது வேகமாகப் போய்ச்சேரும். செலவும் அதிகம் இல்லை. வழக்கமான எக்ஸ்பிரஸ் தந்திக்கு உள்ள கட்டணம்தான் இதற்கும்.

தந்தியை அனுப்பும்போது மட்டும் "ப்ரயாரிட்டி" என்று குறிப்பிடுங்கள்

உங்களுக்கு சிறந்த முறையில்

சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்

தபால் தந்தி இலாகா

DA 60/623

எப்போதும் பரிசுத்தமானவரும், நிரம்பிய ஞானமும் அசைவற்ற சித்தமும் உடையவருமாய் நமக்குத் தெய்வ அனுக்கிரகத்தால் ஒரு குரு கிடைத்து விட்டால் சுவாமிகூட வேண்டாம். அவரையே தெய்வமாக நம்பி வழி பட்டால் அந்த உண்மையான நம்பிக்கையும், அவரிடம் நாம் செலுத்தும் அன்பும் பக்தியும் நம்மை இந்தப் பாப ஜன்மாவிலிருந்து விடுவித்துவிடும் என்பதில் ஐயமில்லை.

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார்,
காமகோடி பீடம்

போனேனும்! ஆசாமி ஜவ்வாட்டரைப் போலே ஆறின காப்பியை மாத்திரம் கொடுத்து அனுப்பினானே!'' என்று அங்கலாய்த்தான் ரகுபதி.

''நீங்களெல்லாம் இப்படிச் சொல்லிச் சொல்லிக் கோபால கிருஷ்ணன் ஓர் ஏற்பாடு பண்ணி விட்டான். ஆபீஸ் தோழர்களுக்கு மட்டுமாவது ஆளுக்கு ஒரு தேங்காய் பத்தை கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டு விட்டான். இன்றைக்குக் கொத்தவால் சாவடிக்குப் போய் இரண்டு தேங்காய் வாங்கி வந்து நாளைக்கு ஆபீஸிலேயே பத்தை போட்டுக் கொடுக்கப் போகிறானாம்! சத்தம் போடாமல் வாங்கிக் கொண்டு போங்கள்.''-இது எஸ். கிருஷ்ணசாமியின் விண்டல்.

''கூடவே காலணா பொரி கடலையும் ஒரு பச்சை மிளகாயையும் கொடுக்கச் சொல்! வீட்டுக்குக் கொண்டு போய்ச் சட்டினியாவது அரைக்கச் சொல்லலாம்!'' என்றான் திரு. மாரிக்கல் ஜகதீசன்.

''நீங்க எப்படி வேணுமானாலும் குஸ்தி போட்டுக் கொள்ளுங்கள்! எனக்கென்னவோ கோபாலகிருஷ்ணன் வீட்டுக் கல்யாணத்துக்குப் போய் விட்டுத் திரும்பியபோது தேங்காய்ப் பை கிடைத்தது. அது மாத்திரமல்ல; அதிசயமாக அந்தத் தேங்காய் நன்றாகவும் இருந்தது'' என்றான் பூவராகன்.

''நான் அப்பவே கேட்க வேண்டும் என்று நினைத்தேன்! உனக்கு மாத்திரம் எப்படித் தேங்காய் கிடைத்தது? உன் வாயாடித்தனத்துக்குப் பயந்து ரகசியமாகக் கொடுத்து விட்டானோ?'' என்று கேட்டான் சங்கரன்.

''யார் சொன்னார்கள்? பகிரங்கமாக வாங்கிக்கொண்டு வந்தேன்! உபசாரம் பண்ணிக் கொடுத்தார்கள்! ஆனால் அந்தக் கல்யாண மாப்பிள்ளை, பெண் யாரென்றுதான் எனக்கு இதுவரை தெரியவில்லை'' என்றான் பூவராகன்.

''என்னப்பா மர்மக் கதை சொல்லுகிறாய்? புகையிலை மயக்கமா? அதுதான் நீலமேகசியாமள வர்ணமாக, கோபாலகிருஷ்ணன் தம்பதிகள் நின்றுகொண் டிருந்தார்களே!'' என்றான் நரசிம்மன்.

பூவராகன் மடமடவென்று சிரித்தான். ''மர்மக் கதைதான். கோபால கிருஷ்ணன் கல்யாண தினத்தன்று சாயங்காலம் நீங்கள் எல்லாம் சேர்ந்து சிந்தாதிரிப்பேட்டைக்குக் கிளம்பின பிறகு நான் மாத்திரம் தனியாகச் சைக்கிளில் புறப்பட்டேனா? குறிப்பிட்ட தெருவில் நுழைந்தபோது எனக்குக் கல்யாண வீட்டு நம்பர் மறந்து போய் விட்டது. நல்ல வேளையாகச் சமீபத்திலேயே பந்தல், வாழை மரம், மைக் அலறல் எல்லாம் ஒன்றுகூடிக் கல்யாண வீட்டைக் காண்பித்துக் கொடுத்தன. சைக்கிளை வாசலில் நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தேன்.

''தம்பதிகளைப் பார்த்துப் பாராட்டலாம் என்றால் அவர்களைச் சுற்றி ஒரே கூட்டம். அதற்குள் யாரோ கரகரவென்று கையைப் பிடித்து ஒரு ரூமிலில் அமர்த்தி டிபன் காப்பி எடுத்து வைத்து விட்டார்கள். தெரிந்த முகமாக யாருமே இல்லை! ஆனால் மைசூர்பாகு, மிக்ஸர், காப்பி எல்லாம் ஒன்றுக்கொன்று. நீங்களெல்லாம் சாவகாசமாக நடந்து வந்து கொண்டிருக்கிறீர்கள் என்ற நினைப்பில் நானும் சாவகாசமாக டிபன் சம்ஹாரத்தை முடித்துக் கொண்டு எழுந்திருந்தேன். மண மக்களைச் சுற்றிக் கூட்டம் சற்றுக் குறைந்திருந்தது. ''ஹல்லோ கோபாலகிருஷ்ணன்!'' என்று அவனைக் கூப்பிட்டபோதே மாப்பிள்ளை நான் நடந்த பக்கம் திரும்பினான். என் தொண்டையிலிருந்து எழுந்த சத்தம் பாதியிலேயே அமுங்கி விட்டது. மாப்பிள்ளை யாரோ முன்னே பின்னே தெரியாத ஆசாமி! டெலிபோனிலே 'ராங் நம்பர்' என்பது போலக் கல்யாண வீட்டிலேயும் 'ராங் கல்யாண வீடு.'

''ஒரு தினுசா, யாரையோ பார்த்துக் 'கோபால கிருஷ்ணன்' என்று கூப்பிடுவது போல் ஒரு கணம் நடித்துவிட்டு, கூட்டத்தில் இரண்டு மூன்று நிமிடங்கள் மறைந்திருந்து விட்டு வெளியே வந்தேன். திண்ணையில் கொடுத்த தேங்காய்ப் பையையும் வாங்கிக் கொண்டுதான் வந்தேன்! 'ராங் மாப்பிள்ளை!' ஆனால் 'ரைட் தேங்காய்!' அதை விடுவானேன்!''



பூவராகன் கதையை முடித்தான்.

''சரியாய்ப் போச்சு! நீ பிள்ளை வீட்டுக்காரனுக்கு வேண்டியவன் என்று பெண் வீட்டார்கள் நினைத்துக் கொண்டிருப்பார்கள்: பெண் வீட்டாருக்குத் தெரிந்தவன் என்று பிள்ளை வீட்டார்கள் எண்ணிக் கொண்டிருப்பார்கள்!'' என்றார் குப்புசாமி.

'' எவன் எப்படி நினைத்தாலென்ன?

குழந்தை தூங்கிக் கொண்டிருக்கும் சமயத்திலும் தாயின் பாலைக் குடிப்பது போல் எவ்விதம் வாயை அசைத்துக் கொண்டிருக்கிறதோ, அதே போல் நாம் எந்த வேலையில் ஈடுபட்டிருந்தாலும் நம்முடைய நாக்கு பகவானின் நாமாக்களைச் சொல்லிக் கொண்டே இருக்கும்படி பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார்,
காமகோடி பீடம்

தேங்காய்ப் பை என்னுடையது என்று நான் எண்ணி விட்டேன்'' என்றான் பூவராகன்.

''நான் எத்தனை நேரமாக நிற்கிறது? இந்த லிஸ்டைக் கொஞ்சம் பார்க்கக் கூடாதோ?'' என்று மலையாள ஓசை கலந்த பாலக்காட்டுத் தமிழில் ஆரம்பித்தான் ஹரி.

''சரிதானப்பா! டீபார்ட்டி தானே? இந்த ஆபீஸிலே வேலை நடக்கிறதோ என்னவோ வாரம் தவறாமல் டீபார்ட்டி நடக்கிறது. பாலாஜி அகப்பட்ட கறிகாய், இலை, தழை எல்லாவற்றையும் அரைத்து நுழைத்து அல்வாவோ, கேசரியோ, கார சோமாசோ பண்ணி விடுகிறான்! சரி சரி! பணம் மாத்திரம் இப்போதே கேட்காதே! முதல் தேதியன்று சட்டிக்காரன் மாதிரி வசூல் பண்ணிக் கொண்டு தொலை'' என்றான் சங்கரன்.

''ஹரி! தேதியைச் சொல்லப்பா! என் வொய்ப்...'' என்று ஆரம்பித்தான் பாச்சா!

''பார்ட்டி ஆபீஸ் ஊழியர்களுக்குத்தான். அவங்க வொய்ப்புங்க வந்து கலந்துகொள்வது வழக்கமில்லை!'' என்றான் ஹரி சூடாக.

''அட நீ ஒண்ணு! வெண்ணெய் வாங்கப் போக வேண்டிய நாளாக இருந்தாலோ, இந்திப் படம் பார்க்க வேண்டிய தினமாக இருந்தாலோ, 'வொய்ப்' அனுமதி கொடுக்க மாட்டாளே!'' என்றான் ரகுபதி.

''ர....ர....ர....ரகுபதி! நா...நா...னும் பார்க்கத்தான் போகிறேன்! உனக்கும் கல்யாணமாகி நீ அவளிடம் போய் '... க...க... க...கண்ணே!' என்று முடிப்பதற்குள் சஷ்டியப்த பூர்த்தி வந்துவிடும்! நீ என்னை க...க... கலாட்டா வேறே பண்றே?'' என்று ஒரு தாக்குதல் பாணத்தைப் போட்டு விட்டு எழுந்திருந்தான் பார்த்தசாரதி.

''சரி சுப்பாமணி! உத்திரத்துக்கு பர்மா டீக்வுட் வேணும்னு சொல்லு. நான் வாங்கித் தருகிறேன்! நீ சும்மா மெட்ராஸ் டெர்ரேஸே போடு!'' என்று கொத்துக் கரண்டியால் சிமிண்டை அள்ளிப் போடும் பாணியில் கையையாட்டிக்கொண்டே ஹரன் எழுந்தான்.

''கண்டிராக்டர் கிளம்பிவிட்டார்! டிபன் நேரத்திலே எத்தனை வீடுகளுக்கு பேஸ்மெண்ட் போட்டே? எத்தனை வீடுகளுக்கு டெர்ரேஸ் போட்டே?'' என்றான் சங்கரன்.

''என்ன ஜோம்பே! ஒரே உற்சாகமாக இருக்கிறாய்? காங்கோ சர்க்கார் உன்னை விடுதலை செய்து மறுபடியும் கடன்காரனுக்கிய உற்சாகமா?'' என்று ஒரு போடு போட்டு விட்டு நகர்ந்தான் ஹரன்.

''ஹரன்! இந்த லிஸ்டிலே கையெழுத்துப் போட்டுவிட்டுப் போ! சாயங்காலம் பார்ட்டி இருக்கு!'' என்றான் ஹரி.

''இன்றைக்குச் சாயங்காலமா? என்னாலே வரமுடியாது! எங்க பாட்டி ஊருக்குப் போகிறாள். ரயிலில் ஏற்றி அனுப்பச் சீக்கிரமே போகவேண்டும். என் பெயரை அடித்துவிடு. அப்புறம் பணம் கிணம் என்று வந்து நிற்காதே!'' என்றான் ஹரன்.

''இது இலவச பார்ட்டி! நம்ப குப்புசாமி தன் பிரமோஷனுக்காகக் கொடுக்கிறார்!...''

''ஓ! அப்படியா விஷயம்?...சரி சரி! பாட்டி நாளைக்கு ஊருக்குப் போகட்டும்! இப்போ என்ன அவசரம்? கொண்டா இனிஷியல் போடுகிறேன்! பார்ட்டியிலே என்ன அயிட்டங்கள்?'' என்று கேட்டு, லிஸ்ட்டை வாங்கிக் கையெழுத்துப் போட்டான் ஹரன்.

சுப்பாமணியும் ஹரனும் சேர்ந்து கிளம்பி விட்டார்கள்! நிரூபமீக்கல் ஜகதீசனும் டிபன் பாக்ஸைக் கழுவிக் கொண்டு புறப்பட்டான்.

''பாலாஜி! நம்ப கணக்கு என்ன?'' கேட்டான் சங்கரன். ''எண்பத்தி நாலு பைசா சார்!'' என்று பாலாஜியின் பதில் ஒலித்தது.

''நாசமாய்ப் போச்சு! இந்த ரேட்டிலே போனால் சம்பளப் பட்டியலில் எனக்குப் பதிலாக நீயே கையெழுத்துப் போட்டு வாங்கிக் கொள்ள வேண்டியதுதான்! இந்தக் காண்டீன் டிபன் நமக்குக் கட்டாதப்பா!'' என்று பிரலாபித்தான் எல்டீ கிருஷ்ணசாமி.

''நான் அப்பவே சொன்னேனே சார்! பாதாம் ஹல்வா நாலு பொட்டலம் சாப்பிட்டீங்க மூந்தாநாள்!'' என்றான் பாலாஜி.

''நன்றாகப் போட்டுத் தொலைக்கிறாயே!'' என்று கூறி எல்டீ கிருஷ்ணசாமி நகர்ந்தான்.

ரகுபதி, சங்கரன், பூவராகன் மூன்று பேர்கள்தான் மீதி.

''ரகுபதி! சீக்கிரம் கல்யாணம் பண்ணிண்டு தொலையேண்டா!'' என்றான் சங்கரன்.

''என்னவோ பெண்ணைப் பெற்று வைத்துக் கொண்டு தவிக்கிறவன் மாதிரிப் பேசுகிறாயே! நமக்கெதற்குக் கல்யாணம்?'' என்றான் ரகுபதி சிரித்துக் கொண்டு.

''நமக்கு என்னடா நமக்கு! எனக்கு என்று வேண்டுமானாலும் சொல்லிக்கொள்! நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்'' என்று கூறிச் சங்கரன் எழுந்திருந்தான்.

''பாலாஜி! ஒரு வடை கொண்டாயேன்! பசிக்கிறாற் போலிருக்கு!'' என்றான் ரகுபதி. ''போர்டுதான் சார் பாக்கி!'' என்று சொல்லிக் கொண்டே பாலாஜி போர்டை அழித்தான். ரகுபதி தண்ணீரைக் குடித்துவிட்டு நகர்ந்தான்.

''சங்கரனுக்குக் கல்யாணம் எலிஸபெத் வில்லியிலா, லியோபோல்டு வில்லியிலா?'' என்று புகையிலை போட்டுக்கொண்டே பூவராகன் கேட்டது நல்லவேளையாகச் சங்கரன் காதில் விழவில்லை. பூவராகன் வாயைக் கொப்பளித்தான். அடுத்த சில நிமிடங்களில் காண்டீன் சஹாரா பாலைவனமாக இருந்தது.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.



கிராம்ப்டன் எஞ்ஜினியரிங் கம்பெனி (மதராஸ்) லிமிடெட்

ஸெகண்ட் லைன் பீச், மதராஸ் - 1

கிளைகள்: பெங்களூர் - கோயமுத்தூர் - மதுரை - செகந்திராபாத் - விஜயவாடா

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon





அடைந்திட்டோம் அழகென்னும் குலச் செல்வம்...

மகாராணி
சந்தன சோப்

பவழமல்லிகைப் பாங்கான மென்மைநயமும், சல்லாத்
துகில் போன்ற சருமத் தெளிவும் உங்கள் மேனிக்கு
சொந்தமென மிளிரவே... வனப்பென்னும் செல்வம்
உங்கள் வசப்படவே... மகாராணி சந்தன சோப்!

அழகுசாதன சோப்புக்களில் அரசியர்க்கரசி

MHR. 1—X52 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு